
# யாழ் பாடி

கலாசார மலர் 06



யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை

பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாடி

## கலாசார மலர் – 06

ஆக்க இலக்கிய சிறப்பு மலர் - 2022

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாடி

## கலாசார மலர் – 06

### ஆக்க இலக்கிய சிறப்பு மலர் - 2022

**யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை**

**பிரதேச செயலகம்,**

**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | யாழ்பாடி, கலாசார மலர் - 06 |
| பதிப்புரிமை | : | யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை,<br>பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். |
| வெளியீடு | : | யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை,<br>பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். |
| பதிப்பு | : | 2022 |
| பக்கங்கள் | : | xx + 129 |
| பக்க அளவு | : | B5 |
| பிரதிகள் | : | 250 |
| அட்டைப்படம் | : | சகாதேவன் ஷதூர்சன் |
| நிதி அனுசரணை | : | பண்பாட்டலுவல்கள் திணைக்களம்<br>வடமாகாணம். |
| அச்சுப் பதிப்பு | : | அன்றா பிறிண்டேர்ஸ்,<br>356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.<br>தொ.பே : 021 222 8929 |
| ISSN | : | 2827-7-7562 |


---

இந்நூலில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு ஆக்க இலக்கிய கர்த்தாக்களே பொறுப்பாவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்த் தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந்திலகமுமே
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல்திருநாடும்
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!
பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்து துடைக்கினும் ஓர்
எல்லை அறுபரம் பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்று பல வாகிடினும்
ஆரியம் போல உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!

**– மனோன்மணியம் அந்தரனார்–**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ் மொழி!
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த அனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**—மகாகவி சுப்பிரமணிய பாரதியார்—**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பிரதேச செயலகக் கீதம்

பல்லவி

யாழோடுபிறந்ததெங்கள் நகரம் – யாழ்ப்பாணம்
ஈழ நாட்டினது சிகரம் – தமிழர் (யாழோடு)

அனுபல்லவி

கடலலைகள் தாலாட்டுக் கேட்டு
கண்ணயரநாயனமும் பாட்டும்
வடபுலத்துமக்கள் உழைப்பாளர் – எது
வந்தாலும் ஓயார், படிப்பாளர் (யாழோடு)

சரணங்கள்

ஒல்லாந்தர் கோட்டை ஒரு பக்கம்
உயர்ந்தமரம் ஓங்குபழம் பூங்கா
வல்லார்கள் வலைவீசுவார்கள் – கடல்
வளம் வாரிவருவார்கள், ஓயார் (யாழோடு)

கல்லூரிகள் பொலியும் நகரம் – சகல
கலைகளுக்கும் உறைவிடம், யாழ் நூலகமும்
நெல்வயல்கள், அங்காடி, கடைகள்
நெடுந்தூரப் பேருந்துவிரையும் (யாழோடு)

நான்குமதம் சமரசமாய் விளங்க
நாதசுரகானம் எங்கும் முழங்க
ஓங்குநகர் யாழ்ப்பாணம் என்போம் – இதை
உயர்த்துவதுநம் கடமை என்போம் (யாழோடு)

**ஆக்கம்**
*கவிஞர் சோ.பத்மநாதன் (சோ.ப)*
**பாடல், இசையமைப்பு**
*திரு. தவநாதன் றொபேட்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பிரதேச கலாசாரப் பேரவைக் கீதம்

வாழிய வாழியவே – எங்கள் யாழ் பிரதேச
கலை கலாசார பேரவை வாழியவே – 02
கடல்படு திரவியம் தரை தரு பயிர் வளம்
ஆயிரம் ஆயிரமே – உடன்
அறிவியலொடு பல கலை வளம் இங்கே
வளர்வதும் ஆனந்தமே
பாணன் கலை பாடி பெற்ற பரிசெங்கள்
யாழ் மண் என மகிழ்ந்ததே – தினம்
நாமும் கலை பாடி பாரில் நிலைபெறவே
பணி பல புரிந்திடுவோம்

வாழி

கூத்தொடு பண்ணிசை நடனமும் வளமுற
வளருது யாழ்மனிலே – உடன்
சேர்த்துயர் கலைஞர்கள் மனமகிழ்த்தொன்றாய்
உயர்ந்திடும் நாளிதுவே

வாழி

மண்ணின் கலையாவும் விண்ணைத் தொட நின்று
வளர்ந்திடக் கரம் தொடுத்தே – யாழ்
மண்ணின் கரை பாரில் ஓங்கி உயர்ந்திடவே
உறுதியாய் உழைத்திடுவே

வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழு

## ஆலோசனையும் வழிகாட்டலும்

**திரு. எஸ். சுதர்சன்**

பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவைத் தலைவரும்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

## மலர் வடிவமைப்பு

**திரு. இ. ஜோன்சன்**

கலாசார உத்தியோகத்தர்,
செயலாளர், கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

1. திரு. நீ. ம. பாலச்சந்திரன்
2. திரு. கு. இராயப்பு
3. திரு. பா. வின்சென்ற்
4. திரு. இரா செல்வவடிவேல்
5. செல்வி. ப. தர்மினி
6. திரு. பெ. ஸ்ரீகந்தநேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை

## 2020 / 2021

**பதவி நிலையினர்**

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு. எஸ். சுதர்சன் |
| உபதலைவர் | :- | திரு. இரா. செல்வவடிவேல் |
| செயலாளர் | :- | திரு. இ. ஜோன்சன் |
| பொருளாளர் | :- | திரு. பி. யூல்ஸ்கொலின் |

**செயற்குழு உறுப்பினர்கள்**

திரு. நீ. ம. பாலச்சந்திரன்
திரு. ம. அன்ரன் யோசப்
திரு. நா. தனேந்திரன்
திருமதி. ந. சேர்ச்சிலம்மா
திரு. கு. ஐயாத்துரை
திரு. அ. ரஜீவ்
செல்வி. நா. பவித்திராயனி
திரு. பா. வின்சென்ற்
திரு. கொ. கரன்சன்
திருமதி. அப்துல் அஸீஸ் நசீரா
திரு. கி. ம. நெல்சன்
திரு. கு. இராயப்பு
திரு. க. திருவம்பலம்
திரு. தோ. அருள்ராசா
திரு. அ. பிராங்கிளின்
திரு. க. விஜயரட்ணம்
திரு. கா. சுரேன்
திரு. பெ. ஸ்ரீகந்தநேசன்
திரு. இ. விஜேந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாடியின் நுழைவாயில்....


| | | |
|---|---|---|
| | நல்லை திருஞானசம்மந்த ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி | xi |
| | யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி | xii |
| | மதிப்பிற்குரிய மௌலவி M.A.M அஸ்லம் அவர்களின் ஆசிச் செய்தி | xiii |
| | அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி | xiv |
| | மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி | xv |
| | கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி | xvi |
| | பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | xvii |
| | பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி | xviii |
| | உள்ளத்தின் பதிவுகள் . . . | xix |
| | மலர்க்குழுவின் அறிக்கை | xx |
| 1. | யாழ்ப்பாணப் பிரதேச செயலகப்பிரிவு வரலாற்றுப் பார்வை | 01 |
| 2. | யாழ்ப்பாணத்தில் பெயரற்றுப் போகும் ஒரு கிராமத்தின் பெருமைகள் | 08 |
| 3. | யாழ்ப்பாணம் பாசையூர் பிரதேசமும் அதனுடன் இணைந்த நாட்டார் கலைகளும் | 13 |
| 4. | யாழ்ப்பாண வழக்குச் சொற்கள் அருகிவரும் யாழ்ப்பாண வழக்குத் தமிழ்ச் சொற்கள் | 24 |
| 5. | மின்சாரமில்லாத இரவுகளின் கதைகள் | 30 |
| 6. | தரணியெங்கும் எங்கள் தாயகம் | 32 |
| 7. | விவசாய உணவு உற்பத்தி பற்றாக்குறையால் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகள் | 34 |
| 8. | கொழும்புத்துறையின் பாரம்பரிய கைத்தொழில் தும்புக் கைத்தொழில் | 39 |
| 9. | மலராத மொட்டு | 45 |
| 10. | வீடு விற்பனைக்கில்லை | 49 |
| 11. | சவாலை பசுமைப்புரட்சியால் சமாளிப்போம் | 57 |
| 12. | கலைமரபும் பண்பாடும் | 61 |
| 13. | எப்படி நாம் தேற்றுவது | 67 |
| 14. | "யாதுமானவன்" ஒரு பார்வை | 69 |
| 15. | எண்ணமே என்னகக் கவிதையாய் போகும் | 72 |
| 16. | நாடு படும் பாடும் நம்மவர் நிலையும் | 73 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. கொரோனா வைரஸ் 75

18. வலைசயாய் இணைதல் வேண்டும் 77

19. தென்னிந்திய சினிமாவும், இளையோர் நடத்தை மாற்றமும் 83

20. தாயன்பு 86

21. தொழிற்சாலைகளில் ஊழியர் பாதுகாப்பும் தொழிற்சாலை உளவியலின் பங்களிப்பும். 87

22. யாழ்ப்பாண மாநகரத்தின் கழிவகற்றலில் மக்களின் மனமாற்றம் 91

23. சப்பாத்து 94

24. பழந்தமிழ் இலக்கியங்களின் இசைக்கலை 97

25. பெண்களும் யோகாவும் 105

26. இசையின் மூலம் உடல் மற்றும் மனநலக் கோளாறுகளைக் குணப்படுத்த முடியும் 108

27. யாழ்ப்பாணக் கலாசாரப் பண்புகள் 111

28. யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வு மண்ணின் மைந்தர் அருளாளர் பி.ஏ. தோமஸ் அடிகளார் இலங்கையின் முதல் தமிழ் புனிதராவார் 116

29. எமது தொன்மைகள் மற்றும் பண்பாட்டு கலைப்பொருட்களை அடையாளப்படுத்துதலும் அவற்றை பேணிப் பாதுகாத்தலும். 121




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.



## அருளாசிச் செய்தி

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
ஆதீனகுரு முதல்வர்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

*அன்புள்ளவர்களுக்கு!*

யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் பல பணிகளில் ஒவ்வொரு ஆண்டும் யாழ்பாடி நூலினை வெளியிட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் பெருமை தேடித் தருகின்றன. பல பிரதேச செயலகங்களில் யாழ்ப்பாண செயலகம் பல சிறப்புக்களை உடையதாகும். அந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் வெளிவரும் யாழ்பாடி நூல் பல தகவல்களையும் தாங்கி அறிஞர்களுடைய கட்டுரைகளையும் உரிய மக்களுக்கு வெளிப்படும் வகையில் பல செய்திகள் வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். நூல் ஆசிரியர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Rt.Revd.Dr.Justin B Gnanapragasam*
*Bishop of Jaffna*

*Bishop's House,*
*P.O.Box No. 02*
*Jaffna - Sri Lanka.*
**Tel: +94(0) 21 222 2649(O)**
**Email: gnanamjb48@gmail.com**



# யாழ் மறை மாவட்ட ஆயரின் ஆசிச்செய்தி

**கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள**
**பேரருட்திரு. கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
யாழ் மறை மாவட்ட ஆயர்

*காலத்தின் கண்ணாடிகள் புத்தகங்களே!*

கரைந்து கழிந்த காலத்தை பிரதிபலிக்கும் கண்ணாடிகள் எனலாம். ஒரு மனிதனின் ஆழ் மனதில் முட்டி மோதும் பல்வேறு எண்ணக் கருக்களிலிருந்து பொங்கி எழும் கீற்றுக்களே புத்தகங்கள்.

"யாழ்பாடி 06" எனும் பெயருடன் இந்நூலானது ஆக்கம் பெற்று வெளியிடுவதையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன். இம்மலரானது யாழ்.பிரதேச செயலக பிரிவிலே இலை மறை காயாக வாழ்ந்து வருகின்ற கலைஞர்களின் திறமைகளையும், உள்ள உணர்வுகளையும் வெள்ளிடைமலை போல் புலப்படுத்திக் காட்டுகின்றன. பெருமைக்கும் பாராட்டுக்குமுரியதாகும்.

முளைக்கும் விதைகளெல்லாம் பயனின்றி இறப்பதில்லை. "யாழ்பாடி 06" சிறப்புற மலர்ந்து மனங்களில் நிறைந்து நறுமணம் வீச என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை நவில்வதோடு, இறை ஆசிகளும் உரித்தாகுக. ஆமென்.

**"சிறந்த கலைஞன் மிகச் சிறிய படைப்புக்களிலும்**
**மிகப் பெரும் சாதனைகளை படைக்க வல்லன்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச்செய்தி

**மதிப்பிற்குரிய மௌலவி M. A. M அஸ்லம்**

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கின்றேன். யாழ்ப்பாண முஹியத்தீன் ஜும்ஆ மஸ்ஜிதின் இமாமான எனக்கு யாழ்பாடி – இதழ் 06 எனும் நூலுக்கான ஆசிச்செய்தி எழுத வாய்ப்புக் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மீன்பாடும் தேனாட்டில் பிறந்து தமது திறமைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பம் ஒன்று கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டிருந்த எமது கலைஞர்களுக்கு வாய்ப்பளித்து, அவர்களை வெளியுலகுக்குப் படம் பிடித்துக் காட்டி உற்சாகப்படுத்துவதோடு இன்னும் எம்மில் வளர்ந்து வரும் இளம் கலைஞர்களுக்கும் புத்துணர்வு அளிக்கும் இம்மலர் வெளியீடானது காலத்தின் முக்கிய தேவை என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு இளைய கலைஞர்களுக்கு களம் அமைத்து அவர்களை முன்னேற்றப் பாதையில் வீறுநடை போட வைக்கும் நூல் ஏற்பாட்டுக் குழுவிற்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் மென்மேலும் உயர, மனமார வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - යාපනය
**DISTRICT SECRETARIAT - JAFFNA**

எனது இல. / මගේ අංකය / My No. JK/GA/GREE/03/2020(21) உமது இல. / ඔබේ අංකය / Your No. திகதி / දිනය / Date 2022/01/25



## வாழ்த்துச் செய்தி

**க. மகேசன்**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தினால் வெளியீடு செய்யப்படவுள்ள "யாழ்பாடி - இதழ்-06" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"யாழ்பாடி - இதழ்-06" யாழ்ப்பாணப் பிரதேச செயலக பிரிவில் இலைமறை காயாக வாழ்ந்து வரும் கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களை வெளிக்கொணர்ந்து அவர்களின் திறமைகளுக்கு அங்கீகாரம் வழங்கி ஊக்கப்படுத்தும் நன் முயற்சியில் வெளிவருவது இரட்டிப்பு இன்பத்தைத் தருகின்றது.

ஒரு பிரதேசத்தின் இருப்பு அதன் கலை, கலாசார, பண்பாட்டுப் பாரம்பரியத்தின் பின்னணியிலே தங்கியிருக்கின்றது. வரலாற்று ஆவணங்களாகவும், பிரதேச மக்களின் வளமான வாழ்வினையும் அக்காலப்பகுதிகளில் வாழும் கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களினாலேயே பதிவு செய்து ஆவணப்படுத்துவதனால் எதிர்கால சந்ததியினரும் துறைசார் ஆர்வலர்களும் அறிந்து பயன்பெற ஏதுவாகின்றது.

**"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"**

என்னும் வாக்குக்கமைய பெருமைப்படுத்தத்தக்கவர்கள் எவ்வளவு இடர் ஏற்படினும் பிறரால் செய்வதற்கரிய அருமையான தம் செயல்களை விடாமல் செய்து முடிக்கும் வலிமை கொண்டவர்கள். அத்தகைய கலைஞர்களையும், எழுத்தாளர்களையும், செயலூக்கத்துடன் திறம்படச் செயற்படும் பிரதேச செயலாளர் மற்றும் மலர்க்குழுவினரையும் பாராட்டி, வெளிவரும் யாழ்பாடி சிறப்புடன் இசைமீட்க என் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்**
**දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - යාපනය**
**DISTRICT SECRETARIAT – JAFFNA**

எனது இல. / මගේ අංකය / My No. JK/Addl.GA/Gen/Corres/01/2020 — உமது இல. / ඔබේ අංකය / Your No. — திகதி / දිනය / Date 2022/01/28



## வாழ்த்துச் செய்தி


**ம. பிரதீபன்**
மேலதிக அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.


யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள "யாழ்பாடி" இதழ் – 06 இற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் ஆக்கங்களைத் தனதாக்கி மலரும் யாழ்பாடி அவர்களின் ஆக்கங்களை வெளியிடும் களமாக அமைகின்றது. ஒரு பிரதேசத்தில் கலை, இலக்கியங்கள் அப்பிரதேச மக்களின் கலாசாரப் பண்பாட்டின் பிரதிபலிப்புக்களாக அமைகின்றது. கலைஞர்கள் சமகால நிகழ்வுகளைத் தமது படைப்புக்களாக உருவாக்குவதில் வல்லமை பெற்றவர்கள். அவர்களை ஊக்கப்படுத்தி, உரமூட்டி வளப்படுத்துவது நம் அனைவரதும் தார்மீகப் பொறுப்பாகும்.

இந்தவகையில் இலைமறைகாயாகக் கனிந்திருக்கும் கலைஞர்களையும், எழுத்தாளர்களையும் அனைவரும் அறியும்படியும், அவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்கும் அரும்பணியாக பிரதேச செயலகத்தினால் மெட்டெடுக்கும் "யாழ்பாடி" அனைவருக்கும் அறிவையும், இன்பத்தையும் வழங்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

தொடர்ந்து கலைஞர்களின் கலைப்பணி மேலும் சிறக்கவும், யாழ்பாடி வெளிவர அயராது உழைக்கும் பிரதேச செயலாளர் மற்றும் மலர்க்குழுவினரையும் பாராட்டி, மலரும் "யாழ்பாடி இதழ் – 06" சிறப்புடன் வெளிவர என் மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து, மகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை. උතුරු පළාත් සභාව. Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna

Website: www.edumin.np.gov.lk e-mail: npplans@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல. / මගේ අංකය / My No. NP/3/1/SE/2021 உமது இல. / ඔබේ අංකය / Your No. திகதி / දිනය / Date 2022.02.25



## வாழ்த்துச் செய்தி

**இ. வரதீஸ்வரன்**
செயலாளர், கல்வி அமைச்சு,
வடக்கு மாகாணம்.

*"யாழ்பாடி" பணி சிறக்க வாழ்த்துக்கள்*

யாழ்ப்பாண மாவட்டத்தில் தன்னிகரில்லா தனிப் பண்பினையும் மாண்பினையும் கொண்ட யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் "யாழ்பாடி" என்ற சஞ்சிகையின் இதழ் – 6 இனை வெளியிடுவதற்கு முன்வந்துள்ளமை பாராட்டப்பட வேண்டியதும் வரவேற்கத்தக்கதுமாகும். அந்தவகையில் "யாழ்பாடி" சஞ்சிகையினை வாழ்த்துவதற்கு கிடைத்த சந்தர்ப்பம் மகிழ்ச்சி மிக்கதொன்றாகும்.

கொவிட் – 19 காலச்சூழலிலும் தமது பணியினை இடையறாது தொடர்ந்து செயற்பட்டு யாழ்ப்பாண மண்ணின் பூர்வீகத்தினை அடுத்த தலைமுறைக்கும் கடத்தும் நோக்கோடு கலை, கலாசாரம், பூர்வீகம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக "யாழ்பாடி" சஞ்சிகையினை வெளியிடுவதானது எதிர்காலத்திற்கான எமது மரபுரிமைகளைக் கடத்துகின்ற உன்னத செயற்பாடாகும்.

மேலும் இவ்வாறான வெளியீடுகள் மாணவர்களின் சிந்தனைக் களங்களைத் திறப்பதற்கான தளமாக அமைவதுடன் அமைதியான நேரிய சிந்தனையுள்ள சமூகத்தினைக் கட்டமைப்பதனூடாக எதிர்காலத்தில் சிறப்பான வாழ்க்கை முறைகளைக் கட்டமைப்பதற்கான திறவு கோலாகவும் அமைந்துள்ளதென்பது வெள்ளிடை மலையாகும்.

அந்தவகையில் "யாழ்பாடி" சஞ்சிகை சமூகத்தில் சிறப்பான மாற்றங்களை ஏற்படுத்தி தன்னிகரில்லாமல் சிறப்பதற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை. උතුරු පළාත් සභාව. Northern Provincial Council

செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna

Website: www.np.gov.lk
e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல / මගේ අංකය / My No }
உமது இல / ඔබේ අංකය / Your No }
திகதி / දිනය / Date }



## வாழ்த்துச் செய்தி

**ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா,**
பிரதிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்குமாகாணம்

யாழ்ப்பாண பிரதேச செயலகமும், பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து வெளியிடும் "யாழ்பாடி –06" எனும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஒரு சமூகத்தின் கலை, இலக்கிய, பண்பாட்டு அம்சங்களும், அறிவியல் சிந்தனைகளும் அச் சமூகத்தின் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றுகின்றன. இவை குறிப்பிட்ட அச் சமூகத்தின் பெரும் இருப்பாகவும் – அடையாளமாகவும் வரலாற்று மூலங்களின் முக்கிய பகுதிகளாகவும் விளங்குகிறது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களினூடாக வருடாவருடம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டங்களில் கலாசார அபிவிருத்தி செயற்றிட்டம் 2022ன் கீழ் நிதி அனுசரணை வழங்கப்பட்டு பிரதேச எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வகையிலும் பிரதேசத்தின் பல்வேறு பண்பாட்டுப் பாரம்பரியங்களினை வெளிக்கொணரும் வகையிலும் யாழ்பாடி –06 மலர் வெளியிடப்படுகின்றமை பாராட்டிற்குரியதாகும்.

இம் மலரின் வருகை ஆண்டு தோறும் புதிய எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக்கொடுப்பதோடு மாறிவரும் உலகை எதிர்கொள்ள வல்ல புதிய கருத்து நிலைகளை சமூகத்தின் முன்கொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் யாழ்ப்பாண பிரதேசத்தில் வாழும் ஆளுமை மிக்க கலைஞர்களின் புதிய சிந்தனை மிகு ஆக்கங்களை தாங்கி "யாழ்பாடி – 06" மலரானது வெளிவருவது சிறப்புக்குரியது.

எனவே இவ் "யாழ்பாடி – 06" மலரானது வெளிவர அயராது உழைத்த யாழ்ப்பாண பிரதேச செயலாளர், கலாசார பேரவையினர் மற்றும் கலாசார உத்தியோகத்தர் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය - යාපනය
Divisional Secretariat - Jaffna

Divisional Secretary 021 222 8469
Asst. Divisional Secretary 021 221 7386
Asst. Director of Planning 021 222 7536
Accountant 021 222 5625
Administrative Officer 021 222 2209
Grama Niladhari (Administration) 021 221 7840
Samurdhi Manager (Head Quater) 021 222 4520
Addl. District Registrar 021 221 4187
General 021 221 7387
Fax 021 222 1099

My No
Your No
Date



# சுதேசிய மரபின் இருப்பில் யாழ்பாடி எனும் மகுடம்

**எஸ். சுதர்சன்**
பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவரும்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையானது ஆண்டுதோறும் ஒவ்வோர் தொனிப்பொருளில் யாழ்பாடி கலாசார மலரினை வெளியிட்டுவருகின்றது. அவ்வகையில் இவ்வருடமும் யாழ்பாடி – 06 மலரானது வெளிவரவுள்ளது. இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

ஒரு இனத்தினது, சமூகத்தினது மூச்சு அல்லது இருப்பானது அதன் மொழி, கலை, கலாசாரப் பண்பாட்டு மரபுகளிலேயே தங்கியுள்ளது. இத்தகைய கலை, கலாசார மரபுகளின் இருப்பினைப் பேணிப்பாதுகாத்து அதனை அடுத்த தலைமுறையினரின் இருப்பிற்கு இட்டுச் செல்வது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இத்தகைய அளப்பரிய பணியினை யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையானது யாழ்பாடி வடிவில் ஆண்டுதோறும் மேற்கொண்டு வருகின்றது.

யாழ் மண்ணானது புராதன காலம் தொடக்கம் தனக்கெனத் தனித்துவமான கூத்து மரபுகள், ஆக்க இலக்கிய மரபுகள், இசை மரபுகள், சடங்குகள், விளையாட்டுக்கள், நம்பிக்கைகள் முதலான கலை கலாசாரக் கூறுகளைக் கொண்டுள்ளது. அதனை அது நீண்டகாலமாகப் பேணிவருகின்றது. கால மாற்றங்களுக்கேற்ப தன்னை தகவமைத்துக்கொண்டு கலை மரபுகளைப் பேணிப் பாதுகாத்து வருகின்றது.

யாழ் மாவட்டத்தின் கலாசார மரபுகளை எழுத்துரு வடிவில் பதிவு செய்து அதனைக் கலை இலக்கிய மலராக வெளியிட்டு வரும் இத்தகைய அளப்பரிய பணியானது தொடரவேண்டும் என்பதே எனது வேணவா. இப்பணியினை ஆண்டுதோறும் செவ்வனவே நிறைவேற்றிவரும் யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையினருக்கும் மற்றும் ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் - பிரதேச கலாசார பேரவை

**பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.**

**JAFFNA DIVISIONAL CULTURAL COUNCIL**

**DIVISIONAL SECRETARIART, JAFFNA.**



## உள்ளத்தின் பதிவுகள்

**இ. ஜோன்சன்**
கலாசார உத்தியோகத்தர் (செயலாளர்)
யாழ்ப்பாண பிரதேச கலாசாரப்பேரவை.
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தினால் இவ்வருடம் வெளியிடப்படும் யாழ் பாடி – 06 மலர் யாழ்ப்பாண மண்ணில் இலை மறை காயாக வாழ்ந்து வரும் எழுத்தாளர்கள் மற்றும் கலை ஆர்வலர்களின் படைப்புக்களை வெளி உலகுக்கு கொண்டு வரும் பெரும் தன்மையுடன் ஆக்க இலக்கிய சிறப்பு மலராக வெளியிடப்படுவதனையொட்டி எனது உள்ளத்தின் பதிவுகளை உங்களுடன் பகிர்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு தொனிப்பொருளில் யாழ்ப்பாண பிரதேசத்தின் தொன்மைகளை தன்னுள்ளே கொண்டு வெளிவரும் கலாசார மலரானது அடுத்த சந்ததிக்கு எமது பண்பாட்டு பாரம்பரியங்களை எடுத்துச் செல்லும் ஓர் ஆவணப்பெட்டகமாக விளங்குகிறது. இவ் ஆவணப்படுத்தலுக்கு எமக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய மதிப்பிற்குரிய பிரதேச செயலாளரும் கலாசாரப்பேரவையின் தலைவருமாகிய திரு.எஸ்.சுதர்சன் அவர்களுக்கும் ஆசிச்செய்திகள் வழங்கிய மதப்பெரியோர்களுக்கும், வாழ்த்துச்செய்திகள் வழங்கிய மதிப் பிற்குரிய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், கல்வி அமைச்சின் செயலாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் அவர்களுக்கும் எமது இதயங் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மலர் வெளியீட்டுக்கு காலத்தின் தேவையறிந்து அனுசரணை வழங்கிய வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மலரினை அலங்கரிக்க ஆக்கங்கள் மற்றும் படைப்புக்கள் தந்து உரமூட்டிய கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

இம்மலருக்கான அட்டைப் படத்தினை சிறப்புற வரைந்து இம் மலருக்கு அழகூட்டிய ஓவியர் திரு சகாதேவன் சதூர்சன் அவர்களுக்கும் சிறப்புற அச்சிட்டு வழங்கிய அன்றா நிறுவனத்தினருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவின் பார்வையில் . . .

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படும் "யாழ்பாடி 6" மலருக்கான மலர்க்குழுவினரின் பதிவினை ஆறாவது தடவையாக மகிழ்வுடன் எழுத ஆரம்பிக்கிறோம்.

வழமை போல யாழ் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கலைஞர்களின் ஆக்கங்களே இம் மலரிலும் இடம்பெற்றுள்ளன.

இம் மலருக்கு கட்டுரைத்தலைப்பு எதுவும் வழங்காமல் பயனுடைய ஆக்கங்களை சேகரித்தோம். கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் என குவிந்த ஆக்கங்களைக் கண்டு மகிழ்ந்தோம். தமிழ் ஆர்வலர்கள் மலையாய் தெரிந்தார்கள். எழுத்தாளர்களுக்கு தம் கருத்துக்களை எழுதுவதற்கு பூரண சுதந்திரம் எப்போதும் உண்டு.

மலர்க்குழு ஆக்கங்களை பரிசீலனை செய்து அச்சேற்றும் பாரிய பொறுப்பை ஏற்பதனால் எழுத்துருவாக்கங்களை பார்வையிட்டு இறுதியில் குழுவினர் முழுமையாக ஆராய்ந்து பிரசுரிக்கலாம் எனும் பொது முடிவுக்கு வந்த ஆக்கங்களே மலரில் பிரசுரமாகியுள்ளன.

கவிதைகள் ஒரு ஒழுங்கு முறையில் இருக்க வேண்டும். ஏதாவது ஒரு நிரல் இருக்க வேண்டும். கிடைத்த கவிதைகள் பலவற்றை பிரசுரத்திற்கு ஏற்றதல்ல என்ன மலர்க்குழுவினர் தீர்மானித்தனர்.

இம்முறை மலரில் இடம்பெற்றுள்ள சில கட்டுரைகள் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். யாழ்ப்பாணப்பண்பாட்டில் வழக்கிழந்து வரும் சொற்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இது பயனுடையதாக இருக்குமென நம்புகிறோம்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவின் கட்டமைப்பு, எல்லைப் பரப்புகள் பற்றிய வாழ்நாள் பேராசிரியரின் கட்டுரை பிரதேசப்பரப்பை கண்முன் கொண்டு வருகிறது.

இம்முறை மலரில் பூதத்தம்பி நாட்டுக்கூத்தை பிரசுரிக்க எண்ணினோம். இருப்பினும் சில காரணங்களினால் தனி நூலாக வெளியிட்டுள்ளோம். பாசையூர் அண்ணாவியார் பி.யூல்ஸ் கொலின் அவர்களின் ஆக்கமாக வெளி வந்துள்ளது.

ஒவ்வொரு மலரிலும் குறிப்பிடுவதை தேவை கருதி நினைவுபடுத்த விரும்புகிறோம். யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தின் எல்லைக்குட்பட்ட கலாசாரப் பேரவை சைவ, கத்தோலிக்க, இஸ்லாமிய சமயத்தவர்களை கொண்டதாகும். மத நல்லிணக்கம் நாட்டில் ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் எனக் கருதுகிறோம்.

**மலர்க்குழுவினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. சாம்பசிவம் சுதர்சன்**

**பிரதேச செயலாளர் - யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இருப்பவர்கள் (இ-வ): திரு. தோமஸ் அருள்ராசா, திரு. நீ. ம. பாலச்சந்திரன், திருமதி சோபிகா றோய்றொபின்சன் (உதவிப்பிரதேச செயலாளர்), திரு எஸ். சுதர்சன் (பிரதேச செயலாளர்/தலைவர்), திரு பி. யூல்ஸ்கொலின் (பொருளாளர்), திரு இரா.செல்வவடிவேல் (உபதலைவர்), திரு. கு. இராயப்பு, திரு.இ.ஜோன்சன் (கலாசார உத்தியோகத்தர் / செயலாளர்)

நிற்பவர்கள் (இ-வ): திரு. க. விஜயரட்ணம், திரு. பா. வின்சென்ற், திரு. அ. பிராங்கிளின், திரு. கி. ம. நெல்சன், திரு. க. திருவம்பலம், திரு. அ. ரஜீவ், திரு. இ. விஜேந்திரன், திரு. கா. சுரேன், திரு. கொ. கரன்சன், திரு. ம. அன்ரன் யோசப், திருமதி. அப்துல் அஸீஸ் நசீரா, திருமதி. ந. சேர்ச்சிலம்மா

வருகை தராதோர்: திரு. நா. தனேந்திரன், திரு. கு. ஐயாத்துரை, செல்வி. நா. பவித்திராயனி, திரு. பெ.ஸ்ரீகந்தநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இ - வ: **திரு. பா. வின்சென்ற், திரு. நீ. ம. பாலச்சந்திரன், திருமதி சோபிகா றோய்றொபின்சன்** (உதவிப்பிரதேச செயலாளர்),
**திரு. எஸ். சுதர்சன்** (பிரதேச செயலாளர்/தலைவர), **திரு. இரா.செல்வவடிவேல்** (உபதலைவர்),
**திரு.இ.ஜோன்சன்** (கலாசார உத்தியோகத்தர் / செயலாளர்), **திரு. கு. இராயப்பு,** வருகை தராதோர் **செல்வி ப.தர்மினி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது வெளியீடு - யாழ்பாடி கலாசார மலர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பிரதேச செயலகப்பிரிவு
## வரலாற்றுப் பார்வை



**பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை**
முன்னாள் துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**19**38 ஆம் ஆண்டுக்கு முன்பு மாகாண, மாவட்ட நிர்வாகத்துக்குக் கீழ் மூன்று அடுக்கு நிலமானிய முறை சார்ந்த (Feudal Sustem) நிர்வாக ஒழுங்கு நாட்டில் இருந்தது. அவையாவன:

1. மேல்நிலைத் தலைமைக்காரர் (Superior Headman)
2. பிரதான தலைமைக்காரர் (Chief Headman)
3. கிராம விதானை (Village Headman)

இவர்கள் நாட்டில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டனர். தமிழ்ப் பிரதேசங்களில் முறையே மணியகாரர், உடையார், விதானையார் என அழைக்கப்பட்டனர். இம்மூன்று நிலமானிய முறை சார்ந்த அதிகாரிகள் நாட்டின் சிவில் நிர்வாகத்துக்கு குறிப்பாக பிரதேச, கிராம மட்ட நிர்வாகத்துக்கு குறிப்பாக சட்டம், ஒழுங்கைப் பேணுவதில் முக்கிய இடம்பெற்று இருந்தனர். அக்காலத்தில் நகரங்களுக்கு வெளியே பிரதேச, கிராமங்களில் பொலிஸ் நிலையங்கள் இருக்கவில்லை.




நாட்டிற்கு மானியமுறை நிர்வாகக் கட்டமைப்பு சமூக, சமுதாய மேம்பாட்டிற்குப் பொருத்தமில்லை என்ற கருத்து நிலவிய நிலையில் 1938ஆம் ஆண்டு மேல் நிலைத் தலைமைக்காரப் பதவி (மணியகாரர் பிரிவுகள்) முறை மாற்றப்பட்டு வருமான அதிகாரி பிரிவுகள் (Divisional Revenue Officer Division) உருவாக்கப்பட்டு இவற்றை நிர்வகிக்க அரசாங்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். மேலும் பிரதான தலைமைக்காரர் (உடையார்) பதவி நாடளாவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் ஒழிக்கப்பட்டது. கிராம விதானையார் முறை தொடர்ந்து இருந்தபொழுதும், இம்முறை மானிய முறையின் எச்சம் என்றும் சமூக மேம்பாட்டுக்குத் தடையாக இருக்கின்றதென்றும் கருதி இது 1961இல் ஒழிக்கப்பட்டு இதற்குப் பதிலாக கிராமசேவகர் முறை உருவாக்கப்பட்டது. 1990 களின் பிற்பகுதியில் கிராமசேவகர் பெயர் கிராம நிலதாரி என மாற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் D.R.O பிரிவு 1938ஆம் ஆண்டு உருவாகியது. அன்றைய D.R.O பிரிவு இன்றைய யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பரப்புகளை உள்ளடக்கியதாக இருந்தது. யாழ்ப்பாணம் D.R.O பிரிவு யாழ்ப்பாண நகரம், நல்லூர், கொக்குவில் கிராம சபைகளை உள்ளடக்கியதாக இருந்தது. மேலும் யாழ்ப்பாண D.R.O பிரிவும் 1947இல் இருந்து 1959 ஆம் ஆண்டு வரை இருந்த யாழ்ப்பாண பாராளுமன்ற தேர்தல் தொகுதியும் ஒத்த பரப்பெல்லைகளை கொண்டிருந்தன. 1959ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயசபை யாழ்ப்பாண D.R.O பிரிவை யாழ்ப்பாணம், நல்லூர் என இரண்டு பாராளுமன்ற தேர்தல் தொகுதிகளாகப் பிரிந்தது. இப்பின்புலத்தில் 1972இல் பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகளுக்கு ஏற்ப D.R.O பிரிவுகள் இருக்க வேண்டுமென்ற அரசின் கொள்கையின்படி யாழ்ப்பாண D.R.O பிரிவு யாழ்ப்பாணம், நல்லூர் பாராளுமன்ற தொகுதிகளின் எல்லைகளுக்கு ஏற்ப யாழ்ப்பாணம், நல்லூர் என இரு D.R.O பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இப் பிரிப்பு இரு பிரிவுகளின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்தது. 1965க்குப் பின் இலங்கை நிர்வாக சபையைச் சேர்ந்த அதிகாரிகள் D.R.O ஆக நியமிக்கப்பட்டனர். மேலும் 1970 களில் முதல் முறையாக பட்டதாரிகள் அபிவிருத்தி மற்றும் கலாசார உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டனர். இந் நியமனங்களால் பிரதேச மட்ட அபிவிருத்தி, பண்பாட்டு மேம்பாடுகளை முன்னெடுக்க வழி பிறந்தது. மேலும் பிரதேச நிர்வாகத்தை விரிவுபடுத்தி வலுப்படுத்தவும், நில அதிகாரத்தைக் கொடுக்கவும் D.R.O பிரிவுகள் உதவி அரசாங்க அதிபர் (AGA) பிரிவுகளாக 1972இல் தரம் உயர்த்தப்பட்டன. மேலும் D.R.O என்று அழைக்கப்பட்டவர்கள், உதவி அரசாங்க அதிபர் (AGA) எனப் பெயர் மாற்றப்பட்டு, அவர்கள் கூடிய அதிகாரங்களையும் பெற்றுக் கொண்டனர்.

1992ஆம் ஆண்டின் 58வது இலக்கச் சட்டத்தின் மூலம் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டன. இதன் மூலம் கூடியளவு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகங்களின் சேவை மக்களுக்கு அண்மையில் (Proximity) கிடைக்க வழி பிறந்தது. முன்னர் மாவட்டங்களால் மேற்கொள்ளப்பட்ட பல சேவைகள் இப்பொழுது பிரதேச செயலகங்களிடம் கொடுக்கப்பட்டுள்ளன. இன்று பிரதேச செயலகங்கள் பல்வேறு நிர்வாக சேவைகளுடன், திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி, வாழ்வாதாரச் செயற்பாடுகள், இடர் முகாமைத்துவம், வீட்டுத்திட்டங்கள், மகளிர், குழந்தைகள், முதியோர் பாதுகாப்பு, ஓய்வுதியம், கலாசார மேம்பாடுகள் எனப் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. மேலும் பணியாளர்களின் எண்ணிக்கையும், ஆற்றலும் பெரியளவில் அதிகரித்துள்ளதுடன், இவர்கள் பெரும் எண்ணிக்கையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதாரிகளுமாவர் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் 300க்கு மேற்பட்டோர் பணியாற்றுகின்றனர்.

1970களில் இருந்து 1981 வரையுள்ள இடைப்பட்ட காலத்தில், யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏழு கிராமசேவகர் பிரிவுகள் இருந்தன. 1981ஆம் ஆண்டு இப்பிரதேச செயலகப்பிரிவு 73253 பேரைக் கொண்டிருந்தது. அட்டவணை 1 கிராமசேவகர் பிரிவுகளும் அண்ணளவான குடித்தொகையும் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை - 1**

| கிராமசேவகர் பிரிவு இலக்கம் | கிராமசேவகர் பிரிவுப் பெயர் | 1981 குடித்தொகை (அண்ணளவாக மதிப்பிடப்பட்டது) |
|---|---|---|
| 24 | கொழும்புத்துறை | 8100 |
| 24A | சுண்டிக்குளி | 8600 |
| 25 | குருநகர் | 13000 |
| 26 | யாழ்ப்பாண நகர் | 10800 |
| 27 | வண்ணார் பண்ணை தென்கிழக்கு | 10600 |
| 28 | வண்ணார் பண்ணை தென்மேற்கு | 10400 |
| 29 | மூர் வீதி | 8600 |

1981 இல் இப்பிரிவிலுள்ள கிராமசேவகர் பிரிவுகள் சராசரியாக 10000இற்கு மேற்பட்ட மக்களைக் கொண்டிருந்தன. 1977 இல் ஆட்சிக்கு வந்த, காலம் சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜெ. ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் கிராம மட்டத்தில் நிர்வாகத்தை மேம்படுத்தவும், ஐக்கிய தேசியக் கட்சியை வலுப்படுத்தவும் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுக்கும் ஒவ்வொரு விசேடசேவை அதிகாரியை நியமித்தார். 1962 இல் கிராமவிதானை முறை ஒழிக்கப்பட்டது, ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கைக் குறைக்க எடுத்த நடவடிக்கையாகக் கருதப்பட்டு விசேட சேவை அதிகாரி முறை அறிமுகம் செய்யப்பட்டது. வடக்கு, கிழக்கு, மாகாணங்களில் யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் விசேடசேவை அதிகாரிகளின் நியமனம், பங்கீடு குறித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி சகல தேர்தல் தொகுதிகளிலும் வெற்றி பெற்றதால் விசேட சேவை அதிகாரிகள் நியமனத்தில் முழுப்பதவிகளையும் தமக்குத் தரும்படி அது கோரியது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அரைவாசி தனக்கும் அரைவாசி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் கொடுக்க உடன்பட்டது. எனினும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி பதவிகளின் முழு எண்ணிக்கையையும் தமக்கே தரும்படி விடாப்பிடியாக நின்ற நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி முதலில் அரைவாசிப்பங்கை நிரப்புமாறு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியிடம் கூறியது. இதன்படி 78 விசேட சேவை அதிகாரிகள் மாவட்டத்தில் நியமனம் பெற்றனர். யாழ்ப்பாணப் பிரதேச செயலகப்பிரிவு ஏழு விசேட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை அதிகாரிகளுக்குப் பதிலாக 4 விசேடசேவை அதிகாரிகளையே பெற்றது. பின்னர் மிகுதி அரைவாசி விசேடசேவை அதிகாரிகள் பதவிகள் நிரப்பப்படாததால் மாவட்டம் 77 விசேடசேவை அதிகாரிகளை இழந்தது.

1987 இல் கிராமசேவகர் பிரிவுகள் மறுசீரமைக்கப்பட்ட பொழுது விசேடசேவை அதிகாரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கிராம சேவகர் பிரிவுகள் அதிகரிக்கப்பட்டு, விசேட சேவை அதிகாரி பதவிகள் ஒழிக்கப்பட்டு, இவர்கள் கிராமசேவகர்களாகப் பதவி மாற்றம் பெற்றனர். யாழ்ப்பாணப் பிரதேச செயலகப்பிரிவில் கிராமசேவகர் பிரிவுகள் ஏழில் இருந்து பதினொன்றாக அதிகரிக்கப்பட்டன. கிராம சேவகர் பிரிவுகளின் விபரங்கள் அட்டவணை 02இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை - 2**

| கிராமசேவகர் பிரிவு இலக்கம் | கிராமசேவகர் பிரிவுப் பெயர் |
|---|---|
| 35 | கொழும்புத்துறை |
| 36 | ஈச்சமோட்டை |
| 37 | அத்தியடி |
| 38 | சுண்டிக்குளி |
| 39 | குருநகர் மேற்கு |
| 40 | குருநகர் கிழக்கு |
| 41 | யாழ்ப்பாணம் |
| 42 | பெரியகடை |
| 43 | கொட்டடி |
| 44 | நாவாந்துறை |
| 45 | மூர்வட்டாரம் |

**மூலம் – மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்**

1990களில் காலம் சென்ற முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிறேமதாச அவர்கள் கிராம மட்டத்தில் பதவியில் இருந்த விவசாய மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பதவி மாற்றம் செய்து கிராமசேவகர்களாக நியமித்தார். இதனால் நாட்டில் கிராமசேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை 14002 ஆக அதிகரித்தது. இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குக் கொடுக்காது, மக்கள் தொகை, பரப்பு மற்றும் பிற காரணங்களைக் கருத்திற் கொண்டுபுதிய கிராமசேவகர் பிரிவுகள் பகிரப்பட்டதனால் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவு புதிதாக 17 கிராமசேவகர் பிரிவுகளைப் பெற்றது. இதனால் பிரதேச செயலகத்தின் மொத்த கிராமசேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை 28 ஆக அதிகரித்தது, இப்பிரிவுகளே இன்று வரை நடைமுறையிலுள்ளது. யாழ்ப்பாணப் பிரதேச செயலகப்பிரிவு 2012 இல் 50491 பேரைக் கொண்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 03 இல் கிராம நிலதாரி பிரிவு இலக்கம், பெயர், குடித்தொகை விபரங்கள் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை - 3**

| கிராம நிலதாரி பிரிவு இலக்கம் | கிராம நிலதாரி பிரிவுப் பெயர் | குடித்தொகை |
|---|---|---|
| J/61 | நெடுங்குளம் | 728 |
| J/62 | கொழும்புத்துறை கிழக்கு | 2909 |
| J/63 | கொழும்புத்துறை மேற்கு | 522 |
| J/64 | பாசையூர் கிழக்கு | 1262 |
| J/65 | பாசையூர் மேற்கு | 1178 |
| J/66 | ஈச்சமோட்டை | 2823 |
| J/67 | திருநகர் | 1638 |
| J/68 | றெக்கிள் மேசன் | 4108 |
| J/69 | றெக்கிள் மேசன் | 3546 |
| J/70 | குருநகர் கிழக்கு | 1974 |
| J/71 | குருநகர் மேற்கு | 1546 |
| J/72 | சின்னக்கடை | 874 |
| J/73 | யாழ்ப்பாண நகரம் மேற்கு | 2142 |
| J/74 | யாழ்ப்பாண நகரம் கிழக்கு | 1988 |
| J/75 | சுண்டிக்குளி தெற்கு | 1915 |
| J/76 | சுண்டிக்குளி மேற்கு | 1703 |
| J/77 | மருதடி | 1531 |
| J/78 | அத்தியடி | 1911 |
| J/79 | சிறாம்பியடி | 1153 |
| J/80 | பெரியகடை | 1372 |
| J/81 | கோட்டை | 2040 |
| J/82 | வண்ணார்பண்ணை | 1654 |
| J/83 | கொட்டடி | 1685 |
| J/84 | நாவாந்துறை தெற்கு | 1888 |
| J/85 | நாவாந்துறை வடக்கு | 2356 |
| J/86 | மூர் வீதி தெற்கு | 1272 |
| J/87 | மூர் வீதி வடக்கு | 1538 |
| J/88 | புதிய மூர் வீதி | 1249 |

மூலம் இலங்கை குடிசைக்கணிப்பு – 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் – இலங்கை குடிசைக்கணிப்பு – 2012 குடிசனக் கணிப்பு 2012 இல் யாழ்ப்பாணப் பிரதேசப் பிரிவில் சராசரியாக ஒரு கிராம நிலதாரி பிரிவு 1800 பேரைக் கொண்டிருந்தது. 1981 இல் இப்பிரிவில் கிராமசேவர் பிரிவுகள் சராசரி 10000இற்கு மேற்பட்ட மக்களைக் கொண்டிருந்தன.

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவின் கிராம நிலதாரிப் பிரிவுகள் ஒவ்வொன்றும் சமூக– பொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் நுண்மட்டத்தில் தனித்தன்மைகள் கொண்டனவாக இருக்கின்றன. இக் கிராம நிலதாரிப் பிரிவுகள் நுண்மட்ட அபிவிருத்தி, மற்றும் சமூக– சமுதாய மேம்பாட்டுச் செயற்பாடுகளுக்குப் பொருத்தமாக அமைந்துள்ளன. யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் இன்று பழைய பூங்கா வளவில் அழகான புதிய பிரதேச செயலக மாதிரிக் கட்டிடத் தொகுதியில் சிறந்த பௌதிகவளங்களுடனும் நல்ல பராமரிப்புடன் அமையப் பெற்றுள்ளது. மேலும் இதன் முகப்பு கொடிக்கம்பத்துடன், அழகான வீதிக்கட்டமைப்பைக் கொண்டு கவர்ச்சிகரமாக விளங்குகின்றது. சேவைகளைப் பெறச் செல்வோருக்குக் கட்டமைப்பு வசதிகள் மனநிறைவைக் கொடுக்கின்றன.

இப்புதிய கட்டிடத் தொகுதிக்கு இச்செயலகம் இடம்பெயர முன்னர் அது இப் பிரதேச மக்களால் சுண்டிக்குளியில் வாங்கிக் கொடுக்கப்பட்ட கட்டடத் தொகுதியில் செயற்பட்டது. இப்பிரதேச மக்களின் அன்பளிப்பு மிகவும் பாராட்டத்தக்கது. இன்றும் இக் கட்டிடத் தொகுதியில் சில சேவைகள் இடம்பெற்று வருகின்றன. மேலும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் தனக்குச் சொந்தமான இடத்தை அமைக்க முன்னர் பல இடங்களில் வாடகை வீடுகளில் இருந்த வரலாறும் உண்டு. யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தின் கடந்த 50 வருட காலத்தில் இலங்கை நிர்வாகச் சேவையைச் சேர்ந்த ஆற்றல்மிகு, புகழ்பெற்ற பலர் உதவி அரசாங்க அதிபராகவும், பிரதேச செயலாளர்களாகவும் சிறப்பாகக் கடமை புரிந்துள்ளனர்.

| பிரதேச செயலாளர்களின் பெயர் | இருந்து | வரை |
|---|---|---|
| கலாநிதி. க.குணராசா | 01.01.1992 | 16.03.1997 |
| திரு து. வைத்திலிங்கம் | 17.03.1997 | 31.12.1997 |
| திரு. பா.செந்தில் நந்தனன் | 01.01.1998 | 19.06.2005 |
| திரு. பற்றிக் டிரஞ்சன் | 20.06.2005 | 13.09.2006 |
| திரு. பா.செந்தில் நந்தனன் | 14.04.2006 | 20.01.2007 |
| திரு. மரியதாசன் ஜேகூ | 24.01.2007 | 04.06.2009 |
| திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம் | 05.06.2009 | 31.03.2016 |
| திரு பொ.தயானந்தன் | 01.04.2016 | 27.02.2019 |
| திரு. சா.சுதர்சன் | 01.03.2019 | இன்று வரை |

இவர்களை விட திரு ஹெக்டர் ஜோசப், திரு சபாபதிப்பிள்ளை, திரு மாணிக்கவாசகர் உதவி அரசாங்க அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர்.

ஐம்பது ஆண்டு வரலாற்றைக் கொண்ட இச் செயலக செயற்பாடுகள் முப்பது ஆண்டு கால யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. யுத்தத்தினால் ஏற்பட்ட இடப்பெயர்வு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிவாரணங்கள், மீள்குடியேற்றம் போன்ற விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

இப்பிரதேச செயலகம் யுத்தத்தால் பல்வேறு துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள் அழிவுகள், இடப்பெயர்வுகள், ஏதிலிகள் வருகை போன்ற நிகழ்வுகளை 1980களில் இருந்து சந்திக்க நேர்ந்தது. 1981 இல் நூலக எரிப்பு, பெரியகடை சந்தைத்தொகுதி பாதிப்பு, மாநகர சபைக் கட்டிடம், யாழ்ப்பாணப் புகையிரத நிலைய அழிவுகள், 1983இல் இனக்கலவரம், 1987 இல் இந்திய அமைதிப்படைக்கும், புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையும் யாழ்ப்பாண நகர மக்களின் இடப்பெயர்வும், மீள்குடியேற்றம், 1991 இல் முஸ்லிம் மக்களின் வெளியேற்றம், 1991 இல் தீவக மக்களின் யாழ்ப்பாண வருகை, 1995 ஒக்டோபரில் ஒட்டு மொத்த வலிகாமம் – யாழ்ப்பாணம் இடப்பெயர்வு, 1996 ஏப்பிரல் – மே மாதங்களில் தென்மராட்சி மற்றும் இடங்களுக்கு இடம் பெயர்ந்தோர் மீள் வருகை, போன்ற நிகழ்வுகளால் இப்பிரதேச செயலகம் அதிக நிர்வாகச் சுமைகளைச் சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் பிரதேச செயலகப்பணியாளர்கள் அழுத்தம் நிறைந்த நிலையில் தமது கடமைகளைச் செய்ய வேண்டியிருந்தது. இந்நிலையிலும் பிரதேச நிர்வாகம் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களைக் கொடுப்பதிலும் நிவாரண நடவடிக்கைகளிலும், புனர்வாழ்வு, புனருத்தாரணப்பணிகளிலும் கூடுதலாக ஈடுபடவேண்டியதாயிற்று. சாதாரண நாளாந்த நிர்வாகத்துக்குப் பதிலாக இடர் நிர்வாகச் செயற்பாடுகள் முதன்மை பெற்று இருந்தன. 1995/1996 இல் இப்பிரதேச செயலகம் சாவகச்சேரியில் இடம்பெயர்ந்த நிலையிலும் இடம்பெயர்ந்த பிரதேச மக்களின் நலன்களைச் சிறப்பாகக் கவனித்த பெருமையைக் கொண்டுள்ளது.

1996 மே மாதத்தில் இருந்து இன்றுவரைக்கும் இச் செயலகம் மீள்குடியேற்றம், வாழ்வாதார மேம்பாட்டுச் செயற்பாட்டுகள், அபிவிருத்தி நடவடிக்கை போன்றவற்றில் மிகவும் துடிப்பாகவும், சிறப்பாகவும் செயற்பட்டு வருகின்றது. சாதாரண பொதுநிர்வாகம், அபிவிருத்தி நிர்வாகம், இடர்முகாமைத்துவ நிர்வாகம் ஆகிய துறைகளில் இச் செயலகம் சிறந்து விளங்குகின்றது, நாட்டிலுள்ள பிரதேச செயலகங்களுக்கிடையேயான போட்டியில், தேசிய மட்டத்தில் இச் செயலகம் இரண்டாம் இடத்தையும், இப்பிரதேச செயலர் திரு. சா. சுதர்சன் மிகச் சிறந்த நேர்மையான அதிகாரி என்ற கௌரவத்தையும் பெற்று இருப்பது பாராட்டுக்குரியது. இப் பிரதேச செயலகத்தின் பணிகள், சாதனைகள் குறித்துப் பிரதேச மக்கள் பெருமைப்படுகின்றனர்.

கடந்த 50 ஆண்டுகளில் பல்வேறு நிர்வாக பிரதேச பிரச்சினைகளுக்குச் சிறப்பாக முகம் கொடுத்து சேவையாற்றியதைப் போன்று வரும் காலத்திலும், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப கடதாசி இல்லாமலும், மக்கள் காரியாலயத்துக்கு நேரில் செல்லாது தங்களுக்குரிய சேவைகளை வீட்டில் இருந்து பெற வழிசமைக்க வேண்டும். இச் செயலகம் காலத்துக்கு ஏற்ற தகவல் தொழில்நுட்ப வசதிகளையும், பணியாளர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் சிறந்த தேர்ச்சியையும் பெற்றிருப்பது காலத்தின் தேவையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தில் பெயரற்றுப் போகும் ஒரு கிராமத்தின் பெருமைகள்



**யோ. யோண்சன் ராஜ்குமார்**
பிரதி இயக்குனர்,
திருமறைக்கலாமன்றம்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் காணப்படுகின்ற கிராமங்களில் மிகவும் தொன்மையானது சுண்டிக்குளி கிராமமாகும். இக்கிராமத்தின் எல்லையாக மிகப் பெரிய நிலப்பரப்பு ஒரு கால கட்டத்தில் காணப்பட்டது. ஆனால் தற்போது அது சுண்டுக்குளி வடக்கு, தெற்கு என்ற இரண்டு கிராமசேவையாளர் பிரிவுகளுக்குள் சுருங்கி இருப்பது மட்டுமன்றி முகவரிகளில் கூட அதன் பெயரையே பயன்படுத்தாத அளவுக்கு அப் பெயரின் பாவனை அற்றுப்போய்க் கொண்டிருக்கின்றது. அதற்கான ஒரு விழிப்புணர்வினை ஊட்டும் வகையில் இக்கட்டுரை வரையப்படுகின்றது.

## பிரதேசத்தின் எல்லைகள்

யாழ்ப்பாணத்தில் சுண்டிக்குளிப் பிரதேசமானது, பழைய வரைபடத்தின்படி யாழ்நகரின் வடக்கே நாவலர் வீதியும், தெற்கே கடற்கரையும், கிழக்கே கொழும்புத்துறையும், மேற்கே பலாலி வீதியும் இதன் எல்லைகளாக இருந்துள்ளன. கரையூர், பாசையூர் போன்ற கிராமங்கள் தோன்றி இருக்கவில்லை. இதற்கு ஆதாரமாக 1650 வரையப்பட்ட வரைபடமொன்றும் ஒல்லாந்து தேச புரட்டஸ்தாந்து மதகுருவாகிய பிலிப்பு பல்தேயுஸ் அவர்களின் குறிப்பும் உள்ளன. பல்தேயுஸ்1658–1665 வரை இலங்கையில் பணியாற்றியவர். அவர் எழுதிய 'இலங்கைத்தீவின் உண்மையான நிச்சயமான வர்ணனை' என்ற நூலானது வடபகுதி பற்றிய பல்வேறு விடயங்களைக் குறிப்பிடுகின்றது. அவரது குறிப்பில்

*"யாழ்ப்பாண கோட்டைக்கு அண்மையில் இருந்த சுண்டுக்குளியில் வாழ்ந்த மக்களில் பெரும்பாலானவர்கள் சிவியாராவார் இங்கு 450 பாடசாலை மாணவர்கள் இருந்தனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆனால் போதனைகளில் அக்கறைகொள்வதில்லை பெற்றோர்களுடன் மீன்பிடிக்கச் சென்றுவிடுவார்கள்."*

இக்கூற்றில் இருந்து கோட்டைக்கு அண்மையதாக இருந்த கடற்கரைப் பிரதேசம் சுண்டுக்குளி பிரதேசத்துக்குள்ளேயே அடங்கி இருந்தமை தெரியவருகின்றது., அதுமட்டுமன்றி இன்றும் (கரையூர்) குருநகர், பாசையூர் கிராம மக்களின் காணி உறுதிகளில் சுண்டுக்குளிப்பற்று என்றே அவை எழுதப்பட்டு வந்துள்ளன. இப்பிரதேசம் பரந்ததாக இருந்துள்ளது. யாழ்ப்பாணத்தின் முக்கிய நிர்வாக மையங்களாக நல்லூர், வண்ணார் பண்ணை, சுண்டிக்குளி, கொழும்புத்துறை என்பனவே இருந்தன. கோட்டையை அண்டிய நகரப்பகுதியினை அவர்கள் சீதாரி என்று அழைத்துள்ளனர் 'சீதாரி' என்பதற்கு நகரம் என்பது பொருள். இந்த நகரத்துடன் இணைந்த பிரதேசம் பறங்கித்தெரு என அழைக்கப்படலாயிற்று.

போத்துக்கேயரின் ஆட்சிக்காலத்திலே கத்தோலிக்க மதப்பரப்புதலின் பின்னர், அவர்களின் நிர்வாகத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் 36 கோயிற்பற்றுக்கள் இருந்தன. அதில் ஒன்றாக சுண்டுக்குளி மட்டுமே நகரை அண்டிய பகுதியாக இருந்தது மட்டுமன்றி இப்பிரதேசங்களெல்லாவற்றிக்கும் தலைமைக் கோவில் பற்றாகவும் அதுவே விளங்கியது.

*"பறங்கிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் தீவுப்பற்றுக்களையும் 32 கோவிற் பற்றுக்களாக பிரித்து பற்றுக்கொரு கோவிலாக அமைத்தனர் அதனால் அப்பிரிவுகள் கோவில்பற்று என்னும் பெயருடன் இன்னும் வழங்கி வருகின்றன. அவைகளானவை நல்லூர், சுண்டிக்குளி, வண்ணார் பண்ணை, மானிப்பாய், சங்கானை பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, உடுவில், மல்லாகம், தெல்லிப்பளை, மயிலிட்டி, அச்சுவேலி, புத்தூர், கோப்பாய் எனப்பதினான்காகும்.." (யாழ்பாணச்சரித்திரம்,செ.இராசநாயகம்1933)*

ஆனால் பின்னர் கரையூர், பாசையூர் என கிராமங்கள் பிரிந்து கொண்டு செல்ல சுண்டுக்குளியின் எல்லையாக யாழ்ப்பாணம் திருநகரினை தெற்கு எல்லையாகவும், மேற்கே இராசாவின் தோட்ட வீதியையும், கிழக்கே பாண்டியன் தாழ்வினையும் நேரே கச்சேரி நல்லூர் வீதியையும், வடக்கே நாவலர் வீதியையும் கொண்டிருந்தது. தற்போது மேலும் சுருங்கி மேற்கே கோவில் வீதியையும் தெற்கே, இராசாவின் தோட்ட வீதியையும் கிழக்கே கச்சேரி நல்லூர் வீதியை அண்டிய பகுதியையும் வடக்கே நாவலர் வீதியையும் கொண்டு காணப்படுகின்றது.

இதனைவிட சோகமான விடயம் தற்போது கிராம சேவையாளர் பிரிவுக்கு மட்டுமே ஊரின் பெயர் குறிப்பிடப்படுகின்றது. முகவரிகளில் யாரும் சுண்டுக்குளி என்ற தமது பிரதேச பெயரினை இடுவதில்லை. இன்று சுண்டுக்குளியின் பெயரினை தாங்கிய இடங்களாக 'சுண்டுக்குளி மகளிர் கல்லூரி', 'சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயம்', சுண்டிக்குளி தபாலகம்' 'சுண்டுக்குளி சனசமூக நிலையம்'. ஆகியவை மட்டுமே காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெயர்க்காரணம்

சுண்டுக்குளி என்ற பெயர் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி மன்னாரிலும் காணப்படுகின்றது. சுண்டிக்குளம் என்ற இடமும் காணப்படுகின்றது. சுண்டுக்குளி என்ற பெயர் எவ்வாறு வந்தது என்பதற்கு சரியான ஆதாரங்கள் எதுவும் இல்லை. ஆனால் 'யாழ்பாணத்து மண்வாசனை' என்னும் பெயரில் நூலை எழுதிய வண்ணை தெய்வம் என்பவர் சுண்டிகுளி என்பதனைப் பிரித்து, (சுண்டி +குழி) சுண்டி என்பதற்கு தொட்டால் வாடி (தொட்டாற்சுருங்கி) சுச்சு , நீர்ச்சுண்டி, சுக்கு என்பவற்றுடன் தொடர்புபடுத்தி, சுண்டுக்குளி முன்னர் பள்ள நிலமாக இருந்தபோது நீர்தேங்கி நிற்க அங்கு சுண்டிச்செடி செறிந்து காணப்பட்ட நிலையில் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். என்று கூறுகின்றார்.(வண்ணை தெய்வம், 2003 'யாழ்ப்பாணத்து மண்வாசனை மணிமேகலை பிரசுரம்,) ஆனால் இங்கு பாரம்பரியமாக சுண்டிக்குளம் என்னும் சிறிய குளம் இருந்ததாகவும் தற்போது அது மேவப்பட்டு குடியேற்றம் இடம் பெற்றதாகவும் வாய்வழியான கருத்து உள்ளது. காலஞ்சென்ற ஆசிரியர் கலாசாலை அதிபர் றோச் அவர்கள் தனது கட்டுரை ஒன்றிவே இப்பிரதேசம் ஆரம்ப காலத்தில் 'பிரபுக்கள் குடியிருப்பு' என்ற பெயரில் அழைக்கப்பட்டதாகவும் பின்னரே இப்பெயரினைப் பெற்றதாகவும் குறிப்பிடுகின்றார்.

*"யாழ்நகரின் கிழக்குப் பகுதியில் குடிசன அடர்த்தி மிகுந்ததும் கல்வி செல்வம் பண்பாட்டின் வேராகவும் மதிப்பார்ந்த பெருமக்கள் வாழும் நகரக் கிராமமாகச் சுண்டுக்குளி பிரதேசம் விளங்குகின்றது. ஒரு காலத்தில் பிரபுக்கள் குடியிருப்பு எனவும் இந்தப்பகுதி அழைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் கச்சேரியை அண்மித்த பழமை வாய்ந்த வரலாறுக் கிரமமாகவும் திகழுகின்றது." ( றோச் ,1989, புனித யுவானியார் ஆலயம் 100வது ஆண்டுவிழா மலர்)*

மேற்கூறப்பட்ட கருத்துக்களை நோக்கும் போது இன்னமும் ஆழமான ஆய்வுகள் செய்யப்படவேண்டும் என்பது தெட்டத் தெளிவாக தெரிகின்றது.

### சுண்டிக்குளியும் கூத்து மரபும்

யாழ் நகரின் மையப்பகுதியாக பிற்பட்ட காலத்தில் புனித திருமுழுக்கு யோவான் ஆலய சூழலை மையமாகவும் கொண்டு காணப்பட்ட சுண்டிக்குளி பிரதேசம் ஒருகாலகட்டத்தில் தென்மோடிக் கூத்து மரபுக்கே மத்தியஸ்தானமாகக் கருதப்பட்டது. அண்ணாவியார் பஸ்ரியாம்பிள்ளை, அண்ணாவியார் பொன்னுத்துரை, அண்ணாவியார் மரியாம்பிள்ளை, அண்ணாவியார் செல்லையா, அண்ணாவியார் பூந்தான் யோசேப்பு என இங்கு கூத்து மரபினை வளர்த்த கல்வி கற்ற ஒரு தலைமுறை வாழந்தது. இவர்களோடு இணைந்த கொய்யாத்தோட்டம், பாண்டியன்தாழ்வு, பறங்கித்தெரு போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களும் ஒன்றிணைந்து செயற்பட்டனர். புனித யுவானியார் ஆலய முன்றலும் காரை வளவு என அழைக்கப்பெற்ற (பிரதேச செயலகம் முன்பு இயங்கிய இடம்) திறந்த வெளியும் அடிக்கடி கூத்து மேடையேறும் களங்களாக இருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் பரிமளம், புலவர் பொன்னையா, புலவர் யாக்கோபு, புலவர் மரியாம்பிள்ளை, புலவர் எம் .வி. ஆசீர்வாதம் போன்ற பல புலவர்கள் பல கூத்து நூல்களை இப்பிரதேசத்தில் இருந்து ஆக்கியுள்ளனர். சஞ்சுவான், மத்தேசு மவுறம்மா, கிறிஸ்தோப்பர், மெஞ்ஞான வரத்தகன், தானியேல், மரியதாசன் விஜயமனோகரன், மார்க்கப்பர். மனம் போல் மாங்கல்யம் போன்ற பல கூத்துக்கள் இங்கு எழுதப்பட்டுள்ளன. அரச கூத்தன், கிறிஸ்தோப்பர், சின்னத்துரை, வலேரி, லூாயிஸ், ஐயாத்துரை, நீக்கிலஸ் அருளானந்தம், செபஸ்தியாம் பிள்ளை ஜெயராசா, சேவியர் செல்லத்துரை, முத்தையா, சில்லையூர் செல்வராசா, பிரான்சீஸ் ஜெனம் போன்ற ஆற்றல் மிக்கபெரிய நடிகர் குழாம் இங்க இருந்துள்ளது. இங்கு உருவாகிய 'யாழ் நவரச நாட்டுக்கூத்துக் கலாமன்றம' தென்மோடிக் கூத்துமரபுக்கு என ஒரு ஒழுங்கையும் கட்டுப்பாட்டினையும் பேணி இக்கூத்து மரபுக்கே ஒரு கலைத்துவ உச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது. கரையூர், பாசையூர், நாவாந்துறை என என எல்லைப்பட்டு நின்ற கூத்துக் கலைஞர்களையும் கிராமம் கடந்து ஒன்றிணைத்த சக்தியாக்கி யாழ் நகரில் மட்டுமன்றி குடா நாடு முழுவதுக்கும், மற்றும் தலை நகர் கொழும்பு, இலங்கை வானொலி என அதன் வீச்செல்லைகளை அகலித்து இக்கூத்துமரபுக்கு ஒரு கொடுமுடியை ஏற்படுத்திய அண்ணாவியார் பூந்தான் யோசேப்புவும், யாழ் நவரச நாட்டுக்கூத்துக் கலாமன்றமும் செயற்பட்ட மத்திய நகரமாகவும் சுண்டிக்குளி காணப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கு முன்பே இங்கு கூத்து நூல்கள் பதிப்புச் செய்யப்பட்டன. ஆசிரியர் மு. ஆசீர்வாதம் அவர்களால் எஸ்தாக்கியார், விஜயமனோகரன், மரியதாசன், தேவசகாயம் பிள்ளை, மனம்போல் மாங்கல்யம் போன்ற கூத்து நூல்கள் இங்குதான் ஆசீர்வாதம் அச்சகத்தில் பதிப்பு செய்யப்பட்டது.

**ஏனைய சிறப்புக்கள்**

சுண்டுக்குளி பிரதேசமானது ஆன்மீகம் கலை இலக்கியம் கல்வி என பல விடயங்களிலும் முன்னணியில் திகழ்ந்துள்ளது. முதல் கத்தோலிக்க பத்திரிகையாகிய 'சத்தியவேத பாதுகாவலன்' இங்கிருந்து தான் வெளிவந்தது. புனித வளன் கத்தோலிக்க அச்சகம், ஆசீர்வாதம் அச்சகம், பஸ்ரியன் அச்சகம் போன்ற பல அச்சகங்கள் இக்கிராமத்திலேயே இயங்கியுள்ளன. எல்லாவற்றினையும் விட முதல் முதலாக தமிழ் தட்டச்சு இயந்திரத்தினை கண்டுபிடித்து தட்டச்சு இயந்திரத்தின் தந்தை எனப் போற்றப்படும் இ.முத்தையா (1880-1959) சுண்டிக்குளிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

அது மட்டுமன்றி யாழ்ப்பாணம் கச்சேரி, பழையபூங்கா, பிரதேசச் செயலகம் அனைத்தும் மையங்கொள்வதும் இப்பிரதேசத்திலேயே. யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் கத்தோலிக்க இயங்கு தளமான ஆயர் இல்லம், ஆசனக்கோவில், மாட்டினார் சிறிய குருமடம், கத்தோலிக்க அச்சகம், சேமக்காலை.. அனைத்தும் இப்பிரதேசத்திலேயே அமைந்துள்ளன. புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயம், புனித யுவானியார் ஆலயம், புனித திரேசம்மாள் ஆலயம், அருள் ஆச்சிரமம் போன்ற கத்தோலிக்க தேவாலயங்கள் இப்பிரதேசத்தில் இருக்கின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அங்கிலிக்கன் திருச்சபையின் பரியோவான் ஆலயமும் இங்கு காணப்படுகின்றது. பழைமையான மருதடி எழும்பிள்ளையார் தேவஸ்தானமும் இங்கு காணப்படுகின்றது.

பரியோவான் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னிர் மடம் பத்திரிசியார் கல்லூரி,, என யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான பாடசாலைகளின் மையமாக இப் பிரதேசமே அமைந்தது. 'யோண் பொஸ்கோ இளைஞர் மன்றம்' தொழிற்கல்வியை வழங்கும் நிறுவனமாக வளர்த்தெடுக்கப்பட்டு பின்னர் புனித யோண் பொஸ்கோ ஆரம்ப பாடசாலையாக மாறி ஆரம்பக்கல்வியில் இலங்கையில் சிறந்த பாடசாலைகளிலொன்றாக மிளிர்கின்றது. அவ்வாறே தோலகட்டி செபமாலை தாசர் சபையினர் இங்கு இருந்து ஆரம்பித்த ஆன்மீகப்பணி அருள் ஆச்சிரமமாக மலர்ச்சி பெற்றுள்ளது.

அவ்வாறே அரசியலிலும் துறை போனவர்களாக பலர் இங்கிருந்துள்ளனர். அ.யோ. சுவாம்பிள்ளை, நீ அந்தோனிப்பிள்ளை போன்றவர்கள் மாநகரசபை உறுப்பினர்களாக இருந்துள்ளனர் சூ.சொலமன் சிறில் தற்போதும் உறுப்பினராக இருப்பதுடன் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண நீதிபதியாக இருந்த உயர்திரு யேம்ஸ் யோசவ் உட்பட பல கல்விமான்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள் இங்கே தோன்றியமை பெருமைப்பட வேண்டிய விடயமாகும்

இவ்வாறு நீண்ட பாரம்பரியத்தினைக் கொண்டதாகவும் பல்வேறு ஆக்கப் பணிகளினதும் ஆன்மீகப்பணிகளினதும் மையமாக விளங்கும் சுண்டுக்குளிப் பிரதேசம் யாழ்ப்பாணம் என்ற பொதுமைக்குள் கரைந்து இல்லாமலே போகக்கூடிய ஆபத்தினை உடைய கிராமமாக காணப்படுகின்றது. இக்கிராமத்தின் பெருமைகளை இக்கட்டுரை இனங்காட்ட முற்பட்டதே தவிர இது முழுமையான ஆய்வல்ல. இது தொடர்பான ஆழமான ஆய்வுகள் செய்யப்படவேண்டும். எனவே இக்கிராமத்தில் வாழ்பவர்கள் தமது கிராமத்தினை இனங்காட்டவும், முகவரி இடவும், அடையாளப்படுத்தவும் முயற்சிப்பதனூடாக முகமிழக்கும் கிராமத்தினை வாழச் செய்யமுடியும்.




ૡ ૡ ૡ ૡ ૡ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம் பாசையூர் பிரதேசமும் அதனுடன் இணைந்த நாட்டார் கலைகளும்



**திருமதி யூட் அல்போன்சஸ் மேவிஸ் ஜீன்சியா**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

### 1.1 ஆய்வுப் பிரதேசப் பின்னணி

இந்துசமுத்திரத்தின் நித்திலம் எனப்போற்றப்படும் இலங்கைத் தீவின் வடபகுதியில் அமைந்துள்ள யாழ்.குடா நாட்டின் கரையோரப் பகுதியில் அமைந்துள்ள 62.29 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்டபுகழும் புதுமையும் மிக்க புனித அந்தோனியார் ஆலயத்தைக் கொண்டுஅமையப் பெற்ற கிராமமே பாசையூராகும். வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில்,யாழ்.பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்டபாசையூர் கிராமமானது J/64 பாசையூர் கிழக்கு, J/65 பாசையூர் மேற்கு என இரு பிரிவுகளைக் கொண்டது. பாசையூரின் வடக்கிலும், கிழக்கிலும் கொழும்புத்துறை காணப்படுகின்றது. தெற்கே கடற்கரையும் மேற்கே குருநகரும் அமைந்துள்ளது. கிராமத்தின் மையப்பகுதியாகபாசையூர் புனிதஅந்தோனியார் தேவாலயம் அமைந்துள்ளது. நூற்றாண்டுகால பழைமை வாய்ந்த இத்தேவாலயம் புகழ்பெற்ற வணக்க ஸ்தலங்களுள் ஒன்றாகும்.

இங்கு வாழ்பவர்களின் பூர்வீகம் நல்லூர் மற்றும் மட்டுவில் பிரதேசங்களுடன் தொடர்புபட்டுள்ளது. நல்லூர் வாசிகளுக்கும் இவர்களுக்கும் இடையில் நல்லூர்க் கந்தன் தேரை இழுப்பது தொடர்பான சச்சரவுகள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து இவர்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதுடன் அவர்களிடமிருந்து பிரிந்து இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தனித்து வாழ்ந்தார்கள் என்று இப்பிரதேச முதியவர்கள் கூறுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசையூர் பிரதேசம் கிறிஸ்துபிறப்பதற்குமுன் மூவாயிரம் ஆண்டுகளில் 'மணற்றி" எனும் பெயரில் காணப்பட்டது. இவர்களின் மூதாதையர்கள் சிலகாலத்தின் பின் முற்று முழுதாக சைவசமயத்தைப் பின்பற்றுபவர்களாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்துள்ளார்கள். முன்னைய காலத்தில் காட்டுவளவு என அழைக்கப்பட்ட இடத்தில் புளியமரத்தின் கீழ் சிவபெருமானுக்கு கோவில் அமைத்து வணங்கி வழிபாடு செய்து வந்துள்ளார்கள்.

இப் பிரதேசத்தின் ஆறாம் தலைமுறையினரின் பெயர்கள் இந்துப் பெயராகவே காணப்பட்டுள்ளது. இதிலிருந்து இவர்கள் ஐரோப்பியர் வருகைக்கு முன் இந்துக்களாக வாழ்ந்துள்ளார்கள் என்று நம்பமுடிகின்றது. ஐரோப்பியரின் ஆக்கிரமிப்பின் பின்னர் கரையோரப் பகுதிகளில் இருந்த மக்கள் கட்டாயமாகவும் நிர்ப்பந்தத்தின் பேரிலும் உயிருக்குப் பயந்தும் கிறிஸ்தவர்களாகத் தங்களை மாற்றிக்கொண்டனர்.

அச்சந்தர்ப்பத்தில் இந்துக் கோவில்கள் அவர்களின் மதவழிபாட்டு இடங்கள் ஐரோப்பியரால் அழிக்கப்பட்டு தேவாலயங்கள் கட்டப்பட்டு கிறிஸ்தவ மதவழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பின்னர் அப்பழக்கவழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்களை இப்பிரதேசமக்கள் பின்பற்றி இன்று வரைநடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். காலப்போக்கில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள். அதற்குமுன் இப்பிரதேச மக்கள் எந்தவகையான தொழிலில் ஈடுபட்டார்கள் என்றுஅறியமுடியவில்லை. கரையோரத்தில் வாழ்ந்ததால் கரையார் எனும் பெயரிலும் அழைக்கப்படுகிறார்கள்.

இப்பிரதேச மக்களுக்கு முதன் முதலில் மீன்பிடித் தொழிலைப் பழக்கிய, அறிமுகப்படுத்திய அருட்திரு விக்டர் டெலாண்டெஸ் அடிகளாரின் உருவச்சிலை தற்போது கடற்கரைப் பகுதியில் அவரின் நினைவாக வைக்கப்பட்டுள்ளதை காணலாம். அத்துடன் அவர் இறந்த பின்னர் அவரது உடல் ஆலயத்தின் மேற்குப் புறமாக உள்ள கோவிலின் உட்பகுதியில் அடக்கம் செய்யப்பட்டது.

ஒல்லாந்தர் காலத்தில் குருகுலத் தலைவனான புண்ணியானந்தன் என்பவருக்கு அவரின் சிறப்பான பணியையும் அவர்மேல் உள்ள அதிகப்படியான மரியாதையும் காரணமாகக் கொண்டு கொழும்புத்துறையை அவருக்குப் பரிசாக வழங்கினர். இதனடிப்படையில் இப்பகுதியினர் குருகுலத்தவர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொழும்புத்துறைப் பகுதியானதுபாசையூர் கிராமத்தின் கிழக்கில் உள்ளது. முன்னைய காலங்களில் கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளுக்கு செல்வதற்கான போக்குவரத்து நடவடிக்கைக்கான பாஸ் அனுமதி பாசையூரில் தான் வழங்கப்பட்டுள்ளது. பாஸ் செய்யும் ஊர் என்பது பிற்காலத்தில் திரிபடைந்து பாசைய்யூர் எனமாற்றம் பெற்றிருக்கலாம்.

'கலைஞர்கள் மேல் கருணை கொண்ட கொடை வள்ளலானமன்னா! தொலை தூரம் இருந்து வந்தேன். உன்முகத்தை பார்க்க வேண்டி திரையொன்று மறைக்குதையா. என் இதயம் கலங்குதையா. தர்மத்தின் தலைவா இந்த ஏழைக்கு இரங்கும் ஐயா" என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமுருகி பாடியதைக் கேட்ட மன்னன் திரையை நீக்கி வெளியே வந்து உனக்கு என்ன வேண்டும் கேள் என்று அன்புடன் கேட்டான். அதற்குப் பாணன் மன்னனே தங்களைப் புகழ்ந்துபாடும் பாக்கியத்தை அடியேனுக்கு அருள வேண்டும் என்று கேட்க மன்னனும் சம்மதித்தான். பின்னர் அரச மரியாதையுடன் பாணனை அழைத்துச் சென்று மணற்றியைப் பரிசாக வழங்கினான் என்றும் வரலாறு உண்டு.

பாணன் பாட்டினாலும் கவியினாலும் மன்னனைப் புகழ்ந்துபாடிஅதற்குப் பரிசாகக் கிடைத்த பகுதி என்பதால் பா (பாடல்,கவிதை) செய்யூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம். இல்லையெனில் இப்பிரதேசமானது பாடல்கள், கூத்துக்கள் திறம்பட இயற்றி அதனை நடித்துதாம் சொல்ல விரும்பும் கருத்தைப் பாட்டிலேயும் கவியிலேயும் உரைநடையாகச் சொல்லக் கூடிய கவிஞர்களையும் புலவர்களையும் அண்ணாவிமார்களையும் கலைஞர்களையும் தன்னகத்தே கொண்டிருந்ததால் பிறரால் இப்பிரதேசமானது பா-செய்யூர் என அழைக்கப்பட்டிருக்கலாம்.

**நாட்டார் கலைக் கற்றல்**

நாட்டார் கலைக் கற்றல் என்பது ஒவ்வொரு இன மக்களுக்குமான பாரம்பரியம், வாழ்க்கை, கலை, பண்பாடு, பழக்கவழக்கங்களைக் குறிக்கும். முன்னைய காலங்களில் கலைகள் கண்ணால் பார்த்து காதால் கேட்டு வாய்மொழி மூலமாகப் பரப்பப்பட்டது. பெரும்பாலும் மனனம் செய்து வைத்திருப்பார்கள்.

நாட்டார்கலை வடிவங்கள் பல இருப்பினும் பொதுவான அடிப்படையில் நான்கு வகையாகப் பிரிப்பர். பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், கதைகள் போன்றன அவையாகும். எழுதப்பட்ட வரலாறு இல்லாத மக்கள் மற்றும் வாழ்க்கை முறையினை அங்குள்ள முதியவர்களின் பாரம்பரிய கதைகள், பாடல்கள், பழக்கவழக்கங்களைக் கொண்டு ஆய்வு செய்து அறிய முடியும்.

ஒருவர் தன் உணர்வியல் ரீதியான கருத்துக்களைபகிரந்து கொள்வதற்காக கலைகளைப் பயன்படுத்தினான். அதில் நகை,காதல், வீரம், சோகம், அச்சம், விருப்பு,வெறுப்பு, போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தினான், நாட்டுப்புறப்பாடல்கள் பலவகைப்படும். தாலாட்டுப்பாடல், கும்மி, கோலாட்டம், சோபனப்பாடல்கள், நலங்குப்பாடல்கள், வாழத்துப்பாடல், ஒப்பாரிப்பாடல், விளையாட்டுப்பாடல், நையாண்டிப்பாடல், கதைப்பாடல், காதல்பாடல், தொழிற்பாடல், மீனவர்பாடல், நெற்குத்திப்பாடல், ஏற்றற்பாடல், நடவுப்பாடல் போன்றன அவையாகும்.

நாட்டுப்புறம் என்பது கிராமங்களைக் குறிக்கும். இச்சொல்லை நாடு புறம் என்று பிரித்தால் முதற் பகுதிநாடுஎன்பதுஅரசன் ஆழக் கூடிய பரந்த பரப்பைக் குறிக்கும். என்று ஊகிக்கின்றோம். ஆனால் இலக்கியத்தில் நாடு என்பது விருப்பு என்பதைக் குறிக்கிறது. புறம் என்பதுஅகம் என்பதன் எதிர்ச்சொல் ஆகும். ஆங்கிலத்தில் உழரவெசல ளனைந என்பதன் நேரடி மொழிபெயர்ப்பு நாட்டுப்புறம் என மொழி பெயர்க்கப்படடு விட்டதுஎன்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் உண்மை. இச்சொல் தமிழ் மரபிற்கு சற்றும் பொருந்தி வராத சிதைவுச் சொல்லாக இருப்பினும் அறிஞர்கள்பலராலும் தற்போதுவழக்காற்றில் நன்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவேகுழப்பத்தைஏற்படுத்தாமல் நாமும் நாட்டுப்புறக்கலை என்பதை பயன்படுத்துகின்றோம்.

நாட்டார் கலை இலக்கியங்கள் உருவாகப் பல காரணங்கள் உண்டு. ஒருவன் தன்னுடைய எழுச்சியை வெளியிட வேண்டும் என்று கொண்ட விருப்பத்தால் பிறருடைய வாழ்வு செயல் இரண்டிலும் ஒருவருக்கு ஏற்படும் அக்கறை, உண்மை உலகத்திலுள்ள ஆசை அதைப்போலவே கற்பனை உலகைப் படைக்க வேண்டும் என்ற எண்ணம் ஒலிக்கும் சொற்களுக்கும் ஓர் அழகியஉருவம் அமைக்கவேண்டும் என்ற உந்துதல் நாட்டார் இலக்கியம் வளர்சியடையக் காரணமாக இருந்தது.

நாகரீக உலகில் வாழும் மக்களால் நாட்டுப்புற மக்கள் ஏளனமாகப் பார்க்கப்பட்டனர். அத்தோடு அவர்களது எழுதப்படாத நாட்டார் இலக்கியங்களும் ஒதுக்கி வைக்கப்பட்டன. நாட்டார் பாடலில் என்ன இலக்கிய நயம் இருந்துவிடப் போகிறது. யாப்பிலக்கணம் பயிலாத ஒருவனால் பாப்புனைதல் சாத்தியமா எனும் நோக்கில் அவை கண்டும் காணாமல் விடப்பட்டன. நாட்டார் கலைகள் காட்டுப் பூக்கள் போல மலர்ந்து மணம் வீசி மண்ணில் உதிர்ந்து கடைசியில் அந்த மண்ணுக்கே உரமாகிப் போகின்றன. இது நாட்டார் இலக்கியங்களுக்கு, பாடல்களுக்கு கிடைத்த தண்டனை தான். என்றாலும் வீதியிலே கிடப்பதால் தங்கத்தின் தரம் கெட்டு விட்டது என நினைப்பவனை நாம் தான் ஏளனமாகப் பார்க்க வேண்டும். அதேபோல இக் கிராமத்திலே காணப்படும் நாட்டார் கலைகளை அடையாளம் கண்டு அந்ததங்கத்தினை தூசிதட்டி தூய்மைப்படுத்தி பலர் காணுமாறும் பயன் பெறுமாறும் நான் இக்கட்டுரையை எழுதுகிறேன்.

கிராமங்களில் பாடப்படும் பாடல்கள் நாடோடிப்பாடல்கள், நாட்டார் பாடல்கள், வாய்மொழி இலக்கியம், நாடோடி இலக்கியம், காற்றிலே மிதந்த கவிதை, பாமரர் பாடல்கள், மலையருவி, காட்டுமல்லிகை எனபல பெயர்களால் அழைக்கப்படும். மக்கள் தாங்கள் எந்த சூழலில் எந்தப்பாட்டை இசைக்கின்றனரோ அந்த சூழலையொட்டிய பெயரையே வைத்திருந்தனர். உதாரணமாக மீன்பிடிக்கும் போது, வள்ளம் எற்றும்போது,வள்ளம் இறக்கும் போது பாடப்படும் பாடல்கள் மீனவபப் பாடல்கள் எனும் பெயரால் அழைக்கப்படும். வயல்களில் நாற்று நடும் போதும் அறுவடை செய்யும் போதும், பாடப்படும் பாடல் அருவிவெட்டுப் பாடல், நடவுப்பாடல் என அழைக்கப்படும்,

**தாலாட்டுப்பாடல்**

தால் என்பது நாக்கினையும் ஆட்டு என்பது அசைப்பதையும் குறிக்கும். தாலாட்டு என்பது நாவினை அசைத்தல் எனப் பொருள்படுகிறது. தாய் தன் பெருமைகளையும் குழந்தை தூங்க வேண்டும் என்ற நோக்கத்தில் சில கற்பனை நயங்களையும் உள்ளடக்கிப் பாடுவாள். விளையாட்டுப்பாட்டு. குழந்தை நடக்ககற்றுக் கொள்ளும் போது அதன் உடலும் உள்ளமும் வளர்ச்சியடைய பெற்றோர் மகிழ்ச்சியடைந்து பாடுவது விளையாட்டுப்பாடல் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிறுவர் விளையாட்டு, பெரியோர் விளையாட்டு எனவும் விளையாட்டுப் பாடல்களைப் பிரிப்பார். உதாரணமாக பந்து விளையாட்டு, கோலி, சடுகுடு, கிளித்தட்டு, ஓடிப்பிடித்து விளையாடுதல், ஒயிலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், நொண்டி விளையாட்டு, கும்மி, கோலாட்டம் ஆகியனவற்றைக் குறிப்பிடலாம். இன்றைய காலத்தில் இக் கிராமத்தில் கும்மி, கோலாட்டம் ஆகியன மட்டுமே வழக்கத்தில் உள்ளது.

அந்தி சாயும் பொழுதடா
அன்பு முத்தம் பொழியடா
இதழ் மலர்ந்து சிரியடா
வம்ச விளக்க நீயடா'
அம்புலி மாமா தெரியுதடா
அப்பா வரும் நேரம் ஆச்சுதடா
சொக்கா உனக்குத் தருவாரடா
செல்வமே தோழில் துயில் கொள்ளடா

**கும்மி**

சில இடங்களில் கும்மி என்றும், சில இடங்களில் கொப்பி என்றும், சில இடங்களில் கொம்மி என்றும் வழங்கப்படுகிறது. கும்மி ஆண்களும் ஆடுவர் பெண்களும் ஆடுவர். ஆண்கள் ஆடும் கும்மி ஒயில் கும்மி எனப்படும். பெண்கள் வட்டமாக நின்று குனிந்து கையை தட்டி ஒலி எழுப்பி ஆடுவார். தற்காலத்தில் கும்மிப் பாடல்களுக்கு சிரட்டையும் ஒலி எழுப்பப் பயன்படுகின்றது. ஆண்களின் கும்மி பெண்களின் கும்மி போலமென்மைத் தன்மையைக் கொண்டிருப்பதில்லை.

கும்மியடி, கும்மியடி,
கும்மியடி, கும்மியடி
ஆதி பிதாச்சுதன் தூய ஆவியெனும்
நாமத்தைச் சொல்லியே கும்மியடி
தாதை சூசை முனி தேவமைந்தன்
யேசு என்று சொல்லி கும்மியடி

பெத்தலேகம் எனும் சிற்றூரிலே
உள்ளமாடுகள் கட்டும் தொழுவத்திலே
சத்திய உத்தம தத்துவராகிய
யேசு பிறந்ததை சொல்லியடி

தாரகையால் முடிதாங்கிய கன்னிகை
தூயவர் யேசுவின் அன்னையடி
ஆதி அந்தமில்ல ஜோதிவடிவான
யேசு பாலன் மேரி மைந்தனடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மோடி நாட்டுக்கூத்து

கத்தோலிக்க மதம் இலங்கையில் பரம்பலடைவதற்குமுன் மக்கள் மத்தியில் கூத்து மரபொன்று இருந்துள்ளது. அதில் இந்துக் கடவுள்களின் புராணக் கதைகள் கூத்தாக மேடையேற்றப்பட்டுள்ளது. இவர்களின் மதமாற்றத்தின் பின்னர் கத்தோலிக்ககதைகள், சமய வரலாறுகளை மையமாக வைத்து வடமோடி,தென்மோடி நாட்டுக் கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. தற்போது அதிகமாக தென்மோடிநாட்டுக் கூத்துக்கள் தான் மேடையேற்றப்படுகின்றன. இதில் காட்சி அமைப்பின் பயன்பாடு முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளது. மேடை அமைப்பில் படச்சட்டமேடைமுறையே பின்பற்றப்படுகின்றது.

## இசை நாடகம்

இங்கு 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் இசை நாடகங்கள் அறிமுகப்ப டுத்தப்பட்டன. இத்தகைய நாடகங்கள் இலங்கைக்கு வந்த போது இலங்கையிலும் இந்தியாவிலும் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியது. இந் நாடகங்கள் முழுவதும் இசைப்பாடல்களாலேயே ஆக்கம் பெற்றிருக்கும். இசை நாடகங்களின் முடிவுகள் பெரும்பாலும் சோகத்தில் முடிவதில்லை. மங்களகரமானதாகவே முடிவடையும்.

## மீனவர் பாடல்

உழைக்கும் தொழிலாளிகள் அனைவருக்கும் அவரவர் தொழில் சார்ந்தபாடல் உண்டு. வேலைக்களைப்பு, சோர்வு தெரியாமல் இருக்க உற்சாகமாய், மகிழ்ச்சியாய் இருக்க பாட்டுப் பாடுவார்கள். நெய்தல் நிலம் சார்ந்த இலக்கியமாக தொன்று தொட்டு பாடப்பட்டு வரும் அம்பாபாடல்கள், மீனவப் பாடல்கள் என்றும் அழைக்கப்படும். கிராமங்கள் தோறும் அவை வேறுபட்டிருக்கும். கரை வலை செய்பவர்கள், வள்ளத்தில் வலை ஏற்றும் போதும், தண்டு வலிக்கும் போதும் வள்ளத்தைக் கடலில் தள்ளும் போதும், வலை இழுக்கின்ற போதும், வலை குறுகி வருகின்ற போதும் பின்பு வள்ளத்தைத் தரைக்கு இழுக்கும் போதும் பாடுவர். அம்பாப் பாடல்கள் சுருதி, தாளக்கட்டு என்பன வேறுபடும்.

ஏலஏலோம் தத்தைதாம் ஏலவலே தத்தைதாம்
ஏலவலே தத்தைதாம் ஏலஏலோ
கடல் மேலேபயணம் நெடுந்தூரம் – மச்சான்
கவலையின்றி நாமும் தினம் போறம்
அலை எழும்பும் நேரம் படகாடும் – மச்சான்
அல்லல் பட்டெம் வாழ்க்கை தடுமாறும் தத்தைதாம்
வாடையோ கோடையோ வரள் கடல் காற்றோ
வள்ளத்துக் கென்றுமே ஓய்வது இல்லை
கடலோடும் காற்றோடும் கட்டு மரத்தோடும்
காதல் கொண்டேயெங்கள் காலங்கள் கழியும்
ஏலஏலோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுக்கடலில் எதுவும் நடந்திடலாம் – மச்சான்
நடுநிசியில் உயிரும் பிரிந்திடலாம்
மூங்கும் அலையோடிமுத்தும் எடுத்திடலாம்
மூழ்கும்நீரினுள்ளேமூச்சும்அடங்கிடலாம் தத்தைதாம்
தண்ணீரில் கண்ணீரும் கரைந்தேதான் போச்சு
பொங்கிடும் கடலோடு போராடலாச்சு
முழு நீல நிலவது கண்ணாடியாச்சு
வெண்மேகம் வானுக்கு குடையாகிப் போச்சு
ஏலஏலோம்

நுரைபொங்கும் அலைமேல் வலைபோட்டே
ஆழம் கண்டறிய கடலில் இறங்கிடுவோம்
விரி கடலே எங்கள் பள்ளிக் கூடம்
போகும்படகதுவே எங்கள் துயில்கூடம் தத்தைதாம்
சுழட்டுது காற்றது சுக்கானை திருப்பு
சுறுசுறுப்பாகவே வலைய நீஏத்து
இறால் நண்டு கணவாயை தனியாக பொறுக்கு
சந்தைக்கு கொண்டு போய் விற்பதுன் பொறுப்பு
ஏலஏலோம்

மின்னலெல்லாம் எங்கள் ஒளி விளக்கு
மச்சான் வலைகலெல்லாம் எமக்கு பஞ்சுமெத்தை
ஆஞ்சாங் கயிறுகளில் ஊஞ்சலாடிடுவோம்
இடியின் சத்தத்திலும் அம்பா பாடிடுவோம் தத்தைதாம்

ஆமைஎன்றால் அதை அங்கால விடடா
அழிந்திடும் உயிரினம் கடலுக்கு கொடடா
கருங்கண்ணிகட்டாவும் கணக்கத்தான் பிடிடா
கண்ணாடி பாரையை கடக்கென்று பிடிடா
ஏலஏலோம்

கள்ள நண்டு வலைய கடிக்குதடா மச்சான்
கண்டதெல்லாம் வலைக்குள் அடையுதடா
கொள்ளையாக மீனினம் வருகுதடா மச்சான்
கெண்டைமீன் தான் கூட தெரியுதடா

தத்தைதாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாளையும் சூடையும் பாரையும் ஓராவும்
விளைமீனும் கயல்மீனும் முரலோடு மணலையும்
கொம்பன் சுறாவோடு ஊசிக் கணவாயும்
கெளிறோடு திருக்கையும் கலவாயும் பிடிச்சாச்சு
ஏலஏலோம்

**வேறுபாட்டு**

ஏத்தேத்து லைலா கரைவலைய லைலா
ஏற்றமிகும் வாழ்க்கை கையிலடா லைலா
பாத்தேறு நண்பா பயப்படாத லைலா
பதட்ட மேன்டா நண்பா சுறுக்காய் வாடா லைலா
கோயில் மணி ஒலிக்குதடா லைலா
கோபுரத்தில் ஒளி தெரிது லைலா
கோட்டும் சூட்டும் நமக்கெதுகக் லைலா – அத
போட்டு என்ன செய்யப் போறம் லைலா

இருட்டினிலும் இன்னலிலும் லைலா
இடர்கள் எம்மைச் சூழ்ந்திடினும் லைலா
இயற்றையன்னைதுணையிருப்பாள் லைலா
ஈன்றவள் போல் காத்திடுவாள் லைலா

நடுக்கடலில் மீன் பிடிப்போம் லைலா
நம்பிக்கை தான் வாழ்க்கையடாலைலா
நாளை எண்ணிக வலையில்லை லைலா
நல்லதையே செய்திடுவோம் லைலா

சுக்கானை திருப்பிப் பிடி லைலா
சுத்திச் சுத்தி மீன் வருது லைலா
சுருட்டு வாங்க காசு வரும் லைலா
சுப்பனுக்கும் கொடுத்திடலாம் லைலா

கயிற கொஞ்சம் எடுத்துக் கொடு லைலா
கம்பியையும் சேர்த்துக் கொடு லைலா
கடிப்பலகை எங்கையடா லைலா
கையிலதை வைத்திரடா லைலா

ஈக்கினிலே நூலை கோத்து லைலா
பிஞ்ச வலையைப் பின்னிடனும் லைலா
கோடான கொண்டு வாடா லைலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோத்து வலைக்கு அழகு குடு லைலா
கடும் வெயிலோபனிக் குளிரோ லைலா
கடுமையாக இருந்திடினும் லைலா
கவலையின்றி தொழில் புரிவோம் லைலா
கடவுள் என்றும் துணையிருப்பான் லைலா
துக்கம் எம்மைச் சூழ்ந்திடினும் லைலா
துயரம் இன்றிமீன் பிடிப்பம் லைலா
துணையிருப்பாள் ஆழி அன்னை லைலா
தூக்கிவிட கை தருவாள் லைலா

உள்ளம் அதுசோர்ந்திடினும் லைலா
உடலில் சோர்வு காட்ட மாட்டம் லைலா
உணவுக்காக உழைத்திடுவோம் லைலா
உறவுகட்கும் கொடுத்திடுவோம் லைலா
கடலினிலோ வெயிலினி லோ லைலா
கருவாடாய்க் காய்ந்திடுவோம் லைலா
கடலினிலே காலை வைத்தால் லைலா
கவலையெல்லாம் கலைந்திடுமே லைலா
சந்தை விலை குறைந்திடினும் லைலா
சகலமீனும் வித்திடுவோம் லைலா
சமுத்திரத்தை நம்பித் தானே லைலா
எங்கள் சந்ததியே வாழுதடா லைலா

**வேறுபாட்டு இராகம் :- சிறுநண்டுமணல் மீது**

காற்றோடுகருமேகம் கடும் மழை பொழியும்
கார் காலபறவைகள் கூட்டுக்குள் ஒழியும்
கால் தழுவும் கரையிலே நண்டுகள் நெளியும்
கப்பல்கள் பாறையிலே மோதியே அழியும்

மேகங்கள் மோதியே மின்னல்கள் தெறிக்கும்
மேகத்தை மேவியே பருந்தது பறக்கும்
மேனியது கிடுகிடுக்க இடியது இடிக்கும்
மேவிவிழும் மழைத் துளியை ஆழியது குடிக்கும்

வெப்பகுளிர் நீரோட்டம் கடலிலேகலக்கும்
வெள்ள நீரோட்டத்தில் மீன் வளம் கொழிக்கும்
வேண்டிடும் அடியவர்க்கு செல்வத்தை அழிக்கும்
வேலவா உனை வேண்டின் வாழ்வது சிறக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையும் சிலவேளை இரக்கமின்றி கொல்லும்
அடித்துச் செல்லும் அலையது அலறியே செல்லும்
காற்றோடு கடலையும் கரைநோக்கி தள்ளும்
சமுத்திரங்கள் சாவுக்கு சாட்சியது சொல்லும்

(கவிஞர் ஜே.ஜே)

இவ்வாறு பாசையூர் கிராமத்தின் நாட்டார் கலையானது வளர்ச்சியடைந்து வருகின்றது. ஆரம்ப காலந்தொட்டு இன்று வரை அம்பா, கும்மி, கோலாட்டம் ஆகியன வழக்கத்தில் இருந்த போதும் தற்காலத்தில் ஒப்பீட்டளவில் குறைந்து செல்கின்றது என்றே கூறலாம். அம்பா பாடல்கள் மீனவர்களால் மீன்பிடிக்கச் செல்லும் போது பாடப்படுவது. குறைவாகக் காணப்பட்டாலும் மீனவர்கள் அம்பா பாடல்களை மறந்து போய்விடவில்லை.

நாகரீகமோகம், சினிமாப்பாடல்களில் உள்ள ஆர்வம், இளையோரிடையே நாட்டார் கலைகளில் ஈடுபாட்டைக் குறைத்தாலும் வயது முதிர்ந்தோர் நாட்டார் கலைகளில் ஆர்வமாய் தான் இருக்கின்றார்கள். துறைமுக அபிவிருத்தி மோட்டார் இயந்திரப் பாவனைகள், அதிகரித்ததன் விளைவு நாட்டார் கலையில் அம்பா பாடல்களைப் பாடுவதைக் குறைத்தது எனலாம். ஆனாலும் வலை பின்னுதல், காயவிடுதல், வள்ளம் தள்ளுதல், ஏற்றுதல் ஆகியவற்றின் போது பாடுகின்றார்கள். எழுத்து வழக்கில் அம்பா பாடல்கள் இல்லை என்றாலும் வாய்மொழி மூலமாகவும் மனனம் செய்தும் பாடுகின்றார்கள். இவற்றை ஆவணப்படுத்தல் அவசியமாகும்.

நாட்டுப்புறப் பாடல்களை முன்னிலைப்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் நாட்டார் கலை இக்கிராமத்தில் எழுத்திலும், எண்ணிலும் குறைவாகவே உள்ளது. தொழிற்புரட்சி நவீன மயமாக்கல், வரலாற்று நிழ்வுகள், இயற்கை, சமூகம், தேசியம் போன்றவற்றில் மக்களின்உணர்வுகள் மாற்றத்தை ஏற்படுத்தி மக்களுக்கு மரபுகள் நோக்கிய கவனத்தை ஏற்படுத்தி விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும்.

சமூக, பௌதீக பின்னணி, மீன்பிடியில் ஈடுபடுவோருக்கிடையில் காணப்படும் பங்களிப்பு மற்றும் பங்கேற்று, வெளிப்படுத்தும் உணர்வுகளைப் பணியின் போது பிற உற்று நோக்கல்கள், விடயத்தை உற்று நோக்குபவர்கள் ஆகியவற்றைப் பொறுத்து நாட்டார் கலை வளர்ச்சியடையும்.

கலைகளை ஊக்குவித்தல், நாட்டுப்புறபாடல்களுகக் முக்கியத்துவமளித்தல், பாடசாலை, பல்கலைக்கழகங்களில் அவற்றை ஒருபாடமாக்குதல். நாட்டார் கலைகளை மேம்பட்ட துறையாக உருவாக்குதல். நாட்டுப்புறவியல், அகராதிகள், களஞ்சியங்களை உருவாக்குதல், பன்முகப்படுத்தப்பட்ட தொடர்பு ஊடக ஆவணக்காப்பகங்கள் மற்றும் கலைகளைப் பரப்பும் வெளித் தொடர்பு திட்டங்களையும் மேற்கொள்வதன் மூலம் மேலும் பலநாட்டார் கலைகள் வளரகாரணமாக அமையலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப்புறகலைகள் தொடர்பான கருத்தமர்வுகள், பயிலரங்குகள், செயலமர்வுகள் ஆகியவற்றை நிகழ்த்தலாம். இதழ்கள், நூல்கள் ஆகியவற்றை தொகுத்து வெளியிடலாம். ஆய்வுகள் மேற் கொண்டு ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடலாம். வெளியிடப்படாத நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றின் தகவல்களை உள்ளடக்கி வைக்க வேண்டும். ஒலி, ஒளிப் பேழைகள், புகைப்படங்கள், ஆவணக்காப்பகங்களில் பாதுகாக்கப்பட வேண்டும். நூலாக்கம் செய்து ஆவணப்படுத்துவதன் மூலம் பிரதிகளைப் பேணிப்பாதுகாக்க முடியும். சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்த தவறுவதன் மூலம் பாரம்பரியகலைகள் அழிவுக்கு உள்ளாவதுடன், தரமான ஆக்கங்களும் இல்லாது போகும் சூழ்நிலை உருவாகின்றது.

**உசாத்துணை**


1. புலவர். கருப்பூர். மு. அண்ணாமலை . "நமது பண்பாட்டில் நாட்டுப்புற இலக்கியம்.". அண்ணாமலை பதிப்பகம்.7 13 சின்னப்பராவுத்தர் தெரு.திருவல்லிக்கேணி. சென்னை.600005 . 2007.
2. ந.பக்தவச்சலரெட்டி."நாட்டுப்புறவியல் கோட்பாட்டுப் பார்வைகள்".மணிவாசகர் பதிப்பகம்.31. சிங்கர் தெரு.சென்னை, 6000018. 2003.
3. கடற்றொழில் சங்கம் . பாசையூர், யாழ்ப்பாணம்.
4. கலாபூசணம். வஸ்தியாம்பிள்ளைஅல்பிறட் . பாசையூர், யாழ்ப்பாணம்.
5. யாழ்ரத்னா. செபஸ்ரியாம்பிள்ளை இராஜேஸ்வரி. பாசையூர், யாழ்ப்பாணம்.
6. அலெக்சாணட்ர் அன்ரனி பாசையூர், யாழ்ப்பாணம்.
7. முடியப்பு மரியதாஸ் பாசையூர், யாழ்ப்பாணம்.
8. யாழ்ரத்னாமனவல் செபஸ்ரியாம்பிள்ளைபாசையூர், யாழ்ப்பாணம்.
9. மரியநாயகம் ஞானகீதன், பாசையூர், யாழ்ப்பாணம்.


**யாழ் ரத்னா விருது - 2021**

**[பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்]**

- திரு . கபிரியேற்பிள்ளை அல்பிறட் – கூத்து (தென்மோடி)
- திரு . முடியப்பு மரியதாஸ் – கூத்து (தென்மோடி)
- திரு . கந்தையா மயில்வாகனம் – சிறுகதை
- திருமதி . வசந்தி குஞ்சிதபாதம் – நடனம்
- திரு . ஆரோக்கியநாதர் தேவதாஸ் – கூத்து (தென்மோடி)
- திரு கிருஷ்ணன் துரைசிங்கம் – நாடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வழக்குச் சொற்கள்

*அருகிவரும் யாழ்ப்பாண வழக்குத் தமிழ்ச் சொற்கள்*



**செ. திருச்செல்வநாதன்**
முதுதத்துவமாணி
ஆசிரியர் பணி ஓய்வு

அகப்படுதல் (வி) – தவறான செயல்களில் ஈடுபட்டு பிடிபடுதல் அல்லது அது மற்றவர்களுக்குத் தெரிய வருதல்.

அரக்கு (பெ) – சிவந்த மெழுகு)

அலம்புதல் (வி) – என்பது ஒலித்தல் எனப் பொருள்படும்.

எ.டு – சும்மா அலம்பாதே (தேவையற்ற வார்த்தைகளைப் பேசுதல்.

இறப்பு அல்லது இறவாரம் (பெ) வீட்டுக் கூரையின் தாழ்ந்த சாய்வான பகுதி.

எ.டு – திறப்பை இடுப்பில் சொருகி வைத்திருக்கிறேன்.

உல் (பெ) – தேங்காய் உரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கூரான இரும்புக் கருவி

உளவு (வி) – உள்ளிருந்து துப்பறிதல் எடுப்பு (வி) என்பது உயர்வு எனப் பொருள்படும்

எ.டு – 1) திருமணம் பெரும் எடுப்பில் நடந்தது

2) அவர் பெரும் எடுப்பில் திரிகிறார்.

ஒக்கலித்தல் (வி) என்பது ஒப்பாதல் எனப் பொருள்படும்

எ.டு – அவனோட ஒக்கலிக்க என்னால ஏலாது.

ஒடுதல் (வி) என்பது கூடுதல், ஒத்தல் பொருந்துதல் எனப் பொருள்படும்.

கணக்கர் – (பெ) குடிப்பெயர், தூய தமிழ் மரபினர் பழந்தமிழர்

– (வி) கணக்குகளை கையாள்வர்

கணப்பு (பெ) குளிர் காய்வதற்கு நெருப்பு மூட்டப்படும் இடம் அல்லது மூட்டப்படும் நெருப்பு

கரித்தல் (வி) என்பது உப்பு உறைத்தல் எனப் பொருள்படும்.

எ.டு – கறியில் உப்புக் கரிக்கிறது.

கறளை (பெ) வளர்ச்சி குன்றிய உயிரினம் அல்லது தாவரம்

காட்டம் (வி) என்பது உறைப்பு எனப் பொருள்படும்

எ.டு – நல்ல காட்டமாக ஏசினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டான் (பெ) மிகச்சிறிய ஓலைப்பெட்டி அல்லது சிறிய

எ.டு – பனங்கட்டிக்குட்டான், குட்டான் சோறு

குப்பி (பெ) குவிந்த சிறு கலம்

எ.டு – குப்பி விளக்கு

கும்முதல் – (வி) பலர் சேர்ந்து குத்துதல், குமைத்தல் எனப் பொருள்படும்

எ.டு எல்லோரும் சேர்ந்து அவனுக்கு கும்மிவிட்டார்கள் (அடித்தல்)

குளக்கு (வி) கூட்டு, குலவு, கூட்டுசேர்

எ.டு – அவன் எல்லாத்தையும் குளக்கடிக்கிறான் (ஒன்றாக்கிக் குளப்புதல்)

கொண்டி (பெ) கொழுவி

எ.டு – 1) கதவை நிலையுடன் பிணைப்பதற்கு நிலையில் பூட்டப்படும் "U" வடிவக்கருவி

2) கம்பிக்கட்டையில் முள்ளுக்கம்பியை பிணைப்பதற்கு கொண்டி ஆணி பயன்படுத்தப்படும்

குறண்டுதல் (வி) 1) முதுகை வளைத்து சரிந்து படுத்தல்.

2) வயது முதிர்ச்சியால் கூனிப்போதல்.

சட்டன் (பெ) ஓலைச்சுவடி பயிலும் மாணவன்

எ.டு – 1) சட்டாம் பிள்ளை என்பது மாணவன்

2) சட்டம்பி (சட்டன் + நம்பி) ஆசிரியன்

சரக்கு (பெ) காய்ந்த பொருட்கள்

எ.டு – மல்லி, வேர்க்கொம்பு, சீரகம் போன்றன

சல்லி (பெ) சிறு பணம் அல்லது சிறு காசு

சிட்டி (பெ) சிறிய கலம் அல்லது சிறு விளக்கு

சிறாம்பு (பெ) மரத்தில் அல்லது மீனில் காணப்படும் நுண்பட்டை

சுக்கு (பெ) காய்ந்த இஞ்சி அல்லது வேர்க்கொம்பு

சுண்டு (பெ) சிறியது, சிறிய முகத்தலளவைக் கருவி

எ.டு – சுண்டங்காய்

சுண்ணம் (பெ) பொடி அல்லது நீறு

சுணக்கம் (வி) வேலைத் தளர்ச்சி, காலம் தாழ்த்துதல்

சுரணை (வி) குத்தல் அல்லது குத்தும் மான உணர்ச்சி

எ.டு – அவனுக்கு சூடு சுரணை கெட்டுப் போச்சு

சுள்ளம் (வி) உப்பு உறைத்தல்

எ.டு – கறியில் உப்பு சுள்ளிட்டுக் கொண்டிருக்கிறது.

சுள்ளி (பெ) காய்ந்த மரக்குச்சி

எ.டு – காகம் சுள்ளிகளை கொண்டு போய் கூடு கட்டுகிறது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொங்கு (பெ) சோள உமி

எ.டு – அவன் ஒரு சொங்கி (பயனற்றவன்)

சோடை (வி) மரங்கள் செழிப்பின்றி காய்குன்றி காணப்படல்

எ.டு – தென்னை சோடை பத்திப்போச்சு

சோணங்கி (பெ) சோர்வுற்றவன், எதுவும் செய்ய முடியாதவன்

தட்டு (பெ) சோளம், கரும்பு முதலியவற்றை வெட்டி எடுத்தபின் எஞ்சிய வேரையொட்டிய அடிப்பகுதி

எ.டு – குரக்கன் தட்டு (ஓட்டு என அழைக்கப்படும்) கால்நடை உணவு

திண்டு (பெ) சிறு திண்ணை சத்திரங்களில் இருக்கும்

எ.டு – திண்டாடுதல் – குறச் சிறுமியர் சோற்றிற்காகத் திண்டின் மேலேறிக் கூத்தாடுவர்.

திண்ணை (பெ) என்பது பழங்காலத்தில் மண்வீடுகளில் படுப்பதற்கும், இருப்பதற்குமாக மண்ணால் அமைக்கப்பட்ட திரண்ட மேடு.

துட்டு (பெ) சிறியது, உலோகத்துண்டு, காசு எனப் பொருள்படும்

துடக்கு (வி) தொடுப்பால் உண்டாகும் கட்டு, பிறப்பு இறப்பு என்பவற்றிற்கு ஒரு திங்களும், பெண்களின் தொடமாட்டாமலிருந்து (மாதவிலக்கிற்கு) மூன்று நாட்களும் கடைப்பிடிக்கப்படும்.

தூறு (பெ) என்பது தென்னை, பனை முதலியவற்றின் வேரையொட்டிய அடிப்பகுதி

நாழி (பெ) என்பது முகத்தலளவு கருவி, கொத்து எனவும் அழைக்கப்படும்

எ.டு – நிறைநாளி என்பது பருவமடைந்த பெண்களுக்குக் கையில் வைத்திருக்கும் நெல் நிரம்பிய கொத்து

நுணாவுதல் (வி) விரல் நுனியால் அல்லது நாவினால் தடவியறிதல்

எ.டு – தாய் மகளின் தலையில் நுணாவி பேன் எடுத்தாள்

நுணுக்குதல் (வி) கூர்மையாக்குதல், மதியைக் கூர்மையாக்குதல், நுண்மையாக்குதல், பொடி செய்தல், சிறிதாய் எழுதுதல்.

நொட்டை (வி) என்பது சுவை மிகுதியால் அண்ணத்தில் நாவை சேர்த்துக் கொட்டுதல்

எ.டு – நொட்டைத்தீன்

பட்டான் (வி) விளையாட்டுக்களின் போது நொட்டை வெளியேற்றப்படுவதைக் குறிப்பது

எ.டு – கிளித்தட்டு, ஓடிப்பிடித்தல், கெந்தியடித்தல் போன்ற விளையாட்டுக்களில்

பண்டம் (பெ) செய்யப்பட்ட பொருள்

எ.டு – பிள்ளைக்கு ஒரு பண்டம் தருவேன் அழவேண்டாம்

பறட்டை (பெ) சீவாததலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொட்டணம் (பெ) அல்லது பொட்டலம் (பெ)

1) உணவு, ஆடைகள் என்பவற்றை எடுத்துச்செல்ல வசதியாகத் துணியால் சுற்றிக்கட்டுதல்

2) மருந்துச் சரக்குகளை பொட்டலமாகக்கட்டி அவித்தல் அல்லது சூடாக்கி ஒத்தடம் கொடுத்தல்

பொன்றுதல் (வி) இறத்தல் அல்லது முடிதல்

எ.டு – அந்தக் கிழவன் கெதியாகப் பொன்றிப்போவார்.

மசக்கை (வி) கருவுற்ற பெண்கள் அடையும் மயக்கம்

மம்மர் (வி) மயக்கம்

எ.டு – மம்மருக்கை (மம்மல்) குழந்தைகளை வெளியே கொண்டு செல்லக்கூடாது

மல்லாத்து (வி) முகம் மேல்பக்கம் பார்க்க வைத்தல்

எ.டு – "ஆமை பிடிப்பான் மல்லாத்துவான் நாமது சொன்னால் பாவம்"

மெத்தை (பெ) என்பது மேல்நிலை அல்லது மேல்தளம் என்பது பொருள்

எ.டு – மெத்தை வீடு – மேல்வீடு அல்லது மாடி வீடு

மொக்கு (பெ) அல்லது மொக்கை (பெ) என்பது கூரின்மை

வரும்படி (பெ) என்பது வருமளவைக் (வருமானத்தைக்) குறிக்கும்.

வெங்கன் (பெ) வெற்றுக்கட்டை, ஒன்றுமில்லாதவன்

வெட்டியாள் (பெ) வேலை செய்யாதவன்

வெட்டிவேலை (வி) பயனற்ற வேலை

வெள்ளென (பெ) விடியற்காலை

எ.டு – வெள்ளென வந்து விடு

வெளுத்தல் (வி) துணிகளை வெண்மையாக்குதல், அடித்துத் துவைத்தல்

## யாழ்ப்பாண வழக்குச் சொற்களும் அவற்றிற்குப் பொருத்தமான தமிழ் வடிவங்களும்

| **தவறான வழக்குச் சொற்கள்** | **பொருத்தமான வடிவம்** |
|---|---|
| அந்தப்படி | அப்படி |
| அருகாமை | அருகில் |
| ஆசிரியை | ஆசிரியர் |
| இயக்குனர் | இயக்குநர் |
| இடியல் | இடிசல் – கட்டடம் |
| உடையல் | உடைசல் – பானை |
| உலுப்புதல் | உலுக்குதல் – புளியம்பழம் |
| கண்றாவி | கண்அராவி – காட்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கமறுதல் | கமருதல் – கருமேகம் சத்தமிடல் |
| கழிவறை | கழிப்பறை |
| கல்வெட்டு | கல்லெழுத்து |
| கறுவுதல் | கருவுதல் |
| கறார் | கரார் – சிக்கனமானவர் (சொன்ன விலையை குறைக்காதவர்) |
| கறாளை | கறளை – வளர்ச்சி குன்றியிருத்தல் |
| குடும்பி | குரும்பி – காதிலிருந்து வெளி வருவது |
| கொடுவா | கொடுவாள் முன் பகுதி வளைந்த கத்தி |
| கொப்பளித்தல் | கொப்புளித்தல் |
| கொப்புளம் | கொப்பளம் |
| கோணங்கி | சோணங்கி |
| கோது | தொலும்பு – வேர்க்கடலை |
| கோயில் | கோவில் |
| கோர்தல் | கோத்தல் – ஊசியில் நூல் |
| கோர்வை | கோவை – திறப்பு |
| கைமாத்து | கைமாற்று |
| சுட்டி | சிட்டி – சிறிய கலம் |
| சுறணை | சொறணை – கூர்மை |
| சிராம்பு | சிறாம்பு |
| சில்லரை | சில்லறை காசு |
| சீதனம் | சிறுதானம் |
| சூள் | சூளுந்து – பந்தம் போல் எரியும் வெளிச்சம் |
| துலை | தொலைவு |
| தொட்டால் சிணுங்கி | தொட்டால் சுருங்கி |
| தோய்த்தல் | துவைத்தல் – ஆடைகள் |
| நினைவு கூறுதல் | நினைவு கூரல் |
| நுள்ளான் | சுள்ளான் – நுளம்பு, கொசு |
| நொண்டி | மொண்டி – கை குறைந்தவன் / ள் |
| பண்டகசாலை | பண்டசாலை |
| பதட்டம் | பதற்றம் |
| பறக்க | பரக்க – அனல்பரக்க பேசினார் |
| புட்டு | பிட்டு – சிறியது |
| பொக்கன் | மொங்கான் – பெருந்தவளை |
| பரட்டை | பறட்டை – தலை |
| பொட்டளி | பொட்டணம் அல்லது பொட்டலம் |
| பொண்டுதல் | பொன்றுதல் – இறத்தல் அல்லது முடிதல் |
| ஒட்டு | தட்டு – சோளம், கரும்பு, குரக்கன் என்பவற்றின் வேரையொட்டிய அடிப்பகுதி |
| முகர்ந்து | மோந்து |
| முயற்சிக்கிறேன் | முயல்கிறேன் அல்லது முயற்சி செய்கிறேன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முழிப்பு | முழுப்பு – கிழங்கு, வாழைப்பழம், கத்தரிக்காய் |
| வழுசல் | வளிசல் |
| வேண்டாவெறுப்பு | வேண்டாவிருப்பு |

**உசாத்துணை நூல்கள்**


1. தேவநேயப்பாவாணர்.ஞா, வேர்ச்சொல் கட்டுரைகள் பகுதி 1,2,3,4 தமிழ் மண் பதிப்பகம் சென்னை 600014
2. தேவநேயப்பாவாணர்.ஞா, செந்தமிழ் சொற் பிறப்பியல் பேரகரமுதலி முதற்பகுதி தமிழ் நாட்டுப் பாடநூல், நிறுவனம், சென்னை
3. தேவநேயப்பாவாணர்.ஞா, "தேவநேயம்" பகுதி 1,2,3,4,5,6,7,8 பாவாணர் அறக்கட்டளை, சென்னை 600092
4. தேவநேயப்பாவாணர்.ஞா, திருக்குறள் தமிழ் மரபுரை, பூம்புகார் பதிப்பகம், 127, பிரகாசம் சாலை, சென்னை , 600108
5. நடராஜா சிறிரஞ்சன், யாழ்ப்பாணத் தமிழ் அகராதி, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை, 2019
6. நன்னன் ஏற்கப்பட வேண்டிய தீர்வுகள் ஏகம் பதிப்பகம் சென்னை 60000, 2311 சூலை


**வலைத்தளம்**


ஞானச்செல்வம்.கோ, நல்ல தமிழ் அறிவோம் பகுதி 2,3 தமிழ் இணைய கல்விக்கழகம், 2013

அருளி.ப., தேவநேயப்பாவாணர் வாழ்க்கை வரலாறும் தமிழ் ஆய்வுக்கு பங்களிப்பும், பாயகர் Hen History of Tamilnadu, 2019

அருளி.ப.தொல்காப்பியர் உயிரியல் – சிறப்புரை Unwritten History of Tamilnadu 2016


ஓஒ ஓஒ ஓஒ ஓஒ ஓஒ

**இளங்கலைஞர் விருது - 2021**

**[பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்]**

- செல்வி . குணசேகரம் கனிஸ்ரா – நாடகம்
- செல்வி . பாலயோகன் தர்சிகா – கவிதை
- திரு . வசந்தகுமார் கஜானன் – இசைக்கலை
- திரு . பத்மநாதன் சிவமைந்தன் – இசைக்கலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மின்சாரமில்லாத இரவுகளின் கதைகள்




**அருட்பணி சி. அஜந்தன்**
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.


மடியில் படுத்துக்கிடந்தப்படி நிலா ஒளியில் நாங்கள் கதை கேட்ட பாட்டிகளெல்லாம் இப்போது கதை சொல்வதே இல்லை. சுருக்கம் விழுந்த தன் சேலைத்தலைப்பில் முடிந்து வைத்திருக்கும் சில்லறைகளை அவிழ்த்து இனிப்பு வாங்கச் சொல்லி இரகசியமாய்த் தருவது போல இதயத்து மடிப்புகளிலிருந்து இரசித்து பாட்டிகள் சொன்ன கதைகள் எல்லாம் மணல் நிறைந்த எம் முற்றத்து மாமரத்தடியில் இன்னமும் படுத்துக்கிடக்குமோ என்னவோ. கதைகள் என்பவை வெறும் வார்த்தைகள் அல்லவே. தன்னைச்சுற்றி வலை பின்னி வைத்து நடுவில் உட்காத்திருக்கும் சிலந்தி போல எவ்வொரு மனிதனும் தன்னைச் சூழக் கதைகளால் பின்னப்பட்டிருக்கின்றான். ஓட்டுக்குள்ளே ஒழிந்து கிடக்கின்ற ஆமை போல ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் கதைகள் ஒழிந்து கொண்டே இருக்கின்றன. ஒரு கதை கூடக் கேட்காத மனிதன் என்று யாருமே இருந்துவிட முடியாது. இரத்த ஓட்டத்தைப்போல கதைகள் சத்தமில்லாமல் பயணித்துக்கொண்டே இருக்கின்றன.

மஞ்சள் பூக்கள் விழுந்து கிடக்கும் பூவரசு மரத்தடியில் பேன் பார்த்த படி அமர்ந்திருக்கும் சித்திமார்கள் பேசிப் பேசி தீர்த்த அத்தனை கதைகளாலும் தானே நிறைந்து கிடந்தன அந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தடி வேர்கள். எத்தனை குதூகலச் சிரிப்புக்கள். இந்தச் சிரிப்பு சத்தத்தில் தானே பூவரச மொட்டுக்கள் வெடித்து மஞ்சளாய் பூக்கின்றன என்று நான் நினைத்துக் கொண்டதுண்டு. பேசப்பேசக் கதைகள் முடிந்து போவதே இல்லை என்ற உண்மை உணர்ந்தது. அங்கு தான். இரண்டு வீட்டுக்கு குறுக்கே இருக்கும் வேலியில் வைத்திருக்கும் பொட்டு ( ஒருவர் குனிந்து போகக் கூடிய இடைவெளி) எம் கதைகள் எனும் நதிகள் நடந்து போவதற்கு வெட்டிய வாய்க்கால் தானே எங்கள் உறவினர் உயிர் கதைகள் வழியேதானே துடித்துக் கொண்டிருந்தது.

இன்று கால்களில் தீப்பிடித்தது போல ஓடித்திரியும் மனிதர்களிடத்தில் கதைகள் தேங்கிய நீர்க்குட்டையைப்போல நாற்றமெடுத்துக் கிடக்கின்றன. வாழ்வின் கதைகளை பேசுவதற்று இப்போதெல்லாம் இவர்களுக்கு நேரமே இல்லை. எவரின் கதைகளையும் இருந்து கேட்பதற்கும் யாரும் தயாராகவும் இல்லையே. சலூன் கடைக்காரனின் கதிரையில் அமர்ந்தப்படி தன் வாழ்வின் கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும் அந்த உயர்தரம் படிக்கும் ரமேசின் கதைகளை கேட்குமளவு அவன் அப்பாவுக்கு நேரமிருந்திருந்தால் முகம் தெரியாத யாரோ ஒரு மனிதனிடம் ஏன் தன் வாழ்வின் இரகசியங்களைக் கொட்டிக் கொண்டிருக்கின்றான்.

சாதாரண தரம் படிக்கும் யஸ்மினின் முகத்தில் தெரிந்த குழப்பத்தைக் கவனித்து என்னாச்சும்மா? என்று அக்கறையோடு தலைதடவி அவளின் கதையைக் கேட்பதற்கு தொலைக்காட்சியை விட்டு கண் திரும்பாத அம்மா, அன்று இரவு அவள் துப்பட்டாவில் தூக்குபோட்டுச் செத்துப்போய் கிடந்தபோது சோர்ந்து தொங்கிய அவளின் கால்களைக் கட்டிப் பிடித்தபடி "ஏதாவது சொல்லம்மா, ஏதாவது பேசு" என்று தொண்டை கிழியக் கதறி என்ன பயன்?

பால்கொடுக்காத தாயின் மார்பு பால்கட்டி வலிப்பது போல தம் கதைகளின் சோகங்களின் பாரம் தாங்காது பல மனிதர்கள் மாரடைப்பு வந்து மரணித்துப் போகின்றார்கள். குடும்பம் இருந்து உண்பதற்கும் கதைகளைப் பேசுவதற்கும் கொஞ்சம் நேரம் ஒதுக்குங்கள். அண்டைக்கு மீராக்கா வாயூறி வாயூறிச் சொல்லிக்கொண்டிருந்தா நேற்று இரவு நல்ல நிலவு. நானும் இவரும் பிள்ளைகளும் மாதுளை பூத்துக்கிடந்த எங்கட முகத்தில் இருந்து கதைச்சுச் சிரிச்சுப் பேசிக்கொண்டே இருந்தோம். என்ர வாழ்க்கையில சந்தோசமான மறக்கேலாத நாள். கேட்டேன் "ஏன் நேற்று' நேற்று மின்சாரமில்லை. மின்சாரமில்லா இரவுகளின் வாழ்க்கை ஆயிரம் நிலவுகளின் ஒளியோடு முற்றத்துக்கு வருகிறது. நாங்களும் மறக்க முடியாத ஒரு நாள் செய்வோமா....?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரணியெங்கும் எங்கள் தாயகம்



கலாபூஷணம் செ. இராஜேஸ்வரி
பாசையூர்

பொன்னெழில் பொழிந்திலங்கும் கதிரொளி மின்னும் தரணி
திசை நான்கு திக்கு எட்டு நாடுகள் பலது உண்டு
ஒவ்வொரு நாட்டினிற்கும் தலைவராய் ஒருவருண்டு
நாட்டிற்குநாடு மக்கள் தாய்மொழி தனியாயுண்டு,

பலகோடி மக்கள் வாழும் தரணியில் நித்தம் நித்தம்
குண்டுகள் வெடிப்பதாலே கூக்குரல் அழுகைச் சத்தம்
வெள்ளமாய் பாயும் இரத்தம் சிதறுண்ட மனித எச்சம்
மிஞ்சியோர் மனதில் அச்சம் தரணியில் எதுதான் மிச்சம்.

கண்டங்கள் விட்டுக் கண்டம் பாய்ந்திடும் குண்டு வேண்டாம்
கதிர்வீச்சால் மண்ணுயிர்கள் பதைபதைத்து மாள வேண்டாம்
குத்துவெட்டுக் கொத்துகின்ற வன்செயல்கள் எதுவும் வேண்டாம்
கொடுமைமிகு அழிவு நிறை அணுகுண்டு அறவே வேண்டாம்

கண்டங்கள் அதிர்ந்து பூமி அதிர்வினை உண்டுபண்ணும்
குண்டு வீச்சாலே கொடிய பூகம்பம் நிகழும் அதனால்
ஆழிப்பேரலையெழுந்து கண்மூடித் திறப்பதற்குள்
கோரத்தாண்டவத்தையாடிப் பாரினை அழிக்கும் தன்னால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கைப் பேரிடரால் மக்கள் அடைந்திடும் துயரம் பெரிது
செயற்கையின் அழிவினாலே சிதறிய மக்கள் கொடிது
பெற்றோரை இழந்த மக்கள் விதவைகள் தபுதாரிகள்
ஊனமுற்றோர்களில்லா நாட்டினைக் காண்பதரிது.

இப்படி மனிதர் வாழ்ந்தால் எப்படித் தரணி சிறக்கும்
வெப்ப எரிமலை வெடித்துத் துப்பிடும் செந்தணல் பறக்கும்
மனிதகுலம் பறவையினம் வனவிலங்கு அத்தனையும்
எரிந்து கரி குவிந்து புவி நிறைந்துலகு அழிந்திடுமே.

பஞ்சத்தால் வாடும் மக்கள் பசியினைப் போக்குதற்கு
பண்டமாம் உணவுப்பொருட்கள் பரிமாற்றம் செய்யலாமே
வெஞ்சினம் தனை விரட்டி நெஞ்சத்தை அமைதியாக்கிக்
கொஞ்சம் நாம் சிந்தித்தாலே தரணியில் அனைத்தும் நலமே

லோகங்கள் அனைத்திலும் பூலோகம் தான் அழகின் சிறப்பு
பூமித்தாய் பதம் பணிந்து வணங்கினால் அதுவே சிறப்பு
நாடாளும் தலைவரெல்லாம் ஓடாமல் ஒன்றுகூடி
கேடேதும் வந்திடாமல் தரணியைக் காக்க வேண்டும்.


பலமொழிபேசும் மக்கள் இணைந்தொன்றாய் வாழவேண்டும்
இனமத பேதமின்றிப் பண்புடன் பழக வேண்டும்.
அன்பினால் ஒன்றுபட்டு இன்புற்று வாழவேண்டும்
என்றென்றும் தரணியெங்கும் சந்தோசம் நிலைக்க வேண்டும்.

ஆட்சித் தலைவர் அனைவரும் ஒன்றிணைந்து
கூட்டுறவாக வாழ்ந்தால் மண்டலம் மகிமை பெறுமே
மாட்சிமைசேர் தரணியெங்கும் எங்கள் தாயகமாமென்று
வாழ்த்தியே பாடுகின்றேன் செந்தமிழ் கவிதையொன்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவசாய உணவு உற்பத்தி பற்றாக்குறையால் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகள்



**திருமதி சுரேகாந் மேரிபிறின்சியா**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

இலங்கையின் உற்பத்தி வளங்களின் முக்கியத்துவம்
விவசாய உற்பத்தியில் காலநிலைகளின் தாக்கம்
விவசாய உணவு உற்பத்தியில் மக்களின் நாட்டம்
விவசாய உணவு உற்பத்தியினை அதிகரிப்பதற்கான நடவடிக்கை

நினைவுகளுக்கு முந்திய காலப்பகுதியிலிருந்தே இலங்கை அதன் இயற்கை அழகு மற்றும் செழிப்பான பன்முக கலாசாரம் என்பவற்றின் காரணமாக உலகம் முழுவதிலுமிருந்து பயணிகளைக் கவர்ந்த நாடாகும். இலங்கை ஒரு அபிவிருத்தி அடைந்து வரும் நாடாயினும் பல்வேறு இனமக்களைக் கொண்டதுடன் பல் கலாசாரத்தின் மையமாகவும் காணப்படுகின்றது. இலங்கையானது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டதுடன் மலைகள், குன்றுகள், ஆறுகள் மரங்கள் எனப் பல்வேறு இயற்கை அரண்களையும் கொண்ட ஒரு நாடாகும்.

எமது நாடான இலங்கை சுமார் 2500 வருட கால வரலாற்றுப் பெருமை கொண்டதாகும். எமது நாடு அக்காலத்தில் இருந்து நெற்செய்கை (விவசாய) உணவு உற்பத்தியில் பெரிதும் ஆர்வம் காட்டியுள்ளது என்பதனை நாம் அறிந்திருக்கின்றோம். இருபத்தோராம் நூற்றாண்டில் நவீனமயப்படுத்தப்பட்ட பொருளாதாரம் வளர்ச்சியடைந்து காணப்பட்ட போதிலும் பண்டைய காலங்களில் விவசாயமே முக்கியத்துவமாகக் காணப்பட்டது. முன்னொரு காலத்தில் விவசாய உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று விளங்கியது.

உதாரணம் புராதன மன்னர் ஆட்சிக் காலங்களில் தமது நட்பு நாடுகளுக்கு நெல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக வரலாற்று ஆதாரங்களில் கூறப்பட்டிருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஒரு பயிர்ச் செய்கை நாடாகும். இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 20,08728 ஹெக்ரேயர் பயிர்ச் செய்கைப் பிரதேசமாகக் காணப்பட்டது. விவசாய உணவு உற்பத்தியான (நெற்செய்கை) காலத்திற்குக் காலம் மாறுபட்டுக் கொண்டே செல்கின்றது. அதிகரித்து வரும் சனத்தொகைக்கு ஏற்ப விவசாய உணவு உற்பத்திகளின் அளவு அதிகரிக்க வேண்டிய தேவையுள்ளது. இலங்கை மக்களின் பொதுவான உணவாக நெல் விளங்குகின்றது. நமது தானிய நுகர்வில் **75%** அரிசியாகும். தரைத்தோற்றம், மழைவீழ்ச்சி ஆகியவற்றிற்கு இணங்க இலங்கையில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இலங்கையில் ஆரம்ப காலங்களில் விவசாய உணவு உற்பத்தியில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதிகரித்த மக்களின் தொகையை விட அதிகளவான உணவு உற்பத்திகளையே மேற்கொண்டுள்ளது.

தற்காலத்தில் இலங்கையானது பல்வேறு மட்டங்களில் பிரச்சினைக்கு உட்பட்டாலும் அவற்றிலிருந்து மீண்டு எழுந்து வரும் ஒரு நாடாகக் காணப்படுகின்றது. ஆயினும் இன்றைய காலகட்டத்தில் விவசாய உணவு உற்பத்திகளில் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. மானிடக் காரணிகள் விவசாய உணவு உற்பத்திக்கு பாரிய தடைகளாகக் காணப்படுகின்றமையால் இலங்கையானது விவசாய உணவு பற்றாக்குறையினை எதிர்கொள்வதுடன் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றது. எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது என்பதனை விரிவாக நோக்கும் போது எமது நாட்டில் விவசாய உணவு உற்பத்தி மீதான ஆர்வம் எமது மக்களிடையே வேகமாக குறைந்து கொண்டு செல்கின்றது. இது இலங்கை எதிர் கொள்ளும் ஓர் பாரிய பிரச்சினையாகும். பாரம்பரிய விவசாய குடும்பங்களை சேர்ந்த புதிய தலைமுறையினர் படிப்படியாக விவசாய உணவு உற்பத்திகளை கைவிட்டு வேறு துறைகளை நாடி வருகின்றனர். அரச உத்தியோகங்களை நாடிச் செல்பவர்கள் ஒரு புறமிருக்க வேறு பலர் சுய கைத்தொழில் முயற்சிகளில் நாட்டம் கொள்கின்றனர். இதனால் விவசாய உணவு உற்பத்தியானது படிப்படியாகக் குறைந்து செல்கின்றது. இது இலங்கை எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினையாகும்.

நெற்செய்கைக்கு ஏற்படியாக நிலவளமும் நீர்வளமும் கொண்ட நாடாக இலங்கை விளங்குகின்றது. மலையிலிருந்து உற்பத்தியாகும் வருடம் முழுக்க வற்றாமல் பாய்கின்ற நதிகள், நீர்ப்பாசனத்துக்கு ஏதுவாக இயற்கையாகவே காணப்படுகின்ற களியும் சேறும் கலந்த வளமான நிலம் என்றெல்லாம் பல்வேறு வளங்களை கொண்ட எமது நாடு இப்போது விவசாய உணவு உற்பத்தியில் ஆபத்தை எதிர்நோக்குகின்றது. மானிடரின் அதிகரித்த இயந்திரங்களின் பயன்பாடும், அதிகளவான தொழில்நுட்பத்தின் பயன்பாடு, அதிகரித்த செயற்கை உரங்களின் பயன்பாடு, விஞ்ஞான வளர்ச்சியின் தாக்கம் என்பன காலநிலையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. பயிர்ச்செய்கைக்கு அவசியமானது நிச்சயமான காலநிலையாகும். ஆனால் இன்று காலநிலைகளின் மாற்றத்தினால் விவசாய உணவு உற்பத்தி வீழ்ச்சியடைகின்றது. வயலைத் தயார் செய்வது தொடக்கம் அறுவடை முடியும் வரையான காலப்பகுதியில் காலநிலை மாற்றத்தால் வரட்சி நோய்த்தாக்கம், வெள்ளம் என்பன பெரும் சவாலாக அமைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலங்களில் மேட்டு நிலங்கள் வயல் காணிகளாக மாற்றப்பட்டு விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் உணவு பற்றாக்குறை என்ற பதம் அதிகளவில் பேசப்படவில்லை அத்தோடு பட்டினி, பசி என்ற பதங்களும் விவாதங்களாகப் பேசப்பட வில்லை. இன்றைய காலகட்டத்தில் அதிகரித்த சனத்தொகையின் குடியிருப்பின் நிமித்தம் வயற்காணிகள் குடியிருப்புக் காணிகளாக மாற்றப்பட்டு வருகின்றது. இதனால் விவசாயத்தினை மேற்கொண்டு உணவு உற்பத்திகளை அதிகரித்தல் மிகவும் கடினமாகக் காணப்படுகின்றது. உற்பத்தி பற்றாக்குறையால் மக்களிடையே பசி, பட்டினி என்பன நிலவுவதுடன் மக்களிடையே பல்வேறு விதமான மன அழுத்தங்களும் ஏற்படுகின்றது. இறப்பின் வீதங்களும் அதிகரிக்கின்றது. இவ்வாறான நிலைமை இலங்கைக்கு மிகவும் சவாலாகவும் உள்ளது.

சமகாலத்தில் இடம் பெற்ற Covid 19 காரணமாக இலங்கையானது விவசாய உணவு உற்பத்தியில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டு நிற்கின்றது. Covid 19 காரணமாக போடப்பட்ட தொடர் ஊரடங்குகளின் நிமித்தம் விவசாயிகள் தமது விவசாய தொழிலை தொடர்ந்து மேற்கொள்ளாமை விவசாய உணவு உற்பத்தியில் வீழ்ச்சியை அல்லது பற்றாக்குறையினை ஏற்படுத்துகின்றது.

பல்வேறுபட்ட துன்பங்கள், செலவீனங்கள், இடைஞ்சல்கள் மத்தியில் மேற்கொள்ளும் விவசாய உணவு உற்பத்திகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. இதனால் விவசாயிகள் இத் துறையில் போதிய வருமானம் இல்லாததன் நிமித்தம் சுய கைத்தொழில்களை நாடிச் செல்கின்றனர். இதனால் விவசாய உணவு உற்பத்தியில் நாட்டம் குறைந்து செல்வது இலங்கை எதிர் கொள்ளும் ஓர் பிரதான பிரச்சினையாகும்.

இன்றைய கால நவீன உணவு கலாசாரம் விவசாய உணவு உற்பத்திக்கு தடையாக உள்ளது. இந் நவீன உணவு கலாசாரம் இலங்கை மக்களிடையே அதிகளவாகப் பரவியுள்ளது. இதனால் மக்கள் மத்தியில் பெருமளவில் விவசாய உணவு உற்பத்தியில் நாட்டம் குறைந்து செல்கின்றது. உலகமயமாகுதல், நகரமயமாக்குதல், பொருளாதார மாறுதல்களால், எம்மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொன்மையான பிரதான உணவு வகைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு ஒரு குடும்பத்தின் கலாசாரத்திற்கும் தமது பழக்கவழக்கங்களுக்கும் ஒத்துப்போகும் உணவு வகைகளுக்கு தம்மை மாற்றிக் கொள்கின்றனர். இவ்வாறான நவீன உணவு கலாசாரத்தால் விவசாய உணவு உற்பத்தி வீழ்ச்சியடைவதுடன் மக்கள் பல்வேறுபட்ட நோய்த்தாக்கங்களுக்கு ஆளாகுகின்றனர்.

இலங்கையில் சக்கரை வியாதியால் பாதிக்கப்பட்டோர் சராசரி 10.8% காணப்படுகின்றனர். மாரடைப்பு வியாதிகளால் இறப்போரின் வீதம் தற்காலத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமை இலங்கைக்கு பெரும் சவாலாக உள்ளது.

இருபத்தொராம் நூற்றாண்டில் நவீனமயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தில் விமானப் போக்குவரத்து, நட்சத்திர விடுதிகள், சொகுசு வாகனங்கள் போன்றவற்றின் நுகர்ச்சிக் கலாசாரம் மேலோங்கிய நிலையில் விவசாய உணவு உற்பத்தியை அதிகரிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதுள்ளது. விவசாயிகளைத் தயார்ப்படுத்தாமல் இயற்கை விவசாய உணவு உற்பத்தியில் இலங்கையின் ஈடுபாடு அழிவை ஏற்படுத்தி வருவதாக நியூயோக் டைமாஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையை இயற்கை உரங்களுக்கு மாற்றும் முயற்சியாக ஓகஸ்ட் 2021 இல் இலங்கை அரசாங்கம் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து இயற்கை உரங்களை கொள்வனவு செய்வதற்கு 3.8 பில்லியன் ஒதுக்கியுள்ளது.

2020ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 0.24 சதவீதத்தை உரமானியத்திட்டத்திற்கு செலவழித்துள்ளது. இது நாட்டில் விவசாய உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் குறைந்த விலையில் உரங்களை வழங்குவதற்கான நீண்டகாலக் கொள்கை ஆகும். காலநிலையுடன் தொடர்புடைய ஏற்ற இறக்கமான அறுவடைகள் முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகையை வழங்குதல் மற்றும் பல காரணிகளால் உரமானியத்துக்கான செலவீனம் ஒவ்வொரு ஆண்டும் வேறுபடுகின்றது. இலங்கையின் உரப்பாவனையின் தீவிரம் பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் நடுத்தர அளவில் உள்ளது. இலங்கை மத்திய வங்கியின் கூற்றுப்படி அரிசி போன்ற விவசாய உணவுப் பொருட்களின் விலைகள் ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததை விட கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்காக அதிகரித்துள்ளது. உற்பத்தியின் அளவு குறைய விலையின் ஏற்றம் அதிகரிக்கின்றது. இது மக்களின் சுயாதீன வாழ்க்கையில் பல இன்னல்கள், மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இலங்கையானது விவசாய உணவு உற்பத்தியில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டாலும் இவ்வாறான நிலையில் இருந்து விடுபட பல்வேறு தீர்மானங்கள், நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அந்த வகையில் இலங்கையில் விவசாய உணவு உற்பத்தியினை முன்னேற்ற எவ்வாறான அணுகுமுறைகளை முன்னெடுக்க வேண்டும் என நோக்குவோம்.

விவசாயிகளின் மட்டில் ஆட்சியாளர்கள் கடைப்பிடித்து வரும் அணுகுமுறை அவர்களை சடப்பொருளாகக் காட்டுகின்றது. இதனை மாற்றி விவசாயிகளை முன் முயற்சியுள்ள குடிமக்களாகப் பார்க்க வேண்டும். அரசின் உதவியுடன் சிறு உற்பத்தியாளர்களாக இருக்கும் விவசாயிகளை ஒன்று திரட்டி அவர்களது உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டும். விவசாய உணவு உற்பத்தியினை முன்னேற்றுவதற்கு அதி நவீன எந்திரங்களும், முதலீடும் வெளியிலிருந்து வரும் என்று காத்திருப்பதற்குப் பதிலாக, அரைகுறை வேலை வாய்ப்புடன் அவதிப்படும் இலங்கை மக்களை இனம் கண்டு நீர்மேலாண்மை, நீர்ப்பாசனம் போன்ற பணிகளில் ஈடுபடுத்தி விவசாய உணவு உற்பத்தியினை முன்னேற்ற முடியும். இதனால் உணவு உற்பத்தியின் அளவினை அதிகரிக்கலாம். உணவு பற்றாக்குறை எனும் பதத்தினை மாற்றியமைக்கலாம்.

அடுத்து இயற்கை முறை விவசாயத்தினை மேற்கொள்ள அரசுகள் வலியுறுத்த வேண்டும். அரசு வலியுறுத்தினாலும் நடைமுறைப்படுத்தல் மிகவும் கடினமாகவே உள்ளது. இலகுவான விளைச்சலை குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்வதற்காக இரசாயன உரம் பயன்படுத்தப்படுகின்றது. இரசாயன உரப்பயன்பாட்டில் உற்பத்தியாகும் உணவுப் பொருட்கள் மனிதனின் உடலில் பல்வேறு மாறுதல்களை ஏற்படுத்துகின்றது. எதிர்காலங்களில் பல நோய்த்தொற்றுக்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறான நிலைமை தற்காலத்திலும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. மனிதனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பில் அதிகளவு பங்கு உணவாகவே காணப்படுகின்றன. இவற்றினை மாற்றியமைக்க வேண்டும். இதற்கு இயற்கை உரங்களைக் கொண்ட முறையான விவசாய உணவு உற்பத்தியினை அதிகரிக்க வேண்டும். இயற்கை முறையான உணவு உற்பத்தியானது ஆரோக்கியமானதாக அமையும். எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கியத்திற்கும் வழிவகுக்கும் உதாரணமாக இரசாயன உரத்திற்குப் பதிலாக மக்கிய தொழு உரம், ஆட்டுப்புழுக்கை , கோழி உரம் போன்றவற்றை பயன்படுத்தினால் பயிருக்கு வேண்டிய முழு ஊட்டத்தையும் பெறலாம். அத்தோடு உயிரியல் பண்பாட்டில் மாற்றம் நிகழ்வதுடன் சூழலும் பாதுகாப்பாக இருக்கும்.

அடுத்து விவசாய உணவு உற்பத்தியினை அதிகரிக்க மழை நீர் சேமித்தல் ஓர் அடிப்படை விடயமாகும். ஆரம்பகாலங்களில் மழை நீர் சேமித்தல் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு பல முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. பின்னர் இவ்வாறான நிலைமை செயலற்றுப் போனது. இதனால் விவசாய உணவு உற்பத்தியின் அளவானது சராசரியாக குறைவடைந்து போனது. காரணம் கோடைகாலங்களில் பயிர்களுக்குத் தேவையான நீர் கிடைக்காமை ஓர் காரணமாகும். இவ்வாறான நிலைமையினை மாற்றியமைக்க மீண்டும் மழை நீர் சேகரித்தல் எனும் திட்டத்தினை மீள் உருவாக்கம் செய்து செயற்திட்டங்களை பிரகடனப்படுத்தி அது தொடர்பாக விவசாயிகளை ஊக்குவித்து விவசாய உணவு உற்பத்தியினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நகர்ப்புறச்சார்புள்ள நிலங்களில் பசுமையகம் ஹைற டென் பசுமைக் கூடார முறையைப் பின்பற்றலாம். உணவு உற்பத்தி பற்றாக்குறையிலிருந்து இவற்றின் ஊடாக விடுபடலாம்.

இறுதியாக விவசாயத்துறையோ? அல்லது விவசாய திணைக்களங்களோ? விவசாய உணவு உற்பத்திக்கு சரியானபடி உதவ முன் வர வேண்டும். அப்போது தான் விவசாய உணவு உற்பத்தியினை அதிகரிக்கலாம். விவசாயம் கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. விவசாயம் தொடர்புடைய நிறுவனங்கள், திணைக்களங்கள், நகர் புறங்களில் காணப்படுகின்றது. இது விவசாயிகளின் உயர்விற்கு மிகவும் பாரிய தூரமாக உள்ளது. விவசாயங்கள் மேற்கொள்ளும் இடங்களுக்கு அமைவாகவே அதன் வளர்ச்சிக்காக திணைக்களங்கள் செயற்பட வேண்டும். இவ்வாறான ஊக்குவிப்புக்கள் விவசாய உணவு உற்பத்தியினை அதிகரித்து உணவுப் பற்றாக்குறையினைக் குறைப்பதுடன் உணவுப் பற்றாக்குறையினால் இலங்கை எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், சவால்களையும் வெற்றி கொள்ளலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. சூழலியல் ()
2. மானிடப் புவியியல் பக்கம் 66 – 75
3. மனிதனும் சூழலும் – 1
4. விவசாய இரசாயனப் பாவனைத் தடையும் பொருளாதாரமும்
5. https://www.virakesari.lk/article/1344
6. https://tamil.win.com/article/natural - agriculture-has caused - oisaster - in sl - 1638957832
7. http://www.sbte.lk.page.php LID=38MID=103




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொழும்புத்துறையின் பாரம்பரிய கைத்தொழில்
# தும்புக் கைத்தொழில்



**இராமநாதன் தனஞ்செயன்**
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

**கொழும்புத்துறை**

**யா**ழ்ப்பாண இராசதானியை ஆண்ட தமிழரசர்கள் காலத்திலிருந்து கொழும்புத் துறையூர் மிகவும் பிரசித்தியுடையதாக இருந்து வந்துள்ளது. கடல் வழிப் பிரயாணம், வாணிபம் என்பனவற்றுக்கு ஏற்ற துறைமுகம் ஒன்று இங்கு அமைந்திருந்தமையால் கொழும்புத்துறை எனும் காரணப் பெயர் உருவாயிற்று எனலாம். யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து கிழக்குப் பக்கமாக 4 KM தூரத்தில் கொழும்புத்துறை உள்ளது. மூன்று பக்கம் நிலத்தாலும் ஒரு பக்கம் கடலாலும் சூழப்பட்டு கிராமத்துக்கு உரித்தான அழகுடனும் அதே நேரம் நகரத்துக்கு உரித்தான வசதிகளுடனும் காட்சி தரும் கொழும்புத்துறை ஓர் வசீகரமான கிராம நகரமாகும். கொழும்புத்துறை 3 கிராம சேவையாளர் பிரிவினை உள்ளடக்கி இருப்பினும் கொழும்புத்துறை கிழக்கு (J/62) கிராமசேவையாளர் பிரிவிலேயே அதிகம் தும்புக் கைத்தொழில் ஜீவனோபாய தொழிலாக இடம் பெறுகின்றது, அதாவது கொழும்புத்துறை மீன்பிடி துறைமுகத்தை அண்டியிருக்கும் பகுதியே அத்தொழிலுக்குக் களமாய் அமைகிறது.

உப்பு நீரில் பதப்படுத்தப்பட்ட தென்னம் தும்பினால் செய்யப்படும் தும்புக் கயிறு (இளைக்கயிறு, தேடாவளையம்) யாழ்ப்பாணத்தில் ஓர் காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியது. கொழும்புத்துறை தும்புக் கயிறு உற்பத்தி எமது தற்சார்பு பொருளாதாரமாகவும், இயற்கையுடன் ஒன்றிணைந்த பாரம்பரிய கைத்தொழிலாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளமை முக்கியமான விடயமாகும். அவ்வாறான தும்புக் கயிறு உற்பத்தி முறை பற்றியும் அதன் தற்போதய, எதிர்காலம் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

## கொழும்புத்துறையும் தும்பும்

கொழும்புத்துறை கயிறு 2000ஆம் ஆண்டுக்கு முன் யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. இங்கு உற்பத்தி செய்யப்படும் கயிறு உறுதியானதாக, தரமிக்கதாக இருப்பதே அதற்கான காரணமாகும். கொழும்புத்துறையிலே தும்புக் கைத்தொழில் ஏறக்குறைய 100 வருடங்களுக்கும் அதிகமாக இடம் பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது. ஆழம் குறைந்த, நன்கு உப்புச் செறிந்த கடல் வளம் இப்பிரதேசத்தின் வரப்பிரசாதம் எனலாம். பரம்பரையாக தும்புக் கைத்தொழிலில் ஈடுபட்டு வரும் இப்பிரதேசத்து மக்கள் மேற்குறித்த இரண்டு விடயங்களும் கொழும்புத்துறையில் தும்புக் கைத்தொழில் சிறப்பான முறையில் தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு மேற்படி கடலின் தன்மையையே காரணம் எனக் கூறுகிறார்கள். தும்புக்கயிறு செய்வதற்கு மட்டும் இப்பிரதேச தும்பு பயன்படுவதில்லை. தும்புத்தடி, தூரிகை, கைவினைப் பொருட்கள் முதலானவை தயாரிப்பதற்கும் அது பயன்படுத்தப்படுகின்றது.



கயிறு செய்வதற்கு பயன்படுத்தப்படும் தும்பைப் பெறுவதற்கு தென்னம் பொச்சு மட்டைகளை குறைந்தது (6 மாத காலம் கடலிலே புதைத்து வைக்கிறார்கள். இதனால் தான் கொழும்புத்துறை தும்பு சிறந்த தரமுடையதாகிறது.

## தும்பு உற்பத்தி




தும்புக் கயிறு உற்பத்தி செய்வதற்கு தேங்காய் மட்டையில் இருந்து பெறப்படும் தும்பு மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. தேங்காயினை உரித்ததன் பின்பு பெறப்படும் மட்டை (பொச்சுமட்டை) சில நாட்களின் பின்பு காய்ந்து விடும் தன்மை கொண்டது. தும்பைப் பெறுவதாயின் பொச்சு காய்வதற்கு முன்னரே அதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உடன் உரித்த பொச்சு மட்டைகள் கடலுக்குள் குழி தோண்டி புதைத்து வைக்கப்படும். கொழும்புத்துறை கடல் மாசி மாதம் தொடக்கம் ஆடி மாதம் வரையும் நீர் மட்டம் குறைந்து காணப்படும். அவ்வேளையிலேயே கடலுக்குள் குழி தோண்டி (தேங்காய் மட்டையின் அளவுக்கு ஏற்ப) தேங்காய் மட்டையினைப் புதைத்து வைக்கிறார்கள். கொழும்புத்துறையில் தும்புக் கைத்தொழிலில் ஈடுபடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினருக்கு மீன்பிடித் துறையினை அண்டிய கடல் பகுதியில் ஒரு குறிப்பிட்ட அளவு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான எல்லைகள் குறிப்பிட்டு இருக்காது. ஆனால் ஒவ்வொருவரும் தமக்குரிய இடத்தினை நான்கு மூலைகளில் கற்களை நாட்டி அடையாளப்படுத்துவர். தரைப்பகுதியை அண்டிய கடல் பிரதேசம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மழைவீழ்ச்சிக்கு அமைய முன் அரை ஆண்டு வற்றியும், பின் அரை ஆண்டு நீர் மட்டம் உயர்ந்தும் காணப்படும். கடல் வத்துக் காலத்தில் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்ட இடத்தில் குழி தோண்டி தென்னம் மட்டைகளை புதைப்பார்கள். புதைக்கும்போது பொச்சுப் பக்கம் மேலே பார்க்கும் வண்ணம் ஒன்றுக்கு மேல் ஒன்றாக தேங்காய் மட்டையினை அடுக்கி நன்றாக அழுத்தி மேலே மண்போட்டு மூடுவார்கள். பொச்சு மட்டை ஒன்றோடு ஒன்று இறுகுவதற்காகவும், குழியிலே இருக்கும் கடல் நீர் வெளியேறுவதற்காகவும் நன்றாக அழுத்தி மேலே மண்போட்டு குழி மூடப்படும். குறைந்தது 6 மாத காலம் குளிக்குள் தேங்காய் மட்டை கடல் உப்பு நீரிலே நொதிப்படைந்து மட்டை நார் ஆகி, தும்பு நன்றாக இளகி இருக்கும், இந்த நிலையினை குழிக்கு மேல் அலவாங்கால் குற்றிப்பார்க்கும் போது அலவாங்கு இலேசாக குளிக்குள் கீழே இறங்குவதன் மூலம் உணர்ந்து கொள்ள முடியும். குழியின் மேல் பக்கம் மூடிய மண்ணை கிளறி எடுத்து தென்னம் மட்டைகளை குளிக்கு வெளியே எடுப்பார்கள். பின் குழியினைச் சீர் செய்து புதிய பொச்சு மட்டைகளை மேற்குறித்தவாறு மீண்டும் புதைப்பர். வெளியே எடுத்த பொச்சு மட்டைகளினைத் தமது வீட்டிற்கு எடுத்துச் சென்றதும், தும்பு பிரித்தெடுக்கும் அடுத்த கட்ட செயற்பாடு தொடங்கும். கடலில் இருந்து பொச்சு மட்டை வெளியே எடுத்து ஓர் இரு நாட்களிற்குள் செய்யப்படல் வேண்டும். பொச்சு மட்டையில் இருக்கும் ஈரம் உலர்ந்து விட்டால் மட்டையில் இருந்து தும்பைப் பிரித்தெடுப்பது கடினமாகிவிடும். நிலத்தில் மரக்குற்றி ஒன்றை வைத்து கடலில் இருந்து எடுத்த பொச்சு மட்டையினை ஒவ்வொன்றாக மரக்குற்றியின் மேல் வைத்து பிறிதொரு மரக்கட்டையினால் அடிக்கும்போது பொச்சு மட்டையின் மேற்பக்கம் இருக்கும் நார் உரிந்து சோத்தி (தூசு) விடுபட்டு தும்பு தனியாகவரும். அடுத்து தும்பினைத் தரம் பிரிக்கும் செயற்பாடு. சிறியதாய் இருக்கும் தும்பினை தும்புத்தடிக்கும் சற்று பெரிதாய் இருக்கும் தும்பினை கயிறு செய்வதற்குமாகப் பிரித்து எடுப்பார்கள்.

**கயிறு விடுதல்**




தும்பினைக் கயிறாக மாற்றுவதற்கு மூன்று நபர்களும் இரண்டு பொறிகளும் தேவை. அந்தப் பொறிகளை கைத்து மிசின் என்பர் (கயிற்றுமிசின்) கைத்து பொறிமூலம் தான் தும்பு பின்னப்படும், பொறியில் ஓர் சக்கரமும் அதைச் சுற்றுவதற்கு ஓர் கைபிடியும் சில்லினை தாங்கிப்பிடிப்பதற்கு ஏற்ற அமைப்பும் காணப்படும். சக்கரத்தை ஒருவர் சுற்றிக் கொண்டு இருக்கும் போது (மெதுவாக சுற்ற வேண்டும்) இருவர் பொறியில் இருக்கும் கொளுவியில் தும்பினைக் கொளுவி தொடர்ந்து தும்பினை விட்டுக் கொண்டு பின்பக்கமாக மெதுவாக நடந்து செல்வார்கள். தும்பினை விடும் போது கைக்கணக்கில் விட வேண்டும். இல்லையெனில் கயிற்றின் தடிப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு சீர்மைப்பட அமையாது விடும். தும்பினை விட்டுச் செல்லும் இருவரும் ஒரு கயிற்றுக்குத் தேவையான தூரத்துடன் தும்பு விடுவதை நிறுத்தி விட்டு, இரண்டு தும்பு முடிச்சுக்களின் நுனிப்பகுதியினையும் ஒன்று சேர்த்து மற்றய கைத்து மிசினில் உள்ள கொளுவியில் கொளுவுவர். பின்னர் "கேச்" எனும் கருவியினூடாக இரண்டு தும்புகளையும் ஒன்று சேர்த்து தும்புவிட்ட இருவரில் ஒருவர் கேச்சை பிடித்து செல்ல மற்ற நபர் சக்கரத்தை மெதுவாக சுற்றுவார். முதலாவது பொறியும், இரண்டாவது பொறியும் எதிர் எதிராக இருக்கும். இரண்டு பொறியும் ஒரே நேரத்தில் சுத்தப்படும் போது கேச் பிடித்திருப்பவர் முதலாவது பொறி வரைக்கும் மெதுவாக நடந்து சென்று இரண்டு தனித்தனி தும்பு முடிச்சுகளையும் ஒன்றோடு ஒன்று முறுகிப் பின்னச்செய்வர். கேச்சின் தொழிற்பாடு இரண்டு தும்பு முடிச்சுக்களையும் ஒன்று சேர்த்து இறுகப்பின்னுவது ஆகும். சின்னக் கயிறு, அல்லது சின்னமுடிச்சு, இளைக்கயிறு போன்ற வகை கயிறுகள் முதலில் உற்பத்தி செய்யப்படும். வேலி அடைப்பதற்கு, தோட்ட வேலைகள் போன்ற சிறு வேலைகளிற்காக இவ்வகை கயிறு பெரும்பாலும் பயன்பாட்டில் இருப்பதை அவதானிக்கலாம். இவ் வகை தடிப்பம் குறைவாக பருமனாக இருப்பதனால் பாவனைக்காலமும் குறைவானதாகவே இருக்கும். இதே போன்று தேடா கயிறு என்ற இன்னுமோர் வகை கயிறும் சேர்த்து பின்னப்படும் – தேடாக் கயிற்றைப் பின்னுவதற்கு இரும்பினால் ஆன தேடாமிசினும் உண்டு, சின்ன முடிச்சுக்கு செய்ததைப் போல் இருவர் தேடாமிசின் சக்கரத்தைச் சுற்றும் போது ஒருவர் கேச் மூலம் அனைத்து



கயிறுகளையும் ஒன்றாக்கி தேடாக் வகை தும்புக் கயிறு செய்யப்படும். இதற்கான கேச்சும் சற்று பெரிதாகவும் கயிற்று வகைக்கு ஏற்ப (பருமன்) 3 அல்லது 4 இழைகள் உள்ளதாயும் செய்யப்படும். கடலிலே வலை கட்டுவதற்கு இவ் வகை தேடாக் கயிறு பயன்பாட்டில் இருப்பதனை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. குறைந்தது 27 முழம் நீளம் இருக்கும். அல்லது நுகர்வோரின் தேவையான நீளத்திற்கு ஏற்ப செய்து கொடுக்கப்படும். கோயில் தேரினை இழுப்பதற்காக பயன்படும் வடக் கயிறும் கொழும்புத்துறையில் தயாரிக்கப்பட்டது. ஆலய தேரின் அளவுக்கு ஏற்ப வடக்கயிறு உயர் தரத்தில் செய்யப்பட்டது. இருப்பினும் வடக்கயிறு தற்போது இங்கு செய்யப்படுவதில்லை.

**தற்காலமும் எதிர்காலமும்**

கொழும்புத்துறையில் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக மேற் கொள்ளப்பட்டு வந்த குடிசைக் கைத்தொழில் தும்புக் கைத்தொழில். தும்பை மூலப் பொருளாகக் கொண்டு கயிறு பின்னுவது இப்பிரதேசத்து மக்களின் வாழ்வாதாரமாக இருந்து வந்துள்ளது. குடும்பத்திலிருக்கும் முதியவர்கள், இளையோர்கள், சிறுவர்கள் என குடும்ப உறுப்பினர்கள் இணைந்து இத் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். பொச்சு மட்டைகளை வேறு இடங்களில் இருந்து விலைகொடுத்து வாங்கி வந்து கடலிலே உரிய பருவம் பார்த்து குளிதோண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னம் மட்டைகளைப் புதைப்பது தொடக்கம் பல்வேறு தொழிற்பாடுகள் கையித்து குடிசைத் தொழிலிலே உண்டு. ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் தமக்கு ஏற்ற வேலைகளைச் செய்வார்கள் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் தொடங்கியதில் இருந்து 1995ஆம் ஆண்டு வரைக்கும் கொழும்புத்துறைத் தும்புக் கயிறு யாழ்ப்பாணம் எங்கும் மிகவும் பிரசித்தி பெற்று இருந்தது.



கொழும்புத்துறை தும்புக்கயிறு என்றால் தரம் மிக்கது என்று சிறப்பு பெயர் பெற்றிருந்தது பெருநிலப்பரப்பிலிருந்து குடாநாட்டுக்கான தரை வழிப் போக்குவரத்து யுத்தத்தின் காரணமாக நிறுத்தப்பட்டு இருந்தது. இதனால் அத்தியாவசிய பொருட்களே கடல் வழியாக யாழ் மாவட்டத்திற்கு கொண்டுவரப்பட்டது. தும்புக் கயித்துக்கு நல்லதொரு சந்தை வாய்ப்பு அக்காலத்தில் இருந்தது எனலாம்.

கொழும்புத்துறையில் தும்புக் கைத்தொழிலை மேற்கொள்ளும் குடும்பத்தாரும் நல்லதொரு வருமானத்தைப் பெற்றும் கொண்டனர். மாலை வேளையில் தமது வீட்டு வளவுகளில், வீதியோரங்களில் கயித்து மிசினை சுத்தி தும்புவிட்டுக் கொண்டு இருப்பதனை காணக்கூடியதாய் இருக்கும். 1995ஆம் ஆண்டில் இருந்து 2009ஆம் ஆண்டு வரைக்கும் முன் இருந்ததைவிட தும்புக் கயிறு உற்பத்தி சற்றுக் குறைந்திருந்ததனை அறிய முடிகின்றது. ஏனெனில் வெளி மாவட்டங்களில் இருந்து பிளாஸ்ரிக் கயிறு, நூல்க்கயிறு, ரயர் நூல் போன்றவற்றின் வருகையால் தும்புக் கயிறுப் பாவனை பின்னடைவைச் சந்தித்தது. 2009ஆம் ஆண்டின் பின்பு தரைவழிப் போக்குவரத்து முழுமையாகத் திறக்கப்பட்டது முதல் பல்வேறு பட்ட கயிறுகள் குறைந்த விலையில் தாராளமாய் யாழ்ப்பாணத்தில் கிடைத்தன. இதனால் கொழும்புத்துறையில் செய்யப்பட்ட தும்பு கயிறு பெரும் பின்னடைவை சந்தித்தது. தும்புக் கயித்துக்கான கேள்வி குறைவடைந்தமையால் அதை உற்பத்தி செய்த கொழும்புத்துறை வாழ் குடும்பங்களும் இத் தொழிலில் ஈடுபடுவதனை குறைத்துக் கொண்டன. இக்குடும்பங்களினைச் சேர்ந்த இளையோர்கள் வேறு தொழில்களுக்கு சென்றனர். அரச தனியார் உத்தியோகம், பெற்றனர். சிலர் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டனர். இதன் காரணமாக தற்போது இளையோர் தும்புத் தொழிலில் ஈடுபடுவதினை காணமுடியாது உள்ளது. முதியோர்களிடம் இருந்து தும்புத் தொழில் தொடர்பான அனுபவங்களினை பெற்றுக் கொள்வதற்கும் இளையோர்கள் முன்வராதமையை காணக் கூடியதாய் உள்ளது. முதியோர்களாலேயே தும்புக் கயிறு தொழில் தற்போது செய்யப்பட்டு வருகின்றது. இந்த தலைமுறையுடன் தும்புக் கயித்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே அமையும் என்பது இப்பிரதேசத்து முதியவர்களின் கவலை.

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் கலை நிகழ்வில் கயிறு விடும் போட்டியும் நடாத்தப்படுகின்றது. அந்த அளவிற்கு கொழும்புத்துறை பிரதேசத்துடன் தும்புக்கயிறு கைத்தொழிலும் ஒன்றிணைந்ததாக உள்ளது.

15 – 20 குடும்பங்களே தற்போது இத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. தமது பிள்ளைகளே இத் தொழிலை பழகவிரும்பவில்லை என்பது அவர்களின் ஆதங்கமாயும் உள்ளது. "தம் உயிர் இருக்கும் வரை இத்தொழிலைப் பார்ப்போம்" என்பது இவர்களின் தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை. அரசாங்கம் தும்புக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு முன்வரவேண்டும். இளையோருக்கு நவீன தொழில் நுட்ப முறையிலான பயிற்சி, உள்நாட்டு வெளிநாட்டு சந்தை வாய்ப்பு போன்றவற்றினை வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் தும்புக்கைத்தொழிலினை கொழும்புத்துறையில் மீண்டும் புத்துயிர் பெறவைக்க முடியும். சில தனியார் அமைப்புக்கள் வேறு மாவட்டங்களில் இருந்து தென்னம் மட்டைகளினைப் பெற்று இத் தொழிலில் ஈடுபட்டு வரும் குடும்பத்தினருக்கு இலவசமாக வழங்கி வருவதனைக் குறிப்பிட வேண்டும். இவ்வாறு மூலப் பொருட்களினை வழங்குவதன் நோக்கம் தொடர்ந்தும் தும்புக் கயிறு கைத் தொழில் இப்பிரதேசத்தில் நடைபெறவேண்டும் என்பதே ஆகும்.

**முடிவுரை**

நெடுங்காலமாய் கொழும்புத்துறையின் தனிப்பெரும் அடையாளங்களுள் ஒன்றாய் தும்புக் கயிறும் திகழ்ந்தது. யாழ்ப்பாணத்தில் தனிச் சிறப்பும் கொழும்புத்துறைத் தும்புக் கயிற்றுக்கு உண்டு. கடல் உப்பு நீரில் ஊறவைத்த தும்பு, கயிற்றுப் பருமனில் சீரான தன்மை போன்றவற்றால் கயிற்றின் தரமும் அதிகமாய் உள்ளமை குறிப்பிடத்தக்கது. 2009ஆம் ஆண்டிற்கு பின்னரும் கயிறு உற்பத்தி நடைபெற்றாலும் சந்தையில் தும்புக் கயிற்றுக்கான கேள்வி குறைவாகவே இருந்ததனை அவதானிக்க முடிகிறது. உதாரணமாக முன்பு ஊர்களில் வேலியே அதிகமாய் இருந்தது. கதியால், கிடுகு, கருக்குமட்டை கட்டுவதற்கு தும்புக்கயிறே அதிகமாய் பயன்படுத்தப்பட்டது. தற்போது தகரவேலியும், மதிலுமே அதிகமாகிவிட்டன. ஒப்பீட்டளவில் வேலி குறைந்துவிட்டது. இருக்கும் வேலிகளுக்கும் தற்போது ரயர் நூலே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. தும்புக் கயிறு வெயில், மழை, கறையான் போன்றவற்றின் தாக்கத்தினால் குறைந்தது 2 வருடகாலம் உறுதியாக இருக்கும் தன்மை கொண்டதனால் பின்னர் உக்கிவிடும். ரயர் நூல் அவ்வாறு இல்லை. பாவனைக்காலம் அதிகம். இப்படியான காரணங்களால் தும்புக்கயிற்றின் கேள்வி குறைவாகவே இருக்கின்றது.

அரசாங்கம் மானியம், சந்தைப்படுத்தல் போன்ற வசதிகளைப் பெற்றுக் கொடுத்து ஊக்குவிப்பதன் மூலம் தும்புக் கயிற்றின் எதிர்காலம் வினைத்திறன் கூடியதாய் அமையும். அதுமட்டுமல்லாது தென்னந்தும்பு சார்ந்த தும்புத்தடி, கால்துடைப்பம், தூரிகை, கைவினைப் பொருட்கள் போன்றவற்றின் உற்பத்தியினையும் இதன் மூலம் அதிகரிக்க முடியும்,

இயற்கையோடு ஒன்றிணைந்த எமது பாரம்பரியம் இயற்கைக்கு எவ்வித பாதிப்பும் இல்லாதது. தும்புக் கயிறும் அவ்வாறானதே 1995ஆம் ஆண்டிற்கு முன்னர் கொழும்புத்துறைக்கு மாலை நேரம் சென்றால் பெரும்பாலான வீடுகளிற்கு முன்னும், வீதியோரங்களிலும் தும்புக் கயிற்று பொறியிலிருந்து கயிறு விட்டுக்கொண்டு இருப்பதனைக் காணலாம். இப்போது சென்றால் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே அதைக் காணலாம். இப்பிரதேசத்து தும்புக் கயிற்றுத் தொழிலினை ஆவணப்படுத்துவதற்காக கொழும்புத்துறையில் பலவருடங்களாய் தும்புக் கைத்தொழில் ஈடுபட்டு வரும் கணேசலிங்கம் இராசம்மா அவர்களின் நேர்காணல் மூலம் பெறப்படும் தகவல்களையும் அவதானிப்புக்களையும் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டது. குறித்த பெண் இன்றும் தும்புக் கயிற்று தொழிலில் ஈடுபடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராத மொட்டு



**ஆய்வாளர் புயல் ஸ்ரீகந்தநேசன்,**
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
தேசிய கல்வி நிறுவகம்

இது மிஷின் யுகம் புதுமையைக் கண்டு மயங்கி வாழ்க்கையை வீணடிக்கும் நவீன யுகம். அவள் அன்று ஒரு முழுநீள பெயர்கொண்ட – சினிமாக்காரர்களுக்கும் நாடகக்காரர்களுக்கும் தான் வாயில் நுழையாத பெயர் வைக்க நன்றாகத் தெரியுமே – சினிமாப் படங்களுடன் பொழுதைக் கழித்திருக்க வேண்டும் போல ஏனெனில், அதன் மாற்று வடிவமே இன்றைய தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள்.

எப்போதும் அவன் பாடசாலையிலிருந்து மதியம் இரண்டு முப்பது மணியளவில் வீடு வருவது வழக்கம் அன்று தமிழ்ப் பாட செயலமர்வு நடைபெற்றதால், இரண்டு மணித்தியாலங்கள் தாமதமாகவே வந்தான்.

உள்ளே எப்பொழுதும் போல கதையில் தொடர் நாடகங்களின் அட்டகாசம். அவனது மகள் நிலத்தில் விளையாடுகின்றாள். வழமைபோல அமளிதுமளி எழுந்தது, அடுக்களைக்குள் போவதும் வருவதும் இருக்கைகளில் அமர்வதும் தன்னை அறியாமல் சிரிப்பதும் விழிகளின் பார்வை தொலைக்காட்சியில், கரங்கள் சோற்றுக் கோப்பைக்கும் வாய்க்கும் இடையில் வீதி மறியல் போராட்டம்.

"உனக்கு எப்போதும் விளையாட்டுத்தான் கொஞ்ச நேரமாவது சும்மா இருக்க மாட்டாய்..." – அங்கலாய்த்தவாறு சோற்றுக் கோப்பையை அருகில் இருந்த அரைச் சுவரில் வைத்து விட்டு பார்வையை மாற்றாமல் இரண்டு கரங்களினாலும் குழந்தையைத் தூக்குகின்றார், அவனது மாமியார். குழந்தை தொலைக்காட்சித் தொடர் நாடகமே வேண்டாம் என்பது போல அவளைப் பரிதாபமாகப் பார்க்கின்றது. அவன் குழந்தையைப் பார்த்து மென்மையான மௌனப் புன்னகையைப் புன்னகித்து விட்டு, அறைக்குள் நுழைகின்றான்.

இஞ்ச உங்களுக்குச் சாப்பாடு மேசையில் போட்டு வச்சிருக்கிறன். அதை எடுத்துச் சாப்பிட்டுட்டு கோப்பையை உள் 'சிங்' இல் கழுவ வேணாம். வெளியில் கழுவுங்க இண்டைக்கு விரதம் குசினி கழுவப் போறம். நாங்க மச்சம் இல்ல. உங்களுக்கு மட்டுந்தான் முட்டை பொரித்தது. இப்ப நான், புள்ளைய முழுக வாக்கப் போறன்." – கைகளில் சோற்றுக் கோப்பையுடன் தொலைக்காட்சியை நோட்டமிட்டவாறு கதிரையில் அமர்கின்றாள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது மனைவி.

"அம்மா, அவனுக்கு கல்யாணம் நடந்து முதலிரவு நடந்திடுச்சா"

"சும்மா சத்தம் போடாமப் பாரு. நானும் உன்னோட தானே நேற்றுப் பார்த்தனான். இப்பதான் முதற்கட்டம் அவன் தம்பிக்குக் கல்யாணம் நடந்திச்சு, இந்தப் புள்ள ஒழுங்கா பாக்க விட்டால்தானே?"

குழந்தையைக் கீழே வைக்க எத்தனிக்கும் போது, குழந்தை தொலைக்காட்சியின் சத்தத்தினால், வீரிட்டு அழுதது. அவன் தனது உடைகளை மாற்றாமல் குழந்தையைத் தூக்கச்சென்றான். அப்போது அவனது மனைவி குறுக்கிட்டாள். "றோட்டாலே சுத்தித்திரிந்து போட்டு பிள்ளையைத்தூக்க வேண்டாம். என்ர பிள்ளைக்குக் கௌரவம்தான் முக்கியம் உங்கள மாதிரி குளிக்காத கொள்ளாத வேடர் போல என்ர பிள்ளையையும் நினைச்சிட்டீங்களா?"

அவள் பேசியதில் இருந்து தொலைக்காட்சி நாடகங்களின் தாக்கத்தைக் காணக்கூடியதாக இருந்தது. நாடகத்தில் வினோதினி என்ற பாத்திரம் தனது கணவனின் பொறுப்பற்ற செயலை, "உங்களுக்கு இப்ப ஒரே ஊர் ஊர் சுத்துறதுதான் பழக்கம்" – திட்டினாள்.

யதார்த்தமாக வாழ்ந்த கணவனும் "உனக்கு இப்ப என்ன வேணும்..." – பதிலுக்கு எகிறிக் குதித்தான். அவனது மனைவியும் மாமியும் வைத்த கண் வாங்காமல் அந்த நாடக உரையாடலில் மூழ்கிப் போயிருந்தனர்.

t.v. தொடர்ந்து பார்த்தால், ஆயுள் குறையுது, கண்பார்வை குறையுது, வாழ்க்கையில் விரக்தி ஏற்படுகின்றது, சிறுவர்கள் தவறான வழியில் செல்கிறார்கள், குடும்பப் பிரிவு ஏற்படுகின்றது, உறவினர்களிடையே உள்ள அன்னியோன்னியம் குறைவடைகின்றது, குழந்தைகளின் மூளைச் ஷெல்கள் பாதிப்படைகின்றன, மாணவர்களின் எழுத்தாற்றல் குறைவடைகின்றது, அவர்களுக்கு மந்த புத்தி ஏற்படுகின்றது, ஆண்கள் மதுவிற்கும் பெண்கள் வீண் பொழுதுபோக்கிற்கும் அடிமையாகின்றனர், பாடசாலை செல்லும் மாணவர்கள் லீவு நாட்களில் தொலைக்காட்சி நாடகங்களைப் பார்ப்பதால், விடுமுறை நிறைவு பெற்று மீண்டும் பாடசாலை செல்லும் போது உதாசீன தன்மை ஏற்படுகின்றது, சரியான உறக்கமில்லாமல் தொலைக்காட்சி நாடகங்களைப் பார்ப்பதால், அடிக்கடி கோபம், ஞாபக மறதி என்பன ஏற்படுகின்றன. பெற்றோர் தொலைக்காட்சி நாடகத்தில் கூடிய நேரத்தை செலவழிப்பதால் பிள்ளைகள் அன்பு இல்லாமல் பரிதவிக்கின்றார்கள் முதியவர்கள் தொடர்ச்சியாக மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் தொலைக்காட்சியைத் தினமும் பார்த்துக்கொண்டிருப்பதால், அவர்களின் – இதயம் பாதிப்படைவதுடன், அதிகாலையில் துயில் எழவும் சங்கடப்படுகின்றனர் மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றனர். என்றெல்லாம் எப்பொழுதோ அவன் மேடையில் பேசிய நினைவுகள் நிழலாடுகின்றன. மெதுவாக நினைவுகளிலிருந்து விடுதலையாகி, "இந்த வீட்டில் என்றைக்காவது ஒரு நாள் இந்த தொலைக்காட்சி நாடகத்தினாலே ஏதோ நடக்கப் போகுது. எனக்குச் சாப்பாடும் வேணாம் ஒன்றும் வேணாம் நான் கடையில் சாப்பிடுகின்றேன் வீட்டில் எந்த நேரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம்தான்..." – புறுபுறுத்தவாறு மோட்டார் சைக்கிளில் ஏறி பதற்றத்துடன், ஜமனைத் தேடிப் புறப்பட்டவன் போல பறந்து சென்றான். மனைவியையும் மாமியையும் நினைக்கும் போது அவனுக்கு நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சாந்தம் என்ற நவ ரசனைகளும் ஒருங்கே தோன்றுகின்றன. ஒரு மனிதன் சவால்களின் போது வெளிக்காட்டு பிரதிபலிப்பே மன அழுத்தம். இன்று இவ்வாறான மன அழுத்தங்களினால், எத்தனையோ அகால மரணங்கள் நிறைவேறியிருக்கின்றன. எத்தனையோ பிஞ்சு உள்ளங்கள் அந்தரத்தில் பரிதவிக்கின்றன. இன்றைய உலகம் அடிப்படைத்தேவை, அத்தியாவசியத்தேவை, பொதுத்தேவை, பரம்பரைத்தேவை, ஆடம்பரத்தேவை என்ற அடிப்படையில் வாழாமல் ஆடம்பரத் தேவையை முதன்மை படுத்தி வாழ்வதால், மனிதன் எதற்காக சாகின்றோம் என்று தெரியாமல் சாகின்றான்.

சிரிப்புச் சப்தம் ஓயவில்லை. கணவனைத் துடைப்பக் கட்டையால் அடிக்கும் காட்சியில் இருவரும் ஊறித் திளைத்துப் போய் நின்றார்கள் t.v. க்கும் அவர்களுக்கும் இடையில் இருந்த குழந்தை, tv.. யின் மீதும் இவர்கள் மீதும் வெறுப்புக் கொண்டதைப் போல கண்ணயர்ந்து ஆழ்ந்த உறக்கமாகிவிட்டது.

"அம்மா...அம்மா...அம்மா...அம்மா..." – மதிபனின் குரல் சிட்டுக்குருவி கீச்சீடும் ஒலி போன்று படலையடியில் ஒலிக்கின்றது. வீதியால் சென்றவர்கள் எமக்கு ஏன் வீண் வேலை என்று எண்ணி கண்டும் காணாத மாதிரி சென்றார்கள்.

வெளியில் ஆளில்லாமல், "உள்ளே வாடா கொலசிப் எக்சாம் றிசேல்ஸ் வந்திருச்சா, கொண்டு வா பார்ப்பம் நீ பாஸ் பண்ணி விட்டாயா?' – அம்மம்மாவின் அரவம் மட்டுமே சிறுவனின் காதுகளில் அரைகுறையாக விழுந்தது.

"அம்மா ...அம்மா ...அம்மா ...அ...ம்...மா...அம்மா ...அ...ம்...மா...ஆ.......கெ...தி...யா...வ ...ங்...கோ ..."

t.v.யின் சப்தம் கூடுகின்றது. "நீ இப்படி ஏழையாக இருந்தா முதல்ல சொல்லியிருக்க வேண்டியது தானே என்ர வாழ்க்கையை வீணாக்கிப் போட்டாய். நான் எப்படி இருந்தனே!!!? அப்படியே விட்டுவிட்டு எனக்கிட்ட வாங்கின காசையும் என்ர அம்மாகிட்ட வாங்கின காசையும் பொருட்களையும் தந்துவிட்டு, எனக்கும் நஷ்ட ஈடு தந்துட்டு, உன்ர பாட்டுக்கு போ. இல்லாட்டி நான் நல்ல லோயரிட்ட போய் உனக்கெதிரா, கொடுமைக்கார – குடிகார – புருஷன் என்று டைவோஸ்•க்கு வழக்குப் போடுவன்" – வினோதினி தொலைக்காட்சித் திரையில் பேய்த்தாண்டவம் ஆடுகின்றாள்.

'அதுதான் சரியான பெண்' – பக்க வாத்தியம் பாடினாள், அவனது மாமி. "டேய் நீ செய்யிறதை செய் நான், என்ன பொய்யா சொல்லிப்போட்டன்?, உன்ர அம்மாவும் நீயும் கதைத்த கதை கொஞ்சமா. என்னை என்ன மடையன் என்று, நினைத்துக் கொண்டாயா?. மனிதனை முதல்ல மனிதனாய் மதிக்க வேண்டும்..."

'நீங்கள் அனைவரும் கேட்டு வாங்க வேண்டிய சோப் மேனி மினுமினுக்க பாவிக்க வேண்டிய சோப்... சந்தன சோப்...' – விளம்பரத்தோடு, தொலைக்காட்சியின் திரையில் எழுத்தில் விழுகின்றது விளம்பர இடைவேளைக்குப் பிறகு வசந்தம் தொடரும் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமியார் எழுந்து குசினிக்குள் சென்றார். அவனது மனைவி சாப்பாட்டுக் கோப்பையைக் கழுவுவதற்கு வெளியே வந்தாள். வீட்டுப் படலையடியில் சனக்கூட்டம் கூட்டத்தின் மத்தியில் எதிர்காலக் கனவுகளுடன் உயிருக்குப் போராடுகின்றான், மதிபன்.

அங்கு வந்த ஆடவர்கள் சிலர் படலையிலிருந்த விசப்பாம்பை அடித்து இழுக்கின்றனர்.

அவனது மனைவி மதிபனை நோக்கி ஓடினாள். சிறுவனின் வலக்கரத்தில் கிடந்த கடதாசியை எடுத்து விரித்துப் பார்த்தாள். அவளின் கண்ணீர்த்துளிகளினால், மகனின் முகமும் கடதாசியும் நனைகின்றன. தாயிடம் ஏதோ சொல்ல எத்தனிக்கின்றான் அவனால் முடியவில்லை.

நூற்றி ஐம்பது புள்ளிகளைப் பெற்று புலமைப் பரீட்சையில் மதிபன் சித்தியடைந்துள்ளான், என ஆசிரியரின் கையெழுத்துடன் கடிதம் பதில் நல்கியது.

"அம்மா ...அம்மா ...அம்மா ..."

அம்புலன்ஸ் வண்டி விரைந்து வந்தது. சனக்கூட்டம் கலைந்தது. மேகக் கூட்டங்கள் ஓடின. அவரவர் தங்கள் கடமைகளில் ஈடுபடுகின்றனர்.

கோபத்துடன் சென்ற அவன் கோபம் தணியவே வீடு நோக்கி வருகின்றான்.

'வசந்தம் தொடரும்...' – தொலைக்காட்சியின் சப்தம் அவனது காதுகளைத் துளைக்கின்றது. அதைப் பார்ப்பதற்கு அங்கு எவருமில்லை.

அவனது, மகள் விழித்து வாஞ்சையுடன் அவனைப் பர்க்கின்றாள். அங்கே இருவரைத் தவிர தற்காலிகமாக எந்த மனிதனும் இல்லை. அவன் பற்றுடன் தனது மகளை இரு கரங்களாலும் பற்றி கட்டி அணைக்கின்றான். அப்போது அவனது சட்டைப்பைக்குள் இருந்த கைத்தொலைபேசி அலறுகின்றது. தொலைக்காட்சியின் சப்தத்தினால், அலறும் சப்தம் வெளிவரவில்லை.

"மகளே,.... இப்ப அண்ணா பாடசாலையில் இருந்து வந்திருவான். நீ அவனோட விளையாடலாம். நீயும் அவன மாதிரி நல்ல படிக்கணும்" – மகள் மெல்லிய உதடுகளினால், புன்னகித்தாள். அவன் கைகளில் மகளுடன் படலையை நோக்கி நகர்கின்றான். முற்றத்தில் நின்ற தென்னை தருவிலிருந்து அவர்கள் அருகில் ஒரு தேங்காய் விழுகின்றது. பிள்ளை திடுக்கிடுகின்றது தந்தையை இறுகப் பற்றுகின்றது. அவனது மனம் வலுப்பெறுகின்றது.

படலையின் முன்னால், 'வைற்கவுஸ் கார்' நிற்கின்றது.

காரைக் கண்டதும் தன்னை மறந்து, "எ...கே...எ...கே...எ..." – பிள்ளை சிரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீடு விற்பனைக்கில்லை



**திருமதி ஜனதா ஜோர்ச்**
ஓய்வு நிலை ஆசிரியர்

*"வீடு விற்பனைக்கில்லை" என்ற இச் சிறுகதை வெறும் கற்பனையல்ல வீட விற்கப் புறப்பட்டதில் எனக்குக் கிடைத்த கசப்பான அனுபவங்கை வயோதிபர் ஒருவரின் வாயிலாகத் தந்திருக்கிறேன்.*

அன்று ஞாயிற்றுக்கிழமை, அன்றைய தினம் தினசரிப் பத்திரிகையொன்றின் வார இதழில் மூன்றாவது தடவையாகவும் "வீடு விற்பனைக்கு" என்று விளம்பரத்தைக் கொடுத்து விட்டு முற்றத்தின் வேப்ப மர நிழலில் காலை எட்டு மணியளவில் இருந்து இதோ பத்து மணி வரை நான் உட்காந்திருக்கின்றேன். இன்று விடுமுறை நாளென்பதால் வீட்டில் குடும்பத்தவர்களுக்கு உதவி ஒத்தாசைகள் புரிவது எனது வழக்கம். ஆனால் இன்று எதிலும் மனம் ஓடவில்லை. தொலைபேசி அழைப்புக்களை எதிர்பார்த்துக் கொண்டு இப்படி உட்கார்ந்திருக்கின்றேன். இடையில் பத்திரிகையில் அன்று வெளியான எனது விளம்பரத்தையும் அடிக்கடி பார்த்துக் கொள்கின்றேன். "எவர் கண்ணிலும் என் விளம்பரம் புலப்படவில்லையோ" அல்லது எவருக்கும் வீடு வாங்கும் தேவை இருக்கவில்லையோ என் மனம் பலவாறு நினைத்து அங்கலாய்க்கிறது.

மதியம் பன்னிரண்டு மணியைக் கடந்து கொண்டிருக்கிறது. இது வரை ஐந்து ஆறு தொலைபேசி அழைப்புக்கள் வந்து விட்டன. இவற்றில் வீடு வாங்குவதில் ஆர்வப்பட்டு பேசியவர்கள் ஒரு சிலர் தான். ஆனால் வீட்டை வாங்குவதாக பாசாங்கு செய்து அநாவசியமானவற்றை எல்லாம் பேசி எனது நேரத்தையும் தமது நேரத்தையும் விரயம் செய்தவர்கள் பலர். இலகுவாக ஒருவரின் தொலைபேசி இலக்கம் கிடைத்து விட்டால் சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷமிகளுக்கு அந்த தொலைபேசி இலக்கத்தவருக்கு தொடர்பு ஏற்படுத்தி விஷமத்தனம் செய்வது ஒன்றும் இக்காலத்தில் புதிய விடயமல்ல.

முன்னர் இரு தடவைகளிலும் விளம்பரம் கொடுத்த போது எனக்கு ஏற்பட்ட பல கசப்பான அனுபவங்கள் இது விடயத்தில் எனக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தன. இதனால் கொஞ்சம் மனம் சோர்ந்திருந்த நான் “தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் ...... போல மீண்டும் மூன்றாம் தடவையாகவும் முயற்சி செய்து பார்ப்போம் என்று சிறிது நம்பிக்கையுடன் இந்த முயற்சியில் இறங்கியிருக்கிறேன்.

ஒரு தொலைபேசி அழைப்பு. . .

“வீடு விற்பனைக்கு எண்டு விளம்பரம் போட்டிருக்கிறியள் வீட்டை வந்து பார்க்கப் போறம்; வீடு எவ்விடத்தில் இருக்கெண்டு குறிப்பாகச் சொல்லுங்கோ ....”

“நீர் பொஸ்கோ பள்ளிக்கூடப் பக்கம் இருந்தோ வாறீர்”

“இல்ல நாவலர் றோட்டுப் பக்கத்தால வாறன்”

“சரி அப்ப நாவலர் றோட்டால வந்து பாப்பையா கடைச்சந்தி வரும். அதில மருதடி வீதிக்குரிய பெயர் பலகை இருக்கு. அதால திரும்பி நேராக வர ஒரு வைரவர் கோயில் வலப்பக்கத்தில் வரும்; அதையும் தாண்டி வரும் இரண்டாவது ஒழுங்கையில் வாங்கோ”

“சரி ஒழுங்கையில நில்லுங்கோ இப்ப வாறம்”

வீட்டைக் குறிப்புக் காட்டுவதற்காக ஒழுங்கை தொடங்கும் தெரு முகப்பில் கால் கடுக்க ஒரு அரை மணி நேரம் நிற்கின்றேன். எவரும் வரவில்லை. தெருவின் அந்தப் பக்கம், இந்தப் பக்கமென நோட்டம் விட்டதில் என் கழுத்தில் தான் “சுள் சுள்” என வலி எடுத்தது. பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகிறது என்பது முதுமொழி. இதில் பிள்ளைக்கு சுண்டெலியின் வலி பற்றி எதுவும் உணர முடியாத வயது. ஆனால் இப்படி வலிந்து அடுத்தவனின் துன்பத்தில் இன்பம் காணும் பெரிய மனிசர் பற்றி என்னத்தைச் சொல்வது? அடுத்தவன் துன்பத்தில் குளிர் காய்வதில் இவர்களுக்கு ஏன் அப்படி ஒரு மகிழ்ச்சி? தலையிடியும் காய்ச்சலும் தனக்கு தனக்கென்று வரும் போது எல்லாம் தானாகப் புரிந்து விடும்

மற்றொரு தொலைபேசி அழைப்பு

“நாங்கள் வீடு வாங்கப் போறம்

“சரி வாருங்கோ; வீட்டைப் பாருங்கோ

“இல்லை வீட்டின்ர விலையை ஒருக்காச் சொன்னியள் எண்டா எங்களுக்கு கட்டுபடியாகுமோ எண்டு பார்க்கலாம்”

“சரி நீங்கள் நேரில வாங்கோ பேசுவம்”

இப்போது மறு முனையில் தொடர் துண்டிக்கப்படுகிறது.

விளம்பரத்தில் வீட்டின் முகவரி உட்பட வீதி மற்றும் முக்கியமான சுற்றுச்சூழல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங்களைக் குறிப்பிட்டு இறுதியில் விலை நேரில் பேசி தீர்க்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தாலும் கூட ஒரே ஒரு தொலைபேசி அழைப்பிலேயே பேட்டி காண்பது போல முழு விவரத்தையும் கேட்டு இறுதியில் விலையையும் அல்லவா கேட்டு விடுகிறார்கள் பேசாமல் வீடு விற்பனைக்கான நேர்காணல் என்று விளம்பரம் போட்டு அதில நேர்காணல் நடைபெறும் நாள் நேரம் இடம் என்பவற்றையும் போட்டு விடலாம் போலும் தொழில் வாய்ப்புக்கான நேர்முகத் தேர்வு என்பது போல இதுவும் ஒரு வித்தியாசமான விளம்பரமாக இருக்கும்.

தொலைபேசியில் முழு விபரமும் கேட்பவர்களுக்கு தாங்கள் வாழ்நாள் முழுவதும் வாழப் போகும் மனையை ஒரு முறை வந்து பாரடவையிடக் கூடவா முடியாது? ஏதோ சந்தையில் மீன், காய்கறி வாங்குவது பொல மீனைக் கூட தொட்டு பார்த்தும் காய்கறிகளைத் தொட்டும் முறித்தும் பார்த்துத்தானே வாங்குகிறார்கள் சொந்த இடங்களை விட்டு ஏதிலிகளாக இடம் பெயர்ந்து ஒரு சிறிய கொட்டிலில் பத்து பதினைந்து பேரென அவல வாழ்வு வாழும் போது ஊரில் தமது வீடு வாசல்களை நினைந்து ஏங்கி உருகிய அந்த நாட்களை இவர்கள் எப்படி மறந்தார்கள்? வாழ்வதற்கு ஒரு வீடு என்பது இவர்களுக்கு இப்போது அதனை மலினமாகப் போய் விட்டதா?

மற்றொரு அழைப்பு

"ஹலோ ......... வீடு பார்க்க இப்ப வர்றம்

"இப்ப எங்கை நிக்கிறியள்"

"நான் இப்ப றக்கா றோட் சந்தியில நிக்கிறன்"

"எப்படி வாறது? எவிடத்தில் வீடு?"

ஆ .... வீட்டுக்குக் கிட்டத்தான் நிக்கிறீர்

அப்பிடியே மருடிப் பிள்ளையார் கோயிலடிக்கு வாரும்

"சரி வந்திட்டன்"

அதில நிண்டு உங்கட இடது கைப் பக்கம் வடக்கால திரும்பிப் பாரும்.

அதில மருதடி வீதி என்டு போட்டுப் போட்டு இருக்கு அதால நேரா வந்தால் .....

"சரி நேர வாறன்

"சரி கிட்ட வந்திட்டீர் நான் எங்கட வீட்டு கேற்றுக்க நிக்கிறன் நீர் என்னத்தில் வாறீர்?

"மோட்டார் பைக்கில"

சரி நீர் அப்பிடியே வந்தால் உமது இடப்பக்கம் வாற முதலாவது ஒழுங்கையில திரும்பிப்பாரும் நான் வாசல்ல தான் நிக்கிறன்"

சிறிது நேரம் தொலைபேசியில் பேசுபவர் மௌனமானார்

"என்ன வந்திட்டீரா? நான் இதில தான் நிக்கிறன்

முகப்புக்கு வரட்டா?

"இல்ல இப்ப ஒரு வேலை கிடக்கு பின்னேரம் வாறன்

"இப்ப வந்து நிக்கிறன் என்டீர்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்ல அவசரமா ஒரு இடத்துக்குப் போகவேனும் அது தான்"

"சரி பின்னேரம் எத்தின மணிக்கு வருவீர்? இல்ல நானும் ஒரு இடத்துக்கு போகவேணும்

"ஒரு நாலு மணி போல

மறுமுனையில் தொடர்பு நிறுத்தப்படுகிறது"

இப்போது பேசிய அந்த பெண்ணின் குரல் எனக்கு மிகவும் பரீட்சயமான ஒருவரின் குரல் போல் எனக்குப் பட்டது. உடனே பேசியவரின் தொலைபேசி எண்ணைப் பார்க்கின்றேன் ஓ ... அது ஒரு லான் லைன் தொலைபேசி இந்த தொலைபேசியில் இருந்து ஒருவர் தெருவில் வந்து கொண்டிருக்கிறேன். எனப் பேச முடியுமா? உடனே என் சந்தேகத்தைத் தீர்ப்பதற்கு அதே தொலைபேசியுடன் தொடர்பெடுக்கின்றேன்.

"இப்ப வீடு பார்க்க எண்டு என்னோடு கதைத்தது நீர்தானே?"

" ஓம் .. ஓம் அது தானே பின்னேரம் நாலு மணிக்கு வாறன் எண்டனான்"

பிள்ள திலகம் நீர் இப்ப தானே ஆறு மாதத்துக்கு முதல் புதுவீடு கட்டிக் குடிபுகுந்தனீர் நானும் குடும்பத்தோட வந்தனான். நீரோ எங்கட வீட்டை வாங்க போறீர்? நீர் என்னோட பகிடி விடுறீர் என்ன?" சட்டென்று மறுமுனையில் தொடர்பு துண்டிக்கப்படுகிறது.

அப்பெண் எனது குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமான உறவினர்.

"ம் பெரிய யானை ஒன்று தவறி சேற்றில் விழுந்து விட்டால் காகம் போன்ற சிறிய பிராணிகள் கூட அதன் முதுகில் உட்காந்து சீண்டிப் பார்க்குமாம்"

தான் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு வீட்டை ஒருவன் விற்க முற்படுகிறானென்றால் அதற்கு இரண்டு காரணங்கள் தான் இருக்க முடியும் ஒன்று அவன் தனது குடும்பத்தோடு வெளிநாடு செல்ல விருப்பம் மற்றொன்று பலவித காரணங்களால் ஏற்பட்ட கடன் சுமை இதில் எனது பிரச்சினை இரண்டாவதாகும். பிள்ளைகளின் படிப்பு, திருமணம் என்று ஒருவாறு சிறிய கடன்களுடன் அவற்றை ஒப்பேற்றி விட்டு நான் சிறிது ஆறுதல் மூச்சு விட்ட நேரம் பெரிய மாரடைப்பு ஒன்று என்னைத் தாக்கியது. சாவின் விளிம்பை நான் தொட்டு நின்ற அந்த வேளையில் "பைப்பாஸ்" இருதய அறுவை சிகிச்சை செய்தால் தான் உயிர் பிழைக்க ஊருக்கு வந்து சேர்ந்தேன். அந்த வேளை பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக நான் இப்போது விற்க இருக்கும் வீட்டின் அப்போதைய உரிமையாளன் வந்து "வீட்டை விற்கப் போகின்றேன்" உடனே அதனை வாங்க வேண்டும். இல்லையேல் தான் யாருக்காவது விற்கப் போவதாகவும், என்னை அந்த நோயான நிலையிலும் வீட்டால் எழுப்பிச் செல்லும் படியும் பிடிவாதமாக நின்றான்.

நான் நோய் வாய்ப்பட்டிருந்த அந்த நிலையில் திடீரென வேறு இடம் தேடும் சூழ்நிலையில்லை மனதில் ஒரு வைராக்கியம்; வீட்டை வாங்கி விட்டேன். ஒரு சில மாதங்களுக்குள் நான் மீள முடியாத அளவு கடனாளியாக்கப்பட்டேன். எனக்கு ஏற்பட்ட இந்தச் சிக்கலான நெருக்கடியான நிலைமை என் எதிரிக்கும் கூட வரக்கூடாது. இந்தச் சிக்கலான நிலைமைகளை எனது உறவுகளோ, அயலவரோ, நண்பர்களோ அறியாமலும் இல்லை. நான் ஓரளவு வசதியோடு வாழ்கையில் அவர்களுக்குத் தேவைப்பட்ட நேரங்களில் தோள் கொடுத்து உதவியிருந்தேன். தருணத்தில் நல்ல ஆலோசகனாகவும் வழிகாட்டியாகவும் இருந்திருக்கின்றேன். ஆனால் எனது இந்த அவலமான நிலைமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவர்களால் எந்த உதவியும் கிடைக்க இல்லை. ஆறுதல் வார்த்தைதானும் கூறவும் இல்லை. இன்று அந்த உறவுகள் எல்லாம் புதுப்பணத்தில் புரண்டு கொண்டிருக்கின்றார்கள். ஏறி வந்த ஏணியை எட்டி உதைப்பதும் செய்ந்நன்றி மறப்பதும் இன்றைய சமுதாயத்துக்கு கற்றுக் கொடுக்க வேண்டிய ஒன்றல்லவே.

எனது வீட்டைத் தாண்டி ஒரு கார் வேகத்தை குறைத்து மெதுவாகச் செல்கிறது. சிறிது வேளையில் "ஹலோ" நாங்கள் வீடு பார்க்க வந்து உங்கட ஒழுங்கையில தான் நிக்கிறம் நீங்கள் உங்கட கேற்றுக்கு வெளியில வந்தால் நாங்கள் அடையாளம் காணுவம். நான் கேற் பக்கம் விரைந்து வாசலுக்கு வருகிறேன். எனது வீட்டு வாசலுக்குச் சற்று தூரத்தில் காரில் வந்த அவர்கள் ஒரு நடுத்தர வயதுடையவருடன் பேசிக் கொண்டிருப்பது தெரிகிறது.

"சீ .. இவர்கள் வீடு வாங்கப் போவதில்லை" என்ற முடிவுக்கு நான் வந்தேன். ஏனெனில் அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் நபர் இராமாயணத்தில் கூனி போலவும் மகாபாரதத்தில் சகுனி போலவும் அத்தனை நல்லவர். அவர் எனது அயலவர் தான் ஆனால் நல்ல காரியங்களைக் கை கூடாமல் தடுத்து வைப்பதில் மிகவும் கைகாரர் தானும் தன் குடும்பமும் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற "நல்ல மனம்" கொண்டவர்.

வதந்திகள் கிளப்பி விடுவதிலும், அடுத்தவர் பற்றி அவதூறு பேசுவதிலும் அது இளம் பெண்கள் என்றால் என்ன? வாலிபர்கள் என்றால் என்ன? வயோதிபர்கள் என்றால் என்ன? வேறுபாடு இல்லாமல் அனைவரும் இவர் பல்லுக்குப் பதமானவர்கள் தான்.

காரில் வந்தவர்கள் ஒரு பெண்மணி உட்பட நால்வர் இப்போது வீடு முழுவதும் பார்த்தாகி விட்டது. அவர்களுக்கு வீடு பிடித்துப் போய் விட்ட என்பதை அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ளும் பரிபாஷைகள் மூலம் புரிந்து கொண்டேன். இப்போது அவர்களது வினாக்களுக்கு நான் விடையளிக்க வேண்டிய தருணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதென்ன பாருங்கோ கிணறு முத்தத்தில் இருக்கு? வாஸ்த்து சாத்திர முறைப்படி (வீடு மைவிடம் பற்றிக் கூறும் சாஸ்திர நூல்) கிணறு குசினிப்பக்கம் எல்லோ இருக்க வேணும்.

நான் பாருங்கோ உதுகளை நம்புறேல்ல; நல்ல மனம் இருந்தால் எங்கையும் வாழலாமெண்டு நினைக்கிறவன். எண்டாலும் பாருங்கோ, கிணறு வெட்டுக் கிணறாய் இருக்க வேணும் அது வடக்கு, வடகிழக்கு, வடமேற்கில அமையுறது நல்லம் எண்டு அந்த வாஸ்த்து சொல்லுதெண்டு நானும் கொஞ்சம் அறிஞ்சனான் வேறென்ன கிணறு வடமேற்கு மூலையில தானே இருக்கு

"அதெல்லாம் சரி ஆனா குசினி கிணத்துப் பக்கம் இல்லையே! வேறு பக்கமெல்லோ இருக்கு.

"அது தான் குசினிக்கு பக்கத்தில பெரிய நீர்க்குழாயும் தண்ணீர்த் தாங்கியும் இருக்கே. தண்ணி பிழக்கிற சத்தம் தாராளமாய் குசினிக்குள்ள கேக்கும் தானே. அப்பிடித் தானே வாஸ்துவும் சொல்லுது. மற்றது கிணத்தைக் கண்டபடி அங்க இஞ்சயெண்டு தூக்கி வைக்கவும் முடியாது பாருங்கோ .....

"ஐயோ .. நீங்கள் முந்தி வீட்ட வாங்கேக்க இதெல்லாம் பார்த்துத்தான் வாங்கியிருக்க வேணும். இப்ப பாருங்கோ அது பாக்காததால தான் கடனில வீட்டை விக்கிற நிலைக்கு வந்து நிக்கிறியள்.

இப்போது அவர்கள் பெச்சு என்னைக் கேலி செய்வது போலவும் எனது இயலாமையைச் குத்திக் காட்டுவது போலவும் இருந்தது.

"எனது தனிப்பட்ட பிரச்சினை பற்றி பேச இவர்கள் யார்? நான் விற்பவன் அவர்கள் வாங்குபவர்கள் இங்கே நடப்பது வியாபாரம் தான்" வந்த ஆத்திரத்தை கஷ்டப்பட்டு அடக்கி கொண்டேன்.

"அது சரி வீட்டை ஏன் விக்கிறியள்?

"இதென்ன கேள்வி காசுத்தேவைக்குத்தான்

அது தான் இப்ப சொன்னீங்களே கடனில் விக்கிறமெண்டு"

"இல்ல அதில ஒரு ஆள் சொன்னார் ....."

"அவர் இன்னும் கனக்கச் சொல்லியிருப்பாரே நீங்கள் எங்கட அயலட்டையெல்லாம் விளக்கமாயப் பேட்டி எடுத்துப் போட்டுத் தான் வந்திருக்கிறியள் போல உப்பிடியெண்டால் நீங்கள் வீடு வாங்க மாட்டியள்"

"இல்லை குறையாய் நினைக்காதையுங்கோ அவர் எங்களுக்குக் கொஞ்சம் பழக்கமானவர். அது தான் அவரோட பேச வேண்டியதாய்ப் போச்சு

"சரி ஐயா சுவாமி அறை கிழக்கு பாக்குது போல ஏன் கேக்கிறனென்டால் கிழக்கு பாக்கிற வீட்டால மச்சம், மாமிசம் புழங்கேலாது

"இல்ல மற்ற அறையள் தான் கிழக்கு பாக்குது சாமி அறை வடக்கில பாக்குது. இங்க சரியாப் பாருங்கோ அதனால நீங்கள் தாராளமாக ஆடு, மாட்டை என்ன மனிசரையும் வெட்டிச் சாப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதென்ன நீங்கள் இப்பிடிச் சொல்லுறியள்"

"பின்ன என்னத்தை நான் சொல்லுறது? சாமி அறை வாசல் எங்க பார்த்தா என்ன?

சாமியை நீங்கள் பார்த்தாச் சரி தானே அல்லது உங்களைச் சாமி பார்த்தா சரிதானே

சாமி அறை வாசலில நிண்டா அவரைக் கும்பிடப் போறியள்? சாமிக்குக் கிட்ட போவியள் தானே?"

வந்தவர்கள் தமக்குள் குசுகுசு என்று பேசிக் கொள்கிறார்கள். வினாக்கள் தொடர்கின்றன இப்போது பெண்மணி பேசுகிறார்

இதென்ன ஐயா, சாமி அறைப்பக்கத்தில அட்டாச் பாத்றூம்

"அது அப்பிடித்தான் இருக்கு ... இரண்டு அறையளுக்கு நடுவில பாத்றூம் அவ்வளவு தான் இதெல்லாத்தையும் குறையாக் கேக்கிறியளே தொண்ணூற்றைந்து பெரிய இடப் பெயர்வில நீங்கள் இலங்கையில தானே இருந்தனீங்கள்? அப்ப குளிக்கிறதுக்கும், மற்றத் தேவைகளுக்கும் எங்க போனனீங்கள்? அப்ப சாமியறை எண்ட ஒண்டு தான் இருந்ததோ? கோயிலுகளில் கூட சாமிகளை மறைச்சுக் கொண்டு சனங்கள் தானே இருந்ததுகள், அப்ப மனசில தானெ சாமியை நினைச்சு கும்பிட்டியள் கடவுள் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் தானே சொல்லினம் ஆனா இப்போது சாமி அறை அந்தப் பக்கம் இந்தப் பக்கம் எண்டு பேசுறியள்

"ஐயா கேட்டிறன் எண்டு குறை நினைக்காதையுங்கோ நீங்கள் கடவுள் நம்பிக்கை இல்லாதவரோ? நாத்திக வாதியோ?

"இல்ல, நான் கடவுள் இருந்தா இப்படித்தான் இருக்க வேண்டும் என் நம்புற யதார்த்தவாதி

"சரி ஐயா வீடு ஒண்டு வாங்கேக்க இப்பிடி வாஸ்துமுறை பலதையும் பார்த்துத்தானே வாங்க வேணும் அப்பத்தான் வீடும் நிலைக்கும்; அதில பிள்ளை குட்டியளும் சிறப்பாக வாழும்."

"முந்தி இந்த வீட்டு உரிமையாளர் சுத்த சைவம் வாஸ்து முறைப்படி பஞ்சபூதங்களின் ஆட்சி நிறைவாக இருக்கிற முறையில ஒரு சாஸ்திரியைக் கொண்டு இடமெடுத்தே வீட்டைக் கட்டினவர் அவர் குடும்பம் வெளிநாடு போகிற வரை இந்த வீட்டில சீரும் சிறப்புமாகத்தான் வாழ்ந்தார். எந்தக் குறையும் இருக்கேல்ல"

"இந்தா சொன்னியளே அவர் வெளிநாடு போட்டார் எண்டு இந்த வீட்டு குறைபாடுகள் தான் இந்த வீட்டில தொடர்ந்து அவரை வாழ விடேல்ல

"அவர் ஒண்டும் கெட்டு நொந்து வீட்டை விட்டுப் போகேல்ல போர்க்காலச் சூழலில இங்கு வாழ முடியாமல் தான் போனவர். போர்க்காலப் பாதிப்புக்கள் எல்லோருக்கும் பொதுவானவை தானே! அது சரி போர்க்காலத்தில வட பகுதியில எத்தின வீடுகள் தரை மட்டமாப் போனவை அந்த வீடுகள் எல்லாம் வாஸ்து முறைப்படி கட்டப்படாதவையோ?

"சரி ஐயா இந்த வீட்டில் கன திருத்தங்கள் செய்ய வேணும் முதலில் சாமி அறையை இடிச்சு மாத்திக்கட்ட வேணும், குசினியை மாத்தி கிணறுப் பக்கம் கட்ட வேணும், இதுகளுக்கே இரண்டு மூன்று லட்சம் செலவாகும். அதனால நீங்கள் விலையைக் கொஞ்சம் குறைச்சியள் எண்டா நாங்கள் இப்பவே பாதியைத் தந்து உறுதியை முடிப்பம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு எல்லாம் விளங்கி விட்டது வீடு அவர்களுக்கு பிடித்து விட்டது. ஆனால் அவர்கள் தவித்த முசல் அடிக்கப் பார்க்கிறார்கள் என்பது புரிந்தது.

"இல்லை பாருங்கோ விலையைக் கொஞ்சம் குறைக்க நான் தயார். ஆனால் இந்தக் குறைகளோடு வீட்டை நான் உங்களுக்குத் தரமாட்டேன். நீங்கள் சாமி அறையை மாத்துவியள் குசினியை மாத்துவியள் கிணற்றைத்தூக்கி அங்க இஞ்சையெண்டு வைப்பியள் உங்களுக்கு ரெடிமெட்வீடு சரிவராது காணி ஒன்றை வாங்கி, வாஸ்து முறையில் வீட்டைக் கட்டி நல்லாய் இருங்கோ நீங்கள் சொன்னபடி கடனால தான் வீடு விக்கிறன் கடன்காரன் வந்து என் தொண்டையைத் திருகிப் போட்டு போகட்டும் அல்லது ஏதோ வகையில நான் கடன் அடைப்பன். ஒரு கதவு மூடினால் இன்னொரு கதவு திறக்கும் தானே நீங்கள் போகலாம் என்றேன். சற்று ஆத்திரத்தோடு எனது ஏழ்மையைத் தங்களுக்கு சாதகமாக்க முனைந்த அவர்கள் அந்த முயற்சியில் தோற்றுப் போய் வெளியேறுகிறார்கள்.



நாங்கள் ஏழைகள் தான் ஆனால் தன்மானம் உள்ளவர்கள். பிச்சைக்காரர்கள் அல்லர். ஆக எனது இத்தனை வருட அனுபவத்தில் கூறுகிறேன். வாழ்ந்த வீட்டை விற்கப் புறப்படுபவர்களில் பலர் ஒரு காலத்தில் பிறரை நம்பி ஏமாந்தும், ஏமாற்றப்பட்டும் போன அப்பாவிகள் தான் இன்னும் எத்தனை பேர் எனது விளம்பரத்தைப் பார்த்து வந்து என்னையும் என் குடும்பத்தவரையும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சித் துன்பப்படுத்தப் போகிறார்களோ?

நான் விறு விறு என எழுகிறேன் எனது பென்சன் கேட்க நிற்கும் சைக்கிளில் ஏறுகிறேன் "என்னப்பா எங்க வெளிக்கிட்டுப் போறியள்? இன்னும் சாப்பிடவும் இல்லை? எனது மனைவியின் குரல் "பொறு வந்து சொல்லுறன்"

இப்போது அடுத்த ஞாயிறு வாரமலரின் விளம்பரப் பக்கத்தில் வீடு விற்பனைக்கில்லை என்ற விளம்பரம் வெளியாகத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

ஒஓ ஒஓ ஒஓ ஒஓ ஒஓ

**கலாபூஷண விருது**

[புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு]

- அருட்பணி. வின்சென்ற் பற்றிக் (அ.ம.தி) – 2021
- திருமதி இராஜேஸ்வரி செபஸ்ரியாம்பிள்ளை – 2022


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சவாலை பசுமைப்புரட்சியால் சமாளிப்போம்



**கலைஇலக்கிய ஜோதி. நசீரா அப்துல் அஸீஸ்,**
52, முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

**கி**ழக்கு வெளிக்கின்றது சூரியன் சிரித்துக் கொண்டே சூரியக்கதிர்களைப் பூமாதேவிக்கு போர்வையாக்குகின்ற வேளையிலே....

கடமையே கண் என வாழும் ஜாஸ்மின் தன் மகன் துயிலெழுமுன் முதல் நாளே வந்துள்ள சாப்பாட்டுப் பார்சல்களின் எண்ணிக்கைகளை சரி செய்து கொண்டிருந்தாள். அலாரத்தின் ஒலி யூசுப் காதில் நுழையவும் அவன் எழுந்ததும் எழாததுமாகத் தாயார்படுக்குமிடத்தைப் பார்க்கின்றான். அங்கே தாயார் இல்லை எனத் தெரிந்ததும் பாவம்! உம்மா! நான் நீங்க பாடுபடாதீங்க உம்மா, நான் உழைப்பதை வைத்தே காலத்தைக் கழிப்போமம்மா என்று கூறும் போது, இல்ல மகன் எங்க காலம் போன்ற வசந்தகாலம் இப்போ இல்லமகன். உங்க காலம் தேவைகள் பல வழிகளில் உள்ளது. உங்க உம்மா, அப்பாமார், வாப்பும்மா ஆகியோரையும் நாம் பார்க்க வேண்டிய கடமைக்காரர்களல்லவா! வாப்பா இருந்தால் பார்த்திருப்பார். அதுக்கு நமக்கு கொடுப்பனவில்லை என்று ஆறாகக் கண்ணீரைக் கொட்டித்தீர்ப்பார் என்பதால் அவள் செயலையேற்று மௌனமாகிவிட்டான்.

சிறுவயதில் தந்தையை இழந்த வலி தெரியாது மகனை வளர்த்து வரும் ஜாஸ்மினுக்கு அவனை நல்லொழுக்கமுள்ள பேணுதலான பிள்ளையாக வளர்த்து ஆளாக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேண்டும் என்ற வேணவாவே எப்பவும் அவள் ஞாபகத்தில் உதித்துக் கொண்டிருக்கும். இறைவா! என்பிள்ளையை நல்லொழுக்கசீலனாக ஆக்கி வைப்பாயாக, என்று எப்பவும் பிரார்த்திப்பாள். பார்சல்கள் அனைத்தையும் கூடையில் அடுக்கியபடியே மகன் சுருக்கா வாங்க நேரமாகுது என்றவளை, இதோ வந்துவிட்டேனம்மா! என்று அவசரமாக ஓடி வந்து கூடையை சைக்கிளில் வைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான். இவற்றை ஆர்டர் செய்தவர்களிடம் கொடுத்துவிட்டு, வீடு வந்து உண்டு உடுத்துக் கொண்டு கடைக்குச் செல்வது தான் வழக்கம். முதலாளிக்கு யூசுபை ரொம்ப ரொம்பப் பிடிக்கும். ஆனால் வழக்கத்துக்கு மாற்றமாக ஏதாவதானால் ஏசி ஏசியே கொன்றிடுவார். பொறுமையோடு போராடிப் போராடியே அவன் மௌனித்து தன் கடமையைச் செய்வான்.

ஏனோ! அன்றும் தான் ஏச்சுவாங்கக் கூடாது என்ற பதட்டத்துடன் சைக்கிள் பெடலை மிதித்த போது கால் சறுக்கி கீழே கிடந்த கல்மேல் மோதியதால் அப்படியே சைக்கிள் வீழ்ந்து விட்டது. நல்லவேளை சாப்பாட்டு கூடையை அழுங்குப்பிடியாக பற்றிக் கொண்டதால் தப்பிக் கொண்டது. சைக்கிளையும் உருட்டிக்கொண்டு ஓட்டமும் நடையுமாகச் சென்று பார்சல்கள் அனைத்தையும் ஒப்படைத்து விட்டு வீடு வந்து சேர்ந்தான்.

ஏன் மகன்! களைச்சுப்போய் வியர்க்க விறுவிறுக்க வருகின்றீர்கள் ஏதேனும் பிரச்சினையா?என்று வினவிய தாயை இல்லம்மா கொஞ்சம் சைக்கிள் பெடல் தடுமாற வச்சிட்டுது. அல்லாஹ் காப்பாத்திட்டாம்மா! பெரிசாக ஒன்றுமில்ல என்றவாறு சேட்டைக் கழற்றியவாறு குளிப்பதற்குத் தயாரானான்.

ஜாஸ்மினும் அவசரமாக அவனுக்குரிய உணவை மேசையில் எடுத்து வைத்துவிட்டு தானும் உண்பதற்காக மகன் வரவை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தாள். யூசுபும் அவசரம் அவசரமாக தாயையே ஊட்டி விடும்படி கூறி உண்டுவிட்டு முதலாளியின் கேலிப் பேச்சுக்கும் கிண்டலுக்கும் ஆளாவதை எண்ணிக் கொண்டு புறப்படத் தயாரானான்.

கடிகாரமுட்கள் யாருடைய துன்பதுயரங்களும் புரியாமல் மெதுவாக சுழன்று சுழன்று நேரமதைக் கரைந்தோடச் செய்துகொண்டிருந்தது. உம்மா! போயிட்டுவாரன்! என்ற ஒலியைக் கேட்டவள் “அல்லாட காவல்” போய்வாங்க! என விடைபகர்ந்தாள்.

ஓட்டமும் நடையுமாக யாழ்/ஒஸ்மானியா கல்லூரி வீதியிலிருந்து ஸ்ரீனிவாசன் ஒழுங்கை வழியாக பஜாரை சென்றடைந்தான். இடையில் வந்த சன நெரிச்சல்களோ,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனச்சத்தங்களோ இடையில் உண்டான சிரமங்களோ எதையும் அவன் கண்டு கொள்ளவில்லை. முதலாளியின் முகம் கோபத்துடன் தன்னைப் பார்ப்பதாகவே அவன் முன் நின்று நிழலாடியது. மௌனத்தின் சப்தம் வெளியே கேட்காமல் தனக்குள்ளே பேசிக் கொண்டான். இத்தனைக்கும் அந்தக்கடை பெரியகடை என்றொன்றில்லை "நஜா கபே" என்றொரு ஹோட்டலே! வருபவரை வரவேற்று உபசரித்து உணவு பரிமாறுவதுதான் யூசுபினுடைய வேலை.

"ஆ...ஆ... வாங்க...ராஜா... வாங்க... ஏன் இன்னும் கொஞ்ச நேரம் ஆறஆமர இருந்து அழகா சுணங்கி வரலாமே! இவ்வளவு நேரத்தோட வந்து ஏன் கஷ்டப்படுறீங்க" என்ற முதலாளி நஜாதின் கேலிப்பேச்சு யூசுபை வரவேற்றபோது அவன் அதை எதையும் பொருட்படுத்தாது இதை விடக்கடும் வார்த்தைகளும் சுடுசொற்களும் கேலியும் கிண்டலும் தந்த ரணத்தின் கடுமையை விட இது பெரிதாகவில்லையே என்று எண்ணியவனாக தன் வேலையைத் தொடர்ந்தான். இல்ல முதலாளி சைக்கிள் உடைஞ்சுவிட்டது நடந்து வர சுணங்கிவிட்டது என்று கூறியவாறு! "சரி சரி காரணத்த சொல்றதுல எந்தக்குறைச்சலுமில்ல போங்க .. போய் வேலையை செய்யுங்க... என்றார்."

ஐந்து வருடங்களாக இக்கடையே தஞ்சம் என்று அவன் இருந்தாலும் அவனுக்கு ஒளிவிளக்காகி அவன் வாழ்க்கையை வளப்படுத்தி வைக்க ஒருநாளும் அவர் எண்ணியதில்லை. தன் தாயை சொந்த வீட்டில் வாழ வைத்து பார்க்க வேண்டும் என்ற ஆசையில் மலிவாக வந்த காணியை வாங்க கடனாக காசு கேட்ட போதுகூட "கடை லொஸ்ட்ல போகுது அதனால இருப்பில காசு இல்ல" என்று கையை விரித்தார். கொத்தடிமையாக தன்னை நடத்தும் முதலாளியை விட்டுப்பிரிய அவர் நல்லமனம் இடம் தரவில்லை. யூசுபின் திறமையை நன்கு அறிந்த நஜாத் வரலாற்றில் ஒரு ஏடாக, தன்கடைக்கோர் தூணாக அவனை அறிந்திருந்தும் தனக்கு முதுகெலும்பாயுள்ள அவனின் வாழ்க்கையை ஒளி வீசவிடாது கஞ்சத்தனம் செய்வது அவரின் கல்நெஞ்சத்தைப் புடம் போட்டுக் காட்டுவதாகவேயுள்ளது.

அன்று விடுமுறை நாளாகையால் சனக்கூட்டம் கடையில் அலைமோதிக் கொண்டிருந்தது. யூசுபுக்காகவே அக்கடையை அணுகுவோர் ஏராளம். அவனின் அன்பான ஆதரிப்பு அவர்களை ஆக்கிரமித்து அங்கு அவர்களை வரவைத்தது. ஒவ்வொருவரின் சுவையறிந்து அவன் பக்குவமாய் பரிமாறுவான். பாசத்துடன் பேசுவான். அவர்களும் விடைபெறும் போது சந்தோஷமாக அவனுக்கேதேனும் பணம் கொடுத்தாலும் பாசத்தோடு பல காரணம் கூறி பக்குவமாகத் தடுத்திடுவான். இப்படியாக அன்று அவன் ஓடியாடி வேலையில் இருக்கும் போது அவனுடைய டெலிபோன் மணி அலறியது. உடனே சட்டைப் பையிலிருந்து அந்தச் சின்னப்போனை எடுத்துத் தட்டிய போது... அது அடுத்த வீட்டு ராதா அக்காவின் குரலாக இருக்கவே சற்றுத் தடுமாறியவனாக " ராதாக்கா.. எங்கே உம்மா.. நீங்க பேசுறீங்க என்ற போது....."

"இல்ல தம்பி .. உங்க அம்மா குசினியில் வேலை செய்து கொண்டிருக்கும் போது மயங்கி விழுந்து விட்டார். நானும் பாலா அண்ணாவும் ஆஸ்பத்திரிக்கு அழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தோம் நான் அம்மாவுடன் தான் நிற்கிறேன் என்று கூறிமுடிக்க முன்பே இதோ வாரேன் அக்கா... என்றவாறு போட்டது போட்ட படி, வைத்தது வைத்தபடி எல்லாமே சூனியமான நிலையில் யாரிடம் என்ன கூறுவதென்று புரியாது ஆஸ்பத்திரியைச் சென்றடைந்தவன் உடனே 4ஆம் வாட்டினுள் சென்றபோது " அவனைக் கண்ட தாயார் மெல்லக் கண்களைத் திறந்து அவனைப் பார்த்துச் சிரித்தாள்" நிம்மதி மூச்சு சுதந்திரமாகப் பெருமூச்சாக வர சந்தோஷத்துடன் ராதாக்கா என்ன சொன்னாங்க டாக்டர் என்று கேட்ட போது "பயப்படாதீங்க தம்பி கொஞ்சம் பிரஸர் கூடியுள்ளது. வேலைப்பழுவில் குளிசை குடிக்கத் தவறியுள்ளார் என்றாள். என்னம்மா சுவர் இருந்தாத்தான் சித்திரம் வரையலாம் தெரியும் தானே! உங்களை நீங்க கவனிச்ச பிறகுதான் மற்றவேலை. சரியாம்மா என்று தலையைத் தடவி கட்டி அணைத்து முத்தமிட்டான். இதற்கிடையே சுற்றியுள்ள அயலார் கீதா, வசந்தா, பேபி, சிந்து, பபா, மம்மி என்று எல்லோருமே வந்து இவர்கள் எப்படி இன, மத, பேதமின்றி ஒன்றித்து வாழ்கிறார்கள் என்பதை பறைசாற்றிக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்து விடைபெற்று அவன் கடைவாசலில் கால் வைத்தபோது கதிரையில் அமர்ந்திருந்த முதலாளி "ம்ஹு•ம்... எங்க வாரிங்க... அப்படியே திரும்பிப்போங்க! என்று கோபக்கனல் கண்களில் கொப்பளிக்கக்கூறினார். இல்ல முதலாளி உம்மாவுக்கு சுகமில்ல! கோல் வந்தது அதான் போனேன். மயங்கித்தானே விழுந்தாங்க! உயிரா போச்சு! என்று சீறினார். இந்த வார்த்தையைக் கேட்ட யூசுப் அப்படியே ஆடிப்போய்விட்டான். ஆத்திரம் தலைக்கேற "இத்தனை வருடம் இங்கு நான் குப்பை கொட்டியது வீண்மடத்தனம்! யாருக்கு என்ன நடந்தாலும் உங்களுக்கு பணம் தான் முக்கியம் முதலாளி. எனக்கு என் தாய் தான் முக்கியம். நான் போய் வருகிறேன்."என்றுவிட்டு சென்றுவிட்டான்.

எதைக்கூறினாலும் எதிர்த்துப்பேசாது மூடிக்கொண்டிருப்பான் என்று எண்ணிய முதலாளி தலையில் விழுந்தது "மண்" அவன் செல்வதைத் தடுத்த போது "என் சம்பளப்பணத்தை நீங்களே வைத்து நஷ்டத்தை ஈடு செய்யுங்க" என்று போயேவிட்டான். தன் கையறுநிலையை உணர்ந்த முதலாளி சீசன் காலம் நெருங்கும் வேளை நிர்க்கதியான நிலையுணர்ந்து செய்வதறியாது திகைத்து நின்றார்.

யூசுப் அண்ணா என்றழைத்த சிவராஜா குரல் அவனைத் திரும்பவைத்தது "அண்ணா! நீங்க யாரிடமும் சென்று கூலிக்கு மாரடிக்கத் தேவையில்லை எங்களிடம் வயல் காணி தோட்டம் என்று எல்லாம் இருக்கு இருப்பதற்கு வீடும் உள்ளது அம்மாவையும் அழைத்து வாங்க எல்லோரும் சேர்ந்து "எமது தோட்டத்தில் நஞ்சற்ற உணவு வகைகளை விதைத்து விளைச்சலாக்கி அறுவடை செய்து ஆரோக்கிய நாட்டை உருவாக்கி நம் சொந்தக் காலில் நிற்போம்! சிறந்த பொருளாதார சமுதாயத்தை உருவாக்கி விவசாயத்தை விசேஷமாக்கி விஷமற்ற விஷயத்தை தூக்கி வீசி "சவாலை சமாளித்து" பசுமைப்புரட்சியை வெல்லுவோம் என்றான். சரி சரி சவாலை சமாளிப்போம் என்றான் யூசுப்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலைமரபும் பண்பாடும்



**கார்த்திகா இரத்தினம்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

**யா**ழ் மாவட்டத்தின் வடமுனையிலே பனங்கூடல்களைத் தென்றல் தாலாட்ட, செழுமைமிகு செம்மண் எம்முடன் உறவாடி எம் உயிர்த்துடிப்பை உரமூட்ட, குட்டிச்சிங்கப்பூர் என்று அழைக்கப்பட்ட $2\frac{1}{2}$ சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட சிறு கிராமமான குரும்பசிட்டி படித்த பண்பாளர்களையும், விவசாயச் செம்மல்களையும், சைவநெறி ஒழுக்கமுடைய மக்களையும், உன்னதமான பாரம்பரியக் கலையில் உச்சம் தொட்ட பல கலைஞர்களையும் வளர்த்த, வாழ்விழந்த பூமியாக விளங்கியதென்பதில் சிறிதும் ஐயம் இல்லை. இன்றும் பல சிறந்த கலைஞர்கள் எம் கிராமத்தவர்கள் பல தேசங்களில் நம் பாரம்பரிய கலைகளைத் தத்தெடுத்து வளர்த்துக் கொண் டுள்ளனர் என்பதும் நிதர்சனமான உண்மை.

அந்த வகையில் பல மகத்தான கலைஞர்கள் நம் ஊரிற் பிறந்து கலை வளர்த்து பிரசித்தி பெற்று அமரத்துவம் அடைந்துள்ளார்கள். கலைஞர்கள் என்றும் மறைவதில்லை. அவர்கள் கலைகளூடாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் கலாகேசரி தம்பித்துரை அவர்கள். சிற்பத்துறையின் விற்பன்னர் கலாகேசரி தம்பித்துரை அவர்களைப்பற்றி எழுத வேண்டுமென்ற அவா என்மனதில் உதித்தது. அதற்கான பிரதான காரணம் நான் என் மண்ணில் பிறந்ததிலிருந்து அவர் இயற்கை எய்தும்வரை அவருடைய வாழ்க்கைப் பயணத்தில் அவருடன் இணைந்து பயணித்தேன் என்பதேயாகும். ஆம் எனது குடும்பமும் அவரது குடும்பமும் நெருங்கிய நட்பு வட்டத்துக்குள் இன்றும் உள்ளன. அவரது கரங்களால் தூக்கி என்னை மடியிலமர்த்தி கதைபேசிய காலங்கள் என் கண்முன்னே காட்சியாக விரிகின்றன. எப்போது அவரது இல்லம் சென்றாலும் உளிச்சத்தமே முதலில் எம்மை வரவேற்கும். கடவுள் விக்கிரகங்களை சுமந்து செல்லும் வாகன வேலைகள் எப்போதும் இடைவிடாது நடந்து கொண்டே இருக்கும். அவற்றின் உடல் உறுப்புக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறி பரவி இருக்கும். அவரது சிற்பங்கள் மிகுந்த உயிரோட்டமாகவும் நளினத்துடனும், முகபாவத்துடனும் எம்முடன் உணர்வுபூர்வமாக உரையாடுவது போல் பிரமையை ஏற்படுத்தும். கலாகேசரியவர்கள் தன்னை மறந்து, உணவை மறந்து, அணு அணுவாக இரசித்து, இலயித்து அவற்றுடன் உணர்வுபூர்வமாக உளிமூலம் பேசி தவம் போல் செதுக்கியதால்த்தான் அவர் வடித்த சிலைகள் உயிரோட்டமாக உருமாற்றம் பெற்றன என்றே கூறவேண்டும்.

கலாகேசரி அவர்களை நினைவுகூறும் போது இன்றும் என் மனம் நெகிழ்வடைகிறது. இது நான் பெற்ற விலை மதிப்பற்ற வரமாகவே கருதுகிறேன். கலாகேசரி அவர்களைப் பற்றி நான் நேரடியாக அறிந்து கொண்டவற்றைப் பற்றியும் நூல்கள் மூலம் வாசித்துத் தெரிந்து கொண்டவற்றையும் வாசகர்களாகிய உங்களிற்கு அருவிருந்தாக்க விரும்புகிறேன்.

ஆயிரத்திற்கு மேற்பட்ட மரத்திலான வாகனங்களையும், எட்டுத் தேர்களையும் உருவாக்கியவரும், சோடிக் குதிரை, சோடிச் சிங்கம், சோடி இடபம் என்பவற்றை முதலில் சிருஷ்டித்தவரும், மூன்று குதிரைகள் சேர்ந்த வாகனம், சில்லுகளோடு கூடிய நல்லூர் கைலாச வாகனம் இணுவில் சிவகாமி அம்மன் கோவிற் சுழலும் சூரன் போன்ற புதுமைமிகு உயிரோட்டமான சிற்பங்களை வடித்தவரும், தஞ்சாவூர் நாராயணசாமி ஸ்தபதி அவர்களிடம் சிற்பவேலை நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்தவருமான அமரர் ஆறுமுக சிற்பாசாரியாரின் மூத்த மகனாக கலாகேசரி தம்பித்துரை அவர்கள் 5.5.1933இல் திருநெல்வேலியில் பிறந்தார்.

இவர் நான்காம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போதே மாலை வேலைகளில் வீரமாகாளியம்மன் தேர் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்த போது எடுபிடி வேலைகளைச் செய்வதோடு அங்கு நடைபெறும் சிற்ப வேலைகளை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினார்.

"இந்தக் கலை சொல்லிக் கொடுத்து வரும் கலை அல்ல, பார்த்துப் பார்த்துப் பழகும் கலை. சிறுவயது முதல் கூர்ந்து அவதானிக்கும் கலை. சிரத்தையோடு பார்த்துப் பழகி பிற்காலத்தில் தானே செய்து பார்க்காவிட்டால் இந்தச் சிற்பக்கலை கைவராது. அதிலும் 5, 10 வருடங்களிலும் இதைப் பூரணமாக அறிந்துவிட முடியாது" என அவரே அமரர் இரசிகமணி கனகசெந்திநாதனிடம் அவர்களின் "கவின் கலைக்கோர் கலாகேசரி" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். தனது தகப்பனாரையே மானசீக குருவாகக் கொண்டு இக்கலையைப் பயின்றார்.

சிறந்த கலைஞர்களுக்கு வறுமையே சொத்துப் போலும். பரமேஸ்வராக் கல்லூரிக்கு பணம் கட்ட முடியாத சூழ்நிலையில் கல்வியங்காடு செங்குந்த துவிபாஷா பாடசாலையில் எட்டாவது வகுப்பு வரை படித்ததோடு மட்டு மல்லாது மாலை வேளைகளில் உளியும் மரக்கட்டைகளுடனும் இருப்பார். தகப்பனாரின் மேற்பார்வையில் வர்ணம் பூசுதல், மக்கு வைத்தல், சிற்பம் செதுக்குதல், வாகன உருவம் அமைத்தல் போன்றவற்றைக் கற்றுத்தேர்ந்தார். அதேவேளை கல்வியையும் விடாது தொடர்ந்தார். அங்கு கல்வி கற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் எஸ்.எஸ்.சி பரீட்சையில் சித்திரத்தை ஒரு பாடமாக எடுத்து சித்தியடைந்தார். சிற்பம், சித்திரம், நடனம் ஆகியவை மூன்றும் தெரிந்த சிற்பியினாலேயே சிற்பத்தின் முகபாவங்கள், உணர்வுகள், அங்க அசைவுகளை உயிரோட்டமாக வடிக்க முடியும் என்பதால் கலாகேசரி அவர்கள் ஒரு தேர்ந்த நாட்டியக் கலைஞரிடம் நடனமும் பயின்றார்.

கலாகேசரி தம்பித்துரை அவர்கள் 1954ல் ஆங்கில சித்திர ஆசிரியராக நியமனம் பெற்றார். இது இவரது வாழ்க்கையில் ஒரு மைல்க் கல்லாக அமைந்தது. 1955ஆம் ஆண்டு ஆவணி மாதம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராகக் கால்பதித்தார். குரும்பசிட்டியில் தனது பெரியதாயார் வீட்டில் நிரந்தரமாகத் தங்கினார். அன்று தான் எமது ஊருக்கும் ஒரு விலைமதிப்பற்ற வைரம் கிடைத்தது. அந்த வைரத்தை எமது ஊரும் இருகரம் நீட்டி அரவணைத்துத் தத்துப்பிள்ளையாக ஏற்று பெற்ற பிள்ளையிலும் மேலாக அன்பு காட்டி குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் தலைவராகவும், குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் தேவஸ்தான புனருத்தாரன சபையின் பிரதம ஆலேசகராவும் நியமித்து கௌரவப்படுத்தியது. அவரும் எமது ஊரையே தனது சொந்த ஊராகக் கருதி அமரத்துவம் அடையும்வரை குரும்பையூர் வாசியாகவே வாழ்ந்தார்.

மகாஜனக் கல்லூரி தொடர்ந்து நான்கு வருடங்கள் அகில இலங்கை கல்லூரி நாடகப் போட்டிகளில் முதற்பரிசைப் பெற்றுக் கொள்ள நடிகர்கள், கதாசிரியர்களின் திறமையோடு இவரின் மேடை அலங்காரம், ஒப்பனை போன்றவற்றின் கணிசமான பங்கும் உண்டு.

1956இல் கலாகேசரி அவர்கள் இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்டு தமிழ்நாடு முதல் மைசூர், கல்கத்தா, டெல்லி, பூனா வரை சென்று அங்குள்ள சிற்பம், சித்திரம் என்பவற்றின் கலைநுட்பங்களை அறிந்து கொண்டார். சமஸ்கிருத மொழியிலே ஏராளமான சிற்பம் சம்பந்தமான நூல்கள் இருப்பதை அறிந்து அவற்றை அறிந்து கொள்ளும் ஆர்வத்தில் சமஸ்கிருத மொழி கற்றுத் தேர்ந்தார்.

1962இல் சித்திர ஆசிரியர்களின் பதவி உயர்வுக்காக இலங்கை நுண்கலைக் கல்லூரியினால் நடத்தப்பட்ட சிற்ப ஓவிய டிப்ளோமா பரீட்சையிலும் சித்தி பெற்றார்.

1968ஆம் ஆண்டு முதல் வடமாநில சித்திரக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றார். அந்நேரத்தில் சித்திரப் பாடமானது மாணவருக்கு ஆர்வத்தைத் தூண்டுவதாக அமையவில்லை. ஏனைய பாடங்கள் போலே இருந்தது. இதனை மாற்ற எண்ணிய கலாகேசரி அவர்கள் வர்ணக் காகிதம் ஒட்டும் வேலைகள், களிமண். மணல், பசை, மரம், பலகை அழகு சித்திரங்களை ஆசிரியர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

1964இல் எமது மண்ணில் அருள் பாலிக்கும் அம்பாளுக்கு சித்திரத்தேர் செய்யும் பணியில் தலைமை தாங்கினார்.

1966இல் தனது சகோதரர் ஜீவரத்தினம் அவர்களை இணை ஸ்தபதியாகக் கொண்டு நந்தாவில் மனோன்மணி அம்மன் தேரை வடிவமைத்தார். இந்நிகழ்வின் போதே அவரை கௌரவிக்கும் முகமாக "கலாகேசரி" எனும் பட்டம் அவரது 34ஆம் வயதில் வழங்கப்பட்டது. அதன்பின் எமது ஊரிலே "கலாகேசரி கலாலயம்" என்ற பெயரில் சிற்பாலயத்தை நிறுவினார். 02.06.1974இல் சுதுமலை புவனேஸ்வரி அம்மன் தேர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளோட்டம் நிகழ்ந்தது. இது தனி யாழ்ப்பாணப் பாணியில் அமையப்பெற்றுள்ளது சிறப்பம்சமாகும். இதில் முக்கிய அம்சம் ஆதார சக்தி அமைப்பு முறையாகும். ஆதார சக்தியில் தேராதார சக்திகளாக ஆதிகூர்மம், பூமாதேவி, ஆதிநாகம் ஆகியன தேரைத் தாங்குவதாக அமைகின்றன. தலைப்பாகம் முன்புறமாகவும் காற்பாகம் பின்புறமாகவும் பொது வழக்கின்படி இடம்பெற இடப்புறமும் வலப்புறமும் கூர்மத்தின் முன்னங்கால்கள் முன்பக்கமாகவும் பின்னங்கால்கள் பின்பக்கமாகவும் அமைந்திருப்பது வேறு இடங்களில் காணமுடியாத சிறப்பாகும். விமானத்தைத் தாங்கும் பெரும் யாளிகளின் கீழே முன் – கீழ்ப் பார்வையுடன் பெரிய பாயும் சிங்கங்கள் இடம்பெற்றுள்ளது. இவ் அம்சம் பிற்காலத்தில் தெல்லிப்பழை துர்க்காதேவி (1978), மாத்தளை முத்துமாரி அம்மன் (1977) ஆகிய தேர்களில் காணலாம்.

கொக்குவில் கிருபாகர சுப்பிரமணிய சுவாமி தேரிலே புதிய மரபை அறிமுகப்படுத்தி திராவிட எண்கோ மரபை செழுமையாக்கி அறுகோண வடிவை அறிமுகப்படுத்தினார்.

அன்னுங்கை சிவபூதவராயர் தேரும் சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேரும் நாகர (சதுரவடிவம்) வடிவிலாக அமைந்தன. கலாகேசரி அவர்கள் கடுமையாக சுகயீனமுற்ற நிலையிலும் இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் தேரினை திராவிட முகபத்திர அமைப்புடன் இறுதியாகப் பூர்த்தி செய்தார்.

**கலாகேசரி அவர்களின் திருமண வாழ்வு**

கலாகேரி அவர்களின் ஒன்றுவிட்ட பெரியதாயின் மகளாகிய சகோதரியும், கலாகேசரியும் "மாற்றுக்கு மாற்று திருமணம்" என்ற அடிப்படையில் சுழிபுரத்தைச் சேர்ந்த திரு. இராமலிங்கத்தின் பிள்ளைகளை திருமணம் செய்தனர். இவரின் இல்லற வாழ்வு நீடிக்கவில்லை. இது கவலைக்குரிய விடயமாகும். இறைவன் இவரை தனது கலைப்பணிக்கே மண்ணுலகம் அனுப்பினார் போலும்.

கலாகேசரி அவர்கள் தனது மருமகளின் திருமணத்தைக்காண தனது சகோதரியுடன் திருச்சிக்கு பயணமானார். அவரது ஆத்ம ஆசைப்படி 09.09.1994 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே இறைவனடி சேர்ந்தார். இவரது மரணச்செய்தி அறிந்தபோது எனது தாயார் என்னிடம் கூறிய ஒரு விடயம் இன்றும் பசுமரத்து ஆணிபோல் என் மனதில் பதிந்துள்ளது. அது என்னவென்றால் கலாகேசரி அவர்கள் சிற்பம் செதுக்கியபடியே பலமுறை கூறுவாராம் தனது அஸ்தி இந்தியாவில்த்தான் கரையும் என்று. அதன்படியே நிகழ்ந்தது. உன்னத கலைஞரின் வாக்கு தெய்வத்தின் வாக்குக்கு சமனானது.

கலாகேசரி அவர்கள் பல விழுதுகளுடைய பெருவிருட்சம் போன்றவர். அந்த விழுதுகள் இவரிடம் கலைபயின்ற மாணவர்கள் அவர்கள் இன்றும் தம் குருவிற்கு புகழ் சேர்க்கும் பெருங்கலைஞர்களாகத் திகழ்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாகேசரி அவர்கள் எழுதிய நூல்கள்**

- தையல் வேலைச் சித்திரம் – 1
- தையல் வேலைச் சித்திரம் – 2
- ஓவியக்கலை
- சிறுவர் சித்திரம்
- கலாயோகி ஆனந்தக்குமாரசாமி
- யாழ்ப்பாணத்து பிற்காலச் சுவரோவியங்கள்
- பண்பாட்டின் மூன்று கோலங்கள்

**கலாகேசரி வடிவமைத்த தேர்கள்**

- 1963 – குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் தேர்
- 1966 – கொக்குவில் நந்தாவில் அம்மன் தேர்
- 1967 – பண்ணாகம் விஷ்பத்தனை முருகமூர்த்தி தேர்
- 1970 – வண்ணார்பண்ணை விசுவேச விநாயகர் – ஐயனார் தேர்
  புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் தேர்
  கோண்டாவில் நாகபூஷணி அம்மன் தேர்
- 1974 – சுதுமலை புவனேஸ்வரி அம்மன் தேர்
- 1975 – குப்பிளான் கற்கரை கற்பக விநாயகருக்கு அமைத்த ஈழத்தின் முதல் வேஸரம் (வட்ட வடிவிலான தேர்) மரபுத்தேர்
- 1977 – மாத்தளை முத்துமாரி அம்மன் தேர்
  இணுவில் பரராஜசேரகப்பிள்ளையார் ஆலய சண்டேஸ்வரர் தேர்
- 1978 – தெல்லிப்பழை துர்க்காதேவி – ஈழமரபின் முதலாவது திராவிட (எண்கோண வடிவம்) முகபத்திர மரபுத் தேர்
- 1980 – புலோலி புற்றளைப் பிள்ளையார் வேசர மரபுத்தேர்
- 1982 – கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் – ஈழத்தின் முதல் அந்திரமரபிலான அறுகோணத் தேர்
- 1988 – கோண்டாவில் அன்னுங்கை சிவபூதவராயர் பஞ்சதள நாகர (சதுரவடிவம்) முகபத்திர மரபுத் தேர்
- 1991 – சுன்னாகம் கதிரமலை சிவன் பஞ்சதள நாகரமுகபத்திர மரபுத் தேர்
- 1994 – இணுவில் செகராசசேகரப்பிள்ளையார் திராவிட முகபத்திர மரபுத் தேர்

**கலாகேசரி அவர்களின் குறிப்பிடத்தக்க பிற ஊர்திகளின் விபரம்**

- இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் திருமஞ்சம்
- இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கைலாய வாகனம்
- உசன் கந்தசாமி கோவில் சிங்காசனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ நீர்கொழும்பு சித்திவிநாயகர் ஆலய ரதம்
♦ வண்ணை வீரமாகாளி அம்மன் கடா
♦ குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் மகரம்
♦ அல்வாய் முத்துமாரி அம்மன் கேடகம்

❖ முதன் முதலாக விண்வெளியை வலம்வந்த யூரிக்காரின் என்ற ரஷ்ய வீரர் யாழ்ப்பாணம் வந்த பொழுது அவருக்கு வழங்கப்பட்ட பனைஓலைச் சுவடியில் வாழ்த்துப்பத்திரத்தின் இருமுகப்புகளையும் சந்தனக் கட்டையிற் பனை, தாமரை, அன்னம் ஆகிய உருவங்களை அலங்கார சித்திர வேலைப்பாடாக அமைத்துக் கொடுத்தார்.

❖ திரு ஜீ.ஜீ பொன்னம்பலம் அவர்கள் ஐ.நா சபையில் பேருரை நிகழ்த்திவிட்டு யாழ்ப்பாணம் வந்தபோது அவருக்கு பிரியமான கைப்பிரம்பொன்றை சந்தனக் கட்டையிற் யாளி முகம் கொண்ட கைப்பிடியில் தன் கைவண்ணத்தைக் காட்டியுள்ளார்.

❖ மறைந்த பிரதமர் டட்லி செனனாயகா அவர்கள் தமிழ் மாநாட்டிற்காக யாழ்ப்பாணம் வருகைதந்த போது சந்தனக்கட்டையிலான கைப்பிடியில் அசோக சக்கரத்தையும், சிங்கங்களையும் செதுக்கி வழங்கினார்.

குறிப்பு :- இக்கட்டுரையை வடிவமைப்பதற்கு எனக்கு உதவிய நூல்கள்

1. கவின்கலைக்கோர் கலாகேசரி – இரசிகமணி கனகசெந்திநாதன்
2. கலாகேசரி ஆ. தம்பித்துரை – வே. அம்பிகைபாகன் BA(HONS)

**இளங்கலைஞர் விருது - 2022**

**[பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்]**

- திரு . இராமநாதன் தனஞ்சயன் – குறும்படம்
- திருமதி . சிவமைந்தன் தனுசா – நடனம்
- திரு . கனகசிங்கம் பார்த்தீபன் – இசை
- திருமதி . கிருஷ்ணாலினி அகிலன் – வாத்தியக்கலை (வயலின்)
- திரு . அல்பிரட் யூட் பைனர் – இசை
- திரு . பத்மநாதன் விஜயரட்ணம் சுபாகர் – சிற்பம்
- திரு . ஆரோக்கியம் கிங்சிலி – ஓவியம்
- திரு . மாட்டின் றெல்சன் அனோஜ் கிளமென்சன் – வாத்தியக்கலை (ஓகன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி நாம் தேற்றுவது



**திருமதி இந்துமதி வரதராசன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்.
பிரதேச செயலகம். யாழ்ப்பாணம்.

ஒவ்வொரு விடியலிலும்
ஏக்கத்தோடு கண் விழித்து
காணாமல் போனவர்கள்
கண்ணிலே படமாட்டார்களாவென
ஏக்கத்தோடு எதிர்பார்த்து
உலகமெல்லாம் கோரிக்கையனுப்பி
ஊர் ஊராய் தேடி நிற்கும்
பிள்ளைகளின் வருகைக்காய்
வைத்த கண் வாங்காமல்
வீட்டு வாசலினைப் பார்த்துப் பார்த்து
கண்ணீரோடு பொழுது கரைகின்ற
பெற்றவர்கள் மனநிலையை
எப்படி நாம் தேற்றுவது . . .

முகங்களும் காணாமல்
குரல்களும் கேட்காமல்
கனத்த இதயத்தோடு
கண்களை மூடிவிட்ட
தாய் தந்தை உறவுகளும்
உள்ளத்தில் பொங்கி வரும்
சோகத்தை மறைத்து வைத்து
செல்லமாய் வளர்த்தெடுத்த
செல்வங்கள் வருமெனக் காத்து
நம்பிக்கை தளராது – இன்று வரை
ஓயாமல் தேடி வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் உறவுகளின் மனநிலையை
எப்படி நாம் தேற்றுவது . . .
தேற்றிவிட வார்த்தையில்லை
தேடிச்செல்ல வழியுமில்லை
காண்போர் அனைவரையும்
கைகூப்பி வணங்கி அழும்
எம்மக்கள் சோகக்கதை
இன்று வரை நீண்டு செல்ல
நம் இனத்தின் கேள்விக்கு
விடை தான் கிடைத்திடுமா
வருடங்கள் பல கடந்தும்
வழிமேலே விழி வைத்து
வருகைக்காய் காத்திருக்கும்
பெற்றவர்கள் மனநிலையை
எப்படி நாம் தேற்றுவது . . .

கொரோனாவின் கோரத்தாண்டவத்திலும்
ஓய்வில்லாமல் ஓடியோடி இன்னும்
தேடித் தேடி தேம்புகின்றோம்.
எங்கிருந்தோ ஒரு நாள்
உயிரோடு வருவார்களென
உறவுகள் எல்லோரும்
ஊணின்றி உறக்கமின்றி
உயிராக வளர்த்த பிள்ளை
எப்போது வருமென்று
ஏங்கித் தவித்து நிற்கும்
பெற்றவர்கள் மனநிலையை
எப்படி நாம் தேற்றுவது . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “யாதுமானவன்” ஒரு பார்வை



**செ. அழகராசா**
சுண்டிக்குளி

இன்றைய உலகில் மனிதன் வாழ்வின் துயரங்களுக்குள்ளும் உலகின் நவீனங்களுக்குள்ளும் சிக்குண்டு திசை தடுமாறித் தவிக்கின்றான். மனித மாண்பிழந்து மனித விழுமியங்களைத் தொலைத்த நிலையில் அதுதான் வாழ்வு என்று தனது போக்குகளை நியாயப்படுத்தி வாழ்கின்றான். “மின்னுவது எல்லாம் பொன்” என எண்ணி மனிதன் தனது விழுமியங்களை மாற்றி அமைத்துவிட்டான். இந் நிலை இறை–மனித உறவு துண்டிக்கப்பட்டதன் விளைவாகும்.




இறை–மனித உறவு என்பது உலகியலோடு மட்டும் பயணிக்கின்ற ஒன்றல்ல. மாறாக, உலகில் வாழ்ந்தபடியே மனித ஆன்மாவை இறைவனை நோக்கி நகர்த்தி வாழும் பயணமாகும். இந்தப் பயணத்தை மேற்கொள்ள நமக்கு ஆன்ம பலமும் ஆன்ம வழிகாட்டலும் தரும் ஒரு நூலாக “யாதுமானவன்” வெளிவந்துள்ளது. இயேசுவின் பாதையில் நாம் பயணிக்க நம்மை ஆற்றுப்படுத்தும் வகையில் அவரது வாழ்வையும் வல்லமையையும் இரக்கத்தையும் வெளிக்கொணர்வதாக இந் நூலின் ஆக்கங்கள் பதிவாகின்றன.

எல்லாவற்றிற்கும் எல்லாமாக யாதுமாகி நிற்கும் இறைவனை – நாம் மறந்தாலும் எம்மை அறியாமலே எம்மோடு பயணிக்கும் இறைவனின் பிரசன்னத்தை உணரும் வகையில் எம்மை நெறிப்படுத்தி இறைவனின் பல் பரிமாணத் தன்மையை ஆன்மீக ரீதியாக உணர்ந்து அதன்படி வாழ “யாதுமானவன்” நமக்கு வழிகாட்டி நிற்கின்றது,

மேலும் ஒவ்வொரு ஆக்கமும் ஒன்றோடொன்று தொடர்புற்று நின்று இறை உறவை நம்முன் நிறுத்துவது சிறப்பம்சமாகும். ஆசிரியரின் ஆழமான சிந்தனைத் தெளிவுக்கும் வியக்கவைக்கும் அவரது நீண்டகால ஆன்மீக அனுபவத்துக்கும் சான்று பகர்வதாக இப்படைப்பு மிளிர்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்தொரு தலைப்புக்களைத் தாங்கியுள்ள இந் நூலின் ஒவ்வொரு அங்கமும் படிப்போரை நிறுத்தாமல் வாசிக்கத் தூண்டும் தன்மை கொண்டவை. கிறிஸ்தவனின் உண்மையான வாழ்வு எப்படி அமையவேண்டும் என்பதையும் அதற்கு விவிலியம் கூறும் உண்மைகளையும் சமகால சான்றுகளையும் இலகு தமிழில் தெளிவாக விளக்கி ஆன்மாவின் இருப்பை உணர்த்தி நம்மை அதற்குள் இலகுவாக ஈர்க்கும் வகையில் நூலின் தொகுப்பு அமைந்துள்ளது. கிறிஸ்தவ மறை சார் நூலாக அமைந்தாலும் அனைத்து மதங்களுக்கும் அடிப்படையான ஆன்மீகத்தையும் மனித விழுமியங்களையும் இறை பக்திக் கோட்பாடுகளையும் எடுத்துரைக்கும் இந் நூல் மத பேதமற்ற நூல் என்பதில் ஐயமில்லை. இதனால் இந் நூல் அனைத்து மதத்தினருக்கும் சொந்தமானது.

பொருட் செல்வத்தைத் தேடி அருட் செல்வத்தை இழக்காது நிலை வாழ்வை நோக்கி நகரவும், போலி வழிபாடுகளைக் களைந்து இறை மகன் இயேசுவின் இறையரசுக் கனவுகளை நனவாக்க, அவரது வழியில் பயணிக்க, அவரது உடனிருப்பை அனுபவிக்க யாதுமானவன் அழைப்பு விடுக்கின்றது.

இயேசுவின் அனுபவமும் அறிவும் ஆழமானவை மட்டும் அல்ல, அடித்தட்டு மக்களின் நிலையைச் சார்ந்து நிற்பவையும் ஆகும். இதனால்தான் அன்றைய சமுதாயத்தின் மரபுப் பார்வைகளையும் மந்திர மாய விளக்கங்கள், விடைகளையும் எதிர்க்கேள்வி இன்றி அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதுபோல மேலாதிக்க வகுப்பினரின் மேலோட்டமான பார்வைகள், விழுமியங்களையும் அவர் தமதாக்கிக் கொள்ளவில்லை. மாறாக அடித்தட்டு மக்கள் அனுபவத்தின் ஒளியில் அனைத்தையும் விமர்சித்தார். இவ்வாறு அன்றைய ஆளும் சமூகத்தினரின் பொய்மைகளையும் சமயவாதிகளின் பக்திச் சாயங்களையும் அவர் இனம் கண்டுகொள்ளத் தவறவில்லை. அன்றைய அவரது சமுதாயத்தில் தூயவர்கள் எனக் கருதப்பட்டவர்கள் அனைவரும் அவர் பார்வையில் தூயவர்கள் அல்ல அன்றைய சமூகத்துப் பாவிகள் அனைவரும் அவர் பார்வையில் பாவிகளும் அல்ல (லூக் 7:36–45, 18:9–14, 19:1–10).

இதயமில்லா உறவுக்கு இதயமாகப் பிறந்து, தமது இதயத்தின் புனிதத்தை நாமும் அடைய நற்செய்தி தந்த இயேசுவைப் பின்பற்றி, பாவ வழிகளைத் துறந்து, அவரையே மாதிரியாகக் கொண்டு, அவரது இயல்பைக் கொண்டு, அவரது உருவில் வளர்ந்து, அன்புப் பணி செய்து, இரக்கத்தின் வழிநடந்து, அவருக்கு உகந்தவர்களாய் வாழ வழி சமைத்து நிற்கும் இன்றும் இறை அழைப்பையும் அவரது அரவணைப்பையும் அவர் நமக்குச் செய்யும் அற்புத அதிசயங்களையும் எடுத்துக் கூறி, அவரோடு இணைந்திருப்பதன் அவசியத்தையும் தெளிவுபடுத்துகிறது.

அன்னை மரியாவை உலகின் தாயாகவும் இறைவனின் தாயாகவும் வெளிக்கொணர்ந்து, அவர் ஊடாக ஆன்ம அருள் வளங்களைப் பெற்று, உலகின் சமகாலத் துன்பியல்களிலிருந்து விடுபடும் வழிகளைக் காணவும் இந் நூல் தூண்டுகிறது.

செப வாழ்வை ஊக்குவிக்கவும் உலகின் எதிர்காலச் செல்வங்களான ஒவ்வொரு இளையோரும் ஒவ்வொரு இயேசுவாக மாறி, தமக்குள்ளே புதைந்திருக்கும் ஆன்மீகம் என்னும் உண்மையின் புதையலை தூய ஆவியின் துணையோடு தேடி, அந்தத் தேடலின் பயணத்தில் இறை திட்டத்தையும் இறை உடனிருப்பையும் உணர உத்வேகமளிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கரைத் தீபமாக யாதுமானவன் ஒளிர்கிறது. இதை இளைஞர் மாபெரும் செல்வங்கள் என்னும் 27வது அத்தியாயம் காட்டுகிறது.

இன்றைய உலகில் நாம் காணும் – நாம் சந்திக்கும் ஒவ்வொரு துன்பியல் அனுபவத்துக்கும் நமது செயற்பாடுகளே காரணமாக அமைகின்றது. இயற்கையை வசமாக்குவதில்கூட நமது தவறான அணுகுமுறைகள் காரணமாக இயற்கை நமக்கெதிராக திரும்பிவிட்டதுபோலவும் இயற்கை நம்மை சீண்டுவதுபோலவும் வான் – தரை – கடல் அனைத்தினூடாகவும் அழிவுகளைச் சந்திப்பதாக உணர்கின்றோம்; அழிவுகளை சந்தித்தும் வருகின்றோம். இறைவனின் அற்புதமான படைப்புக்களை நமது சுய நலத்திற்காக, சுய இலாபத்திற்காக சிதைக்கின்றோம் என்பதே நாம் ஏற்கவேண்டிய கசப்பான உண்மையாகும். இறை சித்தத்தையும் உடனிருப்பையும் ஆன்மீக ரீதியாக ஆழமாக உணர்கின்றபோதுதான் நமது தவறுகளை உணரமுடியும். இறை உறவோடு பயணித்து, ஆன்மாவைப் பலப்படுத்தும்போது இறைவனோடு சேர்ந்து அவரது படைப்புக்களையும் நாம் பராமரிக்கமுடியும் என்ற உண்மையையும் இந் நூல் ஆழமாகத் தெளிவுபடுத்தியுள்ளது.

தொகுத்து நோக்கின், "யாதுமானவன்" மனித வாழ்வுக்கு யாதுமாகித் திகழ்வது சிறப்பு அம்சமாகும். நூலின் ஆசிரியர் அருட்பணி மா. றேஜிஸ் இராசநாயகம் அவர்களின் ஆன்ம வலுவூட்டல் பணிக்கு இந் நூல் இமாலய வெற்றியாகும் என்பது வெள்ளிடை மலை. நாமாகவே எமது கரங்களைக் கழுவுவோம். இல்லையெனில் இறைவன் எம்மை உள்ளார்ந்த விதமாகக் கழுவி வேண்டாத அனைத்திலிருந்தும் எம் உள்ளத்தைத் தூய்மையாக்க இடமளிப்போம்.

பிலாத்துவைப் போன்று பாராமுகமாயிராமல் சுயநலமற்று இருப்போம். மற்றவர்கள் மட்டில் நமக்குப் பொறுப்பு உண்டு. குறிப்பாக ஏழ்மையில் வாழ்வோரை நாம் பொறுப்பேற்போம். அவர்கள் எமது சகோதர சகோதரிகள். அதே வேளை எமது குடும்பம், குழுமத்தில் உள்ளோருடன் அன்புறவை ஏற்படுத்துவோம். அவர்களுடன் எமது நேரத்தைச் செலவிட்டு அவர்கள் சொல்லாமற் சொல்பவற்றுக்கு உற்றுச் செவிமடுப்போம். உண்மைக் குடும்பங்களாவோம்.

காலத்திற்கேற்ப காத்திரமான படைப்புகள் வெளிவரவேண்டியது காலத்தின் தவிர்க்கமுடியாத தேவைகளில் ஒன்றாகும். அதனை அருட்பணி. மா. றேஜிஸ் இராசநாயகம் அவர்கள் காலத்தின் தேவை உணர்ந்து நேர்த்தியாக நிறைவேற்றியுள்ளமை நிதர்சனமாகும். நச்சுயிரியின் தாக்கத்தால் நசுங்கிக்கொண்டிருக்கும் நாம், அந்த நச்சுயிரியின் தலையை நசுக்க வேண்டுமாயின் யாதுமானவனுடன் யாதுமாகி நிற்காவிடின் யாதுமற்றுப் போய்விடுவோம். காலத்தை வெல்ல யாதுமானவன் எம்மோடு பயணிக்க வழி செய்வோம் – வழிகாட்டுவோம்.

குறிப்பு : வடக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல் பரிசுத்தேர்வில் சிறந்த நூலாக இந்நூல் தெரிவு செய்யப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணமே என்னகக் கவிதையாய் போகும்



**கார்த்திகா இரத்தினம்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

**பெ**ண்ணழகிற் கவிதை பிறக்கும் தானாய் –எந்தன்
எண்ணமதில் உவகை மலரும் தேனாய்
திண்ணைவழிக் கதவைத் திறக்கும் காற்றாய் – எந்தன்
எண்ணவெளிக் கதவைத் திறக்கும் பேனா!

என்னுள்ளே என்றுமே எண்ணிலா ஆசைகள் – எந்தன்
கண்ணுள்ளே காய்வது கற்பனைக் கூரைகள்
மண்ணிலே எண்ணிலா எழில்களின் வாடைகள் – அவை
எந்தனின் ஏட்டிலே கவிதையின் சோலைகள்

வெண்ணிலவே வெண்மதியே தத்திவரும் நடையழகே – என்றும்
உன்னொளியே தண்ணளியே எத்திசைக்கும் கொடைமடமே
என் நிலவே உன்வியர்வை சிந்திவிழ உடைந்தெழுந்த – மின்னும்
விண்மீனே; கண்வழியே சிந்தைதனை மயக்கிடுதே


கதிரகம் கதிரவன் செகில் நிறம் பூத்திட – தம்
வதிவிடம் துயில்வன மனங்களில் தழுத்திட
கதிரவன் கதிரொளி கதிர்வழி புகுந்திட – இவ்
அகலிடம் எழில்மிக உயிர்செறிந் தாடும்

எண்ணமே என்னக கவிதையாய் போகும் – அவ்
வண்ணமே என்கயல் விழிகளாய் மாறும்
அண்டமே செந்நிறக் கரங்களாய் நீளும் –அவ்
விண்ணகமே என்னு லகாகும்.

கதிரகம் – கீழ்த்திசை
செகில் – சிவப்பு
அகலிடம் – பூமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடு படும் பாடும் நம்மவர் நிலையும்



A. கவிகிறேஸ்
யாழ். பல்கலைக்கழகம்
K.K.P Youth Club
யாழ்ப்பாணம்

**நா**டு போகும் போக்கும்
நம்மவர் படும் பாடும்
யார் அறிவார்...?
எம் நிலை இங்கு யார் அறிவார்...?

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட
நாடு என்றனர்
இன்று நான்கு பக்கமும்
கடனால் சூழப்பட்ட
நாடு என்கின்றனர்.....

நம் நாடா.......
இது நம் நாடா.......

தையும் வந்தது
பொங்கலும் வந்தது
தட்டில் போட்டு உண்டு கொள்ள
பையில் பணமும் இல்லை
பருப்பு விலையும் குறையவில்லை...........

சிலிண்டரும் வெடித்துச் சிதற
சீனி, அங்கரும், விலையேற
விறகடுப்பு எட்டிப்பார்த்தது
விலைவாசியும் எம்மைப் பார்த்தது...

பெற்றோலும் பத்துரூபா
கூடிக் கொள்ள
பெண்டாட்டியின் பேச்சும்
பத்து மீற்றர் நீண்டு செல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் ஒருபுறம்
இவளின் கதறல் மறுபுறம்
இதில் பேரம் பேசுவதா
அவளிடம் பேச்சு வாங்குவதா......

நாளுக்கு நாள் விலையேற்றம்
இதில் நம்மவர் பாடோ
திண்டாற்றம்.....

நாள் முழுக்க உழைத்தும்
நாலாபுறமும் கடன் தொல்லை
இதில் நாமும் கடன் வாங்க
நாடும் கடன் வாங்க
கடன்கார நாடு என
நாறிக் கொள்கின்றது.
நம் நாடு ........ நாமும் / வாழ்வதோ பெரும் பாடு

அண்டி வாழ அயல் நாடு
போவோம் என்றால்
அங்கும் இடமில்லை
நமக்கும் விடிவில்லை.......

பருப்புத் தொடங்கி
பள்ளிப் படிப்பு வரை
பண ஏற்றம்
நம் பாடோ பரிதாபம்........

கல்லுடைப்பவனும்
நம் நாட்டில் கடன்காரன் தான்
கற்றறிவிப்பவனும் நம் நாட்டில்
கடன் காரன் தான்.....

முத்திரை குத்தப்பட்டு
முகத்திரை கிழிக்கப்பட்டு
முகமுடிகளுடன் பயணிக்குது
நம் நாடு......./ இன்று இது ஒரு கடன் நாடு......

**அரச ஊழியர் ஆக்கத்திறன் போட்டி - 2021**
**[புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு]**

- திருமதி யூட் அல்போன்சஸ் மேவிஸ் ஜீன்சியா (அபிவிருத்தி உத்தியோகத்தர்)
- திரு சிவபாலன் அஜெந்தன் (முகாமைத்துவ உத்தியோகத்தர்)

**அரச இசை நடன விழா - 2021**
**[கீதவாஹினி இசைக்கல்லூரி - கொழும்புத்துறை]**

- திரு. தர்மராஜா கிரிதரன் (தேசிய மட்டம் 1ஆம் இடம்)
- திருமதி அனுசா யதுகரன் (தேசிய மட்டம் 1ஆம் இடம்)
- திரு. பரந்தாமன் ரிசிகரன் (தேசிய மட்டம் 2ஆம் இடம்)
- செல்வி. கஸ்தூரி புஸ்பராஜா (தேசிய மட்டம் 3ஆம் இடம்)
- செல்வி. தரணிகா கிருபாகரன் (விசேடம்)
- கீதவாஹினி இசைக்குழு (தேசிய மட்டம் 2ஆம் இடம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா வைரஸ்



**திருமதி தர்சினி யூட்அமலராஜ்**
நுண்கலைமாணி, கலைமாமணி,
கீதசொரூபி, கம்சப்பிரியா
இசைக்கல்லூரி.


**நா**டு விட்டு நாடு தாவி
ஏழை பணக்கார பேதமின்றி
உயிரைக் காவும் உயரிய துயரய்
உருண்டு திரண்டும் பாரிய நோயாய்
மண்ணின் முகடுகளை முட்டி முட்டி
நாளும் நடமாட முகக்கவசமே
உயிர் மூச்சுக் கவசம் ஆனதே
ஏன் இந்தக் கொரோனா நோய் என்றோம்
எப்படி இந்தச் சாவுகள் என்றோம்
அசைக்க முடியாத உச்சி வெளியிலே
அசைந்தாடும் புயலாய் கொல்லும் கொரோனா
நிலமை எங்கும் சரியில்லை
தனித்திரு விழித்திரு இதுவே தாரக மந்திரமாச்சு
வீட்டை விட்டு வெளியிடத்தில்
வீணாகச் சுற்றாதே
பக்குவமாய் வீட்டினுள்
தனிமையில் வாழப்பழகிடு
பூமிக்கு வந்த புதிய திருப்பமாய்
உந்தன் பெரும் பசிக்கு
வயது மத பேதமின்றி
உலகின் பல லட்சம் உயிர்கள்
விருந்தாகி விட்ட பின்னும்
விரட்டிக் கொல்லல் முறையல்லவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்படு வேற்றுக்கிரகம்
மனிதா! தனித்திரு விழித்திரு
வெள்ளையணுக்களின்
தடுப்பாற்றலுக்கு
வேட்டு வைக்க வந்த சகுனியே
எங்களின் நுரையீரலுக்குள்
நுழைய எத்தனிக்கும்
எல்லை தாண்டிய பயங்கரவாதியே
மனிதகுலத்தையழிக்க வந்த
கொடிய நுண்தொற்றே
எங்கள் விஞ்ஞான வளர்ச்சியிலே
விரும்பத்தகாத விருந்தாளியே
நாகரீகத்தின் நாயகர்கள் நாங்கள்
நச்சுயிரி நீ எம்மாத்திரம்
அடிமைச்சங்கிலியிட்டாயென்று
ஆணவம் கொள்ளாதே
அன்புச் சங்கிலியிலே
பிணைந்துள்ளோம்
சிங்கையிலே வாயடைத்து தனிமையுற்றோம்
உண்மையே .... ஒன்றுபட்டே வெல்வோம் உன்னையே!
கொரோனாத் தொற்றே
கொக்கரிக்காதே
உன்னைக் கூண்டோடொழித்தே
குலவையிடுவோம்.
நினைவில் வை
உன்னையும் கடப்போம் – நாங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலசையாய் இணைதல் வேண்டும்



**கந்தையா மயில்வாகனம்**

யாழ்ப்பாணம்

**ஆ**சிரியர் மயூரன் தன்னுடைய நூல்களில் மெய்மைக் கருத்துக்களைக் குறிப்பிட்டு எழுதும் வழக்கம் உடையவர். தனது பிந்திய வெளியீடான "பூமியில் மழையாய் வேண்டும்" என்ற தொகுப்பில் ஒரு கருத்தை முன்வைத்திருந்தார். தனது கதைகள் அனைத்துக்கும் அண்மைக் காலத்திலிருந்து "வேண்டும்" வேண்டும் என முடியக் கூடிய வாறான தலைப்பு இட்டு, எல்லாம் வாழ்வியலில் நடைபெற வேண்டும்" என இறைவனை "வேண்டு"பவர். தனது நூலின் என்னுரையில் "உண்மையும் மெய்மையும்" என எதைக் குறிப்பிடுகிறார் என்பதை அறியும் ஆவலுடன் உட்புகுந்தேன். மெய்போலத் தோன்றினாலும், சில வேளைகளில் உண்மையாகவே இருந்தாலும், மாற்றம் அடையக் கூடியது. திரிபு அடையும். அழிந்தும் போகும் என்கிறார். என்ன இது? குழப்புகிறார் என நினைத்துக் கொண்டு, தொடர்ந்தேன். பாலுண்ட வேளையில் புரைக்கேறிக் குழந்தை இறந்த கதையும், அது திரிபு அடைந்து கொக்கு உண்டதால் குழந்தை மரணித்தது. மரணிக்கும்தானே என்று கதை திரிபு அடைந்ததும் எல்லோருக்கும் தெரியும். குழந்தை கொக்கைக் குடித்ததால் இறந்தது என்று உண்மையாகத் திரிபு அடைந்து விட்டது. அது போலத் தான் அண்டங்களை எல்லாம் கடந்து நின்று, எல்லாக் கோள்களையும் இயக்கிக் கொண்டிருக்கிற சக்தி "மெய்யானது" தங்களைத் தாங்களே சுற்றிக் கொண்டும் ஏனைய கோள்களையும் ஒழுங்கு பிசகாமலும் சுற்ற வைத்துக் கொண்டிருக்கிற அந்த மிகப் பெரிய சக்தி மெய். ஆனால் ஒவ்வொருவரும் தத்தம் வசதிக்கும் வாய்ப்புகளுக்கும் வரும்படிகளுக்கும் ஏற்றவாறு உருவம் கொடுத்து வழிபடுவது உண்மை. மாறக்கூடியது, ஒரு கடவுள் உருவம் போல இன்னொரு கடவுள் உருவம் இருப்பதும் இல்லை. ஒரே கடவுளைக் குறிக்கும் சிலைகளும் வரைபுகளும் ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி இருப்பதும் இல்லை. மெய் மாறுபாடடைந்த உண்மையாகி விட்டது. உருவம் இல்லாத கடவுளுக்கு உருவம் வரைய முயன்ற குறைபாடு எவ்வாறு திரிபு அடைந்தது என நோக்க வேண்டும்.

இது போலத்தான் வலசைப் பறவைகளின் கதையும், உண்மையில் வாழும் நாட்டின் சீதோஸ்ண நிலைமாற்றமடையும் போது, கண்டம் விட்டுக் கண்டம் பறந்து வரும் பறவை இனங்களை, நாம் கண்டிருப்போம். இவை மெய்யாகத் தங்கள் நாடுகளில் தொடர்ந்து ஒரு மைல் தூரம் கூடப் பறக்கும் வல்லமை அற்றவை. ஒரு மைல் தூரம் பறக்கமுடியாத பறவைகள் ஒன்றிணைவதால் பெற்றுக் கொண்ட பலத்தால் கண்டம் விட்டும் பறந்து செல்லும் என்பது தான் உண்மை. திரிபடைந்த அல்லது சீர் செய்யப்பட்ட மெய் எனக்குறிப் பிட்டிருந்தார். கொஞ்சம் கூட விரசமும் வன்முறைக் கலப்புமின்றிக் கருத்துக்களை முன்வைத்து சமூகத்தை முன்னேற்ற எழுதும் இவர். ஆழமாக விசயங்களைப் பார்க்கிறார். நிறைய வாசிக்கிறார் போலும், வாசித்தவற்றை நவீன உலகுடன் பொருத்தியும் பார்க்கிறார் என நினைத்து "மெய்க்கும் உண்மைக்கும் வேறுபாடு காணும் வகைக்கு அவரது அறிவு பரந்திருக்கிறது என வியந்தவாறு இன்றைய தினசரியைப் பார்த்த போது, நாவலர் மகா வித்தியாலயத்தில் இருந்து சென்ற வருடம் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர தேர்வுக்குத் தோற்றிய மாணவர் அனைவரும் சித்தியடைந்திருப்பதுடன் எல்லாத் துறைகளுக்குமாக இருபத்து இரண்டு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தேர்வாகி இருப்பதாகவும், பாராட்டியும் வாழ்த்தியும் இன்று காலை 9.00 மணிக்கு நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் வந்த செய்தி கண்டு உவகை கொண்டு, நானும் போகப் புறப்படவே, அவர்களுக்கு வழங்கி மகிழ்விக்கவென மனைவி காயத்திரி இனிப்பும் பொட்டலங்களும் வாங்கித் தந்து விட்டாள்.

காலைப் பிரார்த்தனைக்கு முன்னர் பாடசாலை சென்று விட வேண்டும் என எண்ணிப் பயணித்த போதும், நான் பாடசாலை சென்று அடைந்த நேரம் பிரார்த்தனைகள் ஆரம்பமாகி விட்டது. அதிபர் நேரக் காப்பில் அதிக அக்கறை எடுக்கும் இயல்புடையவர். பிரார்த்தனை முடிய இரண்டு மாணவர்கள் முன் வந்து அறநெறிக் கருத்துக்கள் கூறினர். வழமையாக பாடசாலையிலுள்ள முதுநிலை ஆசிரியர்களே இவ்வாறான கருத்துக்கள் கூறுவது, இருப்பினும் இப்போது உள்ள அதிபர் மாணவர்களைத் தயார்படுத்திக் கூற வைத்தமையை வியந்து கொண்டேன். கருத்துக்கள் கூறுபவர்கள் இயல்பாகவே அக்கருத்துக்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வர். கருத்துக்கள் கூறுவதற்காகக் கற்கத் தொடங்குவர். தேடல் வளரும் அத்துடன் மாணவர்களுக்கான, சபைக் கூச்சம் மேடைப் பயம் போய், பேச்சாற்றலும் ஒழுக்கத்தையும் வளர்த்துவிடும். ஆதலின் இவ்வகை முயற்சிகளைப் பின்பற்றி ஏனைய பாடசாலைகளிலும், மாணவர்களை, நாளைய சமுதாயத்தின் தலைவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும் எனவும் எண்ணிக் கொண்டேன்.

மாணவர்களாயிலும், மற்றவர்களாயினும் இறைவணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளைகளில், இயற்கைச் சக்திகளால் அவர்களது கவனம் குழம்புண்டு போகக் கூடாது எனும் பெருநோக்கில் சமூகத்தில் இயங்கி வரும் சமூக நற்பணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றத்தினரால் இம் மண்டபம் அமைத்துக் கொடுக்கப்பட்டிருப்பதும், அதன் அமைப்பாளர் மயூரன் ஐயாவும் வந்திருக்கலாம் அவரைச் சந்தித்து பேசலாம் என எண்ணி வந்த நான், இனிப்புப் பொட்டலங்களுடன் அவை நடுவே போக விரும்பாது பின் வரிசையில் இருந்து கொண்டேன். ஆசிரியர்களிடம், ஆசீர்வாதம் பெறுபவர்கள், தமது பிள்ளைகளுடன், அவர்களின் நண்பர்களையும் பாராட்டும் பெற்றார், மாணவர் தமக்கிடையே வாழ்த்தையும் பாராட்டையும் பங்கிடுவதால் ஏற்படும் ஓசை, ஆரவாரங்கள், மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது பாடசாலை வளாகம். எல்லார் முகங்களிலும் புன்சிரிப்பு, மகிழ்ச்சியின் பிரவாகம், குதூ கலிப்பு காணப்பட்டது. மயூரனைச் சந்திக்கவும் அளவளாவவும் எனப் புறப்பட்டு வந்த எனக்கு அவரைச் சந்திக்கவும் பேசவும் சந்தர்ப்பம் இல்லாமல் போனமையை எண்ணி வருந்திக் கொண்டேன். ஆயினும் அவரது புதுமைக் கருத்துக்களைக் கேட்கும் ஆவலுடன் காத்திருந்தேன். புதிய புதிய சிந்தனைகளுடன், சிறந்த சிந்தனைகளையும் மேற்கோள் காட்டிப் பிரசங்கிப்பது அவரது வழமை. இவ்வேளையில் பாடசாலை அலுவலகப் பணியாளன் வந்து "நிகழ்வினிடையே எல்லோர்க்கும் பகிர்ந்து வழங்கலாம் என இனிப்புப் பொதிகளை ஒன்று சேர்க்குமாறு அதிபர் கூறினார்" எனக் கூறி இனிப்புப் பொட்டலப் பொதியைப் பெற்றுச் சென்றான். இனிப்புப் பொட்டலங்களுடன் அசௌகரியமாக இருந்த என்னைப் போன்ற பலரும் அதிபரின் சமயோசித புத்தியை மெச்சிக் கொண்டனர்.

பாடசாலையில் சங்கீதம் பயிலும் மாணவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட ஆரம்பித்ததும் அமைதி எங்கிருந்துதான் வந்ததோ என வியக்கும் அளவிற்கு மாணவர்கள் நிரையாகவும் கை கூப்பியபடியும் அமைதி காத்தனர். பள்ளித்தாமரைகள் வெள்ளைச் சீருடையில் மண்டபத்துள் மலர்ந்திருந்தனர். சிறுவர்கள் நீலக்கால்சட்டையும், வெள்ளை மேலங்கியிலும் உயர்தர மாணவர்கள் வெள்ளைச் சீருடையிலும் காணப்பட்டனர். ஆசிரியர்களும் இவ்விழாவானது அவசர அவசரமாகப் பொங்கல் விழாவுடன் இணைந்து எடுக்கப்புடுவதால் தமிழ்க் கலாசார உடை அணிந்து வந்து மாணவர்களை நெறிப்படுத்திக் கொண்டிருந்தனர். புனிதமான ஆசிரியத் தொழிலில் இணைந்த ஆசிரியைகள் வெளிர் நீலத்தில் வெள்ளைப் பூக்கள் கொண்ட வேலைப்பாடுகளுடன் கூடிய சேலைகளில், ஆழக்கழுத்து வெட்டி அலங்கோலப்படாத சட்டைகளும் அணிந்திருந்தனர். இவ்விழாவுக்கெனப் புறப்பட்ட வேளை மனைவி காயத்திரி "பாடசாலையில் நடைபெறும் நிகழ்வாதலால் கலாசாரச் சீருடை அணிந்து செல்லுமாறு" வற்புறுத்தியதை எண்ணி ஒரு கணம் மனதுள் மகிழ்ந்து கொண்டேன். பெண்களுக்கே உரிய முன்னெச்சரிக்கை உளப்பாங்கை எண்ணி மகிழ்வும் அடைந்தேன். தொடர்ந்து பாடசாலைக் கீதம் இசைக்கப் பெற்றது. பிரதி அதிபர் இன்றைய நிகழ்ச்சியின் முக்கியத்துவம் பற்றியும், கொரோனாக் கிருமித் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கென இரண்டு வருடங்கள் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் எமது பாரம்பரியம், கலாசாரம் போன்றனவற்றை அடுத்த தலைமுறைக்குக் கற்றுத் தரும் நோக்கில் பொங்கல் விழாவுக்கான ஒழுங்குகள் செய்யப்பட்ட வேளை உயர்தர மாணவர்கள் சிறப்புச் சித்திகள் பெற்றுப் பலர் பல்கலைக்கழக அனுமதியும் கிடைக்கப்பெறவே தனியொரு விழாவாக கொண்டாடிப் பாராட்டும் பெருமையும் கொள்ள வேண்டிய நிகழ்வை பொங்கல் விழாவுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்துள்ளோம் எனக்கூறி, அவசர அவசரமாக ஏன் கூட்டப் பெற்றது என்பதற்கான காரணங்களையும் கூறி மாணவர்களை வாழ்த்தியும் சென்றார். சித்தியெய்திய மாணவர்களைத் திறமை அடிப்படையிலும், அவர்களது பெற்றோர்களையும் ஒழுங்கின் படி மேடைக்கு அழைத்த அதிபர், அவர்களுக்கான கௌரவங்கள் வழங்கவே, ஆசீர்வாதம் பெற முயன்றவர்களை முதலில் அவர்களின் பெற்றோர்களிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளுமாறு வழி நடத்தினர். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளால் தமக்குக் கிடைத்த கௌரவத்தைக் கண்டு உணர்ச்சி மேலிட்டால் கண்களைத் துடைத்தவாறு மேடையிலிருந்து இறங்கிச் சென்றனர். மாணவர்கள் தங்கள் தங்கள் ஆசிரியர்களிடமும் கௌரவம் பெற்றுக் கொண்டதும், நண்பர்கள் கட்டித் தழுவியும் கைகுலுக்கியும் வாழ்த்துத் தெரிவித்தனர். ஒரு சில நிமிடங்கள் மண்டபம் உணர்ச்சி வெள்ளத்துள் நனைந்தது.

நிகழ்ச்சியின் ஆரம்பமாக அதிபர் இந்தப் பிரதேசத்துப் பிள்ளைகளைக் கற்றுயரச் செய்த, ஆசிரியப் பெருந்தகைகள், மாணவர்களின் பெற்றோரும் சமூகத்தினரும், நலன் விரும்பியாகச் செயற்பட்டுவரும் மயூரன் ஐயாவிற்கும் வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் கூறிப் பெருமையடைகிறேன். இவர்கள் அனைவரினதும் கூட்டு முயற்சியாலும், அர்ப்பணிப்பும், நன்நோக்கினாலுமே வீரியம் பெற்று, இவ்வாறாக விரிவடைந்து எமக்குப் பெருமை தேடித்தந்தது. அந்த வகையில் மயூரன் ஐயா அவர்களை வயதாலும், பண்பாலும் மூத்தவரை இந்த மாணவர்களை வாழ்த்தவும் ஆசீர்வதிக்கவும் மேடைக்கு அழைக்கிறேன். இவரை நான் அறிமுகம் செய்வதிலும் பார்க்க நீங்கள் அதிகம் அறிந்து வைத்திருப்பீர்கள். அவ்வாறான தன்நலமற்ற சமூக சேவையாளர். இவர் எமது பாடசாலைக்கு ஆற்றி வரும் பணிகளும் அளப்பரியவை என்றார்.

எனது பெற்றோரை வணங்கி, இங்கு குழுமி இருக்கும் மாணவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் வணங்கி வாழ்த்தி அதிபர், ஆசிரியர் அனைவரையும் வணங்குகிறேன். வாழ்த்துகிறேன். இவர்கள் அனைவருக்கும் ஒப்பற்ற இறைவனின் அருளும் ஆசீர்வாதமும் முழுமையாகக் கிடைக்க ஆசீர்வதிக்கிறேன். பிரார்த்திக்கிறேன் எனப் பேச ஆரம்பித்த முறைமையே வித்தியாசமாகவும் புதுமையாகவும் இருப்பது கண்டு அவரது கருத்துக்களை உள்வாங்க மிகவும் ஆர்வமாகினேன்.

எங்கோ பெருமழை பெய்திருக்க வேண்டும். ஆறானது மலை உச்சியில் உருவாகி ஓடி வந்தது. கற்பாறைகளும், திட்டியும், திடலும், மேடும் குளியும் அது வந்த பாதையில் காணப்பட்டதால் எக்காள மிட்டு இரைந்து, நுரைதள்ளி, கரையெங்கும் நீரை அள்ளித் தெளித்து, நிமிர்ந்து நின்ற பெரிய மரங்களையும் வேரோடு புரட்டிப் போட்டவாறு ஒரு வாலிப மிடுக்கோடு ஓடிக் கொண்டிருந்தது. இன்னொன்று தடங்கல் ஏதுமின்றி சுகமாய் பயணித்துக் கொண்டிருந்தது. அமைதியாக, அணைகளிடையே, அடங்கி வழியில் காணப்பட்ட நீர் நிலைகளை நிரப்பிக் கொண்டு சோலைகளை வளப்படுத்திக் கொண்டும் ஓடியது இரண்டு ஆறுகளும் கடலை நோக்கியே ஓடிக் கொண்டிருப்பினும், கடலையடைய முன்னர் சந்தித்துக் கொண்டன. புவியியலாளர் இப்பிரதேசத்தைக் களப்பு என்றும் களிமுகம் என்றும் கூறுவர். இரண்டும் கலந்ததால் களிப்புற்றன. பொங்கிப் பிரவாகித்தன. ஆடி அலைந்தன, ஆட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டன. துள்ளித் குதித்தன. வெற்றிக் களிப்பில் ஆட்டம் ஓய்ந்து அடக்கிப்போயின. சங்கமித்துக் கொண்டன. வென்றது எது தோற்றது எது என இல்லாமல் இரண்டுமே வென்று இரண்டுமே தோற்று ஆனந்தக் கிறக்கத்தில் அடங்கிப்போய் கடலுடன் சங்கமித்தது. செல்லும் வழியில் காணப்பட்ட இடர்களையும் தடைகளையும் தாண்டி அல்லது தகர்த்துக் கொண்டு ஆறானது இலக்கு நோக்கிப் பயணித்தது போல மாணவர்கள் நீங்களும் வளரும் காலத்தில் இலக்குகளை அடைய முயல வேண்டும். அந்தக் கணத்திலேயே கரை ஒன்று வகுத்துக் கொள்ளவும் வரையறுத்தும் கொண்டன. அப்போதே கரு ஒன்றும் உருவானது. வருத்தி வளர்ந்து, அலைத்து உதைத்தபோதும் கரையும், கரையவில்லை கருவறையும் குலையவில்லை. அன்னை பூமி எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு கங்கை புனிதமாகவும், தீர்த்தமாகவும் குடிக்கவும் குளிக்கவும் காத்துக் கொண்டிருந்தாள். பார்த்துக் கொண்டு மிருந்தாள். இவ்வாறு தான் ஒவ்வொரு அன்னையும் பிள்ளை தரும் வலியையும் துயரையும் வேதனையையும் மகிழ்வையும் தாங்கிக் கொண்டு பிள்ளையின் ஒவ்வொரு படி நிலை வளர்ச்சிக்கும் காரணமாகிறாள். காவலும் ஆகிறாள். ஆசிரியமிடயிருந்தோ, நீங்கள் தேடி அறிந்தவற்றையோ வாழ்வில் பிரயோகிக்க முயலும் போது கரையாயிருந்து காத்தும் வருகிறாள். நாங்கள் உயர இருக்கவேண்டும் என்பதற்காகத் தன் தோளிலும் மார்பிலும் சுமந்த அப்பா எமது வளர்ச்சிக்காக பொருள் தேடிப் போன வேளைகளிலும், இன்றைய பொருளாதார தேவைகளுக்காக அவளும் வேலைக்குப் போய் உழைத்து வருவதால் அம்மையப்பனும் ஆகின்றனர். இவர்களின் அர்ப்பணிப்பும், தியாகமும், உங்களின் ஊக்கமும் முயற்சியும், உங்கள் வாழ்வில் அடுத்த நிலையில் இன்று வைக்கின்றது. நீங்கள் கௌரவப்படுகிறீர்கள். பெற்றோரையும் மேடையேற்றி அதிபர் கௌரவித்தார். உண்மை உணர்ந்து அவர் செயற்ப்பட்டிருக்கிறார். நீங்கள் நாளைய நாட்டின் தலைவர்கள் வளர்ந்து வந்து இப்பிரதேசத்தை வளப்படுத்த வேண்டும். நாமும் எம்மாலானவைகளைச் செய்து தருவோம். உதவி தேவைப்படும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து வழங்கி வந்த நாம், உயர் கல்விக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் அனைவருக்கும் எமது சேவையை விஸ்தரிக்க உள்ளோம் என்பதை அறிவிப்பதுடன், நீங்கள் அனைவரும் கற்றுயர்ந்து காலத்தை வெல்ல வேண்டும் என வாழ்த்துகிறேன் எனக்கூறி பெருத்த கரகோசத்தின் மத்தியில் தனது வாழ்த்துரையை முடித்தார்.

அதிபர் நன்றியுரையும் வாழ்த்தும் கூற ஆரம்பித்த நேரம் அலுவலக உதவியாளர் "கல்வித் திணைக்களத்திலிருந்து அதிகாரி வந்து அலுவலகத்தில் இருக்கிறார். உங்களை வரட்டாம் என்றார் மகிழ்வுடன் வாழ்த்த எழுந்த அதிபரின் சிவந்த முகம் கோபத்தில் மேலும் சிவந்தது. ஒரு கருமமும், முழுமையாகவும் சந்தோசமாகவும் செய்யவிடாயினம் என்று புறுபுறுத்துக் கொண்டு "பாராட்டு விழா நிகழ்வில் இருப்பதாகவும் பின்னர் வருவேன்" எனக்கூறி அனுப்பி விட்டு சிறந்த பெறுபேறுகள் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவர்களை வாழ்த்திவிட்டு, இவர்கள் வயதொத்த இப்பிரதேச மாணவர் ஆரம்ப இடைநிலைக் கல்வி எங்களிடம் கற்றுவிட்டு, உயர்கல்விக்கென பெரும்செலவு செய்து நகர்ப் பாடசாலைகளில் சென்று படிக்க, எங்களுடனே இருந்து எங்களிடம் இருக்கும் வளங்களைக் கொண்டு நாம் கற்றுத்தர, ஊக்கத்துடன் படித்த எமது பிள்ளைகள் நகர்ப்பாடசாலைகளுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றவர்களுக்குச் சவாலாக, அதியுயர் பெறுபேறுகளுடன் சித்தியடைந்து உள்ளனர். குடும்ப மந்த பொருளாதார நிலையிலும், வளம் குறைந்த எமது பாடசாலையில் மயூரன் ஐயா போன்றவர்களின் உதவியுடன், விஷேச வகுப்புகள் இலவசமாகவே வழங்கிய ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன் இவர்கள் அடைந்த பெறுபேறுகள் எம்மை மேலும் ஊக்குவிக்கின்றது. தொடர்ந்தும் இங்கு படித்து வரும் மாணவர்களுக்கு "எம்மாலும் முடியும் என்ற தன்நம்பிக்கையையும், சாதிக்க வேண்டும் என்ற துடிப்பையும் ஏற்படுத்தியிருக்கும். மயூரன் ஐயா அறிவித்தது போல வீட்டு வறுமையை எண்ணிப் படிப்பை விட்டுட்டுக் கூலி வேலைகளுக்குப் போய்விடாதீர்கள். கற்று உயர்ந்தீர்கள் என்றால், அவர்கள் மேலும் மேலும் உதவுவார்கள். கல்வியின் மூலமே வீட்டுப் பொருளாதாரத்தையும், நாட்டையும் வளப்படுத்தலாம் என்று ஆசி கூறி அமர்ந்தார்.

மாணவர்கள் தங்களிடையே வாழ்த்துக்கள் பரிமாறியும், ஆசிரியர்களிடம் ஆசீர்வாதம் பெற்றும், சமூக மேம்பாட்டாளர்களின் பாராட்டுக்களும் பெற்றுக்கொண்டிருக்க பெற்றாரும் அதிபரும், ஆசிரியர், நலன் விரும்பிகளுடன் கலந்துரையாடல் ஆரம்பித்த வேளை உப அதிபர், "நேரம் கடக்கிறதாம் தான் அலுவலகம் போக வேண்டுமாம் உங்களைச் சந்திக்க வேண்டுமாம், வரட்டாம் என்று கூறவே, "வேண்டுமாயின் அவரை அலுவலகம் செல்லச் சொல்லுங்கள், நான் பெற்றோர் ஆசிரியர்களுடனும் நலன் விரும்பும் பெரியார்களுடனும் சந்திப்பில் இருக்கிறேன்" என்றும் திரும்ப, இனிமேலும் பாடசாலைக்கு வரவிருக்கும் வேளைகளில் நேர ஒதுக்கீடு பெற்றுக் கொண்டும் வரட்டாம் என்றும் அழுத்தியும் கூறி விட்டார்.

இவ்வாறான வாழ்த்தும் குதூகலமும் பொங்கும் ஆனந்தமும் கொண்ட பெருமைசார் நிகழ்வொன்று நடந்து கொண்டிருக்கும் வேளையில், விரும்பியோ சந்தர்ப்ப வசமாகவோ வந்துள்ள அதிகாரி எவ்வகை மகிழ்வு உணர்வும் காட்டாமல் இயந்திரத்தனமாக சுற்று நிருபங்களுக்கு அமையச் செயல் ஆற்றுகிறாரே, களநிலைமையை அனுசரித்துப் போகும் மனிதப் பண்பு கூட இல்லாமல் போய்விட்டதே, மற்றவர் மகிழ்வில் பங்கு கொண்டு மகிழ்வது போலக் காட்டிக்கொள்ளும் வகையிலாவது நடந்து கொள்ளத் தெரியாத அதிகாரிகள், கந்தோரில் இருந்து, இவ்வருட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் நாவற்குழி மகா வித்தியாலயம் நூறு விகிதச் சித்தி பெற்றது என அறிக்கை எழுதி வைத்தால் மட்டும் போதுமா? அதிகாரமிடுக்குடன் அதிபர் அறையில் காத்திருக்கும் அதிகாரியையும், நீ என்ன செய்தாலும் உன்னால் ஆனதைச் செய் " என்ற எண்ணத்தில் பாடசாலையே கொண்டாடிக் கொண்டிருக்கும் நிகழ்வினை நெறிப்படுத்திக் கொண்டிருக்கும் அதிபரின் ஆளுமையையும், நிதானத்தையும் எண்ணி மகிழ்ந்து, மயூரன் ஐயாவைச் சந்திக்கப் போய்க் கொண்டிருக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தென்னிந்திய சினிமாவும், இளையோர் நடத்தை மாற்றமும்



ச. சந்தோஸ்,
சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
K.K.P Youth Club

**ஒரு சமூக விவகாரமாக சினிமா**

இன்று உலகம் முழுவதும் மனித வாழ்வின் போக்கினை மாற்றி அமைத்து வரும் சமூக சவால்கள் தொடர்பில் பெருமளவு அக்கறை செலுத்தப்படுகின்றது. இன்றைய நவீன சமூகங்களில் சினிமா வளர்ந்து வரும் ஒரு சமூக விவகாரமாக (Social affair) உள்ளது. சமூக விதிகளை ஏற்றுக்கொண்டு சமூகத்தில் ஒன்றிப்போன சமூக மரபுகள், பாரம்பரியங்கள் ஆகியவற்றை பின்பற்றும் வழமையான போக்கு ஒவ்வொரு சமூகத்திலும் காணப்படுகின்றது. அப்போக்கானது பல்வேறு சவால்களினூடாகத் தூண்டப்படுகின்றது. அந்த வகையிலே தற்போது சினிமாவானது மனித நடத்தையிலே (Human behavior) செல்வாக்குச் செலுத்தியிருப்பதைக் காணக்கூடியதாய் உள்ளது. ஒரு சமூகத்தின் நீதியான வாழ்விற்கு சமயங்கள், சட்டங்கள், ஒழுக்கப்போதனைகள், அறநெறிக்கருத்துக்கள் என்பன வழங்குகின்றன. இவ் அடித்தளங்களே சினிமாவினூடாக ஆரம்ப காலத்திலே மக்களை வழிப்படுத்தி வந்தன. மக்களின் கருத்தியல்களில் செல்வாக்குச் செலுத்தும் வலுவான சமூக ஊடகமாகக் கருதப்படக்கூடிய சினிமா ஆனது எமது உள்ளூர் சமூகத்திலே பலவிதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணப்பாடுகளையும், தோற்றப்பாடுகளையும் ஏற்படுத்தி இருக்கின்றது. மக்களின் மனப்பாங்குகளையும், கருத்தியல்களையும் சினிமா என்ற ஊடகம் மாற்றியமைப்பதுடன் குறிப்பாக எம் சமூகத்தின் அறிவு, ஆளுமை, ஆன்மீகம், ஒழுக்கம், பண்பாடு போன்றவற்றில் சிதைவுகளை ஏற்படுத்தி வருகின்றது. சினிமாவில் ஊடக அறநெறி சார்ந்த பார்வை குறித்த தேவை இன்று உணரப்படுகின்றது. அந்த வகையில் தென்னிந்திய சினிமாவின் ஊடாக எம் இளையோர் சமூகக் கட்டமைப்பை (Social Structure For Younger) புரிந்து கொள்ளுதல் மிக அவசியமாகும். தென்னிந்திய சினிமாவின் தாக்கம் அதிகளவு வடகிழக்கிலே குறிப்பாக தமிழ் இளைஞர்களே எல்லை மீறிச் செல்லும் தன்மையை நாம் அவதானிக்க முடிகின்றது. தென்னிந்தியா–இலங்கை உறவானது வரலாற்று ரீதியாக நீண்ட கால தொடர்ச்சி தன்மையுடன் ஒருங்கிணைந்த சமூக கட்டுமானத்தை (Integrated Construction) ஒத்ததாக உள்ளது. தென்னிந்திய சினிமாவின் வழியாக இளையோர் தொடர்பிலான எவ்வாறான சித்தரிப்புக்கள் உருவாக்கப்படுகின்றன என்பதோடு தென்னிந்திய சினிமாவில் இளையோரின் கதாப்பாத்திர வகிபாகம், உடல் மொழி, குறியீடுகள், நடத்தை மனப்பாங்குகள், வசனப்பிரயோகம், ஆடையமைப்பின் தன்மை என்ற தளத்திலே இளைஞர் பற்றிய மக்களின் புலக்காட்சி (Perceptions), வெளிப்படுத்தல்கள், ஆழ்மனப்பதிவுகள் சினிமா என்ற ஊடகத்தின் மூலமாக எவ்வாறான சமூக நிலைமாறும் (Social transformation) தன்மையை ஏற்படுத்துகின்றது என்பதை நாம் விமர்சன ரீதியாக நோக்குவது காலத்தின் தேவையாகும்.

**இளைஞர் நடத்தை மாற்றமும் பகுப்பாய்வும்**

நவீன சமூகத்தின் மிக முக்கிய தொடர்பாடல் தளமான ஊடகங்கள் இளையோர் தொடர்பிலான இருமுகத்தன்மையான காண்பியல்களையும், சிந்தனை மாற்றத்தினையும், பதிவுகளையும் வழங்கிக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக காட்சி ஊடகமான சினிமா வெகுசனப்பரப்பில் இளையோரை பிரதிநிதித்துவம் செய்வதிலும் மக்களிடம் "இளைஞர் என்றால் இப்படித் தான்" என்ற பிரதிமைகளை உருவாக்குவதிலும் வலுவான தாக்கத்தை ஏற்படுத்துவதோடு சமூக வாழ்வியலை மீள்வடிவமைப்பு செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தென்னிந்திய சினிமா இளைஞர் பிரதிநிதித்துவத்தை நியம இசைவின்மையுடைய (Normlessness) பாத்திரங்களாகவே வடிவமைக்கப்படுவது பொது நிலையில் அவதானிக்கப்பட முடிகின்றது. உள்நாட்டு யுத்தத்திற்கு முன்னரான எமது புலத்தின் நியமக் கட்டுப்பாடுகள் (Norms Control) காலப்போக்கில் நியம இசைவின்மையாக மாறுவதற்கு சினிமா என்ற ஊடகத்தின் பங்கும் இன்றியமையாதது. இதன்வழியாக இளையோரின் தேவைகள் அதிகரிக்கப்பட்டதோடு சமூகக் கட்டுப்பாட்டு பொறிமுறை (Social Control Mechanism) தளர்வடைந்ததால் இளைஞர் மீதான ஒழுங்கமைந்த கட்டுப்பாட்டு செல்வாக்கைப் பிரயோகிக்கத் 'தவறியமையாலே சமூகத்தில் வன்முறை, வன்முறைக்குழுக்கள், வன்முறை கலாசாரங்கள், குற்றங்கள், விலகல் நடத்தைகள் போன்றன உருவாக பின்னணிக் காரணமாக அமைந்தது. தென்னிந்திய சினிமாவின் பிரதிபலிப்புக்களின் ஊடாக ஏற்பட்ட சமூக மாற்றங்கள் இடர் சமூகத்தை உருவாக்கிக்கொண்டிருப்பதோடு பிறழ்வு, பண்பாட்டுச் சிதைவுகள், சமூக ஒழுங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருங்கின்மையாக மாற வேண்டிய நிலைமையானது எம் முக்கிய சமூகப் பிரச்சினையாக (Social Issues) அடையாளப்படுத்தப்படுகின்றது. ஊடகங்களின் ஊடான மக்களின் சமூக வடிவமைப்பு மாற்றம் அதிகமாக இளையோரிடத்தில் இருப்பதால் நவீனத்துவ போக்கின் (Modernist) பிடியில் சிக்கிய சமூகமாகவும், மீள் கட்டுமானம் (Recongtruction) செய்ய முடியாத நியமவடிவமைப்பற்ற சமூகமாக மாறிவருவது தொடர்பான சூழ்நிலையை ஆழமாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

யுத்தத்தினால் கட்டுடைந்த எம் சமூகமானது நியமவழிகாட்டல் (Norm Guidance) இன்றி பல விலகல் நடத்தைக்கு (Deviation) உட்பட்டு சமூக முறைமையின்றி (Social system) நோயியல் சமூகமாக இருந்த சூழ்நிலையிலே தென்னிந்திய சினிமாவின் ஊடான மாற்றங்கள் எம் இளைஞர்களிடையே புதிய சமூகப்பிரச்சினைகளைத் தோற்றுவித்ததன் அடிப்படையிலே கட்டுடைந்த சமூகமானது கட்டவிழ்ப்பையே விரும்பும் சமூகமாக மாறி இருப்பதற்கு தென்னிந்திய சினிமாவின் செல்வாக்கு மக்களின் ஆழ்மனதில் பதியப்படுத்தி விடுவதோடு பெறுமதியான சொற்களுக்கு அர்த்தம் இல்லாமல் (அன்பு, அகிம்சை, மனிதாபிமானம்) புனிதம் உடைக்கப்பட்டு மக்களின் சமூக கட்டமைப்பு, சமய ஆன்மீகம், பண்பாடு சிதைவடைந்து செல்ல சமூக உருவாக்கத்திலே இச் சினிமா பல எதிர்மறையான கருத்தாக்கங்களையும் நிலைமாறும் தன்மை கட்டமைப்புடைய சமூகத்தை உருவாக்குகின்றது.

**முடிவுரை**

சினிமா என்ற ஊடகத்தின் மூலம் நவீனத்துவ மாயைகளைக் கட்டவிழ்த்து நேரான சமூக உருவாக்கம் ஏற்படவும், சமூக இசைவின்மைக்கு பின்னூட்டலாக இருக்கும் இச் சினிமா ஊடகம் இளையோரை ஒன்றுதிரட்டி கூட்டிணைந்த சமூகமாக வலுப்பெறுவது அவசியமாகும். அத்தோடு இளையோர் மத்தியிலே உருவாகிய பண்பாட்டு சிதைவுகளையும் இளையோர் சவால்களையும், அதனைத் தீர்ப்பதற்கான காரணங்களை காட்சிப்புல ஊடகமாகிய சினிமாவிலே வெளிப்படுத்தி கதாநாயகர் பாங்கு, வன்முறைக் கலாசாரம் என்பன நிரந்தரமற்றவை என்ற முற்போக்கான எண்ணம் ஒவ்வொரு இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது காலத்தின் கனதியாகும்.


**கலை மன்றத்திற்கான உதவி வழங்கல் - 2021**

**[பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடக்கு மாகாணம்]**

இளைஞர் கலைக்கழகம் – குருநகர்

(வயலின் – 01)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயன்பு

**அ. பிறாங்கிளின் றூஸ்வெல்ட்**
பாசையூர்.
யாழ்ப்பாணம்.

இரக்கமில்லை மாந்தரைப் பிடிக்கவில்லை
இன்னல் தந்த பாடத்தை மறக்கவில்லை
இயலாமையில் நான் வருந்தவில்லை
இவ்வுலகில் இல்லாதோர் நிலை மாறவில்லை.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணவில்லை
காரணம் ஏழைகள் சிரிப்பதே இல்லை
இதயமுள்ளோர் திருந்திவாழ எண்ணவே இல்லை
இங்கு சொன்னவைகள் எதுவுமே பொய்யும் இல்லை.

இராப்பகல் அழுதும் கண்ணீர் முடியவில்லை
ஆணும் பெண்ணும் சரிபாதியில்லை
ஐயகோ நீதிமன்றிலும் சமநீதியில்லை
ஆடவர்க்கும் பெண்களுக்கும் அடக்கம்மென்பதில்லை.

ஆண்டவனில் நம்பிக்கை சிறிதளவுமில்லை
அவனின்றி அணுவும் அசைந்தாடவில்லை
அழுதிடும் உள்ளத்தைத் தேற்றுவாரில்லை
ஆதரவற்றோர்க்கு யாரும் உதவுவதில்லை.

ஆசையை அடக்கப் பழகுவதில்லை
சாதிச் சாக்கடைநாற்றம் ஓய்ந்திடவில்லை
தாயிற்கு முன்னால் தங்கத்திற்கு மதிப்பில்லை
தாயன்புக்கு நிகராய் தரணியில் ஏதுமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சாலைகளில் ஊழியர் பாதுகாப்பும் தொழிற்சாலை உளவியலின் பங்களிப்பும்.



**G. Kugashini**
Final year Psychology
University of Jaffna.

இலங்கை பல்வளம் பொருந்திய நாடு. இங்கு நிலவளம், நீர்வளம், கனியவளம் அத்தோடு மனிதவளமும் சிறந்த முறையில் காணப்படுகின்றது. இந்த வகையில் இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகக் காணப்படுவதோடு, இலங்கையின் அபிவிருத்திக்கு உழைக்கும் வர்க்கமான ஊழியர்களின் செல்வாக்கு முதன்மையானதாகும். ஊழியர் எனப்படுபவர் "ஒரு வேலையை வேறொரு நபரிற்காக அல்லது நிறுவனத்திற்காக சம்பளம் அல்லது கூலியைப் பெற்றுக் கொண்டு செய்து முடிப்பவராவார்." (Cambridge Dictionary) ஊழியர்கள் எனும் போது அரச மற்றும் தனியார் ஊழியர்கள் என்ற வகையில் பிரித்து நோக்கமுடியும். ஊழியர்கள் நிறுவன வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் அயராது பாடுபடுகின்றார்கள். அந்தவகையில் ஊழியர்களின் நலனைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானதாகும். உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்பிரல் 28ஆம் திகதி உலக வேலை மற்றும் பாதுகாப்புக்கான தினத்தைக் கொண்டாடுகின்றார்கள். இத்தினமானது ஊழியர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

ஊழியர்களின் பாதுகாப்பு என்பது "ஊழியர்களின் உடல்நலம், உளநலம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பணியிடத்தில் பாதுகாப்பான சூழல், பாதுகாப்பான உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பான நடைமுறைகளை வழங்குதலைக் குறிக்கும்." ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நிறுவனங்கள் நிச்சயம் ஒரு தார்மீக கடமையைக் கொண்டிருக்கும் போது பாதுகாப்பற்ற பணியிடமுதலாளிக்கு கடுமையான சட்ட மற்றும் நிதி விளைவுகளையும் ஏற்படுத்தும் இந்தவகையில் இலங்கையில் மொத்தம் 79,667,695 ஊழியர்களும் (Employed Person), 458359 ஊழியரில்லாதோரும் (Unemployment Person) காணப்படுகின்றார்கள். இவர்களது சராசரி முறையே EP51, UEP 5.80 (http://Trading economics.com) ஆகக் காணப்படுகின்றது.

ஊழியர்களின் பாதுகாப்புக் குறித்த சட்டவாக்கங்கள் இலங்கையில் எந்நிலையில் உள்ளதென்பது முதன்மையான விடயமாகும். அதுமட்டுமல்ல பணியாளருக்கான சட்டங்கள் எத்தகைய விடயங்களுக்காக உருவாக்கப்பட்டன, எப்போது உருவாக்கப்பட்டன என்பது குறித்தும் அறிந்திருத்தல் அவசியமானதாகும். National labor Relationship Act 1935 July தோற்றம் பெற்றது. இச்சட்டங்கள் கீழ்வரும் விடயங்களிலிருந்து ஊழியரைப் பாதுகாக்க உருவாக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பாதுகாப்பு அபாயங்கள் (Safety Hazards)
2. உடலியல் அபாயங்கள் (Physical Hazards)
3. உயிரியல் அபாயங்கள் (Biological Hazards)
4. இரசாயனவியல் அபாயங்கள் (Chemical Hazards)
5. பணிச்சூழலியல் அபாயங்கள் (Ergonomic Hazards)
6. நிறுவனம் சார் அபாயங்கள் (Organizational Hazards)

**பாதுகாப்பு அபாயங்கள்** என்பது பாதுகாப்பற்ற நிலைமையில் பணியாளர் பணியாற்றும் போது ஏற்படுகின்ற அசாதாரண நிலைமைகளால் காயம் அல்லது மரணம் நிகழ்தலை இது குறிக்கும், மின்கசிவு, மின்தூண்டல், உயரத்தில் வேலை செய்தல், அசையும்/நகரும் இயந்திரப் பாகங்களால் ஏற்படும் பாதிப்பு, முறையற்ற வயரிங் அமைப்புக்கள் போன்றன இதில் அடங்கும்.

**உடலியல் அபாயங்கள்** எனும் போது ஊழியர்களின் உடலில் தாக்கத்தை ஏற்படுத்தும், சுற்றுச்சூழலுக்கு நேரடித் தொடர்பு இல்லாமல் தீங்கு விளைவிக்கும் காரணிகளை இது குறிக்கும்.

**உயிரியல் அபாயங்கள்** எனும் போது மருத்துவ ஆய்வுகூடங்கள், விஞ்ஞான ஆய்வுகூடங்கள், வைத்தியசாலைகள் போன்றவற்றில் விலங்குகள், நுண்ணங்கிகள், விஷக்கிருமிகள், நச்சுப் பதார்த்தங்களால் பணியாளருக்கு ஏற்படக்கூடிய உயிரியல் ரீதியான அச்சுறுத்தல் ஆகும். விஷத்தாவரங்கள், உடற்திரவங்கள், பூஞ்சை, பக்ரீரியா மற்றும் வைரஸ், பூச்சிகடித்தல் (Insect Bites) விலங்குகள் மற்றும் பறவைகளின் நீர்த்துளிகள் (Animal and Birds Dropping) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**இரசாயனவியல் அபாயங்கள்** எனும் போது பணியிடத்தில் இரசாயனக்கலப்பு மற்றும் இரசாயன தயாரிப்பு எந்த வடிவத்தில் மேற்கொள்ளும் போது (Solid, liquid and gas) இவ் இரசாயனங்களால் ஊழியர்களுக்கு ஏற்படும் அபாயங்கள் இதனுள் அடங்கும்; பதார்த்தங்கள் (சுத்தம் செய்யும் பூச்சுககள் மற்றும் கரைப்பான்கள்) பூச்சிகொல்லி, வாயுக்கள், (Acetylene, Propane, Carbon monoxide and Heliam), தீப்பற்றக்கூடிய பொடென் (Gasoine Solvents and Explosive Chemicals) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**பணிச்சூழலியல் அபாயங்கள்** எனும் போது பணிபுரிகின்ற சூழலில் காணப்படும் வேலைகளின் தன்மை (Type of Work), உடல்நிலை (Body Position) மற்றும் வேலைத்தள நிலைமைகள் (Working Conditions) போன்றவற்றால் ஊழியர்களின் உடலில் ஏற்படுத்தப்படும் நெருக்கடி (Strain). இது குறுகிய கால மற்றும் நீண்ட காலப் பாதிப்புக்கள் தசைகளுக்குள் வலி தொடக்கம் முள்ளந்தண்டு வட பாதிப்பு வரை தாக்கம் செலுத்தும்; முறையற்ற முறையில் அமைந்த பணிநிலையங்கள் மற்றும் நாற்காலிகள், அடிக்கடி அதிகபாரம் தூக்குதல், மோசமான உடற்தோரணை ( Poor Posture). மோசமான இயக்கங்கள், தொடர்ச்சியாக அதிகவலுவை பிரயோகித்தல், அதிகபடியான அதிர்வு போன்றன.

**நிறுவனம் சார் அபாயங்கள்** எனும் போது மனஅழுத்தம் (Short Term Effect), நெருக்கீடு (Long term Effect) போன்ற அபாயங்களுக்கு, பணிச்சுமையைக் கட்டுப்படுத்தாமை மற்றும் மரியாதை அற்ற நிலை என்பன இதனுள் உள்ளடங்கும்; அதிகபடியான பணிச்சுமை (Work load Demand),


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைத்தள வன்முறை, அதிக தீவிரத்தன்மை/வேகம் (High intensity/ Pace), மரியாதைக் குறைவு, நெகிழ்ச்சித்தன்மையின்மை, பாலியல் துஸ்பிரயோகம், சமூக ஆதரவு மற்றும் உறவு பாதிப்பு போன்றன இதனுள் அடங்கும். இவ்வாறு நிறுவன அமைப்பானது நிறுவன வளர்ச்சி, உயர்ச்சி, உற்பத்தி என்ற வகையில் இயங்காமல் ஊழியர்களது நலனிலும் அக்கறை செலுத்த வைப்பதே இலங்கை ஊழியர்களின் சட்டவாக்கங்களின் முக்கிய நோக்கமாகும். இவ் ஊழியர் சட்டவாக்கங்கள் ஊழியர்கள் ஒரு தொழிற்சாலைக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்பதனை நிரூபிக்கின்றது. எனினும் சில தொழிற்சாலைகளில் ஊழியர்களுக்கான மதிப்பும், அங்கீகாரமும் கிடைப்பதில்லை. " சட்டங்கள் சட்டப் புத்தகத்தைக் கனம் நிறைந்ததாக ஆக்கினாலும் ஊழியர்களது மனம் நிறைந்ததாகவில்லை". இத்தகைய நிலைகளை சீர்செய்ய தொழிற்சாலைகள் உளவியலின் தேவையை முன்னுணர்ந்து கொண்டது. தொழிற்சாலைகளில் உளவியலின் பங்களிப்பு எத்தன்மையது என்பது தொழிற்சாலை உறவியலின் தோற்றத்தின் வாயிலாக உணர்ந்து கொள்ளமுடியும். தொழிற்சாலை உளவியல் என்ற துறையானது 1913ஆம் ஆண்டில் குயூகோ மான்ஸ்டர்பர்க் (Hugo Munsterberg) என்பவரின் "உளவியலும் தொழிற்சாலை செயற்திறமையும் (Psychology and Industrial Efficiency ) என்ற நூலின் வெளியீட்டைத் தொடர்ந்து உருவானது. இந்த நூல் தான் உளவியல் வல்லுநரால் எழுதப்பட்ட முறையின் தொழிற்சாலை உளவியல்நூல் ஆகும்.

தொழிற்சாலை உளவியல் என்பது "உயிர்வாழ வைக்கும் செயன்முறையில் மனிதனுக்கும் தொழில் உலகத்திற்கும் இடையிலான உறவு பற்றிய விஞ்ஞான ரீதியான கற்கை ஆகும்" (Guion, 1965) இத்துறையானது தொழிற்சாலையுடன் தொடர்புடைய மனித நடத்தைகளை முறையாக ஆராய்கிறது. மனிதர்களின் தேவைகளையும், விருப்பங்களையும் ஆராய்வதற்கு தொழிற்சாலை இன்று நல்ல ஆய்வுக்களமாக இருந்து வருகிறது. மனிதர்கள் தொழில்புரியும் இடமெல்லாம் தொழிற்சாலை உளவியலின் பங்களிப்புக் காணப்படுகின்றது.

தொழிற்சாலைகளில் உளவியல் சோதனைகள் நிகழ்த்துவதில் தொழிற்சாலை உளவியல் பங்களிப்புச் செய்கிறது. அதாவது ஆளுமைத் தன்மை எத்தகையதாக உள்ளது. வேலைக்கும் ஊழியர்களது ஆளுமைக்கும் பொருத்தப்பாடு காணப்படுகின்றதா, தொழிற்சாலை சூழல் ஊழியர்களுக்கு பாதுகாப்பானதா (உடல் மற்றும் உளரீதியாக) என்பதனை அறிதல், மனஅழுத்தம், மனச்சோர்வு போன்ற உளநலமின்மை எத்தகையதாகக் காணப்படுகின்றது. உளத்திறமைச்சோதனை பொறித்திறமைச் சோதனை, உள இயக்கத்திறமைச் சோதனை, காட்சிசார் திறமைச்சோதனை போன்றன குறிப்பிடத்தக்கவை ஆகும். தொழில் நிலையத்தில் தொழில் புரிபவர் ஏற்கின்ற பொறுப்புக்கு பொருத்தமான மக்களை தேர்ந்தெடுப்பதற்கும் தொழில் உளவியலாளர்கள் சோதனை முறையைப் பயன்படுத்துகின்றனர்.

உதாரணமாக: Abstract Reasoning, Mechanical Reasoning Test இனைக் குறிப்பிடமுடியும்.

இவர்கள் தொழில்சார் மனஉறுதித்தன்மையையும் ஆராய்கின்றனர். தொழிற்சாலை உளவியல் தொழில்புரியும் மனிதர்களின் தேவைகள், விருப்பங்கள் அவர்களின் தொழில்சார் ஊக்கம் என்பவற்றை உளவியல்கொள்கைகளை அடிப்படையாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு ஆராய்ந்து தீர்வு காண்கிறது. ஒரு நபருக்கு ஒரு தொழிலால் பெறப்படுகின்ற வருமானம் என்பது மாஸ்லோவின் தேவைக் கோட்பாட்டைக் கொண்டு நோக்கும் போது உடலியற்தேவையான பசி, தாகம் போன்றவற்றைப் போக்கவும் பாதுகாப்பு மற்றும் புகழ் என்பவற்றைப் பெறவும் அவசியமானதாகும். தேவை நிறைவேற தொழில் நிறுவனம் மூலம் ஈட்டப்படும் வருமானம், கௌரவம் போன்றன ஒரு ஊழியரை வேலையில் உறுதியாக இருப்பதில் செல்வாக்கு செலுத்தும் காரணியாகும்.

வாடிக்கையாளர்களின் தேவை, விருப்பம் என்பவற்றினை ஆராய்ந்து அதற்கேற்ப உற்பத்திகளை வாடிக்கையாளர் மற்றும் புதிய வாடிக்கையாளர்களைக் கவரக்கூடிய வகையில் உற்பத்தி செய்தல் மற்றும் எத்தகைய விளம்பர நுட்பங்கள், காட்சிப்படுத்தல் நுட்பங்கள் பயன்படுத்தலாம் என்பதனையும் அறிந்து கொண்டு செயற்பட வைத்தல் தொழிற்சாலை உளவியலின் பங்களிப்பு ஆகும்.

பெரியளவிலான நிறுவனங்களில் வேலை செய்யும் தனிமனிதர்கள் தொடர்பாக ஆராயப்படுகின்றது. அதாவது தொழிலைக் கண்காணிப்பவர்களின் திறமை, முகாமையாளர் குழுவிடம் தொழிலாளி தங்கள் குறைகளைக் கூறுவதற்கான வழிகள், கீழ்த் தொழிலாளிகளுக்கு மேலதிகாரிகளுக்குமுள்ள உறவு நிலைகள் அவர்களது கூட்டுறவு மனப்பான்மை, தொழிலாளர்களின் நலனுக்காகச் செய்யும் செயற்பாகளின் தன்மை போன்ற மக்களுடைய சமூக நடத்தைபற்றிய இந்தப் பிரச்சினைகள், அனைத்திற்கும் தொழிற்சாலை உளவியலாளர்களால் முடிவு கூறப்படுகிறது. தொழிற்சாலை உளவியல் நிறுவனம்/தொழிற்சாலையின் உயர்ச்சிக்கும் ஊழியர்களின் நிறைவான தொழில் வாழ்க்கைக்கும் இன்றியமையாத கடமையாற்றுகிறது. Muskinsky என்பவர் தொழிற்சாலை உளவியலின் பிரயோகங்களாக சிறந்த ஊழியரை வேலைக்கமர்த்துதல், வரவீனங்களைக் குறைத்தல், தொடர்பாடலை மேம்படுத்தல், வேலைத்திருப்தியை அதிகரித்தல் என்பவற்றைக் குறிப்பிடுகின்றனர். இந்தவகையில் தொழிற்சாலை உளவியல் வணிக உலகத்திற்கும் முகாமைத்துவதுறைக்கும் முதன்மையான பங்களிப்பாளர் ஆகும். இது வணிகத்துறையில் வணிகத்தை எவ்வாறு தீர்மானிப்பது, நிர்மானிப்பது, எவ்வாறு நடத்துவது என்பவை குறித்து அக்கறை செலுத்துகிறது. ஒவ்வொரு நிறுவனமும் நிறுவன உறவியலின் தேவையை முன்னுணரும் போது தொழிற்சாலை வளர்ச்சி உச்ச அளவில் அமையும்.

## Reference.


1. “தனேஸ்வரி. ர” தந்திரோபாய மனிதவள முகாமைத்துவம்” Higher Education Center Jaffna, (2004) 1ஆம் பதிப்பு.
2. மணியம் சிவகுமார் (2009), அடிப்படை உளவியல், தொழில்துறை உளவியல், சேமமடு பதிப்பகம்.
3. “ரதிராணி –யோ” “முகாமைத்துவ தத்துவங்கள்”, குமரன் புத்தக இல்லம், 2011.
4. Deniz Sones, Neil Andarson & Handan Kepir “ Industrial” Work and Organization Psychology.
5. Department of Human Resource Msnagement Studies 3232(It)- Employee Reation.
6. Importance of Industrial Psychology, Van thompson, Https:// careertrend.com / facts. 5176271.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண மாநகரத்தின் கழிவகற்றலில் மக்களின் மனமாற்றம்



**கவாபூஷணம் கலாநிதி கு. சரவணபவானந்தன் J.P**
கல்வி நிர்வாக சேவை (ளூ6நுயளூ)
316, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**தூ**ய்மை நகரம் என்பது இன்று எல்லோராலும் பேசப்படும் வார்த்தையாகும். பல நாடுகளும் தம் நாட்டினை தூய்மை நகரமாக மாற்ற பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. அந்த வகையில் வடமாகாணத்தின் தலைநகரமாக விளங்கும் யாழ்ப்பாணத்தை தூய்மை நகரமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் யாழ் மாநகரசபையினரால் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றை நாம் வரவேற்க வேண்டும். ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அண்மையில் பெய்த கடும் மழையினால் யாழ் நகரத்தின் மையப்பகுதி குளமாக மாறியது. வாகனங்கள், பொதுமக்கள் பயணம் செய்யமுடியாமல் தத்தளித்தனர். இதற்குக் காரணம் திட்டமிடப்படாமல் கட்டிய கட்டிடங்கள், குளங்கள் பல மூடப்பட்டு சுவடு தெரியாமல் மறைக்கப்பட்டமை, காபெட் வீதிகள் மிக உயரமாக அமைக்கப்பட்டு வடிகால்கள் அமைக்கப்படாமை. குப்பை கூளங்கள், பொலிதீன், பிளாஸ்டிக் பொருட்களை கழிவுநீர் வாய்க்கால்களில் கொட்டி மூடப்பட்டமை எனப் பல காரணங்கள் கூறப்பட்டன. எனினும் சில மணி நேரங்களில் பாரிய வாய்க்கால் சீரமைக்கப்பட்டு மழைநீர் வடிந்தோடியது. இப்போது வடிகால்களில் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. மேலும் கவனிப்பாரற்றுக் கிடந்த குளங்கள், குப்பைகள், பிளாஸ்டிக் பொலித்தீன்கள் அகற்றப்பட்டு தனிமனிதர்களின் வள்ளண்மையுடன் புனரமைக்கப்பட்டு அழகிய மையங்களாக மாற்றி அமைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்மக்கழிவகற்றலில் பல பாரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. "குப்பையியல்" என்ற ஒரு பாடவிதானமே நவீன உலகில் பேசப்படுகின்றது. குப்பைகள், கழிவுப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், இலத்திரனியல் கழிவுகள் ஆகியவற்றை எவ்வாறு மூலப்பொருட்களாகப் பயன்படுத்தி பொருளாதார ரீதியில் எவ்வாறு முன்னேற முடியும் என விளங்குகின்றது. இதுவும் ஒரு விஞ்ஞான ரீதியான கையாளுகையேயாகும். திண்மக்கழிவுகளிலிருந்து சேதனப்பசளை தயாரித்தல், பண்ணைக்கழிவுகள் வீட்டுக்கழிவுகளிலிருந்து உயிரியல் வாயு தயாரித்தல் என்பன சாதாரணமாக நமது வீடுகளில் செய்யக்கூடியதாகும். மாட்டுச்சாணம், உணவுக்கழிவுகள், பழங்களின் அழுகல்கள், காய்கறிகளின் கழிவுகள், மீன்களின் கழிவுகளைப் பயன்படுத்தி சுலபமாக வீட்டிற்குத் தேவையான எரிவாயுவைப் பெற முடியும். பிளாஸ்டிக் கொள்கலன்களில் இவற்றைத் தயாரிக்க முடியும். இலை–குழை போன்ற சேதனப் பொருட்களைப் பயன்படுத்தி நுண்ணுயிர்களின் உயிரியல் செயற்பாடுகள் மூலம் எரிவாயுவையும், சேதனப்பசளையையும் தயாரிக்க முடியும். அசேதனப் பசளைகள் நிலத்தின் நன்னீரையும், நிலத்தின் தன்மையினையும் மாற்றியமைத்து மாசுபடுத்துகின்றன. அசேதனப்பசளைகளின் மிகைப் பயன்பாட்டினால் குடிநீரில் கலந்து "கான்சர்" போன்ற கொடிய நோய்கள் பரவக் காரணம் ஆகின்றன.

மேலும் தாவரங்களில் நோய்கள் ஏற்படவும் ஏதுவாகின்றது. இதனை உணர்ந்து இலங்கை அரசாங்கம் அசேதனப் பசளை இறக்குமதிக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டு திண்மக்கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் சேதனப்பசளையும், திரவநிலைப்பயன்பாட்டில் உள்ள பசளைகளையும் சீனா, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து பெருமளவு டொலர்களைச் செலவழித்து இறக்குமதி செய்யப்படுகின்றது. அவைவேறு நுண்ணுயிர்கள் கலந்துள்ளமையை ஆய்வுகள் உறுதிபடுத்திய போதும் இரு நாட்டு பொருளாதார, அரசியல் காரணங்களினால் பிரச்சினைகளுக்கு மத்தியில் பெரும் நட்ட ஈட்டுடன் மீளவும் கப்பல்களிலிருந்து இறக்கப்பட்டமை நாம் அறிந்ததே. யாழ் மாநகரசபைப் பிரதேசங்களிலும் அண்டிய பிரதேசங்களிலிருந்தும் பெருமளவான திண்மக்கழிவுகள், மலக்கழிவுகள், இறந்த பறவைகள், விலங்குகளின் உடல்கள் ஆகியன உரியமுறையில் அப்புறப்படுத்தப்படாமல் அயலவர்களையும், ஊரவர்களையும் பாதசாரிகளையும் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கச் செய்கின்றனர்.

மேலும் சிலர் தமது வீட்டுக் கழிவுகள், கோழிக்கடைக் கழிவுகள், இறைச்சிக்கடைக் கழிவுகளையும் தெருவோரங்களிலும் அயலவர் வீட்டிற்கு முன்பாகவும் கொட்டி விட்டு தப்பியோடுகின்றனர். குப்பை இருக்கும் இடங்களில் இலையான்களும், எலிகள், நாய், பூனைகள், காகம் போன்றவை கூடிப் பெருகி அழையா விருந்தாளிகளாக அயலெங்கும் நோய்கள் பரவக் காரணமாய் இருக்கின்றன. இவையன்றி மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு மாநகரசபையின் தூய்மைப்பணி வாகனங்களில் தனித்தனியாக தரம் பிரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதி செய்யப்பட்டு ஒப்படைக்க வேண்டும். தூய்மைப் பணியாளர்களும் மனிதர்களே, வெளிநாடுகள் போன்று றோபோக்கள் அல்ல. தூய்மைப் பணியாளர்கள் நலன்களிலும் நாம் அக்கறை கொள்ள வேண்டும். அவர்கள் ஒரு கிழமை வேலை செய்ய மறுத்தால் நகரம் நரகமாகிவிடும் என்பதை உணர்ந்து கழிவுகளை உரிய முறையில் தரம் பிரித்து வழங்கவும். குடியிருப்புகள் நிறைந்து காணப்படும் பகுதிகளில் குறிப்பாக குருநகர், பாசையூர், பொம்மைவெளி, முஸ்லீம் வட்டாரங்கள், நாவாந்துறை, கொழும்புத்துறை போன்ற பகுதிகளில் குப்பை கூழங்கள் உரிய முறையில் அகற்ற இப்பிரதேச மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மீள்சுழற்சிக்குரிய பொருட்களை தரம் பிரித்து வழங்க வேண்டும். வைத்தியசாலைக் கழிவுகளை தொற்றுநீக்கப்பட்டு உரியமுறையில் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். பொறுப்பற்ற முறையில் தனியார் வெற்றுக் காணிகளிலும் செம்மணி, அரியாலை, நாவற்குழி, காக்கை தீவு, பொம்மைவெளி, கல்லுண்டாய் வெளி, அராலி வெளிகளில் இரவு நேரங்களிலும், ஆட்கள் நடமாட்டம் இல்லாத நேரங்களிலும் குப்பைகூலங்கள் இறந்த மிருகக்கழிகளையும் கொட்டாது காக்கைதீவு சேதனப்பசளை தயாரிக்கும் நிலையத்திற்கோ, கல்லுண்டாய் கழிவகற்றல் பகுதியினரிடமோ ஒப்படைப்பதன் மூலம் தூய்மை நகரத்தைப் பேண முடியும் யாழ் மாநகரசபையுடன் தொடர்பு கொண்டு அவர்களின் வாகனங்களில் குப்பைக் கூழங்களை அப்புறப்படுத்தி கொரோனா, டெங்கு, விசக்காய்ச்சல், நெருப்புக்காய்ச்சல், கொலரா போன்ற கொடிய நோய்களிலிருந்து நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும்.

ஒரு தனிமனிதன் தூய்மை பேணினால் குடும்பம் நிம்மதியாக வாழும், குடும்பம் தூய்மையாக இருந்தால் கிராமம் சுத்தமாகும். கிராமம் சுத்தமாகினால் நகரம் தூய்மையாகும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். மக்களின் மனமாற்றமே மாநகரத்தின் தூய்மைத் திட்டத்திற்கு வழிவகுக்கும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

**யாழ் ரத்னா விருது - 2022**

**[பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்]**

- திரு . அலெக்சாண்டர் ஜோசப் – நாடகம்
- திரு . கோவிந்தபிள்ளை விஜயகுமார் – வாத்தியங்கள் உருவாக்கம்
- திரு . இராயப்பு டேவிட் – இசை
- திரு . மனுவேல் அன்ரன் உதயகுமார் – நடனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சப்பாத்து



**ஸ்ரீஸ்கந்தராசா மயூரன்**
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

**கா**லைப்பனி அந்தக் கல்லூரியின் மைதானம் எங்கும் படர்ந்து விரிந்திருந்தது. மோகன் சேர் வழமைபோல இன்றும் நேரத்திற்கே வந்து தன்னுடைய மோட்டார் சைக்கிளை அலுவலகத்தில் இருந்து அரைகிலோ மீட்டர் தள்ளி இருந்த கொட்டகையில் நிறுத்திவிட்டு, மைதானத்தினை ஊடறுத்து தனது வகுப்பறை நோக்கி நடந்து கொண்டிருந்தார். காலை வெயில், அடர்ந்து ஓங்கி வளர்ந்திருந்த மரக்கிளைகளினூடே எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. அவருடைய காலணி பனித்துளிகளால் கழுவப்பட்டும் புற்கள், மண்துணிக்கைகள் என்பன ஒட்டியும் இருந்தன. மெதுவாக தனது புத்தகப்பையை இறக்கிவைத்து, சப்பாத்தை பழந்துணியால் துடைக்க முற்பட்டார். நேற்று இந்தச் சப்பாத்தின் குதிப்பகுதி கழன்று கையில் எடுத்துக்கொண்டு போனபோது "சப்பாத்தில்லை சேர் அதனால் என்னால இந்த "ரேஸ்ல" வடிவா ஓட முடியல்ல. கல்லுக்குத்துது சேர்..." என்று தெரிவுப்போட்டியில் மூன்றாமிடம் பிடித்த கஜானன் கண்ணில்பட்டான். தானே தான் இந்தச் சப்பாத்தை சரிசெய்து கொண்டுவந்த இறுமாப்பில் அவனை அழைத்து "பன்னிரெண்டு வருசமா போடுறன்.. பாத்தியா... எவ்வளவு கவனமாக வைத்து பாதுகாக்கிறன் " என்று கூறியதும் அவன் மறுபேச்சுப் பேசாமல் கண்களில் கண்ணீர் வெள்ளம் . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜானன் தரம் பத்தில் கல்வி கற்கும் ஒரு சாதாரண மாணவன். தாய் இல்லாவிட்டாலும், தந்தை அவனுக்கு தாய்ப்பாசத்தையும் சேர்த்தே ஊட்டி வளர்த்து வந்தார். கல்வி, விளையாட்டு, கழக செயற்பாடுகள் என்று எல்லாவற்றிலும் ஆர்வம் காட்டிய கஜானனுக்கு தங்கையும், தம்பியும் இருந்ததால் பொருளாதார சிக்கல். தந்தை ஒரு கடையில் கணக்குப் பிள்ளையாக இருந்ததால், இரவில் இவர்களைத் தூங்க வைத்து வேறு கடைகளில் கணக்கு வழக்குகளையும் பார்த்து, தூங்கி மீண்டும் அதிகாலை எழுந்து மூவருக்கும் உணவு சமைத்து தன் குடும்பத்தைக் கடனின்றி ஓட்டினார். கடையின் மாதச் சம்பளம் வீட்டுச் செலவுக்கும், இடையிடையில் கணக்கு எழுதும் கூலி படிப்புச் செலவிற்கும் சரியாக இருந்தது.

"சட்டென மோகன் சேர் கஜானனை நோக்கி அப்பாவை வரச் சொன்னனான், இண்டைக்கு வருவாரா? என்னை இண்டைக்கு சந்திக்காமல் நீ வகுப்பிற்கு செல்லக் கூடாது" என்று கட்டளை போடவும் அவன் ஓ ஓ என்று அழுது விட்டான் "இந்த அழுகையால என்ன மடக்கேலாது நான் சொன்னா சொன்னதுதான்" என்று விடியற்காலையே மோகன் சேரும் கடுப்பாகி வெடிப்பது போல அவனை நோக்கி கணை தொடுத்துக் கொண்டிருந்தார். எலக்ட்ரிக் மணி அடித்து முதலாம் பாடம் தொடங்கி விட்டது என்பதை ஒலித்து காட்டியது. அதேவேளை அந்தக் கல்லூரியின் தெரிவுப் போட்டிக்காக உயர் வகுப்பு மாணவத் தலைவர்கள் ஒவ்வொரு வகுப்பாக அன்றைய நிகழ்ச்சிகளுக்கு உரிய மாணவர்களை அழைத்துக் கொண்டிருந்தனர். தரம் 10A யில் வந்து,

"எக்ஸ்கியூஸ் மி சார்"

"கஜானனுக்கு இன்றைக்கு 400m Race இருக்கு" என்று கூறி அவனுடைய இலக்கத்தை நீட்டினார்கள். அவன் வகுப்பறைக்கு வெளியே நின்றது அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை!

"அண்ணா! கிளாசுக்கு வெளியே நிற்கிறான்" என்று ஒருவன் சுட்டிக் காட்டியதும், அவனுக்கு இலக்கம் மற்றும் அதைக் குற்றுவதற்குரிய ஊசியும் வழங்கப்பட்டது

"சேர்" என்று மெதுவான குரலில் வெள்ளை நிற தலை முடிக்குக் கறுப்பு சாயம் பூசி, வேட்டி கட்டி, ஷேர்ட் போட்டு, நெற்றியில் சந்தனத்துடன் அண்ணளவான உயரமான திரு. தர்மசீலன் வாசலில் நின்று கூப்பிட்டது மோகனை ஒரு நிமிடம் உறைய வைத்தது. அது கஜானனின் அப்பா. வகுப்பறைக்கு வெளியே வந்து தர்மசீலனுடன் கஜானனைப் பற்றி உரையாடிய மோகன், அவனுடைய திறமைகளை சுட்டிக்காட்டி பட்டியல் போட்டார். தன் பையை எடுத்து அவனுக்கென்றே வாங்கிய புதிய சப்பாத்தை கொடுத்து திறமைசாலி" எனப் புகழ்ந்த மோகன் "படிப்பையும் கைவிடாத என்று உரக்கச் சொன்னார்". அன்றைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


400 மீட்டர் பந்தயத்தில் முதலிடம் பிடித்தது மட்டுமல்ல, மாவட்டம், மாகாணம் மற்றும் தேசியத்திலும் சாதனை படைத்திருந்தான் அந்த வருட மெய்வன்மையில்.

12 வருடங்களின் பின்னரும் தான் கற்ற பாடசாலைக்கு வந்த கஜானன், முதலில் தேடியது மோகன் மாஸ்டர். அதே பாடசாலையில் ஆசிரியராக ஓய்வுபெறும் வயதில், அதேபோன்ற ஒரு வகுப்பில் கற்பித்துக் கொண்டிருந்தார். அவர் உரத்த குரலில் ஒரு மாணவனைப் பார்த்து "நாளைக்கு அப்பா அல்லது அம்மா வர வேணும் இல்லாட்டி வகுப்புக்கு வெளியால தான் நிற்கவேண்டும்" என்ற மோகன் சேர் கூறியது தனக்கென்றே சொன்னது போலவே இருந்தது மெதுவாகத் தனது "ரையை" மறைத்துக் கொண்டு "சேர்" என்றான் கஜானன். "டேய் எப்படி இருக்கிறாய். என்னடா வேலை செய்கிறாய்?" என்று அதே உரிமையுடன் கேட்க "சேர்" என்று அதே மரியாதையுடன் கஜானன், "ஒரு பாங்கில் அஸிஸ்டன்ட் மனேஜரா இருக்கிறன்." ஸ்போர்ட்ஸ் செஞ்சதாலயும் எனக்கு A/L இருந்ததாலயும் செலக்ட் பண்ணிட்டாங்கள். இப்போது அன்ஸ்டன் மனேஜர் பதவி என்று பெருமைபடக் கூறிக்கொண்டே அவருக்கென்றே கொண்டுவந்த கிப்ட் பெட்டியை நீட்டினான். "என்னடா இது" என்று கேட்டவாறே திறந்து பார்த்த மோகனுக்கு அதிர்ச்சி அவருடைய கால் சைஸில் ஒரு புதுச் சப்பாத்து அவரை பார்த்து சிரித்தது ஏளனமாக! அதைப் பார்த்த மோகன், மிஸ்டர் கஜானன் "இது எனக்கு தேவையில்லை, நீ எனக்கு கைமாறு செய்யத் தேவையில்லை" என்று கூறி வகுப்பிற்கு வெளியே நின்ற தன் மாணவனை அழைத்து "இது உனக்கு அளவோ பார்" என்றார் அந்த உயர்ந்த உள்ளம் கொண்ட உத்தமர், இன்னும் நிறைய மாணவர்களை உருவாக்க வேண்டும் என்ற வெறியுடன். கஜானன் செய்வதறியாது கட்டித் தழுவினான் மோகன் மாஸ்ரரை! அது அவனது குரு பக்தியை அடையாளமிட்டது.

**கலைக்குரிசில் விருது - 2019**
**[பண்பாட்டலுவல்கள் திணைக்களம் - வடக்கு மாகாணம்]**

- செல்வி. விஜயலட்சுமி சண்முகராஜா – வாத்தியக்கலை (வீணை)
- திரு. நீக்கிலஸ் மரியதாஸ் பாலச்சந்திரன் – நாடகம்
- திரு. இராசையா ஸ்ரீதரன் – கிராமியக்கலை (வில்லுப்பாட்டு)
- திரு. குருசுமுத்து இராயப்பு – நாவல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழந்தமிழ் இலக்கியங்களின் இசைக்கலை



**சின்னராசா ருகுணாஸ் B.A (Hons)**
மீனாட்சி அம்மன் வீதி,
கோட்டை, யாழ்ப்பாணம்.

**"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"** என்றான் புரட்சிக் கவி பாரதி. அந்த வகையில் இசை என்பது தமிழர் பண்பாட்டில் கலந்த ஒரு அம்சமாகக் காணப்படுகிறது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த தமிழ். இது முத்தமிழ். இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பிரித்து இடம்பெறுகிறது. நம் வாழ்வோடு இரண்டறக் கலந்தது இசை. வாழ்விலும் சாவிலும், இன்பத்திலும் துன்பத்திலும், துணிவிலும் பயத்திலும், நட்பிலும் பகையிலும் எத் தருணத்திலும் இசைந்து வாழ்வோடிணைந்து வாழ்வை இன்பத்தில் மட்டுமல்ல சமநிலையில் வைக்க உதவுவதும் இசை ஆகும். இறைவன்பால் துய்ப்பதும் இசை, மன அழுத்தங்களின் போது மருந்தாக இருந்து அமைதியைத் தருவதும் இசை. சுருங்கக் கூறின் இசையில்லாமல் நாம் இல்லை. இசையைப் போல் மக்களைக் கட்டுண்ணும் மந்திர சக்தியுமில்லை.

**"பாட்டினைப் போலாச்சரியம் பாரின் மிகையில்லையடா**
**ஆசை தருங் கோடி யதிசயங்கள் கண்டதிலே**
**ஓசை தரும் இன்பம் உவமையிலா வின்பமன்றோ"**

என இசையைப் போற்றிப் பாடுகின்றான் பாரதி. இத்தகைய இசை மனிதன் பிறக்கும் போது அழுகை எனும் ஓசையுடன் ஆரம்பித்து ஒருவனுடைய வாழ்வில் பல்வேறு பரிணாமங்களைப் பெற்று இறுதியில் அதே அழுகையுடன் நிறைவு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பிரபஞ்சத்தில் காணப்படும் பஞ்ச பூதங்களில் இருந்து எழுகின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு ஒலியும் இசையாக இருப்பதனை அவதானிக்க முடிகிறது. அந்த வகையில் பழந்தமிழ் இலக்கியங்களில் இசை பற்றிய கருத்துக்களை நோக்கலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரையில் சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்படுகிறது. சங்க இலக்கியங்கள் "பதினென் மேற்கணக்கு நூல்கள்" எனக் கூறப்படுகின்றன. முடியுடைய மூவேந்தர் முச்சங்கம் அமைத்து இயல், இசை, நாடகம் என முத்தமிழ் வளர்த்த காலம் இக்காலம் ஆகும். ஆரம்ப காலத்தில் அகத்தியர், நாரதர், சிகண்டியார், சாத்தனார் ஆதிவாயிலார் போன்றவர்கள் தமிழிசையை வளர்த்தனர். சங்க இலக்கியங்களை எட்டுதொகை பத்துப்பாட்டு இலக்கியங்கள் என வகுக்கலாம். இவற்றில் பரிபாடல், முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டிணப்பாலை, புறநானூறு, போன்ற இலக்கியங்களில் இசை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சங்க காலத்தில் நிலங்களை ஐந்து வகைப்படுத்தி வணங்கிய தெய்வம், வாசித்த பண், பண்ணிசைக் கருவி, தாள இசைக் கருவி ஆகியவை பற்றி இளம்பூரணார் தொல்காப்பியத்திற்கு வழங்கிய உரையில் விளக்கியுள்ளார். இதனை,

குறிஞ்சி – மலையும் மலை சார்ந்த இடமும்
பண் – குறிஞ்சி
இசைக்கருவி – குறிஞ்சி யாழ்
தோற்கருவி – பறை
கடவுள் – முருகன்
மருதம் – வயலும் வயல் சார்ந்த இடமும்
பண் – மருதப் பண்
இசைக் கருவி – மருத யாழ்
தாளக் கருவி – முழவு
தெய்வம் – இந்திரன்
முல்லை – காடும் காடும் சார்ந்த இடமும்
பண் – சாதாரி
இசைக் கருவி – முல்லை யாழ்
தோற்கருவி – ஏறு கோட்பறை
துளைக்கருவி – புல்லாங்குழல்
கடவுள் – திருமால்
நெய்தல் – கடலும் கடல் சார்ந்த இடமும்
பண் – செல்வழி
இசைக் கருவி – விளரியாழ், நாவாய் பம்பை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தெய்வம் | – | வருணன் |
| பாலை | – | மணலும் மணல் சார்ந்த இடமும் |
| பண் | – | பஞ்சுரம் |
| இசைக் கருவி | – | பாலை யாழ் |
| தோற் கருவி | – | துடி |
| தெய்வம் | – | கொற்றவை |

என இவை அமைந்திருப்பதிலிருந்து அக்காலத்தில் இசை பெற்றிருந்த முக்கியத்துவத்தை அறியலாம்.

மேலும் பரிபாடலை நோக்குகின்ற போது, இசைக்கத் தொடங்கிய மனிதன் பேசத் தொடங்கி, எழுதினான், பண் கூடிப்பாடி ஆடி மகிழ்ந்தனர். கூட்டிசையாக (பல்லியம்) வாத்தியங்களோடு இரசித்து சுவைத்துப் பாடியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

**"நறவுண் வண்டாய் நரம்புளர் நரும்**
**சிகை மயிலாய்த் தோகை விரித்தாடுநரும்**
**கோகுலமாய்க் கூவுநரும்."**

அதாவது ஒரு பல்லிசையிலே இசைப்புலவர், நரம்புக் கருவியாளர், ஆடல் மகளிர் சேர்ந்து ஒரு குன்றில் நின்று ஆடிப்பாடி இன்பந் தருவது போன்று குயிலும் வண்டுகளும், மயிலும் சேர்ந்து ஒன்று கூடி ஒலிப்பண்மை நிலை காட்டுகின்றன என்கிறார் புலவர். மேலும் அவர்,

**'மாட மயிலகவ ,**
**குருகிளையுதிரக் குயிலினங் கூவ**
**பகர் குழல் பாண்டிலியம்பவகவுநிகர்**
**நாதவில் பாடன் முழவதிர்ந்தன்ன "**

என்கிறார். இதன் பொருள் மயில் அகவும் ஒலி எதிரொலியாகக் கேட்கும் போது, தாள ஒலியும், முழவொலியும் சேர்ந்து ஒலிப்பது போல் கேட்கும். குயிலின் கூவுதல் எதிரொலிக்கும் போது குழலொலியும், மிடற்றொலியும் சேர்ந்து ஒலிப்பது போல் கேட்கும். இவ்வாறு குயில் கூவுதல், மயில் அகவுதல் எதிரொலியாக, குழலும் தாளமும் ஒரு புறமும், மிடற்றிசையும், முழவோசையும் மறுபுறமும் எதிர்த்தாற் போன்ற நிலைமையைக் காட்டும் என வர்ணிக்கின்றார். மேலும் வண்டும் தும்பியும், யாழும் குழலும் போன்று இயற்கை இசை எழுப்பிற்று. அருவிநீர் பாய்ந்தோடும் இசை முழவின் இசை போன்று ஒலித்தது. அங்கு இவ்விசைகளுக்கேற்ப பாடினியின் பாலையிசையுடைய மிடற்றுப் பாடலும், சீருக்கிசைய ஆடும் மயிலினது குரலும் ஒலித்தது. பாடல் விறலியரின் நுடக்கமானது, பூங்கொடியின் நுடக்கத்தை ஒத்திருந்தது என்றும் பரிபாடல் கூறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல், இசை, நாடகம் என்ற மும்மை நிலையில் திகழும் சிறப்பு வேறெந்த மொழிக்கும் கிடையாது. இசைத் தமிழ் இசையியலுடன் இசையறிவியலும் தொன்று தொட்டு வளர்ந்து வந்துள்ளது. இசைத் தமிழ் பல மொழிகளுக்கு இசை நுணுக்கங்களைக் கொடுத்தும் வந்துள்ளது. இசையை இரு துறைகளாகப் பிரிக்கலம்.

1. பாடுதுறை

2. அறிதுறை

இதனை "பாடுதுறை முற்றிய... கேள்வி" என சிறு பாணாற்றுப்படையும் (227) "பாடுதுறை முற்றிய கொற்றவேந்தே" எனப் புறநானூறு (21-11) போன்ற இலக்கியப் பாடலடிகள் தெளிவு படுத்துகின்றன. மேலும் பாடலோசைக்கும் யானை கட்டுப்பட்டு நிற்கும் என்ற உண்மையை,

**"கழ்வரை நில்லாக் கடுங்களிற் றொத்தல்**
**யாழ்வரை தங்கி யாங்கும் தாம்புநின்**
**தொல் கவின் தொலை தலஞ்சி யென்**
**சொல்வரைத் தாங்கினர் காதலோரே"**

என்ற பாலைக்கவி என்ற இலக்கியம் கூறுகின்றது. மேலும் இசை கேட்டு குதிரை வெகுண்டெழும் என்று நற்றிணை குறிப்பிடுவதும் அவதானிக்கத்தக்கது. குறிஞ்சி நிலத்தில் கதிர் உண்ணவந்த யானை, குறிஞ்சிப் பண் இசைத்தலைக் கேட்டு உணவை உண்ணவும் முடியாமல் திரும்பிச் செல்லவும் முடியாமல் அப்பண்ணில் மயங்கித் தன்னை மறந்து நின்றமையை,

**"ஒலியில் வார் மயிர் உளரினன் கொடிச்சி**
**பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்**
**குரலுங் கொள்ளாது நிலையிலும் பெயராது**
**படா அப்பைங்கண் பாடு பெற்றொய்யென**
**மறம்புகல் மழகளிறு உறங்கும் நாடன்"**

என அகநானூறு பாடல் ஒன்று அமைந்து காணப்படுகின்றமை நயக்கத்தக்கதாகும். வளங்குன்றி வறண்டநிலம் பாலை. இங்கு கொற்றவையை வழிபட்டுக் கூத்தாடுவர். பாலை யாழ் நண்பகலுக்குரியது. பாலையாழும், பாலைப் பண்ணும் பிரிதல் ஒழுக்கத்திற்குரியது.

**"குழலின்**
**புழக் கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்**
**வில் யாழிசைக்கும் வில்லெறி குறிஞ்சி"**

**(பெரும் பாணாற்றுப் படை)**

அதாவது பாலை நிலத்திற்குரிய மரல் எனும் செடியிற் கிடைக்கும் நாரினை யாழின் நரம்பாகப் பயன்படுத்தினார்கள். வில் யாழ் கருவிகளிலே நரம்பாகக் கட்டப்பட்ட மரலானது "மரையா மரல் கவர மாரி வருப்ப" எனவும் "மரல் காய மலை வெம்ப மந்தியியங்க" எனவும் பாலைக் கவிப் பாடல்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க காலத்திலே ஆறுவகைச் சிறு பொழுதையும் யாழ் வகையுடன் குறிப்பாக பிங்கல நிகண்டு கூறுகின்றது. அதாவது,

| | |
|---|---|
| வைகறை, விடியல் | – மருத யாழ் |
| நண்பகல் | – பாலை யாழ் |
| ஏற்பாடு, மாலை | – செவ்வழி யாழ் |
| யாமம் | – குறிஞ்சி யாழ் |

என வகுத்துள்ளது. மக்கள் பண்டு தொட்டு ஐந்திணை வாழ்க்கையையும் அதற்குரிய இசைகளையும் கையாண்டு கடைப்பிடித்து வந்ததனால் அக்கால இசை மரபினை திணை இசை எனக் குறிப்பிடுதல் பொருத்தமானது ஆகும். சங்க காலத்தில் பாலை யாழ், காந்தாரம், காஞ்சிப்பண், குறிஞ்சிப்பண், படுமலைப்பண், மருதப்பண், விளாதிப்பண் போன்ற பல்வேறு பலநூறு பண்வகை இருந்தமையைக் காணலாம்.

பழந்தமிழ் இலக்கியங்களில் சங்க இலக்கியங்களை அடுத்து முக்கியம் பெறுவது அறநெறிக் கால இலக்கியங்கள் ஆகும். இவை பதிணென் கீழ்க்கணக்கு இலக்கியங்கள் எனப்படும். இக்காலம் அறநெறிக் காலம் ஆகையினால் இக் காலத்தில் வெண்பாவின் செல்வாக்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. இசை என்பது ஒவ்வொரு ஒலியும் இசைதான். காற்றின் அசைவும், கடலின் அலையும், பிள்ளையின் அழுகையும் இசைதான் இதனைத்தான் வள்ளுவப் பெருந்தகை,

**"குழலினது யாழினது என்பர் தம்மக்கட்**
**மழலைச் சொல் கேளாதவர்."**

என உலகப் பொதுமறையான திருக்குறளில் வெளிப்படுத்தியுள்ளார். சிலப்பதிகாரம் எனும் காப்பியத்திலே இசை பற்றிய பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. அதாவது இதில் அமைந்துள்ள மங்கள வாழ்த்து முதல் அரங்கேற்றகாதை, கானல்வரி, வேனிற்காதை, வேட்டுவவரி, புறஞ்சேரி இறுத்தகாதை, ஆச்சியர்குரவை, நடுகற்காதை, வாழ்த்துக்காதை ஈறாக இசைந்த தமிழ் செய்திகள் காணப்படுகின்றன. இதனை இயற்றிய இளங்கோவடிகள் முத்தமிழ் வித்தகர் சிலம்பு அரங்கேற்றக் காதையிலே இசையாசிரியர் பற்றிய செய்தி பின்வருமாறு.

**"யாழும் குழலும் சீரும் மிடறும்**
**தாழ் குழல் நண்ணுமை ஆடலோடிவற்றின்**
**இசைந்த பாடல் இசையுடன் பகுத்த**
**வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கித்**
**தேசிகத் திருவின் ஓசையெல்லாம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசின் றுணர்ந்த அறிவினன் ஆகிக்**

**கவியது குறிப்பும் ஆடற் தொகுதியும்**

**பகுதிப் பாடலும் சொத்தும் காலை**

**வசையாறு கேள்வி வகுத்தனன் விரிசல்**

**அசையா மரபின் இசையோன் தானும்"**

எனக் கூறிப்பட்டுள்ளது. இங்கு சங்க இலக்கியம் கூறும் குரல், துத்தம், கைக்கிளை, இளி, உழை, விளரி, தாரம் என்பன ஏழிசையாகும் அவை பதினான்கு வகையாகுமாற்றையும்

**"பிழையா மரபின் ஈரேழ் கோவையை**

**உழைமுதற் கைக்கிளை இறுவாா் காட்டி"**

என்ற செய்யுளினால் இளங்கோ அடிகள் தெளிவுபடுத்துகின்றார். மேலும் அவரே யாழினைத் தொடுத்தல், இசைத்தல் ஆகியவற்றிற்குரிய நெறிமுறைகளை மிக அழகாகவும், தெளிவாகவும் எடுத்துரைத்துள்ளார்.

**"வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி**

**இடக்கை நால்விரன் மாடகர் தழிஇச்**

**செம்பகை யார்ப்பே கூட மதிர்வு**

**வெம்பகை நீக்கும் விரகுளியறிந்து**

**பிழையா மரபினீரேழ் கோவையை**

**உழை முதற் கைக்கிளையிறுவாய் கட்டி**

**இணைகிளை பகை நட்பென்றின் நான்கின்**

**இசை புணர் குறிநிலை யெய்த நோக்கிக்..."**

மேலும் சிலப்பதிகாரத்தில் 30 வகை தோற்கருவிகளைப் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. இதில் மிருதங்கத்திற்கு முக்கிய இடம் வழங்கப்பட்டது. இசையரங்கில் வாய்ப்பாட்டிற்கு அடுத்ததாக இசைக்கு ஒரு தூண்போல் மிருதங்கம் விளங்குகின்றது. சுருதி, தாளம், இராகம் பிசகாமல் பாடுவதோடு பாட்டு இயற்றியவரது மனக் குறிப்பையும் உணர்ச்சியோடு பாடுவது அக்கால இசைவாணர் சிறப்பாகும். மேலும் புல்லாங்குழலும் இக் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்தது. புல்லாங்குழல் செய்யப்பயன்படும் மரம், உலோகம் பற்றிய குறிப்புக்கள் உண்டு. புல்லாங்குழலினை மூங்கிலில் செய்வது உத்தமம். வெண்கலத்தில் செய்வது மத்திமம். சந்தனம், செங்காலி, கருங்காலி மரங்களில் செய்வது அதமம் எனக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிலப்பதிகாரத்தில் பன்னிரு இராசிகளையும் குறிப்பிட்டு எந்த இராசியில் என்னென்ன ஸ்வரங்கள் நிற்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். பழந்தமிழ் மக்களின் அலகு முறையில், $ச_4$, $மு_4$ $க_3$, $ம_2$, $ப_4$, $த_3$, $நி_2$, 22 எனச் சுருதி இடைவெளிகள் கணிக்கப்பட்டுள்ளன. இவ் இராகம் ஏறக்குறைய ஹரிகாம்போதி இராகத்தை ஒத்தது. ஆச்சியர் குரவையில் பாடப்படும் முல்லைத் தீம்பாணி எனும் பண் இக் காலத்து மோகன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகத்தை ஒத்தது ஆகும். மேலும் சங்கமருவிய காலப் பிற்பகுதியில் தோற்றம்பெற்ற காரைக்கால் அம்மையாரும், முதலாழ்வார்களும் இறைவனைப் போற்றிப்பாடி இசைக்கு அடிமையாக்கும் வகையில் செயற்பட்டனர். இந்த வகையில் காரைக்கால் அம்மையாரினால் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை, திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் போன்ற பக்திப் பரவசப் பாடல்களைப் பாடியுள்ளமையை நோக்கலாம்.

பழந்தமிழ் இலக்கியங்களில் இசை எனும் நோக்கில் ஆராயும் போது பல்லவர்கால பக்தி இலக்கியங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. இசையால் வசமாகத இதயம் எது? என்ற வாசகத்திற்கு ஏற்ப இறைவனைப் பாடல்கள் மூலம் பரவசத்தில் ஆழ்த்தினர். இதில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் போன்றோரால் பாடப்பட்ட தேவாரப் பதிகங்கள் முக்கியமானவை. தேவாரம் என்பது இறைவனுக்கு பாக்களினால் சூட்டப்படும் பாமாலை என்பது பொருள் ஆகும். சாமகானம் பாடி சிவபெருமானையே மனங்குளிரச் செய்தவன் இராவணன் எனும் சிறப்பு இவ்விசைக்கு உண்டு. அக்காலத்தில் 103 பண்கள் அறியப்பட்ட போதும் 23 பண்களே தேவாரத்தில் கையாளப்பட்டுள்ளன. இதில் திருஞானசம்பந்தர் 19 பண்களிலும் திருநாவுக்கரசர் 10 பண்களிலும் சுந்தரமூர்த்திநாயனார் 17 பண்களிலும் தேவாரங்களைப் பாடியுள்ளனர். சுந்தர மூர்த்தி நாயனார் மாத்திரமே செந்துருத்தி பண்ணில் (மத்தியமாதி) "மீளா அடிமை" எனும் தேவாரத்தைப் பாடியுள்ளார். தேவாரம் திருப்பதிகங்கள் சுத்தாங்கமாகவும், பண்ணாங்கமாகவும் பாடப்பட்டன. தாளமில்லாமல் வெறும் பண்ணிலே பாடுவது சுத்தாங்கம், தாளத்தோடும் பண்ணோடும் பதிகங்களைப் பாடுவது பண்ணாங்கம் ஆகும். திருஞானசம்பந்தர் தேவாரத்தை இசையோடு பாடவேண்டும் என்று வலியுறுத்துகிறார். அதாவது **"இசை பக்திமையால் பாடுதலும்..."** என்றும் **"இசையோடு பாடல் மறந்தறியேன்..."** என்றும் பாடுகின்றமை குறிப்பிடலாம். மேலும் சுந்தரர் தனது பாடல்களில் **"தமிழோசை கேட்கும் இச்சை இருக்க வேண்டும்..."** என்றும் **"ஒலிகொள் இன்னிசை செந்தமிழ்"** எனவும் சிறப்பிக்கின்றார். மேலும் அப்பர் சுவாமிகள் பழந்தமிழ் உணர்வு மிக்கவர் என்பதனை "பாடுவார் பணிவார் பல்லாண்டிசை உணர்வு மிக்கவர்" என்று பாடுவதிலிருந்து அறியலாம். யாழ், வீணை, வேங்குழல், கன்னரம், முழவு, மொந்தை, துடி, சங்கு போன்ற கருவிகள் வழிபாட்டின் போது பயன்படுத்தப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். திருச்சாளந்தி என்றும் ஒரு இசைப்பாடல் அமைப்பு உள்ளது. உதாரணமாக சம்பந்தர் இயற்றிய,

**"தந்தத்தா தந்தத்தா தனந்தானந்த நந்தை தானா,**

**தானா தானானா தன தன தனன தனா...." என்ற தாளத்திற்குப் பொருத்தமாக,**

**"பந்தத்தால் வந்தெப்பால் பயின்று நின்ற உடம்பரும்**

**பாலே சேர்வாயேனொர்கள் பயில்கண முனிவர்களும்"**

என்று வருகின்ற பாடலடிகள் சிறப்பானவை ஆகும். இக் காலப் பாடல்களில் விருத்தப்பா சிறப்புப் பெறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சோழர் கால இலக்கியங்களில் பலவகையான இசைக்கருவி, இசைக் குறிப்புக்கள், காணப்படுகின்றன. கம்பராமாயணம் முதலான பெருங்காப்பியங்களும் கலிங்கத்துப் பரணி மூவர் உலாப் போன்ற சிற்றிலக்கியங்களிலும் இசைப் பாடல்கள் காணப்படுகின்றன. ஒரு வாசகத்தில் உருகாதவர் திருவாசகத்திற்கு உருகுவார் என்பதும் கல்லையும் கரைய வைக்கும் காவியம் என்பனவும் இசை பற்றி அறிய உதவும் குறிப்புக்கள் ஆகும். மக்களின் வாழ்வியலோடு இன்றுவரை பின்னிப் பிணைந்து,

**"இசையோடு வந்தோம்**

**இசையோடு வாழ்வோம்**

**இசையோடு போவோம்**

**இசையாவோம்........"** என்கின்ற சினிமாப் பாடலடிக்கு இசைவாக இன்று இசை மக்கள் மத்தியில் பெற்றிருக்கும் வரவேற்புக்கு மூல காரணமாக அமைந்தது பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இசை பற்றிய குறிப்புக்கள் ஆகும். இவ்வாறு இன்று மக்களை மன ஒருமைப்படுத்தி, அகத்தினில் இன்பத்தை வரவழைக்கும் ஓர் இனிய மருந்தாக இசை கொள்ளப்படுவது சிறப்பான ஓர் அம்சமாகும்.

**உசாத்துணை நூல்கள்**

1. சிவத்தம்பி கா, 2007, தமிழர் கலைகள், அனைத்துலகத் தமிழ்க்க லை நிறுவகம்.
2. லயன்ஸ் திலகநாயகம் போல், பத்தினியம்மா திலகநாயகம், 2010, இசைத்தமிழின் தொன்மையும் திண்மையும்.
3. முனைவர் மார்க்றெட் பாஸ்டின், 2006, இன்னிசை யாழ் (விபுலாநந்தரின் யாழ் நூல் ஒரு பார்வை), கம்பனியன் அட்வர்டைசிங் சர்வீசை, திருச்சி.
4. கலைவாணி. இரா, 2005, சங்க இலக்கியங்களில் இசை, ஏழிசை பதிப்பகம்.


**அரச நாடக கீர்த்தி விருது - 2021**

- திரு.பி.யூல்ஸ் கொலின்

**கலைமன்ற பதிவு - 2022**
(பண்பாட்டலவல்கள் திணைக்களம் வ.மா)
வண்ணை கலை மன்றம்
பிரப்பங்குளம் வீதி. யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களும் யோகாவும்



**கவிஞர். ரஜிதா அரிச்சந்திரன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

நவநாகரிக உலகில் பல விதமான நவீன உடற்பயிற்சி வகைகள் இருந்தாலும் அவற்றினால் உடலுக்கு மட்டுமே பயிற்சி வழங்க முடியும். உடலினையும் மனதினையும் சீராக்க யோகாவால் மட்டுமே முடியும். யோகாசனம் மனதினை ஒருமுகப்படுத்தி உடலினை நேர்படுத்தவும் நேரிய சிந்தனை உடையோராகவும் வாழவைக்க ஆன்றோராகிய சான்றோர் கண்ட கலையே யோகாசனம். இதனைப் பற்றி பலரிடையே பல கருத்துக்கள் உண்டு. அந்த வகையில் பெண்கள் யோகா செய்யலாமா கூடாதா என்ற பிரச்சனைக்கான தீர்வே இன்றைய கட்டுரையாக அமைகின்றது.

இன்றைய உலகில் ஆண்களைவிட பெண்கள் தான் உடல் உள நிலையில் மிகப்பாரிய பாதிப்புக்குள்ளாகின்றனர். எனவே அவர்கள் யோகாசனம் பயில அவர்களுடைய எல்லா வகையான பிரச்சினைகளும் அற்றுப் போய்விடும். உடற்பயிற்சி மணித்தியாலக் கணக்காக செய்யும் போது கிடைக்காத பயன் பதினைந்து நிமிடங்கள் யோகா செய்வதனால் பெற முடியும்.

பெண்களின் உடலமைப்பு வித்தியாசமானது. பிரமனை கலைஞன் என்று கவிஞர்கள் வர்ணிப்பதும் அதனாலோ என எண்ணத்தோன்றுகின்றது. அவ்வாறான அழகிய சரீரத்தைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பெண் முற்றிலும் பெண்தன்மையுடனும் பெண்ணுக்கே உரிய நளினத்தோடும் மிளிர செய்வதற்கு அவளுடைய உடலில் ஹார்மோன்களை அளவாக சுரக்க செய்வதில் யோகாக் கலைக்கும் பெரும்பங்குண்டு.

ஆண்களைவிட பெண்களுக்கு உடலில் பதினேழு சதவீத கொழுப்பு அதிகம் உள்ளதால் விரைவில் பெண்களின் உடல் பருத்துவிடும் தன்மை கொண்டது. அதனைத் தடுக்க பலவிதமான உடற்பயிற்சிகளில் பெண்கள் ஈடுபடுவதைக் காணலாம் எனினும் யோகா செய்வதனால் உடலை மட்டுமல்ல மனதினையும் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ளலாம்.

பருவமடைந்த நாள் முதலாக யோகாசனப் பிரணாயாமங்கள் செய்து வரும் போது திருமணம் ஆனவுடனே குழந்தைப் பேற்றினை அடைய முடியும். அத்துடன் உற்சாகமாகவும் சிறப்பாகவும் வாழவும் முடியும்.

பெண்களுக்கு மாதவிடாயின் போது ஏற்படும் தலைவலி, மயக்கம் வயிற்றுவலி, இடுப்புவலி, பசியாமை போன்றவற்றுக்கு பிட்யூட்டரி, தைரொயிட், ஓவரி போன்ற சதைக்கோளங்கள் கெட்டுப்போவதே காரணமாகும் இவற்றினை சீர்ப்படுத்த தைராய்ட் மூலமாகத் தான் முடியும். எனவே இதற்கு சிறந்த ஆசனம் சர்வாங்க ஆசனம் இதனை பதினைந்து நிமிடம் முதல் இருபது நிமிடம் வரை தொடர்ந்து செய்துவர இந்நோய் குணமாகிவிடும். இத்துடன் சேர்த்து சிரசாசனமும் செய்து வர மூளைக்கு நல்ல இரத்தோட்டம் ஏற்பட்டு உடல் சிறப்பாக இயங்கத் தொடங்கும்.

பெண்களிற்கு இயற்கை கொடுத்த அற்புதமான சிறப்பே, குழந்தை பெற்று சந்ததியை வளப்படுத்தலே ஆகும். பேண்கள் கற்பமாகி முந்நூறு நாட்கள் தவமிருந்து பெறும் குழந்தையினை அவர்கள் இயற்கையாகப் பெற்றுக் கொள்ளும்போது அவர்கள் காலம் முழுக்க ஆரோக்கியமாக வாழ முடியும் சிசேரியன் மூலம் குழந்தை பெறுவதற்காக போடப்படும் ஊசியின் தாக்கமானது அவர்கள் மரணிக்கும் வரை இருக்கும். எனவே யோகாசனங்களை முறைப்படி செய்து சுகப்பிரசவம் பெறலே நன்மையாக அமையும்,

கருத்தரித்த பின்னர் கருப்பை பலமில்லாத காரணத்தினால் கருச்சிதைகின்றது இதை விட குழந்தை ஊனமாகவும் பிறக்கும் வாய்ப்புக்களும் உண்டு. இதற்கு கருவுற்ற தாய்மார் எடுக்கின்ற மருந்து வகைகளும் காரணமாகின்றது. கர்ப்பகாலத்தில் நோய்கள் விரைவில் தாக்கத்தை ஏற்படுத்தும். அவ்வாறில்லாமல் சிறப்பாக வாழ யோகாசனம் வழி காட்டும். கருச்சிதைவு ஏற்படாமலிருக்க வயிற்றுப் பகுதியில் இரத்த ஓட்டம் அதிகரிக்க தனுராசனம், கலாசனம், சிவலிங்காசனம் மற்றும் பச்சிமோத்த ஆசனமும் அவசியம் செய்ய வேண்டும்.

மாதவிடாய் காலத்தில் பெண்கள் ஆசனங்களினை செய்யக் கூடாது. கருவுற்ற பெண்கள் முதலிரண்டு மாதமும் எல்லா ஆசனங்களினையும் செய்யலாம். மூன்றாவது மாதத்தில் தனுராசனம், யோகமுத்திரா, ஆறாவது மாதம் சிரசாசனம், கலாசனம், அர்த்த கலாசனம் போன்றவற்றை செய்யக் கூடாது. ;எட்டாவது மாதம் சர்வாங்க ஆசனத்தை நிறுத்தி விபரீதகரணி மட்டும் செய்யலாம் ஒன்பதாவது மாதத்தில் எந்த ஆசனமும் செய்யக் கூடாது. நாடி சுத்தி மட்டும் செய்யலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட ஆசனங்கள் வயிற்றை அழுத்தி செய்வதனால் அது குழந்தையின் அசைவைப் பாதிக்கும் என்பதால் இவ்வாறாகக் குறிப்பிட்டுள்ளனர். விஞ்ஞானம் வளராத காலப்பகுதியில் எம் முன்னோர் அறிவிற் சிறந்தோராக விளங்கினர்.

அதிக குழந்தை பெற்ற காரணத்தாலும் ஹார்மோன் குறைவினாலும் பெண்களுக்கு கருப்பை தன் இடத்தைவிட்டு இறங்கி அவஸ்தையைக் கொடுக்கும். இதனை நீக்க சர்வாங்க ஆசனமும் சிரசாசனமும் யோகமுத்திராவும் செய்து வர வேண்டும்.

சில பெண்களுக்கு குழந்தை குறைபாடுள்ளதாகப் பிறக்கின்றது. அதனைத் தடுக்க பெண்கள் நாடி சுத்தி செய்வார்களேயாயின் சிறந்த பலனை பெற்று கொள்ள முடியும். இதனை திருமந்திரத்தில் தெளிவாகக் கூறியுள்ளது.

தாய்ப்பால் குறைவாக உள்ள பெண்கள் சிரசாசனம், விபரீத கரிணி ஆசனங்களை செய்துவர தாய்ப்பால் நன்றாக சுரக்கும் பெண்கள் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பது குழந்தைக்கும் ஆரோக்கியம் தாய்க்கும் ஆரோக்கியம்.

காலம் கடந்தும் பருவமுறாத பெண்கள் யோகாசனம் செய்வதனூடாக உடலினை செம்மைப்படுத்தி பூப்படையலாம். அத்துடன் பெண்களுக்கு ஏற்படும் இடுப்பு வலிக்கான காரணம் அட்ரினல் சுரப்பி சுரப்பது குறைவது இப்பிரச்சினையை நீக்க அர்த்தகலாசனத்தை தொடர்ச்சியாக செய்ய பலன் கிடைக்கும்.

இதைவிட பெண்களுக்கு கற்ப காலத்தில் ஏற்படும் இரத்த அழுத்தம் மனச்சோர்வு போன்றவற்றுக்கு தியானம் சிறந்த தீர்வாக அமையும் தொடர்ந்து தியானம், மூச்சுப்பயிற்சி செய்து வர அழகிய குழந்தையினைப் பெற்றெடுக்க முடியும்.

பெண்களைத் தாக்கும் மார்பகப் புற்று நோயை முறையான சுவாசப்பயிற்சி – யோசனங்களின் மூலம் நிவர்த்தி செய்யலாம்.

தொடர்ந்தும் ஆசனங்கள் பிரயாணாமம் மற்றும் நாடி சுத்தி போன்றவற்றை செய்து அழகான ஆரோக்கியமான பெண்களாக வாழ்வதுடன் ஆரோக்கியமான கூன், குருடு, பேடு நீங்கிய சந்ததியினை வழங்கி பூமியில் சிறப்பாக வாழ யோகக் கலை உதவும் என்பதில் ஐயமில்லை .

**இளங்கலைஞர் விருது - 2021**

**(மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்)**

திருமதி யூட் அல்போன்சஸ் மேவிஸ் ஜீன்சியா – கூத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசையின் மூலம் உடல் மற்றும் மனநலக் கோளாறுகளைக் குணப்படுத்த முடியும்



**திருமதி தர்சினி யூட்அமலராஜ்**
நுண்கலைமாணி, கலைமாமணி,
கீதசொரூபி, கம்சப்பிரியா இசைக்கல்லூரி.

உலகெங்கிலும் பல்வேறு வகையான உடல் மற்றும் மனநலக் கோளாறுகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கு இசையைப் பல்வேறு மருத்துவ நிபுணர்கள் கையாண்டு வருகின்றனர். இதனை இசைச் சிகிச்சை என்று சொல்கின்றனர். இதனால் பலதரப்பட்ட நோய்களை முழுமையாகக் குணப்படுத்தமுடியும் என சுகாதார ஆய்வுகள் கூறுகின்றது.

ஒரு குழந்தையைத் தூங்க வைக்கும் தாலாட்டை விட இசைச் சிகிச்சைக்கு சிறந்த ஆதாரம் தேவையா? கருவிலிருக்கும் குழந்தை கருவில் இருக்கும் போதே தாயின் இதயத்துடிப்பையும் அவர் கேட்கும் இசையையும் கூர்ந்து கவனிக்கின்றது. கருவில் இருக்கும் போது கேட்கப்படும் இசை மற்றும் பாடல்கள் மீது அக்குழந்தைக்கு இயற்கையாக ஈர்ப்பு ஏற்படுகின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. கர்நாடக சங்கீதமோ நாட்டுப்புறப்பாடல்களோ, தாலாட்டுப்பாடல்களோ எது என்றாலும் மனஅழுத்தத்தை எதிர்த்து போராடவும் வலியை நிர்வகிக்கவும், உணர்ச்சி ரீதியான விடுதலையை அனுபவிக்கவும், ஆன்மீக இணைப்பை மேம்படுத்தவும் இசை ஒரு மிகச்சிறந்த கருவியாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய நாட்டு இசைச்சிகிச்சை என்பது பண்டைய குணப்படுத்தும் நடைமுறைகள், தற்போதைய மருத்துவ நடைமுறைகள் மற்றும் இசைமரபுகளின் ஒருங்கிணைப்பு ஆகும். மியூசிக்தெரபி என்பது இந்தியாவில் மிகவும் பிரபலமாகிக் கொண்டே இருக்கின்றது. உலகெங்கிலும் மருத்துவர்கள், அறுவைச்சிகிச்சை நிபுணர்கள், மனநலமருத்துவர்கள், உளவியலாளர்கள், நோயை விரைவில் குணப்படுத்துவதற்காக இசைச்சிகிச்சையாளர்களின் உதவியை நாடுகின்றனர். இசைச் சிகிச்சை இப்போது ஒரு நிறுவப்பட்ட சுகாதாரத் தொழிலாக மாறி வருகின்றது. இந்த நடைமுறையில் மருத்துவர் முதலில் நோயாளியின் தேவைகளை மதிப்பிடுகின்றார். ஒரு தகுதிவாய்ந்த இசைச் சிகிச்சையாளர் நோயின் தீவிரத்தைப் பொறுத்து ராகம் மற்றும் தாளத்தைத் தேர்வு செய்கிறார். மேலும் நோயைக் குணப்படுத்த உகந்தது பாட்டுக்களா அல்லது கருவிஇசையா என்பதையும் முடிவு செய்கின்றார். நோய்த்தடுப்பு சிகிச்சைக்கு மியூசிக்தெரபி மிகவும் பொருத்தமானது. என்பதால் பாரம்பரிய சிகிச்சையுடன் இசைச்சிகிச்சையும் இணைந்து அளிக்கிறார்கள்.

மேலும் "Me Lodic Intonation Therapy" என்பது பேச்சுக் கோளாறுகளைச் சரிசெய்யும் ஒரு இசைச்சிகிச்சை ஆகும். Storke Therapy எனப்படும். பக்கவாதச் சிகிச்சையுடன் மியூசிக்தெரபி சேர்க்கப்பட்டால் அது சிறந்த மற்றும் வேகமான பலனைத்தரும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். புற்றுநோய் வார்டுகள் மற்றும் மருத்துவ இல்லங்களில் நோயாளிகளின் வலியைக் குறைப்பதற்காக இசை பயன்படுத்தப்படுகின்றது. மேலும் இசை கேட்பதன் மூலம் மாதவிடாய் வலி அல்லது பிற தினசரி வலிகளைக்கூட எளிதில் எதிர்கொள்ளலாம். குழுஇசை தயாரிப்பில் பங்கேற்பது போதைப் பொருளுடன் போராடும் மக்களுக்கு தளர்வு, சமூக இணைப்பு மற்றும் உணர்ச்சி பூர்வமான வெளியீடு ஆகியவற்றைக் கண்டறிய உதவுகின்றது. அதுமட்டுமன்றி இசை கவலை மற்றும் மனஅழுத்தத்தைக் கடுமையாக குறைத்து இரத்தஅழுத்தம் மற்றும் இதயத்துடிப்பை இயல்பாக்கின்றது. கர்ப்பிணிப் பெண்கள் எளிதாக பிரசவிக்க இசையைப் பயன்படுத்துகின்றார்கள். புத்துணர்வாக்கும் சக்தி இசைக்கு உண்டு. அதை இது மருத்துவ ரீதியாகவும் உண்மை என்று தெரிவிக்கின்றன. ஆய்வுகள், இசைகேட்கும் போது அது மனதிற்கும், மூளைக்கும் பொஸிட்டிவ் மாற்றங்களைத் தருகிறது.

பிரைன் ப்ளாஸ்டிசிட்டி என்பது வயது, நேரம் என்ற வரம்புகள் அற்று மூளையின் செயல்களைத் தூண்டச்செய்யும் ஒரு பயிற்சி அந்தப்பயிற்சி இசைகேட்கும் போது தானாகக் கிடைக்கின்றது. பொதுவாக இசையுடன் நேரம் செலவழிக்கும் மனித மூளை இசையிடம் இருந்து விலகி இருக்கும் மனித மூளையைவிட மாறுபட்டு இருப்பதாகவும், இசைப்பிரியர்களுக்கு கார்ப்பஸ் கொலோஸம் எனப்படும் நரம்பு இணைப்புகள் இயல்பைவிட வலுவாக இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள். இசை, அது குறித்த தொழில்முறை, ஞானம் இல்லாதவர்களுக்கும், நிரம்ப நிரம்ப இதம் தரக்கூடியது. அது மூளையையும் சுறுசுறுப்பாக்கும் என்கின்றார்கள் ஆராய்ச்சியாளர்கள். வேலைசெய்யும் போது பாடல்கள் கேட்பது, வேலைச் சுமையைக் குறைத்து புத்துணர்ச்சி பெற வைப்பதாகவும் தெரிவிக்கும் அவர்கள் நாள்பட்ட மனஅழுத்தத்தைக் குறைப்பது ஆற்றலை அதிகரிப்பது என்று இசையின் பயன்களை அடுக்கிக்கொண்டே போகின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இசையும் ஹோர்மோன்களும்**

ஆக்ஸிடைஸின் எனப்படும் பிரைன் ஹோர்மோன் நம்பகத்தன்மை தாராள உணர்வு, மகிழ்ச்சி ஆகியவற்றைத் தரக்கூடியது. அதிகமாக சாக்லெட் சாப்பிடும் போது, வெற்றிபெறும் போது என குஷியான தருணங்களில் எல்லாம் மனதில் ஏற்படும் அந்த ஜில் மாற்றம், அந்த ஹோர்மோன் தூண்டப்படுவதால் தான் மியூசிக் கேட்கும் போது ஆக்ஸிடைஸின் ஹோர்மோன் அதிகமாக தூண்டப்படுகின்றது என்பது அடுத்த ஆச்சரியத்தகவல், கற்பதால் கிடைக்கும் நன்மைகள்.

இசையைக் கேட்கும் போதே இவ்வளவு பலன்கள் எனில் கற்கும் போது இதோ பேச்சாற்றல் வளரும். செவித்திறன், விழித்திறனை அதிகரிக்கும் ஐக்யூ மட்டம் உயரும் மனதுக்கும் மூளைக்குமான தொடர்பு அதிகரிக்கும் வெளியுலகைப் பற்றிய குறைபாடு உள்ளவர்களுக்கு அமையும்.

மகிழ்ச்சியாக இருப்பதற்கும் ஆரோக்கியமாக இருப்பதற்கும் சிறந்தவழி இசையை கேட்பதே. எனவே தினசரி மன அழுத்தத்தைக் குறைத்து ஏனைய நோய்களில் இருந்து விடுபட்டு நல்வாழ்வை அதிகரிக்க இசையைக் கேட்டு நன்மையைப் பெறுவோம்.

**பாரம்பரிய நவீன கலை கலைஞர்களுக்கான விருது - 2019**

**[இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்]**

- திரு இராசையா ஸ்ரீ தரன் – வில்லிசை
- திருமதி வசந்தி குஞ்சிதபாதம் – நடனம்
- செல்வி விஜயலக்ஸ்மி சண்முகராஜா – (வீணை) இசை
- செல்வன் வசந்தகுமார் கஜாணன் – இசை, இசையமைப்பு

**அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான**

**தேசிய ஆக்கத்திறன் போட்டி -2019 / 2020**

**[இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்]**

செல்வி அபிநயா சுஜீவன் (மூன்றாம் இடம் – பேச்சுப் போட்டி)

அத்தியடி வீரகத்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணக் கலாசாரப் பண்புகள்




சைவப்புலவர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்
B.A, MA, MED, PGDE, PGDEM, SLWAS II
ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்.


**யா**ழ்ப்பாணத்தின் இயற்கையமைவும் பௌதிக, பண்பாடுகளும் ஏனைய இடங்களை விட சிறந்து விளங்கக் காரணமாய் அமைந்தன. இந்து சமுத்திரத்தில் இந்தியாவிற்குத் தெற்கே இலங்கையின் வடக்கில் சமதரைப் பௌதிக அமைப்பைக் கொண்டமைந்தது. யாழ்ப்பாணம் தரைத்தோற்றத்தில் கரையோரச் சமவெளிக்குரிய பண்புகளைக் கொண்டமைந்திருப்பது விவசாய நடவடிக்கைகளுக்கு சாதகமாய் அமைந்து காணப்படுகிறது. தரைக்கீழ் நீரும் விவசாயத்தைச் செழிப்பாக்கும் நல்ல மண் வளமும் மக்கள் தம் அயராத முயற்சியும் விவசாயம் மக்களது ஜீவனோபாயத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. நெல், சிறுதானியம், உப உணவுப் பயிர்ச்செய்கை என்பன மிக நீண்ட காலமாக செய்யப்பட்டு வருகின்றன.

இயற்கைப் பசளையைப் பயன்படுத்தி மாடுகளைக் கொண்டு நிலத்தை உழுது தரைக்கீழ் நீரை சூத்திர இறைப்பு, துலா இறைப்பு மூலம் இறைத்து நல்ல விளைச்சலைப் பெற்று தன்னிறைவாக ஆரம்ப காலத்தில் மக்கள் வாழ்ந்தார்கள். பின்னர் நவீன விஞ்ஞான வளர்ச்சியுடன் இணைந்து இயற்கைப் பசளையையும் இரசாயனப் பசளையையும் பயன்படுத்தி உழவு இயந்திரங்கள் மூலம் நீரை இறைத்து விவசாயத்தை பெரிய அளவில் செய்யுமளவிற்கு வளர்ச்சி நிலைக்கு வந்தார்கள். இதனால் உணவுக்குத் தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களைத் தாமே உற்பத்தி செய்து மேலதிகமானவற்றைச் சந்தைப்படுத்தும் நிலைக்கு வளர்ச்சியடைந்தனர். இவ்வாறான நிலமைகளில் பெருமழை, வரட்சி காரணமாக பல நெருக்கடிகளையும் காலத்துக்குக் காலம் எதிர்கொண்டு எதிர்நீச்சல் அடித்து தமது அயரா முயற்சியால் முன்னேறும் ஆற்றல்களைத் தம்மகத்தே கொண்டு செயற்படும் மக்கள் துணிச்சல் பாராட்டத்தக்கது.

பூலோக கற்பக தருவாகிய பனைவளம் யாழ்ப்பாணத்தின் இயற்கை வளத்தை மேலும் மேன்மையடைய வைத்தது எனலாம். பெருமளவான பனைகள் தாமாகவே வளர்ந்து அதன் பகுதிகள் அனைத்தும் மக்கள் தேவைக்குப் பயன்படுமளவிற்கு காணப்பட்டமை யாழ்ப்பாண மக்களுக்கு அருங்கொடையாகவே அமைந்தது. பல்வேறு நெருக்கடி மிக்க காலங்களில் உணவாக, வீட்டுப் பாவனைப் பொருள்களாக மற்றும் பல தேவைகளுக்குப் பயன்படும் பொருளாக பனை வளம் காணப்படுகிறது. கடந்த நூற்றாண்டு காலத்தில் பனை வளம் இல்லாமல் போய் விடக் கூடாதென்பதற்காக பல பெரியோர்கள், அறிஞர்கள் பனையை வளர்ப்போம் பயனைப் பெறுவோம் எனும் தொனிப் பொருளில் பனைகளை நடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். நவீன வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் பனைவளம் இன்று பயன்படுவது யாழ்ப்பாண மக்கள் வாழ்க்கையை வளம்படுத்துவதாக அமைகிறது. மற்றைய இடங்களில் மா, பலா, வாழை, திராட்சை, முருங்கை, கிழங்கு வகைகள் பயிரிடப்படுகின்ற போதிலும் யாழ்ப்பாணத்தைச் சுற்றி அமைந்துள்ள இடங்களில் பயிரிடப்படும் மேற்படி பொருள்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் பெருமையுடன் நுகரப்படுவதற்கு அதன் தரம், தனித்துவம் காரணமாகிறது. கறுத்தக் கொழும்பான் மாம்பழம், யாழ்ப்பாண முருங்கைக்காய், திராட்சை, வாழை போன்றன மட்டுமன்றி மேலும் யாழ்ப்பாண விளை பொருட்கள் இலங்கையின் பல பாகங்களிலும் விரும்பி வாங்குவது சிறப்பானதாகும்.

பயிர்ச்செய்கை மாத்திரமின்றி ஏனைய விடயங்களிலும் யாழ்ப்பாணத்தின் பெருமை வெளிப்படுத்தப்படுகின்றது. ஆலயக் கட்டிடக்கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை, இசைக்கலை, நடனக்கலை, ஓவியக்கலை போன்ற கலைகள் ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு கல்வி நிறுவனங்கள் கலை வளர்க்கும் நிறுவனங்கள் மூலம் வளர்ந்து வருகின்றன. ஆலயங்களில் கட்டிடக்கலை சுவர்களில் சிற்ப சித்திர ஓவியக்கலைகள் உள்ளன. தேர், மஞ்சம் செய்வதில் இக் கலைகளின் வெளிப்பாடு காணப்படுகின்றது. இவற்றைச் செய்யக்கூடிய விற்பன்னர்களும் யாழ்ப்பாண மன்னர்கள் காலம் தொடக்கம் தற்காலம் வரை யாழ்ப்பாணத்தை வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்து வருவதுடன் நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் பணியாற்றி வருகின்றனர்.

ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு இசைக்கலை வளர்ந்து வருகின்றது. தவில், நாதஸ்வரத்துக்கு புகழ் பெற்ற மேதைகள் அன்றும் இன்றும் யாழ்ப்பாணத்திலிருந்து கலை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்கின்றமை பெருமைக்குரியதாகும். உலகத்தவில் மேதை என்ற சிறப்பிற்குரிய தவில் மேதை அமரர் தட்சணாமூர்த்தி அவரது குழுவினர் அவர் வழி வந்தோர் யாழ்ப்பாணத்தின் பெருமையை உலகறியச் செய்தனர். அது போன்று இன்று வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவில், நாதஸ்வரக் கச்சேரி செய்வதில் யாழ்ப்பாணத்திலுள்ள கலைஞர்கள் தம் மகத்தான சேவையைச் செய்து வருகின்றனர். ஆலயங்களுக்கு அருகில் இவர்கள் இருந்து இவ்வாறான சேவைகளைச் செய்வது ஆலயத் திருவிழாக்களை சிறப்பாகச் செய்ய வழி வகுக்கின்றன.

அத்துடன் ஆலயங்கள் பல மன்னர்களால் கட்டப்பட்டு அவர்களது பெயர்களுடன் அழைக்கப்படுவதும் சித்தர்கள், ஞானிகள் வாழ்ந்து மகிமைப்படுத்திய பெருமைகளையும் கொண்டு விளங்கும் யாழ்ப்பாணத்தில் இணுவிலில் உலகப் பெருமஞ்சம் 100 வருடங்களுக்கு முன்னரே செய்யப்பட்டு இன்று வரை ஆலய வீதி வலம் வரும் காட்சி எல்லோரையும் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்ள வைக்கின்றது. இது போன்று ஒவ்வொரு ஆலயமும் ஒவ்வொரு சிறப்புக்களையும் கொண்டு விளங்குகிறது. நல்லூர் கந்தசுவாமி கோயில் பெருமைகளும் நாம் அனைவரும் அறிந்த விடயமாகும்.

சிறந்த ஒழுங்கமைப்புத் திட்டமிடல், குறித்த நேரத்திற்கு பூசை வழிபாடுகள், இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மகோற்சவ காலங்களிலும் ஏனைய நாட்களிலும் பக்தர்கள் வந்து வழிபடுகின்றமை சிறப்பானதாகும். இவ்வாறான நல்லூர்ச் சூழலில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களும் பிறந்து வளர்ந்து மகத்தான பணியாற்றியமை யாழ்ப்பாணத்திற்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

இலக்கியம் என்றாலே கவிதை என்ற நிலையிலிருந்து கவிதைகளை வசனங்களாக மாற்றி உரைநடை வடிவமாகப் பல கவிதை இலக்கியங்களை மாற்றிய பெருமை நாவலருக்குரியதாகும் வசன நடை கைவந்த வல்லாளர் என்ற பெருமைக்குரிய வகையில் அவர் இலகு நடையை பேச, எழுத வழி செய்தார். பிரசங்கம் என்னும் மக்களைக் கவரக்கூடிய புதிய முறையை வண்ணை வைத்தீஸ்வரர் கோயிலில் நிகழ்த்திய பெருமையும் அவருக்குரிய தனித்துவத் தன்மையாகும். பல நூல்களைப் பதிப்பிக்கும் நோக்கில் சைவப்பிரகாசா அச்சியந்திரசாலையை நிறுவி துண்டுப்பிரசுரங்கள், நூல்கள் பலவற்றை வெளியிட்டு வைத்தார். கவிதை வடிவிலுள்ளவற்றை படிக்க முடியாத மக்களுக்கு வசன நடை இலகுவானதாக அமைந்தது. சிறுவர் முதல் பெரியோர் வரை இதனால் பயனடைந்தனர்.திண்ணைப் பள்ளிக் கூட முறையில் பலர் பாடம் படிப்பதற்கும் ஆறுமுகநாவலர் செய்த பணி பயன்படக் கூடியதாக அமைந்தது.

சேர் பொன் இராமநாதன் அவர்களின் தீர்க்கதரிசனமான செயற்பாடுகள் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல்வேறுபட்ட வளர்ச்சி மேலும் வளர்வதற்கான அடிப்படை அம்சங்களைக் கொண்டு விளங்குகின்றன. வீதிப்போக்குவரத்து புகையிரதப் போக்குவரத்து, புகையிரத தரிப்பிடம், பல்கலைக்கழக அமைவிடம் மேலும் வளரக்கூடிய பின்னணி என்பன உயர் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் பட்டங்களை வழங்கவும் வழி வகுத்தன.

இன்றைய கொரோனா வைரஸ் பரவல் அதனால் ஏற்படும் தாக்கங்கள் சகல துறைகளிலும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தினாலும் பல்கலைக்கழக செயற்பாடுகள், பட்டமளிப்பு விழாக்கள் உரிய முறையில் நடைபெறுகின்றன. அதுபோன்று அதியாவசிய செயற்பாடுகள், பாடசாலைக் கல்விச் செயற்பாடுகள், வைத்தியசாலைகள், சுகாதாரத் துறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள், அர்ப்பணிப்பான சேவைகளை வழங்குவதால் மக்கள் வாழ்க்கை நாளாந்த செயற்பாடுகள், ஆலய வழிபாடுகள், மக்களது நாளாந்த வழமையான செயற்பாடுகள் சாதாரணமாக நடைபெறுகின்றன.

நாட்டிலுள்ள சமகால பிரச்சினைகளான எரிபொருள் தட்டுப்பாடு, அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு, விலைவாசிகளின் உயர்வு எல்லா மக்களையும் போல் யாழ்ப்பாண மக்களும் பொதுவான வாழ்க்கையை வழிவகுத்து வாழ்ந்த முறையால் பிரச்சினைகளை எதிர்கொள்வதில் ஆர்வம் மிக்கவர்களாக வாழப் பழகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தை இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் புகையிரதப் பாதை அமைப்பிற்கான முன்னோடியாக சேர் பொன் இராமநாதன் அவர்கள் செயற்பட்டார். புகையிரதப் பாதை அமைப்பு வளர்ச்சியடைந்து இன்று முக்கியமான போக்குவரத்துத் துறையாக விளங்குகிறது. அவரது பணிகள் நூறுவருடங்களைக் கடந்து நிற்கிறது. அதே போல காலத்தின் தேவைக்காக செயற்படும் செயல்களைக் குறுகிய காலத்திற்குள் செய்த பெருமைக்குரிய ஆறுமுகநாவலர் அவர்களின் நூற்றாண்டு விழா செயற்பாடுகள் இந்த வருடத்தில் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு நினைவு கூரப்படுகின்றன.

நாவலர் காலத்தில் ஆரம்பித்த பத்திரிகைப் பணி இன்று யாழ்ப்பாணத்திலிருந்து பலவிதமான செய்திகளுடன் பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. பத்திரிகைத்துறை குறிப்பிடக்கூடிய ளவிற்கு வளர்ச்சி நிலையில் உள்ளது. அதேபோல தனியார் தொலைக்காட்சி நிறுவனம் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகின்றமை மக்களை தற்காலப் பயன்பாடுகளை அறியும் அளவிற்கு வளர்த்துள்ளது. இலங்கை வானொலியின் யாழ் சேவை பிராந்திய சேவையாக யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகிறது.

வைத்தியத்துறை, சித்தமருத்துவத்துறை வளர்ச்சியடைந்து மக்கள் ஆரோக்கியமாக வாழ யாழ்ப்பாண மக்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்துள்ளது. யாழ்ப்பாணத்திலும் பிற மாவட்டங்களிலும் இதனைக் காணமுடிகிறது.

கல்வி, கேள்விகளில் வாசிப்பில் உயர்வடைய பல நூலகங்கள் உள்ளன. இவற்றுக்கு சிகரம் வைத்தார் போல் யாழ்ப்பாண நூலகம் மக்களின் பல்வேறு வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளது. எம்முன்னோர் வீதியோரங்களில் கிணறுகள் வெட்டி போக்குவரத்து செய்யும் மக்களின் தாகத்தைத் தீர்க்க அரும் பணியாற்றியுள்ளனர். இன்றும் சில இடங்களில் இக் கிணறுகள் உள்ளன.

1974 இல் நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு வெகு விமரிசையாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். யாழ்ப்பாண மக்களின் செயற்பாடுகளின் பல நல்ல செயற்பாடுகள், முன்னோடி நடவடிக்கைகள், முன்னுதாரணமான வேலைகள் அயராமுயற்சி அக்கறை அர்ப்பணிப்பான செயற்பாடுகள் மிகவும் சிறந்த நிலைக்குச் செல்ல வழி வகுக்கிறது. அதே போன்று மேலும் வளர்ச்சி பெறுவதற்கு பொருத்தமான வேலைகளைத் திட்டமிட்டு எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய நிலைமைகளை எதிர் கொள்ளக் கூடிய வகைளில் ஒழுங்கமைத்த திட்டமிடல் செயற்பாடுகள் மிகவும் முக்கியமானதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள் விபரம்**


1. கார்த்திகேசு சிவத்தம்பி யாழ்ப்பாணம் சமூகம் பண்பாடு கருத்து நிலை குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை – 2000
2. சிவலிங்கம் .மு இணையில் ஈஸ்வரா பிறிண்டேர்ஸ், திருநெல்வேலி – 2013
3. சிற்றம்பலம் சி.க. கலாநிதி, யாழ்ப்பாணம், தொண்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு. 1993
4. துரைசிங்கம் த. கவிஞர், ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு, உமா பதிப்பகம், கொழும்பு – 2004.


**சிறந்த நூல் பரிசு - 2021**

[பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வ.மா]

- அருட்பணி.றேஜிஸ் இரராஜநாயகம் – "யாதுமானவன்" ( நூல் )
- அருட்பணி. ஸ்ரலின் இராசேந்திரம் – "உளக்குணமாக்கல் முறைகள்" ( நூல் )
- திரு. சின்னராஜா ரமணராஜா – "வீரசைவம்" ( நூல் )

**கலைக்குரிசில் விருது - 2021**

[பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வ.மா]

- செல்வி. கிருஸ்ணவேணி மயில்வாகனம் – இசை
- திருமதி. வசந்தி குஞ்சிதபாதம் – நடனம்
- திரு. அருளப்பு மரியதாஸ் – நாடக எழுத்துரு

**இளங்கலைஞர் விருது**

[பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வ.மா]

- திரு. பத்மநாதன் சிவமைந்தன் – இசை
- திரு. அஸ்ரனிக் றூஸ்வெல்ட் பிராங்கிளின் றூஸ்வெல்ட் – கூத்து

**கலைக்குரிசில் விருது - 2020**

[பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வ.மா]

திரு கிறகரி கிறிஸ்தோத்திரம் – கூத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வு மண்ணின் மைந்தர்
# அருளாளர் பி.ஏ. தோமஸ் அடிகளார்
# இலங்கையின் முதல் தமிழ் புனிதராவார்



**கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்**
ஊடக வருகை விரிவுரையாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
இயக்குனர் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்



ஆசியாக் கண்டத்திலே முதல் முதலாக ஆசிய நாட்டவரால் ஸ்தாபிக்கப்பட்ட காட்சி தியான யோகசபை என்றால் இறையடியார் பி.ஏ தோமஸ் அடிகளாரால் நிறுவப்பட்ட செபமாலைத்தாசர் சபையே என்ற பெயருடனும் பெருமையுடனும் தோலகட்டியில் உருவாகி 94 ஆண்டுகளை (1928 – 2022) நிறைவு செய்கிறது செபமாலைத்தாசர் துறவறசபை.

இச்சபையின் நிறுவுனர் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டம் தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பாக இலங்கையில் இருந்து செயற்படுபவரும் செபமாலைத்தாசர் சபையின் மாகாண முதல்வராக மூன்று தடவைகள் பணியாற்றியவரும் செபமாலைத்தாசர் சபையின் உயர் தலைவராக 2006 முதல் 2012 வரை பணியாற்றியவருமான ஏ.எம்.ஸ்ரிபன் அடிகளார் இவ்வாக்கத்திற்கான தகவல்களை வழங்கினார்.

## இறையடியார் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டம் பற்றிய நல்ல செய்தி

26 ஜனவரி 2020 அன்று இறையடியார் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் இறப்பின் 56ஆவது ஆண்டு நிறைவு தினமாகும். இந்த தினத்தோடு இறையடியார் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டம் எப்போது நிகழும் என்று ஏங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு ஒரு நல்ல செய்தி கிடைத்தது.


18 ஜனவரி 2020 அன்று யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் இறையடியார் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்ட நிகழ்வு பற்றிய விடயங்களை முடிவிற்கு கொண்டு வரும் கூட்டம் ஒன்று யாழ் ஆயர் இல்ல கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இக்கூட்டத்தில் முக்கிய பிரமுகராக உரோமாபுரியில் இறையடியார் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டம் தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பாக செயற்படும் றோலண் அடிகளார் கலந்து கொண்டார்.

இக் கூட்டத்தில் இலங்கையில் இறையடியார் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டம் தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பாக செயற்படும் ஏ.ஸ்ரீபன் அடிகளாரும் கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். மேற்படி இக் கூட்டத்திலேயே யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை இறையடியார் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்காக யாழ் மறைமாவட்டத்தில் செபிக்குமாறு அழைப்பு விடுத்தார்.



மேலும் இக்கூட்டத்தில் ஆயரின் பதிலாளியாக யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த திருச்சபை சட்டவியலாளர் கலாநிதி கிருபாகரன் அடிகளார் வரலாற்றுக் குழுவின் தலைவராக எஸ்.வி.பி. மங்களராஜா அடிகளார் குழ உறுப்பினர்களாக ஜெறோம் அ.ம.தி அடிகளார் (தற்போது உரேமையில்) நிர்மல்ராஜ் செ.தா அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர். செபமாலைத்தாசர் இலங்கை மாகாணத்தலைவர் ஜெயசீலன் அடிகளார் குறிப்பேட்டாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் செயலாற்றினார்.

ஏற்கனவே அனுப்பப்பட்ட 20 புண்ணியங்கள் விபரம் பொதுவானதாகவும் விபரம் குறைந்ததாகவும் இருந்தமையால் திரும்பவும் அவர்கள் அழைக்கப்பட்டு மேலும் தகவல்கள் திரட்டப்பட்டு றோலண் அடிகளார் உரோமாபுரிக்கு எடுத்துச் சென்று பொறுப்பான கருதினாலிடம் ஒப்படைக்கப்பட்டு பெற்றுக்கொண்ட பதிலும் கிடைக்கப்பட்டுள்ளது.

இறையடியார் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்கான செயற்பாடுகள் விரைவு படுத்தப்பட்ட நிலையில் அவரின் புனிதர் பட்டத்திற்காக செபிக்க எல்லா தமிழ் மறைமாவட்டங்களிலும் தமிழ் ஆயர்கள் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**சில மணி நேரமே உயிர் வாழ்வார் எனக்கருதப்பட்டவர்**

எலும்பும் தோலுமாக – நலிந்து மெலிந்த தோற்றத்துடன் – ஒரே ஒரு சுவாசப்பையுடன் பிறந்து (1886 மார்ச் 07) – சுவாசிக்கவே திணறிக்கொண்டு – ஒரு சில மணி நேரமே உயிர் வாழ்வார் எனக்கருதப்பட்டு – அன்றைய தினமே திருமுழுக்கு பெற்று – 78 ஆண்டுகள் வாழ்ந்து (1886 – 1964) முதல் சுதேச தியான யோக செபமாலைத்தாசர் சபையை குருக்களுக்கும் கன்னியர்களுக்கும் நிறுவி ஆசியாவின் ஜோதி என அழைக்கப்படுபவர் யாழ் பாண்டியன்தாழ்வு மண்ணின் மைந்தர் தவத்திரு பி.ஏ. தோமஸ் அடிகளார்.

பிறப்பிலிருந்தே நோயாளியான இவர் அன்றாடம் நோயோடு போராட வேண்டிய ஒருவராகவே இருந்தார். ஆனால் யாருக்குமே பாரமாகாமல் – எந்தப் பணியிலுமே குறை விடாமல் அவர் இறுதி வரை பயணித்தார் என்றே அறிய வருகிறது.

திரு திருமதி பஸ்தியாம்பிள்ளை லூசியா தம்பதிகளின் முதல் ஆண் குழந்தை பிறந்த உடன் இறந்து – இரண்டாவது குழந்தையான அந்தோனிப்பிள்ளை என்ற நாமம் பூண்ட தோமஸ் அடிகளாரின் நிலையும் கவலைக்கிடமாய் இருந்தமையால் பெரும் அங்கலாப்பே நிலவியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இறைவன் ஆறு ஆண்கள் கொண்ட ஏழு குழந்தைகளால் அக் குடும்பத்தை ஆசீர்வதித்ததோடு உயிர்வாழ மாட்டார் எனக்கருதப்பட்டவரை பஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை தோமஸ் அ.ம.தி அடிகளார் என்ற நிலைக்கு உயர்த்தி தம் கருவியாக பயன்படுத்தியுள்ளார்.

வட்டக் கண்ணாடி – தாடி நிறைய வளர்ந்த முகம் கையினில் செபமாலை எல்லாம் இவரை ஒரு முனிவராகவே இனம் காட்டின

ஆரம்பக் கல்வி புனித சாள்ஸ் ஆரம்பபள்ளி (1893 யூலை 20) – புனித பத்திரிசியார் கல்லூரி – புனித மாட்டீனார் குருமடம் (1904) – சீனியர் கேம்பிறிச் பரீட்சையில் தேர்ச்சி (1904) – அரசதுறை எழுத்துப் பரீட்சையில் தேர்ச்சி (1904) – நவசன்னியாசம் கொழும்பு அலோசியஸ் நவதுறவு இல்லம் (1907) துறவற அர்ப்பண வார்த்தைப்பாடு (1910 பெப்ரவரி 02) – குருப்பட்டம் (1912 ஜனவரி 06) – அந்தோனிப்பிள்ளை என்னும் பெயர் தோமஸ் என மாற்றம் – செபமாலைத்தாசர் தியானயோக துறவுசபை தோலகட்டியில் நிறுவல் (1928 பெப்ரவரி 02) – கன்னியர்க்கான செபமாலைக் கன்னியர் சபை வசாவிளானில் நிறுவல் (1948 செப்ரெம்பர் 8) – குருத்துவப் பொன்விழா (1962) – இறப்பு (1964 ஜனவரி 26) என இவரின் வாழ்வும் பணியும் 78 ஆண்டுகள் (1886 – 1964) வேகமாக ஓடி முடிந்தன.

மெலிந்த உடல் – சாந்தமான தோற்றம் – வட்டக் கண்ணாடி – தாடி நிறைய வளர்ந்த முகம் – நிமிர்ந்த பார்வை – கையினில் செபமாலை – நிதானமான நடை – அன்பான பேச்சு என்பன எல்லாம் இவரை ஒரு முனிவராகவே இனம் காட்டின.

**ஆசியாவில் முதல் தியான யோக துறவு சபை**

இலங்கை நாட்டிலே போர்த்துக்கேயருடைய காலம் தொடக்கம் துறவற சபைகள் இருந்துள்ளன. ஆனால் இந்தத் துறவற சபைகள் அனைத்தும் வெளிநாட்டில் இருந்து வந்து இங்கு உருவானவை.

ஆசியாக் கண்டத்திலே முதல் முதலாக ஆசிய நாட்டவரால் ஸ்தாபிக்கப்பட்ட காட்சி தியான யோகசபை என்றால் அது இறையடியார் பி.ஏ தோமஸ் அடிகளாரால் நிறுவப்பட்ட செபமாலைத்தாசர் சபையே ஆகும்.

குருப்பட்டத்தின் பின்னர் புனித பத்திரிசியார் கல்லூரியில் இந்து மாணவர்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட தோமஸ் அடிகளாருக்கும் – புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்விப் பணியாற்றிக் கொண்டிருந்த பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த அருட்பணி ஜே.ஏ.கியோமர் அ.ம.தி அடிகளாருக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. அப்போது இருவரும் தியான யோக துறவு சபைகள் ஆசியாவில் தோற்றம் பெற வேண்டியது காலத்தின் கட்டாயம் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தனர்.

அருட்பணி ஜே.ஏ.கியோமர் அ.ம.தி அடிகளார். யாழ்ப்பாணம் ஆயராக 1924 ஜனவரி மாதம் நியமிக்கப்பட்டார். 1926 பெப்ரவரி 28ஆம் திகதி 11ஆம் பத்திநாதர் பாப்பரசர் திருச்சபையின் பணிகள் என்ற சுற்றுமடலில் கீழைத்தேய நாடுகளில் நடைபெறும் மனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பல் பணிக்கு செப தப துறவு கொண்ட துறவற சபைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார்.

ஆயர் ஜே.ஏ.கியோமர் ஆண்டகை தோமஸ் அடிகளாருடன் தாம் கொண்டிருந்த எண்ணப்பாட்டை மனதில் கொண்டு இப்பணியை தோமஸ் அடிகளாரிடமே ஒப்படைத்தார்.

**செபமாலைத்தாசர்சபையின் இன்றைய நிலை**

ஆண்களுக்கான சபை இலங்கையில் யாழ்ப்பாணம் – கொழும்பு – கண்டி – மன்னார் இரட்ணபுர ஆகிய மறைமாவட்டங்களிலும் – வட இந்தியாவில் மத்திய பிரதேசம் – ஜபல்பூர் – சசாராம் – ஜல்பைபுரி – அம்பிகபூர் – ஒரிசா கேரளாவில் கண்ணூர் – வெள்ளிக்குளங்கர – பெத்தேரி கர்நாடகாவில் பெங்களுர் கார்மேலரம் – ஆந்திராவில் ஏலூர் மறைமாவட்டம் தமிழ்நாட்டில் திருச்சி – சென்னை – தூத்துக்குடி – செங்கல்பட்டு தஞ்சாவூர் ஆகிய மறைமாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளது.

கனடாவில் லண்டன் ஒன்ராறியோ என்னுமிடத்தில் செபமாலைத் தாசர் ஆச்சிரம் ஒன்று ஏ.எம்.ஸ்ரீபன் செ.தா அடிகளார் உயர் தலைவராக இருந்த போது நிறுவப்பட்டுள்ளது.

பெண்களுக்கான சபை இலங்கையில் அச்சுவேலி – வசாவிளான் – யாழ்ப்பாணம் – தேவத்தை – புத்தளம் – மன்னார் – இந்தியாவில் திருச்சி – தூத்துக்குடி – சென்னை – பெரிய பாளையம் – வட இந்தியாவில் அம்பீகபூர் ஜகல்புர் – பெங்களுர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளது.

**இறையடியார் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்கான மன்றாட்டு**

எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளே உமது தாசனாகிய அருட்திரு தோமஸ் அடிகள் இவ்வுலகில் வாழ்ந்த போது பரம திருத்துவத்தின் ஆலயமாகவும் தூய ஆவியின் நிறைவாகவும் வாழ்ந்து வந்தாரே தமது வாழ்நாள் முழுவதும் தாழ்ச்சி மிக்கவராக விளங்கியதுடன் தம்மை அண்டியவர்களையும் தாழ்ச்சியை கடைப்பிடிக்க தூண்டி வந்தாரே திவ்விய நற்கருணைப் பக்தியை மையமாக வைத்து செபமாலைத் தாசர் சபையை ஸ்தாபித்தாரே பரிசுத்த தேவதாயின் மீளா அடிமையாக தம்மை ஒப்புக் கொடுத்தவரே அவருடைய புண்ணிய வாழ்வை முன்னிட்டு அவர் நாமத்தால் அடியேன் உம்மிடம் இரந்து கேட்கும். இந்த மன்றாட்டை பெற்றுக்கொள்ள கருணை புரியும்படி உம்மை தாழ்மையுடன் வேண்டி கொள்கிறேன்.

அன்பான தந்தையே உமது திருக்குமாரன் இயேசுக்கிறிஸ்துவின் திருச்சபையின் புனிதர்களுள் இவரையும் ஒருவராக சேர்த்துக் கொள்ள உதவும் படியாக நான் கேட்கும் மன்றாட்டை எனக்கு அருளி அவரை இவ்வுலகில் மகிமைப்படுத்தும்படி உம்மை பக்தி வைராக்கியத்துடன் பிராத்திக்கிறேன்.(1பர.1அரு.1திரி)

பரிசுத்த செபமாலை மாதாவே உமது தாசனாகிய அருட்திரு தோமஸ் அடிகளாரை இவ்வுலகில் மகிமைப்படுத்தியருளும்.

(அச்சேற்றலாம் அதி.வண.தோமஸ் சவுந்தரநாயகம் யாழ் மறைமாவட்ட ஆயர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் யாழ் ஆயரிடம் அச்சேற்ற அனுமதி பெறப்பட்ட செபத்தை செபிக்க பரிந்தரை செய்யப்பட்டுள்ளது.

*கேட்டவரம் கிடைத்தவர்கள் அறியத்தரவும்*

*குறிப்பு கேட்டவரம் கிடைத்தவர்கள் உங்கள் முகவரியுடன் கீழ்காணும் முகவரிக்கு அறியத்தரவும்.*

*அருள் ஆச்சிரமம் இலக்கம் 05 றெம்பிள் வீதி யாழ்ப்பாணம்*

*செபமாலைத் தாசர் மாகாண இல்லம் புனித யோசவ் ஆச்சிரமம் உசன் மிருசுவில்*

*தோமஸ் அடிகளார் விரைவில் புனிதர் பட்டம் பெற்று இலங்கையின் புனிதர் ஆக வர இறை வரம் வேண்டுவோம்.*

**யாழ்நகர் - 400 ஓவியப்போட்டி - 2021**
**[பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்]**

- திரு . சகாதேவன் ஷதூர்ஷன் – 1ஆம் இடம்
- திரு . மரியநாயகம் அன்ரன் யோசவ்– 2ஆம் இடம்
- செல்வி . விஜயலட்சுமி சண்முகராசா– 3ஆம் இடம்

**யாழ் முத்து விருது - 2021**
**[மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்]**

- திரு சரவணமுத்து முருகையா – கவிதை


**அரச இலக்கிய விருது - 2021**
**[புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவலகள் அமைச்சு]**

- அருட்பணி. ஞா பிலேந்திரன் (நூல் –The Establishment of The Jaffna Vicarate )
- அருட்பணி. ஸ்ரலின் இராசேந்திரம் (நூல் – சாதனை படைக்கும் யோனத்தன்லிவிங்ஸ்ரன்)
- அருட்பணி. போல் றொகான் (நூல் – கிறிஸ்தவ நாகரீகம்)

**இளங்கலைஞர் விருது - 2020**
**[பண்பாட்டலுவலகள் திணைக்களம் வடக்கு மாகாணம்]**

- திரு அன்ரனி றஜீவ் – கூத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது தொன்மைகள் மற்றும் பண்பாட்டு கலைப்பொருட்களை அடையாளப்படுத்துதலும் அவற்றை பேணிப் பாதுகாத்தலும்.



I.L.அன்சிலின் பெகின் (M.A),
இல.09, புதுமை மாதா கோவில்,
மேற்கு வீதி, யாழ்ப்பாணம்.

மனிதன் விலங்குகளுடனான தொடர்பைகாட்டிலும் கருவிகளுடனே அதிகமான தொடர்பை கொண்டுள்ளான். எனவே, அவற்றை எல்லாம் கலைப் பொருட்கள் என பட்டியலிட முடியாது. கலை என்பது அழகியலுடன் தொடர்புடையது என கலைக் கோட்பாட்டாளர்கள் கூறுகின்றனர். அவ்வாறெனில், மனிதனுக்கு இன்பவுணர்வை கொடுப்பது தான் கலைப்பொருட்களா? என்ற கேள்வி எழுகின்றது. குறித்த ஒரு காலப் பகுதியில் வாழ்ந்த மக்களினால் அன்றாடம் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் இன்னுமொரு காலத்தில் அப்புழங்கு பொருட்கள் கலைப்பொருட்களாக பேணிப்பாதுகாக்கப்படுகின்றன. அதுபோன்றே, குறித்த ஒரு சமூகத்தின் வாழ்வாதார தொழிலானது இன்னொரு சமூகத்தால் கலையாக பார்க்கப்படுகின்றது. பஞ்சகம்மாளரினால் மரம் மற்றும் தங்கம், வெள்ளி உலோகங்களில் செய்யப்படும் சிற்பவேலைப்பாடுகள் இவ்விதம் கருதப்படுகின்றன.

ஒரு பண்பாட்டின் அடையாளமாக கலைப் பொருட்கள் விளங்குகின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட பொருட்கள் எவ்வாறு ஒரு இனத்தின் தொன்மையான மரபுரிமைச் சொத்துக்களாக விளங்குகின்றன?. அது ஒரு இனத்தின் அடையாளமாகவும், உரிமையாகவும் எவ்விதம் மாறுகின்றது?. ஒரு இனத்தின் பண்பாட்டு சின்னங்களாக அவை பாதுகாக்கப்படுவதன் அவசியம் பற்றியும். அவை தொடர்பாக காலத்திற்கு காலம் யுனஸ்கோ அமைப்புக்களால் வெளியிடப்படும் சாசனங்கள் பற்றி பார்க்க வேண்டியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கலை என்பது திறன் (Skill) : கலை என்பது மனித செயற்பாடு அல்லது நடவடிக்கை. அது மனிதனின் திறனோடு தொடர்புடையது. ஒரு பொருளை இன்னொன்றாக மாற்றும் திறமை கலையாகிறது. அம்மா அரிசியை உலையிலிட்டு சோறாக ஆக்கி தருவது தொடங்கி கல்லை சிற்பமாக மாற்றுதல் வரையான மனிதனின் அனைத்து திறன்களும் கலைகளாகும். பூமாலை கட்டுவதும் கலைதான், இறைச்சி வெட்டுவதும் கலைதான். கலைக்கும் தொழிலுக்கும் வேறுபாடு இல்லை. தமிழர்கள் ஆயகலைகள் அறுபத்து நான்குக்குள் ஆதிமனிதனின் தொழில்களை உள்ளடக்கி உள்ளனர்.

2. கலை என்பது வெளிப்பாடு (Expression) : நாம் பெற்றுக் கொண்ட அனுபவங்களை வெளிப்படுத்துகின்ற போது அதை வெறுமனே வெளிப்படுத்துவதில்லை. எமது நலன்கள் சார்ந்து, காலம், இடம், கேட்கும் நபர்களைப் கருத்தில் கொண்டு தெரிவு செய்யப்பட்ட அனுபவங்களுடன், கற்பனையும் இணைத்து வெளிப்படுத்துவது ஒரு கலை. நாம் சூனியத்தில் இருந்து கற்பனை செய்ய முடியாது. எமது அனுபவத்திற்கு அப்பாற்பட்ட கற்பனை என்று எதுவும் இல்லை. சிறுவர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமான தமது குறுகிய அனுபவத்தை கொண்டு கற்பனையும் கலந்து நண்பர்களுக்கு கதை கூறுவது தொடங்கி கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் போன்ற கற்பனை கலந்த அனுபவ வெளிப்பாடுகள் கலைகளாகும். வெளிப்பாட்டு உருவத்தை உள்ளடக்கம் தீர்மானிக்கின்றது. அனுபவத்தை வெளிப்படுத்துவதற்கான அறிவு நுட்பம் கலை ஆகும்.

3. கலை என்பது அறிவு (Knowledge) : ஒழுங்குபடுத்தப்பட்ட அனுபவங்களே அறிவு. மனித இனம் தனது பண்பாட்டு வளர்ச்சியில் நீண்ட காலமாக தான் சேர்த்துவைத்த தனது இருத்தலுக்கு சாதகமான அனுபவ திரட்சி அறிவு. நெருப்பில் கை வைத்தால் சுடும் என்ற மனிதனின் பட்டறிவு தொடங்கி தாஜ்மகாலை கட்டிய கட்டட கலைஞனின் தொழில்நுட்பம் ஈறாக அறிவின் வெளிப்பாடாக கலை காணப்படுகின்றது.

கலைசார் பொருட்கள் என்பது மனிதனின் திறன், வெளிப்பாடு, அறிவு என்பவற்றின் ஒருங்கிணைவால் உருவான படைப்புக்கள். மானிடவியலாளர்கள் மனிதன் ஒரு நோக்கத்துடனும், விருப்பத்துடனும், தனது முயற்சியால் உருவாக்கிய எந்த ஒரு பொருளையும் கலைப் பொருட்களாகவே பார்க்கின்றனர். படைப்பாளி ஒருவன், தான் உருவாக்கியது ஒரு கலைப்படைப்பு என்று சொன்னாலும் அதற்கான அங்கீகாரம் என்பது சமகால அரசியல். பொருளாதார, பண்பாட்டு பின்னனிகளால் தீர்மானிக்கப்படுகின்றன. ஒரு பொருள் கலைப்படைப்பா இல்லையா என்பது அச்சமூகத்தால் அல்லது கலை உலகத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

கலைப்படைப்பு என்பது ஒரு உற்பத்தி (Product) பண்டம். அது தொடர்பு (Communication) கொள்ளும் தன்மை உடையது. அது மகிழ்ச்சி (Enjoyment) தரக்கூடியதாக இருக்க வேண்டும். அது ஒரு வெளிப்பாட்டு வடிவமாக (Expressive form) இருக்க வேண்டும். அது உள்ளீடு (Contex) கொண்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தோன்றிய அன்றே கலையும் தோற்றம் பெறுகிறது. மனிதன் இயற்கையுடன் போராடி, ஊடாடி மாற்றத்தை செய்து கலையை தோற்றுவிக்கிறான். மனிதன் ஏனைய விலங்குகளில் இருந்து வேறுபடுவதற்கு அவனது சிந்திக்கும் ஆற்றலும், கருவிகளை கையாளும் திறனுமே காரணமாகும். ஆகவே, அவனால் கலையை, பண்பாட்டை உருவாக்க முடிகிறது. உணவுத் தேவைக்காக அன்றாடம் வேட்டையாடிய மனிதன் வேட்டையாட முடியாத காலங்களை சமாளிக்க கிடைக்கும் உணவுகளை பதப்படுத்தி சேகரிக்க கற்றுக் கொண்டான். தனியாக இல்லாது குழுவாக இணைந்து வேட்டையாடும் முறையை பின்பற்றினான். தாம் பெற்ற வேட்டை அனுபவங்களை உருவங்களாக குகைகளில் வரைந்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டான். இவ்விதம் பயிற்சி செய்து இணைந்து வேட்டைஆடுவது இலகுவாக வேட்டையாட முடிவதாக கண்டறிகிறான். பல்லால் இறைச்சியை கடித்த மனிதன் கூரிய கல்லை பாவித்து இறைச்சியை கிழிக்கிறான். தான். அந்த கல்லை சேகரித்து வைக்கிறான், பின்னர் தான் வைத்துள்ள கல்லை கூராக்குகின்றான் அவன் தான் முதல் கலைஞன், முதல் சிற்பி. இருப்பினும், இத்தகைய மனித பண்பாட்டு உற்பத்தி பொருட்கள் கலையாக பார்க்கப்படாது. ஏனெனில், அது அவனது பிழைப்புக்கான கருவியாக பார்க்கப்படுகின்றது.

மனிதன் வரைந்த முதல் குகை ஓவியங்கள் அவனது கலை வாழ்வை வெளிக்காட்டுகிறது. கலை மதத்தோடும், மத சடங்குகளோடும் தொடர்புடையது. எகிப்திய அரசர்களை மம்மிகளாக பதப்படுத்தி வைக்கப்பட்டுள்ள பிரமிட்டுக்களும் அதனைச் சுற்றியுள்ள ஓவியங்களும் அங்கு வாழ்ந்த மக்களின் மறுபிறவி பற்றிய நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. மத சடங்குகளில் இருந்து நம்பிக்கையை எடுத்துவிட்டால் அது தனியான கலையாக மாற்றம் பெறுகிறது. அதனோடு தொடர்புடையவை கலைப்பொருட்கள் என்ற நிலையை அடைகின்றன.

கலை என்பது பண்பாட்டின் உற்பத்தி. காலத்திற்கு காலம் ஏற்படும் பண்பாட்டு மாற்றங்களும், சமூக பண்பாட்டு நிறுவனங்களும் பண்பாட்டை தீர்மானிக்கின்றன. பண்பாட்டின் உற்பத்தியாக கலை தோற்றம் பெறுகின்றது. பின்னர் அக்கலை பண்பாட்டை மீள உற்பத்தி செய்கிறது. இது தொடர்ந்து ஒரு சுழற்சியாக நிகழ்கிறது. இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின் பிரித்தானிய பிரதமர் வின்சன் சோர்ச்சில் 'நாம் எமது நாட்டை மீளமைக்க கட்டடங்களை வடிவமைப்போம், பின் அவை எமது பண்பாட்டை வடிவமைக்கும்' என்றார்.

எல்லாப் பொருட்களையும் நாம் கலைப்படைப்பாக பார்ப்பதில்லை. போக்குவரத்திற்கு பயன்படுத்தும் வாகனங்களை நாம் கலைப்படைப்பாக பார்ப்பதில்லை. ஆனால், கோவில் என்ற பண்பாட்டு நிறுவனத்தில் வாகனம் என்ற பெயரால் மரத்தில் செய்யப்பட்ட ஆட்டுக்கடா, மயில் போன்றவற்றை கலைப்படைப்பு என்று ஏற்றுக்கொள்கிறோம். அதன் மேல் ஐதீகங்களும், நம்பிக்கைகளும் கட்டமைக்கப்படுகின்றன. கோவிலில் உள்ள தேரை தொட்டு வணங்குகிறோம். ஏனெனில், அது சடங்கு ரீதியான கலைப்படைப்பாக கருதப்படுகின்றது. அதேவேளை, கண்காட்சியகத்தில் உள்ள அன்னப்பட்சி வாகனத்தை (தஞ்சாவூர்) நாம் வணங்காது தொன்மையான கலைப்படைப்பாக மட்டும் மதிப்பளிக்கின்றோம். எனவே,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப் பொருட்களின் அர்த்தம் என்பது யாருடைய கைகளில் அவை இருக்கிறதோ அவரே அதற்கான அர்த்தத்தை கொடுக்கிறார்.

அழகியல், கலைக் கோட்பாட்டாளர்கள் முன்வைக்கும் சில கருத்துக்களை நோக்குவோமானால். கடந்த காலங்களில் மக்களின் நாளாந்த புழங்கு பொருட்கள் இன்று தொல்லியல் கண்காட்சிக் கூடங்களில் கலைப்படைப்பு என்ற அந்தஸ்த்தை பெற்றுள்ளன. மேலும், கடந்த அரை நூற்றாண்டுகளாக கலை படைப்புக்கள் என்று போற்றப்படுவனவற்றை எடுத்து பார்த்தால் கலையை வரைவிலக்கணப்படுத்தும் முயற்சியில் பயனில்லை என அறிஞர்கள் உணர்கின்றனர். உருவச் செம்மையைப் பேணும் ஓவியங்களில் இருந்து உருவச் சிதைவை முதன்மைப்படுத்தும் ஓவியங்கள் வரை கலைப்படைப்பு என்ற அந்தஸ்தை பெறுகின்றன. எனவே, மனித உழைப்புத் திறனால் உருப்பெற்ற அனைத்துப் பொருட்களையும் கலைப்படைப்பாகக் ஏற்றுக்கொள்ளும் நிலைமையே இன்று பெரிதும் காணப்படுகின்றது என்று வாதிடுகிறார் நெல்சன் குட்மன்.

மொறிஸ் விட்ஸ், கலை என்பதை வரைவிலக்கணப்படுத்த முடியாதிருப்பதே ஆக்கத் திறனுடைய கலையின் சிறப்பியல்பு என்கிறார். கலையென்பது காலம் தோறும் மாற்றமுறுவதாகவும் அவை வியப்பையும், புதுமைத் தன்மையையும் கொண்டதாயும் இருப்பதால் கலைக்குரிய குணாதிசயங்களை வரையறுக்க முயலுவது தருக்க ரீதியாக சாத்தியமற்றது என்கிறார். கலை என்றால் என்ன என்று ஒருவர் இன்று வரைவிலக்கணம் கொடுத்தல் நாளையே அவ்வரைவிலக்கணத்தை கடந்த கலைப்படைப்பு ஒன்றை இன்னொரு கலைஞனால் உருவாக்க முடியும் என்பது சாத்தியம் என்பதால் கலை என்ற சொல் ஓர் திறந்த எண்ணக்கருவாகிறது எனக்கூறி கலை என்ற சொல்லிற்கு வரைவிலக்கணம் தருவதில் உள்ள கடினத்தன்மையை மொறிஸ் விட்ஸ் விளக்குகின்றார்.

**2. பண்பாடு**

"ஒரு சிக்கலானதும் முழுவதையும் உள்ளடக்கியதான வடிவம். சமூகத்தின் தேவை மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் பண்பாடு உருவாகின்றது. தனிநபரின் தேவைகள், சமூகத்தின் பயன்பாட்டுக்கான கருவிகளின் தேவைகள், தனிநபர் மற்றும் சமூகம் இரண்டிற்குமான குறியீடுகளும், அடையாளங்களும் பண்பாடு ஆகும்." என்கிறார் மலினோவ்ஸ்கி. ஒரு தலைமுறை மக்கள் தாங்களது அடுத்த தலைமுறையினருக்கு வழங்கக்கூடிய அனைத்துமே பண்பாட்டில் உள்ளடங்கும், பண்பாடு என்பது மக்களின் சமூகப் பாரம்பரியத்தைக் குறிக்கின்றது. பண்பாடு என்ற சிக்கலான முறையில் அறிவு, நம்பிக்கைகள், கலைகள், ஒழுக்க நெறிகள், சட்டம், மரபுகள், உணவும் அவை தயாரிக்கும் முறை, தகவல் தொடர்பு ஊடகங்கள் ஆகிய அனைத்தும் அடங்கும் என்கின்றார் ஸதர்லேண்டு மற்றும் உடவோர்டு.

றேமன் வில்லியம் என்பவர் பண்பாடென்பது சாதாரணமாக ஒவ்வொரு சமூகத்தையும், அதற்கேயுரிய தனித்துவங்களால் உருக்கொடுத்து அதற்கென ஒரு நோக்கத்தையும், அர்த்தத்தையும் உள்ளடக்கியிருப்பதைச் சுட்டும் என்கிறார். இவற்றினை ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமும் தனது நிறுவனங்கள், கலைகள், கற்றல் செயற்பாடுகள் என்பனவற்றின் மூலமாக வெளிப்படுத்துமென்பது இவரது அபிப்பிராயம். ஒரு சமூகத்தின் பண்பாட்டை தெரிந்து கொள்வதானது அச்சமூகம் கடந்து வந்த வாழ்வியல் அனுபவத்தினை புரிந்து கொள்வதன் ஊடாகவே நிகழமுடியும். அவ்வனுபவம் மரபிற்குரியதாகவும், படைப்பாற்றல் கொண்டதாகவும் இருக்கும். பண்பாட்டை மனித வாழ்க்கையின் முழுமையான வாழ்க்கை கோலமாகப் புரிந்து கொள்வது, மற்றையது சமூகத்தின் கலைப்படைப்பாக்கம், கற்றல், கண்டுபிடிப்பு, படைப்பாற்றல் கொண்டதாக புரிந்து கொள்வது என இவ்விருகூறுகளும் இணைந்ததே பண்பாடு என்பது ரேமண்ட் வில்லியத்தின் நிலைப்பாடாகும்.

"மனித சிந்தனையையும் நடத்தையையும் சமூகரீதியாக ஒழுங்குபடுத்துவதே பண்பாடாகும்" என்கிறார் எட்வேட் ரெய்லர். மானிடவியலாளரான ஜோன் போட்லி. பண்பாடென்பது ஒரு சமூகத்தின் கூட்டுணர்வு, முழுமையான வாழ்க்கைக் கோலம் என்ற இரண்டையும் உள்ளடக்கியது என்கிறார். பண்பாடு என்பது ஒரு மக்கள் பிரிவினரின் வாழ்க்கை முறை. பண்பாடு என்பதில் ஒரு மக்கள் பிரிவினரின் அறிவு, மனப்பான்மைகள், நெறிமுறைகள், விழுமியங்கள், நியதிகள், நடத்தைப்பாங்கு, நடத்தைப் பாணியாவும் உள்ளடங்குகின்றது. மேலும், உட்கிடையான அர்த்தங்கள் அடையாளங்களால் புலப்படுத்தும் தன்மையுடையது எனலாம். சமூகம் தனது அமைப்புகள் மூலம் பண்பாட்டுக் குறியீடுகளுக்கான பொருளைக் கற்று தலைமுறை தலைமுறையாக கையளித்து நீடிக்கச் செய்கின்றது.

**3. பண்பாட்டு கலைப்பொருட்கள்**

ஒரு இனத்தின் பண்பாடு பற்றி ஆய்வு செய்பவர்கள் அச்சமூகத்தின் பொருள்சார் பண்பாடுகளையும், பொருள்சாரா பண்பாடுகளையும் ஆய்வு செய்வதை அவதானிக்க முடியும். பண்பாட்டு மானிடவியல் ஆய்வாளர் பக்தவற்சலபாரதி பொருள்சார் பண்பாடு பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். 'ஆய்வு செய்யும் சமூகத்தின் பொருள்சார் பண்பாட்டைப் பற்றிய தரவுகள் மிகவும் பயனுள்ளவை. வீடுகளின் அமைப்பு, செய் பொருள்கள், வீட்டுச் சாமான்கள், உடைகள், அணிகலன்கள், போக்குவரத்துச் சாதனங்கள், கால்நடைகள், தொழிற்கருவிகள், சடங்குப் பொருட்கள் போன்ற பல்வேறுவகையான பொருட்களைப் பற்றிய தரவுகள் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை அறியப் பெரிதும் உதவும்' என்கிறார்.

ஒரு சமூகம் எவை எல்லாவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுத்து உள்ளது என்பதை கலைப் பொருட்கள் வெளிப்படுத்துகின்றன. ஒரு காலப்பகுதியில் மக்களின் தேவைக்காக பயன்படுத்தப்பட்டவை பிற்காலத்தில் அவர்களது தனித்துவமான அடையாளங்களாக வெளிப்படுகின்றன. உதாரணமாக ஆவுரஞ்சிக் கல், சுமைதாங்கி கல் என்பவற்றை கூறலாம்.

பண்பாட்டு கலைபொருட்கள் என்பதில் பொருட்கள் மற்றும் எழுத்து ஆவணங்களையும் குறிப்பிடலாம். இவைகள் குறித்த மக்கள் பற்றிய பெறுமதியான தகவல்களை வெளிப்படுத்துவனவாகவும் அமைகின்றது. எழுத்து ஆதாரங்கள் இல்லாத வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றி அறிவதற்கு இந்த கலைப்பொருட்களே சான்றாக அமைகின்றது. அந்த காலப் பொருட்களுக்கு நாம்தான் விளக்கம் என்பதை ஊகத்தின் அடிப்படையில் கூறுவதால் பிற்காலத்தில் அதை மற்றவர்கள் மறுக்ககூடிய சாத்தியப்பாடு உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியலின்படி, பண்பாடானது உற்பத்தி உறவுகளையும், பொருளிய விசைகளையும் கடந்த ஒன்றல்ல. அது பொருண்மிய, அரசியல் முறைமையின் வெறும் பிரதிபலிப்பாக மட்டும் அமையவில்லை. அதே வேளை அதனின்றும் பிரித்தெடுக்கக் கூடிய ஒன்றாகவும் அது இல்லை. எனவே. பண்பாட்டு பொருளியளின்படி, பனுவல்கள் எவ்வாறான நிலைமைகளிலே தோன்றின என்பதும் அங்ஙனம் தோன்றிய காலத்தில் அவை எவ்வாறு வரவேற்கப்பட்டன என்பதும் பிரதானமாகும். இவையெல்லாம் பண்பாட்டின் கருத்துகளை ஆக்குவதிலே பங்கு கொள்கின்றன. அக்கருத்துகள் அரசியல் மயமானவை தான் என்கிறார் ஜோன் பரல்.

**4. தொன்மை பொருட்கள்**

ஒரு இனத்தின் பண்பாடு என்பது பூமிபரப்பின் மேல் மற்றும் பூமிபரப்பின் கீழ் உள்ள தொட்டுணரக்கூடிய புழங்கு பொருட்கள், தொழிற்கருவிகள், போக்குவரத்து சாதனங்கள், வாழ்விடங்களான கட்டட தொகுதிகள், கோட்டைகள் என்பவும். தொட்டுணர முடியாத அவ்இனக்குழுவின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், விழுமியங்கள், எழுதப்படாத சட்டங்கள், உறவுமுறைகள், தொழில் முறை பயில்வுகள், இசை, விளையாட்டு போன்ற இன்னோரன்ன விடயங்களும், அவர்கள் வாழும் இயற்கைச் சூழலும் அதில் வாழும் உயிரினங்கள், மரம், செடி, கொடி, பூவினங்கள், புள்ளினங்கள், ஆறு, நதிகள், காலநிலைகள் எல்லாவற்றின் ஊடாக கட்டமைக்கப்படுகின்றது. இவ்விதம் பாரம்பரியமாக ஒரு இனத்தின் பண்பாட்டில் அவர்கள் வாழ்வியலோடு கலந்து வழக்கில் இருந்தவைகளும், சமகாலத்தில் புழக்கத்தில் உள்ள அவ்வினத்திற்கே தனித்துவமான விடயங்கள் அவ்வினத்தின் தொன்மை பொருட்கள் அல்லது மரபுரிமை ஆகும். இத்தகைய தொன்மை பொருட்களை அல்லது பண்பாட்டு சின்னங்கள் என்பன இற்றைக்கு 100 ஆண்டுகள் முற்பட்டவை ஆகும். அவை வரலாற்றுப் பெறுமதி உடையவை. அவற்றை மரபுரிமை சின்னங்களாக அடையாளப்படுத்தி அங்கிகரிக்கும் போக்கு பல நாடுகளிலும் காணப்படுகின்றது.

கலாசார மரபுரிமைகள் : கலாசார மரபுரிமைகள் என்பதை தொட்டுணரக்கூயவை, தொட்டுணர முடியாதவை என இரண்டாக வகைப்படுத்தலாம். தொட்டுணரக்கூடியதை மேலும் இரண்டாக பிரிந்து அசையக் கூடிய மரபுரிமைகளாக மட்பாண்டங்கள், நாணயங்கள், தொல்லியல் எச்சங்களையும், அசைய முடியாத மரபுரிமைகளாக புராதன நினைவுச் சின்னங்கள், புராதன கட்டிடங்கள், தொல்லியல் மையங்கள் என்பவற்றை குறிப்பிடலாம். தொட்டுணர முடியாத மரபுரிமைகளில் பிரயோக கலைகளான ஓவியம், சிற்பம், கைவினைப்பெருட்கள், ஆடை அணிகலன்கள் போன்ற கலைகளும், செயன்முறைக் கலைகளாக இசை, நடனம், கூத்து, நாடகம் என்பனவும். வரிவடிவங்களாக கல்வெட்டுக்களும், நாட்டார் இலக்கியங்களும். வாய்மொழி பாரம்பரியங்களாக கிராமியப் பாடல்கள், கிராமியக் கதைகள், கிராமியக் கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், புராணங்கள் என்பனவும் காணப்படுகின்றன. பாரம்பரிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களான பாரம்பரிய மருத்துவம், பாரம்பரிய கட்டிடக்கலை என்பனவும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய பழக்கவழக்கங்களில் நம்பிக்கைகள், வழக்காறுகள், வாழ்வியல் சடங்குகள், விழாக்கள், விளையாட்டுக்கள் என்பனவும் உள்ளடங்குகின்றன.

**5. தொன்மைகளை பாதுகாக்கும் செயற்பாடுகள்.**

கடந்த கால வரலாற்றின் கம்பீரங்களே எம்மை இன்று தலைநிமிர வைக்கின்றது என்பது எவ்வளவு உண்மையோ அத்தகைய பெருமைகளை ஒரு இனம் தனது புதிய தலைமுறைக்கு கடத்தவேண்டி உள்ளது. பண்பாட்டு கலைப்பொருட்கள், தொன்மைகளை மீள்கண்டுபிடிப்பு செய்தலும், அவற்றை ஆராய்ந்து அறிந்து பராமரிப்பதும், பாதுகாப்பதும் எமது பண்பாட்டு அடையாளத்தையும், மரபுரிமைகளையும் எமது அடுத்த தலைமுறையினருக்கு சிறந்த முறையில் கையளிப்பு செய்வதன் ஊடாக ஒது இனம் தனது இருப்பை உறுதிப்படுத்திகொள்கிறது.

உணவுப் பண்பாட்டு : இன்று உலகமயமாதலில் வேகமாக மாற்றமடைந்து வரும் எமது உணவுப் பண்பாட்டை பாதுகாப்பதற்கு 'அம்மாச்சி' போன்ற பாரம்பரிய உணவகங்களின் வருகையும் ஒரு வகையில் பண்பாட்டின் மீள்கண்டுபிடிப்பாகவே உள்ளது. அரச திணைக்களகங்கள் நடத்தும் பாரம்பரிய உணவுப் பொருள் கண்காட்சிகள், போட்டிகள் என்பனவும் ஒரு நல்ல முயற்சியாக உள்ளது. பாட்டிய வைத்திய முறையான பிள்ளை பெற்ற தாய்மாருக்கு வழங்கப்படும் பத்தியக்கறி தமிழரின் உணவே மருந்து என்ற கருத்தை உறுதிப்படுத்துகின்றனது.

பண்பாட்டு விழாக்கள் : வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமானது பிரதேச செயலகங்களில் அப்பிரதேசம் சார்ந்த பண்பாட்டு கலைப் பொருட்களை காட்சிப்படுத்தியுள்ளது. கிராமங்களில் காணப்படும் மரபுரிமை சின்னங்களை அடையாளப்படுத்தி ஆவணப்படுத்துகின்றது. ஒவ்வொரு வருடமும் பண்பாட்டு பெருவிழாக்களை பிரதேச செயலக மற்றும் மாகாண மட்டங்களில் நடத்துகின்றது. அவற்றை ஒட்டியதாக பல பண்பாடுசார்ந்த ஆக்கத்திறன் போட்டிகளை நடத்துவதன் ஊடாக அடுத்த தலைமுறையினருக்கு எமது பண்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

காப்புரிமை பெற்றுக் கொள்ளல் : இந்திய நாட்டில் வளரக்கூடிய மருத்துவ குணம் நிறைந்த மஞ்சளின் காப்புரிமையை அமெரிக்க நிறுவனம் வாங்கியுள்ளது. அதுபோன்று, வேப்பமரத்திற்கான காப்புரிமையை கோரிய நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்ந்து இந்தியா வெற்றி பெற்றது. சக்திவாய்ந்த நாடுகளின் உதவியுடன் பல்தேசிய நிறுவனங்கள் வளர்முக நாடுகளின் மரபுரிமையான தொன்மைகளின் காப்புரிமையை பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றன. அன்மையில், இந்தியாவில் தோன்றிய மதங்களின் மூலவேரான வேதம் என்ற சொல்லிற்கான காப்புரிமையை பெற்றுக்கொள்ள ஒரு நிறுவனம் முயன்றபோது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை இந்தியா தடைசெய்தது. தமிழர்களின் வீரவிளையாட்டான காளையை அடக்கும் 'ஜல்லிக்கட்டு' போட்டிக்கு விதிக்கப்பட்ட தடையை தமிழர்களின் எழுச்சிமிகு போராட்டம் தகர்த்தெறிந்தது. ஒற்றைப் பண்பாட்டை நோக்கி உலகை நகர்த்தும் உலகமயமாக்களின் திரைமறைவு நடவடிக்கையாக இம் முயற்சிகளை பார்க்க வேண்டி உள்ளது. அதையும் தாண்டி மரபுரிமை, தொன்மைகள் தொடர்பாக விழிப்படைந்த இளம் தலைமுறையினராலும், பண்பாட்டு திணைக்களங்களாலும. தன்னார்வ பண்பாட்டு குழுக்களாலும் பல விழிப்புணர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மரபுரிமை பாதுகாப்பு சட்டங்கள் : இலங்கையின் பண்பாட்டு வளங்களைப் பாதுகாப்பது தொடர்பாக காணப்படும் உள்நாட்டு சட்டங்களின் அடிப்படையில் அமைச்சுகளும், திணைக்களங்களும் இயங்குகின்றன. இலங்கை அரசியலமைப்பின் "அடிப்படையுரிமைகள்" பிரிவின் கீழ் உறுப்புரை 14இன் கீழ் மரபுரிமையைப் பேணிப்பாதுகாக்கும் உரிமை அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமது பண்பாட்டு வளங்களைத் தாமே பாதுகாக்கும் உரிமை வழங்கப்படுகின்றது. யுனெஸ்கோ சர்வதே அமைப்பின் மரபுரிமை தெடர்பான சட்டங்களின் உறுப்புரை 01, 02, 04, 08,11, 15, 22 ஆகியவற்றினடிப்படையில் செயற்பட ஒப்புக்கொண்ட உலக நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். வெனிஸ் சாசனமானது கலாசார மரபுரிமைகளை பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு அவற்றை உன்னத முறையில் கையளிக்க வேண்டும் என்ற கடப்பாட்டையும் எடுத்துக்காட்டுகின்றது.

கடந்த கால போர்களில் சினைவுச்சின்னங்களின் அழிவை நாம் கண்டுள்ளோம். அழிந்தது எமது அடையாளங்கள் மட்டுமல்ல எமது எதிர்கால நோக்கமும்கூட. இத்தகைய ஞாபக சின்னங்கள் ஆக்கத்திறனாக மீள்கட்டமைக்கப்பட்டு பேணப்பட வேண்டும் என்று வயலட் லீ டஸ் ரெஸ்ட் கூறுகின்றார். மற்றும் போர்க்காலத்தில் எதிரி படைகளால் குண்டுவைத்து அழித்தல், களவாடப்படுதல் போன்றவற்றில் இருந்து இத்தகைய நாடுகளின் பண்பாட்டு வளங்களை பாதுகாப்பது தொடர்பாக தீர்மானங்களும் கொள்கைகளும் 1931ல் எதென்ஸ் சாசனமாக வெளிவருகின்றன. இவை இரண்டாம் உலக போரின் பின்னர் 1965 ஆம் ஆண்டு ஞாபகச் சின்னங்கள் மற்றும் கட்டடத்தொகுதிகளின் சர்வதேச சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கண்காட்சிகூடங்களை நிறுவுதல் : இலங்கை தொல்லியல் திணைக்களம் பல மாவட்டங்களில் தொல்லியல் அருங்காட்சியகங்களை நிறுவியுள்ளது. அவற்றில் மிக முக்கியமானதாக கொழும்பு, பொலநறுவை தொல்லியல் கண்காட்சி கூடங்களைக் கூறலாம். அண்மையில் "தொழில்நுட்ப பண்பாட்டு படிமலர்ச்சியை முப்பரிமான மற்றும் மெய்நிகர் தொழில்நுட்பத்தை இணைத்து பொலனறுவையில் 'தொழில்நுட்ப தொல்லியல் கண்காட்சிகூடத்தை' அதி நவீன வசதிகளுடன் அரசு நிறுவியுள்ளது.

ஒரு இனத்தின் பண்பாட்டு கலைபொருட்களை, தொன்மையான அடையாளங்களை, அவர்களின் பண்பாடு கோலங்களை, வாழ்க்கை முறையை வாழும் கண்காட்சிகூடம் (life Musium) என்ற வகையில் காட்சிப்படுத்துவதான ஊடாக இவற்றை பாதுகாக்க முடியும். இலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட பண்பாட்டை இன்று இலங்கை வேடுவர்கள் வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகியங்களை பிரதேசத்திற்கு அண்மையில் 'வாழும் காட்சிக்கூடங்களாக' அரசு உருவாக்கி உள்ளது.

எண்ணியல் ஆவணப்படுத்துதல் : நூலகம் என்ற இணையத்தளம் தமிழ் நாவல், கட்டுரை, சிறுகதை, கவிதை நூல்களையும். பாடசாலைகள், ஆலயங்கள், கோவில்களின் வெள்ளிவிழா, பொன்விழா போன்ற மலர் வெளியீடுகளையும், கடந்த காலங்களில் வெளிவந்த மல்லிகை போன்ற சஞ்சிகைகள். முன்னர் வெளிவந்த பத்திரிகைகள் என்பவற்றை டியிற்றல் முறையில் ஆவணப்படுத்துவதுடன் கிராமங்களின் வரலாறுகள், வாய்மொழி வழக்காறுகளையும் ஆவணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு தமிழரின் அறிவுசார் சொத்துக்கள் புதிய தொழில்நுட்பங்கள் ஊடாக ஆவணப்படுத்தப்படுகின்றன.

பண்பாட்டு வள மேலாண்மை : இன்று உலகளவில் பண்பாட்டு கற்கைகளில் பண்பாட்டு வள மேலாண்மை என்ற சொல்லாடல் அதிகம் காணப்படுகின்றது. இது கலை மற்றும் மரபு சார்ந்த வளங்களை மேலாண்மை செய்யும் நடைமுறை ஆகும். இது, மரபுவழி மற்றும் வரலாற்றுப் பண்பாட்டுடன் தொல்லியல் சார்ந்த பொருட் பண்பாட்டையும் கவனத்திற்கொள்கின்றது. பண்பாட்டு வள மேலாண்மை நகர்ப்புறப் பண்பாடு போன்ற முன்னேற்றம் சார்ந்ததும், புதுமை சார்ந்ததுமான தற்காலப் பண்பாட்டையும் தழுவி நிற்கின்றது.

இது அழிநிலை மொழிகள், பொதுக் கல்வி, பல்பண்பாட்டிய இயக்கம், பண்பாட்டு வளங்களின் அணுக்கங்களை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு அம்சங்கள் சார்ந்தவையாக அமையக்கூடும். பண்பாட்டு வள மேலாண்மையாளர்கள் பெரும்பாலும், அருங்காட்சியகங்கள், ஓவியக் காட்சிக்கூடங்கள், நாடக அரங்குகள், பண்பாட்டு கொள்கைகளை உருவாக்குவது போன்றவற்றின் பொறுப்பாளர்களாக இருக்கிறார்கள்.

**உசாத்துணை:**


1. பக்தவத்சல பாரதி, 'மானிடவியல் கோட்பாடுகள்', அடையாளம் வெளியீடு, திருச்சி, 2012.
2. கிருஷ்ணராஜா, சோ., 'அழகியல்', சேமமடு பொத்தகசாலை, கொழும்பு, 2008.
3. கிருஷ்ணராஜா, சோ., 'பண்பாடு சமூக மெய்யியல் நோக்கு', குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2010.
4. சிவலிங்கராஜா, எஸ்., 'யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்', குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2014.
5. புஷ்பரட்ணம், ப., 'தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு', பவானி பதிப்பகம், யாழ்ப்பாணம், 2003.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு விழா 2021 அழைப்பிதழ்



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின்
அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பிரதேச செயலகமும்
பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்தும்

## பண்பாட்டு விழா - 2021

அழைப்பிதழ்

இடம் : யாழ்ப்பாணப் பிரதேச செயலக கேட்போர் கூடம்
காலம் : 2021.12.15 (புதன்கிழமை)
நேரம் : பி.ப 2.30 மணி

**தலைமை**
திரு. சாம்பசிவம் சுதர்சன்
பிரதேச செயலாளர்/ தலைவர், கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

**பிரதம விருந்தினர்**
உயர்திரு. கணபதிப்பிள்ளை மகேசன்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர் யாழ்ப்பாணம்.

**சிறப்பு விருந்தினர்**
திருமதி. சுஜீவா சிவதாஸ்
பிரதிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்.

**கௌரவ விருந்தினர்**
திரு. சின்னப்பு அன்றன் சௌந்தரநாயகம்

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்



அமரர் அந்தோனிப்பிள்ளை யோசேப் அரங்கு

## நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை அழைத்துவரல்
- மங்கல விளக்கேற்றல்
- தமிழ்த்தாய் வாழ்த்து - பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்
- கலாசாரப் பேரவைக் கீதம் - பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினர்கள்
- வரவேற்புரை - திருமதி.சோபிகா ஜோய் ஜெபின்சன்
  உதவிப் பிரதேச செயலாளர்
- அரங்கு சமர்ப்பணம்
- அரங்கத் திறப்புரை - திரு.யோ.யோன்சன் ராஜ்குமார்
  பிரதி இயக்குனர், திருமறைக்கலாமன்றம்.
- வரவேற்பு நடனம் - கம்சப்பிரியா இசைக்கல்லூரி, ஈச்சமோட்டை
- தலைமையுரை - பிரதேச செயலாளர்
- வாத்திய பிருந்தா - கீதவாகினி இசைக்கல்லூரி, கொழும்புத்துறை
- யாழ்நகர்-400 சிறப்பு கலாசார மலர் 'யாழ்பாடி-05' வெளியீடு
- வெளியீட்டுரையும் மதிப்பீட்டுரையும் - பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை
  முன்னாள் துணைவேந்தர்,
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- கலைஞர் நயப்புரை - திரு.[illegible]
  பேரவை நிர்வாக உறுப்பினர்
- கலைஞர் கௌரவிப்பு - ஓவியப் போட்டிக்கான விருது
  இளங்கலைஞர் விருது
  'யாழ்ரத்னா' விருது
- நன்றியுரை - திரு.இ.ஜோன்சன், கலாசார உத்தியோகத்தர்
- தமிழ்மொழி வாழ்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர் அந்தோனிப்பிள்ளை யோசேப் அரங்கு



விருந்தினர்களை அழைத்து வரல்
(யா/வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விருந்தினர்களை வரவேற்றல்




மங்கள இசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசார பேரவை கீதம் பாடுதல்




வரவேற்பு நடனம்
(கம்சப்பிரியா இசைக் கல்லூரி, ஈச்சமோட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாத்திய பிருந்தா
(கீதவாஹினி இசைக்கல்லூரி - கொழும்புத்துறை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்நகர் 400 சிறப்பு கலாசார மலர் யாழ்பாடி 05 வெளியீடு
முதல் பிரதி வழங்கல்



யாழ். ரத்னா விருது இளங்கலைஞர் விருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விருந்தினர்கள் கௌரவிப்பு



கௌரவம் பெற்ற கலைஞர்களுடன் விருந்தினர்கள் மற்றும் பண்பாட்டுப்பேரவை அங்கத்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




KS

**KUKHANS STORES (PVT) LTD**

குகன் ஸ்ரோர்ஸ்

(பிறைவேற் லிமிட்டட்)

General Merchants & Commission Agents

180(380), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

180(380), Hospital Road, Jaffna.

**T.P : 021 221 9469**
**077 392 1662**
**077 459 8248**

email : kukhansstores@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SELVA
HARDWARE


# SARAH INDUSTRIES (PRIVATE) LIMITED

Manufactuers of Household Hardware Items





No.120/1,Stanley Road, Jaffna
Industrial Estate Atchuvely
E-mail : sarahindustriespvttd@gmail.com



Tel : 021 221 7272
Tel : 021 205 8464
Fax : 021 222 4472

# ZANDRA MESH INDUSTRIES (PVT) LTD

Office : No.120 Stanley Road,Jaffna,Srilanka. Tel : 021 221 9000 E-mail : info.zandramesh@gmail.com
Plant : Polt No 13-14. Industrial Eastate, Atchchuvely. Tel : 021 205 8465 Fax : 021 222 4472




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**யாழ்ப்பாண பிரதேச**

**கலாசார**

**பேரவையினால்**

**வெளியிடப்படும் யாழ் பாடி – 06**

**கலாசார மலர்**

**சிறப்புற வெளிவர**

**வாழ்த்துக்களைத்**

**தெரிவித்துக் கொள்கின்றேன்.**

**திரு கந்தசாமி றொபின்**

# TOP MAN

*Gent's Show Room*

*Direct Importers &*
*Wholesale Dealer in all kinds of*
*Textiles Items*

SHIRT, T-SHIRT,
JEANS, SUIT
HAWAIIAN SHIRT,
SHORTS, JACKET
BOW TIE, TIE,
SLEEVELESS SHIRT, VEST
LONG-SLEEVE TOP
POLO SHIRT, JUMPER
CARGO PANTS.S WIMSUIT
SWEATER, BELT,
UNDERPANTS




T.P : 077 623 2824
…MAHATHMA GANDHI ROAD, JAFFNA.
(IN FRONT OF CARGILLS FOOD CITY)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவா நறுமணப்பூங்கா

# ரோயல்
## சுத்தமான நெய்



Marketed By : சிவா நறுமணப்பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
0212222567 /E-mail : royalind@yahoo.com

## TAPROBANE SEAFOODS (PVT) LTD

தப்ரேபேன் கடல் உணவு தனியார் நிறுவனமானது உலகின்முன்னணி கடல் உணவு பதப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி நிறுவனம் ஆகும். இது வடக்கு மற்றும் வடமேற்கு மாகாணத்தில் 10 இற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை இயக்குவதுடன் 700 இற்கும் மேற்பட்ட பெண்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குகின்றது. எமது நிறுவனமானது சர்வதேச அங்கீகாரம் பெற்ற தரச் சான்றிதழ்களைக் கொண்டிருப்பதோடு பதப்படுத்தப்பட்ட கடலுணவினை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிற்கு ஏற்றுமதி செய்கின்றது. இந் நிறுவனமானது பன்னாட்டு ஊழியர்களுடனும் பல்வகைமைப்படுத்தப்பட்ட தொழில் முயற்சியுடனும் 10இற்கு மேற்பட்ட ஆண்டுகளைக் கடந்து துரித வளர்ச்சியடைந்து வருகின்றது.

Babulla Watte Haldanduwana
Dankotuwa.
031 226 1533

765/A Beach Road,
Pasaiyoor, Jaffna
021 221 9436

## CREAMY CREATIONS & CREAMY CAFE

*Lets celebrate your loved ones special moments with us..*

All kind of cake
(Birthday, Anniversary, Bride to be & etc)
Wedding Stuctures
Cake related items
Cakes Boards & Boxes
Cake Topper
Coffee, acappuccino, Hot Choclate
Fresh juices

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள் மற்றும் ஏனைய விசேட வைபவங்களுக்கான சகல விதமான கேக் வகைகளையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடியும்


creamycreation1808@gmail.com
www.creamycreation.lk
No. 783, Hospital Road, Jaffna / 076 658 7149 /077 133 4066


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இல.183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel : 021 222 6109




எமது தூரநோக்கு : எந்நிலை மக்களுக்கும் நிறைவான சுகவாழ்வு

எமது பணிநோக்கு : நாம் சந்திக்கும் எல்லா மக்களிடமும் சுகநல அனுபவத்தை ஊக்குவித்தல்


**OUR VISION :** Holistic Wellbeing for all walks of people


**OUR MISSION :** Empowering health care experience among those we encounter

கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் 769, Beach Road. Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org